தரம்

# 12 கிறிஸ்தவ நாகரிகம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)




சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

**தேசிய கல்வி நிறுவகம்**

மஹரகம, ஸ்ரீ லங்கா

**Web**| www.nie.lk **Email**| info@nie.lk

# கிறிஸ்தவ நாகரிகம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 12

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

கிறிஸ்தவ நாகரிகம்

தரம் 12

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனை** : கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாளர்** : அருட்பணி. எஸ். அந்திரியாஸ் ஏ. பர்ணாந்து அ.ம.தி.
உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்.
அருட்பணி. N. காமினி பெரேரா இ.ச.
உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்.

**எழுத்தாளர் குழு** :

- கலாநிதி அருட்பணி. ஜெராட் டீ. ரொசய்ரோ அ.ம.தி.
  விரிவுரையாளர், அக்குவினாஸ் கல்வியல் கல்லூரி.
- அருட்பணி. றமேஸ் கிறிஸ்டி, கலைமாணி,
  தொடர்பகம், யாழ்நகர்
- திருமதி. அன்ரன் றெஜினோல்ட் மேரி றோசாறி பிகிராடோ, கல்வி முதுமாணி,
  பிரதி அதிபர்,
  தூய ஆனாள் மத்தியமகா வித்தியாலயம் வங்காலை.
- திருமதி. ஐறின் நேவிஸ் யோசப் சிரிதரன் குரூஸ்,
  பட்டப்பின் கல்வி டிப்ளோமா,
  தூய ஆனாள் பாடசாலை வங்காலை.
- திருமதி. சுனீதா வெனாசியஸ், பட்டப்பின் படிப்பு டிப்ளோமா,
  தூய ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை, யாழ்நகர்.
- திரு. T.I. ரங்கநாயகம், பட்டப்பின் படிப்பு டிப்ளோமா,
  தூய அந்தோனியார் பெண்கள் பாடசாலை, கொழும்பு – 03
- திருமதி. சுரேந்தினி மதிவண்ணன், பயிற்றப்பட்ட ஆசிரியை,
  தூய ஜோசப் தேசிய கல்லூரி, திருகோணமலை.
- செல்வி. பிரான்சிஸ்கா ராஜயோகினி, முதுமாணி,
  தூய ஜோசப் பெண்கள் பாடசாலை, கொழும்பு – 14.
- திரு. பிரசாத் சமரதுங்க, முதுமாணி,
  அதிபர்,
  தூய ஜோசப் ஆண்கள் பாடசாலை, கொழும்பு -14.
- திருமதி. எஸ்தர் பத்மினி பெரேரா, முதுமாணி,
  ஆசிரிய ஆலோசகர், களனி வலயம்.

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு 2017

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு

தேசிய கல்வி நிறுவகம்

## பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | **iii-iv** |
| பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| கலைத்திட்டக் குழு | **vi-vii** |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | **x** |
| தேசிய இலக்குகள், அடிப்படைத் தேர்ச்சிகள் | **xi-xii** |
| பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | **xiii** |
| பாட அறிமுகம் | **xiv** |
| பாடத்திட்டம் | **xv-xxii** |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல் | **1-115** |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுரைகள்

கத்தோலிக்க நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரிய வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாடப் பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளைப் பயன்படுத்துங்கள்.
- மாணவரைச் சிறு குழுக்களாகப் பிரித்து குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினைத் தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும், பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும், பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தைச் செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தைத் தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளை பிழையின்றிப் பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாகப் பெற்றோர்களுக்கும், முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**சமயத்துறை - கத்தோலிக்க திருமறை**

**தேசிய கல்வி நிறுவகம்.**

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏறபடுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

**2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

***தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. தமது வாழ்வை உருவாக்க திருவிவிலியத்தை ஆதாரமாகக் கொள்வார்.
2. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதனைப் படைத்தவரை அறிந்துக் கொள்வார்.
3. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவராக வாழ்வார்.
4. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்றுபகர்வார்.
5. மறையைக் கற்றலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்வார்.
6. இறைகட்டளைகளையும், மலைப்பொழிவின் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களை தமது வாழ்வில் வாழக் கற்றுக் கொள்வார்.
7. செபத்தின் வல்லமையால் ஊட்டப்பெற்று இறை வரப்பிரசாதங்களை அனுபவிப்பார்.
8. தமது சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளால் கிறிஸ்துவின் அளவு கடந்த அன்பைப் பரப்புவார்.
9. தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை என்பதை உணர்ந்து, அதனைப் பாதுகாத்து, விருத்தி செய்வதற்கான ஆற்றலையும் அறிவையும் பெறுவார்.
10. ஒழுக்க விழுமியங்களையும், மனிதமாண்பையும் பேணிக்காத்து கிறிஸ்துவுக்குரிய பண்புகளோடு உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவார்.
11. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாப்பதோடு, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழகுவார்.
12. இலங்கைப் பிரஜை என்ற வகையில் தமது நாட்டின் மீது பற்றையும், மதிப்பையும் வளர்த்துக்கொள்வார்.

## விடயத்திற்குரிய தேர்ச்சிகள்

1. திருவிவிலியம் தொடர்பான முழுமையான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பயனுள்ள முறையில் பயன்படுத்துவார்.
2. இறைவெளிப்பாட்டை தமது வாழ்வில் செயற்படுத்தும் முகமாக விசுவாச வாழ்வு வாழ்வார்.
3. அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் ஒன்றித்து முழுமையான கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வார்.
4. இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பு வாழ்வு வாழ்வார்.
5. செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வார்.

# அறிமுகம்

கிறிஸ்தவ நாகரிகம், எனும் இக்கற்கைநெறி கிறிஸ்தவ கலாசாரம், கிறிஸ்தவ பண்பாடு அதன் தோற்றம், வளர்ச்சி, பயன்பாடு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. தொன்மை நாகரிகங்களை தோற்றுவாயாகக் கொண்ட யூத நாகரிகம், இறைநம்பிக்கையை ஆணிவேராக் கொண்டு, காலப்போக்கில் மேற்கத்தேய நாகரிகங்களின் தாக்கங்களுடன், தனித்துவமான பண்புகளுடன் வளர்ந்துள்ளது. இந்நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியதே கிறிஸ்தவ நாகரிகமாகும். கிறிஸ்தவ நாகரிகத்திற்கு இயேசு கிறிஸ்துவின் வாழ்வும், படிப்பினைகளும், அடித்தளமாகின்றன. இவ்வடித்தளத்தில் அவரது மரணமும் உயிர்ப்பும் பற்றிய திருத்தூதர்களின் விசுவாச சிந்தனையும், படிப்பினைகளும், வாழ்க்கை முறையும், அரண்களாகின்றன.

வரலாற்றின் பாதையில் கிறிஸ்தவம் கிரேக்க- உரோமை ஆட்சி எல்லைக்குள் பரவி வளர்ந்தபோது அக்கலாசாரங்களில் வேருன்றி, அக்கலாச்சாரப் பண்புகள் பலதைத் தழுவியமைத்து வளர்ந்தது. மேலும், கிறிஸ்தவ கோட்பாடுகளில் தோன்றிய சிந்தனைகளாலும், சமயச்சீர்திருத்த சிந்தனைகளாலும் பன்மைத்தன்மையுடன் வளர்ந்துள்ளது. மேலும், மறுமலர்ச்சிக் கால, நவீனத்துவ சிந்தனைத் தாக்கங்களுடன் கிறிஸ்தவக் கலை, சிற்பம், ஓவியம், இலக்கியங்கள் எனப் பல கலாச்சார வளங்களை உலகிற்கு அளித்துள்ளது. கல்வி, மானிட சமூக நலன், சமூக ஒன்றிப்பு, சமூக ஒப்புரவு, அமைதிக்கான பங்களிப்பைச் செய்வதோடு, பல்சமயச் சூழமைவுகளில் இணக்கத்துடனும், இசைவுடனும் செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய பரந்த தன்மைகொண்ட கிறிஸ்தவ நாகரிகத்தை கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்கள் இலகுவாகக் கற்று, அறிந்து, கற்றலின் பேற்றை அடையும் வழியில், பத்துத் தேர்ச்சி மட்டங்களைக் கொண்ட பாடத்திட்டமாக அமைத்துள்ளோம். நாகரித்தினதும், பண்பாட்டினதும் தன்மை, கிறிஸ்தவ நாகரிகத்திற்கு அடிப்படையான நாகரிகங்கள், இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கையும், படிப்பினைகளும், திருத்தூதர்களின் படிப்பினைகள், தொடக்ககால கிறிஸ்தவர்களின் வாழ்க்கைமுறை என்பன முதல் ஐந்து தேர்ச்சிகளில் காணப்படுகின்றன. இவற்றை 12ம் தரத்தில் கற்றுக் கொள்வோம்.

ஏனைய தேர்ச்சிகள் ஐந்தும் கிறிஸ்தவ கலாசார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த கீழைத்தேய, மேலைத்தேய துறவுச்சபைகள், கிறிஸ்தவ கோட்பாட்டுச் சிந்தனையாளர்கள், மத்தியகாலத்தில் கிறிஸ்தவம் பெற்ற இருண்டகால அனுபவங்கள், கிறிஸ்தவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள், கிறிஸ்தவ கல்வி, கலை, என்பவற்றுக்குப் பங்களிப்புச் செய்த கிறிஸ்தவ சிந்தனையாளர்கள், ஆசிய நாடுகளில் கிறிஸ்தவம் பரவி வளர்ந்தமை, இன்றைய சூழமைவில் கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பு, பல்சமய உரையாடலின் தேவை, கிறிஸ்தவ நிறுவனங்களின் சமூக மேம்பாடு பற்றிய படிப்பிகைள் என்பவற்றை 13ம் தரத்தில் கற்றுக் கொள்வோம்.

இவற்றை மாணவர்கள் கற்பதனூடாக கிறிஸ்தவ வாழ்வுக்கு அர்த்தம் அளிக்கும் ஒரு சமூகத்தை தாம் வாழும் சூழலில் உருவாக்க அல்லது கட்டியெழுப்புவதற்கு பங்களிக்க எதிர்பார்க்கப்படுகின்றனர்.

கிறிஸ்தவ நாகரிகம் - தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 கிறிஸ்தவ நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைந்த வெவ்வேறு நாகரிகக் கூறுகளை உய்த்துணர்ந்து நல்வாழ்விற்கான பின்னணியை அமைத்துக் கொள்வார். | 1.1 பண்பாட்டினதும் நாகரிகத்தினதும் தன்மைகளை உய்த்துணர்வார். | ● பொதுவான பாட அறிமுகம்<br>• நாகரிகத்தினது வரைவிலக்கணம்<br>• பண்பாட்டினது வரைவிலக்கணம்<br>• நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமை | • நாகரிகம் மற்றும் பண்பாடு பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>• நதிக்கரையோரங்களை அடியொட்டியே நாகரிகங்கள் தோன்றி வளர்ச்சியடைந்தன என்பதை ஏற்பார்.<br>• நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை வேறுபடுத்திக் காட்டுவார்.<br>• நமது பண்பாட்டுக் கலாச்சாரச் சிறப்பம்சங்களை பேணிப்பாதுகாப்பார்.<br>• குழுச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 10 |
| | 1.2 கிறிஸ்தவ நாகரிகத்திற்கு அடிப்படையாக அமையும் பண்பாடுகளையும் நாகிகங்களையும் மதிப்பார். | ● கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய நாகரிகங்கள் பற்றிய அறிமுகம்<br>• யூத நாகரிகத்தின் தோற்றுவாய்.<br>– மொசபத்தேமிய நாகரிகம் (யூப்பிரதீஸ் ரைக்கறீஸ்)<br>– எகிப்திய நாகரிகம் (நைல் நதி) | • கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய நாகரிகங்கள், பண்பாடுகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>• கிறிஸ்தவ நாகரிகத்தின் உருவாக்கத்திற்கு கீழைத்தேய நாகரிகங்களின் பங்களிப்பு இருந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | | • கீழைத்தேய பண்பாட்டு கலாச்சாரக் கூறுகளின் சிறப்பம்சங்களை அறிந்து அவற்றை மதிக்கப் பழகிக் கொள்வார்.<br>• குழுச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவார். | |
| | 1.3 கிறிஸ்தவ நாகரிகத்திற்கு அடிப்படையாக அமையும் மேலைத்தேய நாகரிகங்களை மதிப்பார். | ● கிரேக்க - உரோமைய நாகரிகம்<br>• கிரேக்க நாகரிகம்<br>• உரோமைய நாகரிகம் | • கிரேக்க, உரோமைய நாகரிகங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>• கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சியில் மேலைத்தேய நாகரிகங்கள் முக்கியமான பங்களிப்பை செய்துள்ளன என்பதை ஏற்பார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• கிரேக்க, உரோமைய நாகரிகங்களின் பண்பாட்டுச் சிறப்பம்சங்களை அறிந்து தமதாக்கிக் கொள்வார்.<br>• குழுச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 20 |
| 2.0 பாலஸ்தீன புவியியல் வரலாற்றுப் பின்னணியை விளங்கி தம் வாழ்வை அமைத்துக் கொள்வார். | 2.1 பாலஸ்தீனப் புவியியல் பின்னணியை உய்த்துணர்வார். | ● பாலஸ்தீனப் புவியியல் பின்னணி<br>• மத்திய தரைக் கடற்கரைப் பகுதி<br>• மேற்கு மலைப்பகுதியும் பள்ளத்தாக்கும்<br>• கிழக்கு மலைப்பகுதியும் பாலைநிலமும்<br>• பிரதான நிலப் பகுதியும் நகரங்களும் | • பாலஸ்தீனாவின் புவியியல் பின்னணி பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.<br>• பாலஸ்தீனா புனித நாடு என்பதை ஏற்றுக்கொள்வார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• எமது நாட்டிலுள்ள யாத்திரை ஸ்தலங்களின் புனிதத்தன்மையை பேணும்வகையில் நடந்துகொள்வார்.<br>• பங்கு ஆலயத்தின் தூய்மையை பாதுகாக்க பங்கு மக்களோடு ஒன்றித்துச் செயலாற்றுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.2 யூத வரலாற்றுப் பின்னணியை அறிந்து ஆக்க பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவார். | • புராதன இஸ்ரயேல் வரலாற்றின் முக்கிய கட்டங்கள்<br>• எகிப்திய அடிமைத்தனம்<br>• விடுதலையும் உடன்படிக்கையும்<br>• நீதித்தலைவர்கள் காலம்<br>• அரசர்கள் காலம்<br>• பிளவுபட்ட இஸ்ராயேல் அரசு<br>• பபிலோனிய நாடு கடத்தல்<br>• நாடு திரும்புதலும் யூத சமய, சமூக, கலாசார மறுமலர்ச்சியும்.<br>• எஸ்ரா, நெகேமியா<br>• கிரேக்க ஆட்சி | • யூதரின் வரலாறு பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>• இஸ்ரயேலர் வரலாற்றில் இறைவெளிப்பாடு நடைபெற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களி-னூடாகஇறைவனைக் கண்டுணர்வார்.<br>• குழுச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 30 |
| 3.0 இயேசுவின் காலத்து பாலஸ்தீன பண்பாட்டின் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு புதிய ஏற்பாட்டின் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வார். | 3.1 இயேசுவின் காலத்து பாலஸ்தீன அரசியல் பின்னணியை அறிந்து ஆக்க பூர்வமாகச் செயற்படுவார். | • உரோமைய ஆட்சி முறை<br>• பேரரசர்<br>• ஆளுனர்<br>• குறுநில மன்னர்<br>• வரிதண்டுவோர்<br>• படைவீரர்<br>• தலைமைக் குருக்கள் | • இயேசுவின் காலத்து பலஸ்தீன நாட்டு அரசியல் பின்னணி பற்றிய விடயங்களைச் சேகரிப்பார்.<br>• கிறிஸ்தவ மறை உருவாகுவதற்கு பின்னணியாக இவ்விடயங்கள் அமைந்துள்ளன என்பதை எற்றுக் கொள்வார்.<br>• சேகரித்த தகவல்களை ஆக்க-மொன்றின் மூலம் முன்வைப்பார்.<br>• அரசின் விதிமுறைகளுக்குக் கீழ்ப்படிவார்.<br>• குழுச் செயற்பாடுகளின்போது ஒத்துழைப்பை வழங்குவார். | 14 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.2 இயேசுவின் காலத்து பாலஸ்தீன சமூகப் பின்னணியை அறிந்து சமூகத்திலுள்ள அனைவரையும் மதித்து வாழப் பழகுவார். | • பாலஸ்தீன யூதர்<br>• உயர்குலம்<br>• நடுத்தரம்<br>• தாழ்த்தப்பட்டோர்<br>- ஏழைகள்<br>- அடிமைகள்<br>- பெண்கள்<br>- சமாரியர்<br>• சிதறி வாழ்ந்த யூதர்கள்<br>• புறவினத்தவர்கள் | • பாலஸ்தீன நாட்டின் நிலவிய சமூகப் பின்னணி பற்றிய விடயங்களைக் கோவைப்படுத்துவார்.<br>• யூதசமூகத்தின் தாழ்ந்த சமூக மக்களை இயேசு மதித்தார் என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• யூதசமூகக் குழுக்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் ஆக்கமொன்றை முன்வைப்பார்.<br>• சமூகத்தின் தாழ்த்தப்பட்ட மக்களை அன்பு செய்வார்.<br>• குழுச் செயற்பாடுகளின்போது ஒத்துழைப்பை வழங்குவார். | 16 |
| | 3.3 இயேசுவின் காலத்து பாலஸ்தீன சமயப் பின்னணியை அறிந்து வழிபாட்டிடங்-களுக்கும் சமயப் பெரியோருக்கும் மதிப்பளிப்பார். | • சமய நிறுவனங்கள்<br>- எருசலேம் ஆலயம்<br>- யூத தலைமைச் சங்கம்<br>- தொழுகைக் கூடம்<br>• யூத சமயக் குழுக்கள்<br>- சதுசேயர்<br>- பரிசேயர்.<br>- மறைநூல் வல்லுனர்<br>- எஸ்சீனியர்<br>- தீவிரவாதிகள் | • இயேசுவின் காலத்து பலஸ்தீனாவின் சமயப் பின்னணி பற்றிய விடயங்களைக் கோவைப்படுத்துவார்.<br>• யூதர்கள் எருசலேம் ஆலயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதை ஏற்பார்.<br>• யூதசமய நிறுவனங்களையும், குழுக்களையும் பற்றிய ஆக்க-மொன்றினை முன் வைப்பார்.<br>• வழிபாட்டிடங்களின் புனிதத்தன்மை-யைப் பேணும் செயல்களில் ஈடுபடுவார்.<br>• குழுவினரின் ஒத்துழைப்புடன் செயற்படுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.4 முதல் நூற்றாண்டுகால பாலஸ்தீனாவின் யூதப் பண்பாட்டு, மரபுகளை அறிந்து தமது பண்பாட்டு மரபுகளைப் பின்பற்றுவார். | • மொழி<br>• சமூக பழக்க வழக்கங்கள்<br>• மத மரபுகள்<br>• விழாக்கள் | • இயேசுவின் காலத்தில் யூதப பண்பாடுகள் வழிபாட்டு மரபுகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.<br>• யூத சமய சமூக பண்பாட்டு மரபுகளை இயேசு பின்பற்றினார் என்பதை ஏற்பார்.<br>• யூத சமய விழாக்கள் பற்றிய ஆக்கமொன்றை முன்வைப்பார்<br>• இறைவிருப்பத்திற்கேற்ப செயற்படப் பழகுவார்.<br>• குழுவினரின் ஒத்துழைப்புடன் செயற்படுவார். | 20 |
| 4.0 கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படை கிறிஸ்துவே என்பதை ஏற்று, தம் வாழ்வை அமைத்துக் கொள்வார். | 4.1 இயேசுவின் இறையாட்சி பற்றிய படிப்பினைகளைத் தமதாக்கிக் கொள்வார். | • இயேசுவின் புதிய சமூகப் பார்வை<br>- மலைப் பொழிவு (மத் 5-7)<br>• இறையாட்சி அறிவிப்பு<br>- உவமைகள் (மத் 13)<br>• இறையாட்சியின் அடையாளமான புதுமைகள்<br>- தீய ஆவிகளை விரட்டல் (மாற். 5:1 -20)<br>- அப்பம் பலுகச் செய்தல் (மாற். 6:30-44)<br>- குணமளித்தல் (நூற்றுவத் தலைவனின் பணியாளர் லூக் 7:1-10)<br>- இறந்தவர்களை உயிர்ப்பித்தல். (கைம்பெண்ணின் மகன்.லூக் 7:11-17)) | • இயேசுவின் இறையாட்சியை விளக்கும் மலைப்பொழிவு, உவமைகள், புதுமைகள், பற்றிய விடயங்களைக் கோவைப்படுத்துவார்.<br>• இயேசுவின் புதிய சமூகப்பார்வை அன்றைய சமூகத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• மலைப்பொழிவு, உவமைகள், புதுமைகள் பற்றிய ஆக்கமொன்றை முன்வைப்பார்.<br>• இறையாட்சிப் பண்புகளை வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்.<br>• இயேசுவின் அடிப்படைக் கோட்பாடு, ஒழுக்கநெறி பற்றிய படிப்பினைகளை வாழ்வாக்கிட ஒத்துழைப்பு நல்குவார். | 36 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.2 இயேசுக் கிறிஸ்துவில் பிரதிபலித்த விழுமியங்களை வாழ்வாக்கிக் கொள்வார். | • இயேசுவின் செயற்பாடுகள் - (லூக் 4: 16-19)<br>- இயேசுவும் சமாரியரும்<br>- இயேசுவும் வரிதண்டுவோரும்<br>- இயேசுவும் பாவிகளும்<br>• சீடத்துவம் பற்றிய படிப்பினைகள் (மாற்கு 8: 31 9:33-35 10:45<br>• பாதம் கழுவுதல் - (யோவா 13:1-16) | • புதிய சமூகம் அமைப்பதற்கு காரணமாக இருந்த இயேசுவின் செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களை கோவைப்படுத்துவார்.<br>• இயேசு காண விரும்பிய புதிய சமுதாயம் அமைய, நாமும் ஏழை எழியவர்களை ஒடுக்கப்பட்டவர்களை அன்பு செய்ய வேண்டும் என்பதை ஏற்பார்.<br>• கோவைப்படுத்திய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• இயேசு பாதங்களைக் கழுவிய நிகழ்வை முன்னுதாரணமாகக் கொண்டு தாழ்ச்சியோடு பணிசெய்ய முன்வருவார்.<br>• குழுச் செயல்பாடுகளின் போது ஒத்துழைப்பு நல்குவார். | 10 |
| | 4.3 இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு வழியாக இயேசு ஏற்படுத்திய சமய சமூக விழிப்புணர்வை தமதாக்கிக் கொள்வார் | • இயேசுவின் பாடுகள், மரணம் உயிர்ப்பு<br>- பாடுகள் பற்றிய முன்னறிவிப்பும் காரணமும் (மாற். 8:31-38)<br>- பாடுகள், மரணம் (யோ. 18-19 )<br>- உயிர்ப்பு (யோ. 20) | • பாஸ்கா மறைபொருள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்<br>• இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாகப் கிடைத்த விழிப்புணர்வை ஏற்பார்.<br>• இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றிய விடயங்களை ஒரு ஆக்கமாகச் சமர்ப்பிப்பார்.<br>• நற்செய்தியை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவார்.<br>• குழுவினரின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவார். | 24 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 கிறிஸ்தவ மறையின் ஆரம்பத்தையும் நற்செய்தியைப் பரப்ப பவுல் ஆற்றிய பங்களிப்பையும் அறிந்து திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பார். | 5.1 தொடக்கக் கிறிஸ்தவர்களின் வாழ்வு முறையை அறிந்து அதன்படி வாழ முனைவார். | • தூய ஆவியின் வருகையும் திருச்-சபையின் ஆரம்பமும் (திப. 2:1-41)<br>• தொடக்கக் கிறிஸ்தவர்களின் குழும வாழ்வு<br>திருத்தூதரின் படிப்பினைகளுக்கு செவிமடுத்தல<br>- நட்புறவு<br>- அப்பம் பிட்குதல்<br>- இறைவேண்டல்<br>- பகிர்ந்து வாழ்தல்<br>(திப. 2:42-47, 4:32-37, 1கொரி. 11:17-32)<br>- திருத்தொண்டர் நியமனம் (திப. 6) | • கிறிஸ்தவ மறையின் தொடக்க வரலாறு பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.<br>• தூய ஆவியின் வருகையோடு புதிய கிறிஸ்தவ வாழ்க்கை முறை ஆரம்பமாகியது என்பதை ஏற்றுக் கொள்வார்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.<br>• திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பார்.<br>• குழுச்செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்பார். | 20 |
| | 5.2 கிறிஸ்தவத்தை அனைவருக்கும் எடுத்துச் செல்ல தூய பவுல் கையாண்ட வழி முறைகளை அறிந்து அதன்படி செயலாற்றுவார். | • தூய பவுலின் அழைப்பு (புறவினத்தாரின் திருத்தூதர்) திப 9:1-20<br>• தூய பவுல் மறைபரப்பிற்கு பயன்படுத்திய வழிமுறைகள்<br>- மறையறிவிப்பு - பயணங்களும் (3), படிப்பினைகளும்<br>1. திப. 13: 4- 14:28 எருசலேம் திருச்சங்கம்.<br>2. திப. 15: 36- 18:22<br>3. திப. 18:23- 21: 20<br>- தூய பவுலின் கடிதங்கள் - அறிமுகம்<br>- கிறிஸ்தவ குடும்பம் (1கொரி. 7:1-16, எபே. 5:22-31, 6:1-4, கலா. 3:28)<br>- கிறிஸ்தவ ஒற்றுமை (1கொரி.12:12-31, எபே. 2:11-18, 4:1-6) | • தூய பவுலின் மறைபரப்பு பணி பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.<br>• தூய பவுல் புற இனத்தவரின் திருத்தூதர் என ஏற்றுக் கொள்வார்.<br>• தூய பவுலின் படிப்பினைகளை பட்டியலிட்டுக் காட்டுவார்.<br>• தூய பவுல் மறைபரப்புக்கு கையாண்ட வழிமுறைகளைப் பின்பற்றவார்.<br>• நற்செய்திப் பணியில் ஈடுபடுவோரோடு இணைந்து செயற்படுவார். | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளைகள |
|---|---|---|---|---|
| | | - சகோதரத்துவம் (1கொரி 8:9-13, 13:3-8, 2கொரி. 8:9, பில. 1:8-21)<br>- தூய ஆவி (1கொரி.12: 4-11, 14:1-18)<br><br>• தூய பவுல் எதிர்கொண்ட சவால்கள் (2கொரி.11:22-33, திப 16:16-28)<br>• தூய பவுலின் மறைசாட்சிய மரணம் | | |

# கிறிஸ்தவ நாகரிகம்

# ஆண்டு 12

## கிறிஸ்தவ நாகரிகம்

**பொதுவான பாட அறிமுகம்**

கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படையும் மையமும் **இயேசுகிறிஸ்துவே**. இயேசுவின் படிப்பினைகள் , பணிகள் , பாடுகள் , மரணம், உயிர்ப்பு இவற்றின் பிரதிபலிப்பில் இறையாட்சி சமூகத்தை உருவாக்குவதே இயேசுகிறிஸ்துவின் இலட்சியமாகும். இறையாட்சிச் சமூகத்தின் மதிப்பீடுகளின் வளர்ச்சியையும் பரம்பலையும் வரலாற்று நிலையில் மேற்கொள்ளப்படுகின்ற கற்கை நெறியே கிறிஸ்தவ நாகரிகமாகும். கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றத்திற்கு இருநிலைகளில் பங்களிப்பு ஏற்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் வருகைக்குமுன், அண்ணளவாக 1800 இல் நிகழ்ந்த ஆபிரகாமின் அழைப்புக்கு முன் தோன்றிய நாகரிகங்களாக யூப்பிரட்டீஸ்-ரைகிறீஸ், நைல்நதி நாகரிகங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக யூதமக்களின் அண்டைய நாடுகளின் நாகரிகங்களான சுமேரிய, எகிப்திய, அசீரிய, பபிலோனிய, பாரசீக, கிரேக்க, உரோம நாகரிகங்கள் விளங்கின. இவை ஒருபுறம் யூதநாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்த, மறுபுறம் ஆபிரகாமின் அழைப்புடன் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்னும் நிலையில் குலமுதல்வர்கள், நீதித் தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினர் வழியாக நெறிப்படுத்தப்பட்டு வழிப்படுத்தப்பட்டனர். மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு நிலைகளின் பிரதிபலிப்பில் தோன்றியதே யூதநாகரிகமாகும். யூத, கிரேக்க, உரோம நாகரிகங்களின் முக்கிய கூறுகளைக் தன்னகத்தே கொண்டதே கிறிஸ்தவ நாகரிகமாகும். கிறிஸ்தவ நாகரிகம் ஐரோப்பிய நாகரித்தின் தோற்றத்திற்குப் பலவழிகளில் பங்களிப்புச் செய்ததுடன், தானும் ஐரோப்பாவில் பாரிய வளர்ச்சியையும் பரம்பலையும் பெற்றது. கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சி வரலாற்றையும் அதன் முக்கிய கூறுகளையும் பற்றியதாகவே இப்பத்துத் தேர்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

இவை இங்கு வரலாற்று அடிப்படையில் அல்லாது விடயப்பொருள் அடிப்படையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் தேர்சிகளுக்குள்ளும், தேர்ச்சி மட்டங்களுக்குள்ளும் நெருங்கிய தொடர்புண்டு. அவற்றைப் படிப்படியாக அறிந்து இப்பாடத்தைக் கற்கவேண்டும்.அதனால் கிறிஸ்தவநாகரிகத்தின் தன்மை, அதன் வளர்ச்சி, பங்களிப்புபற்றிய விடயங்களைப் புரிந்து கொள்வது இலகுவாகும்.முதலில் ஒவ்வொரு தேர்ச்சியிலும் தரப்பட்டுள்ள விடய உள்ளடக்கத்தைச் சுருக்கமாக அறிந்திருப்போம்.

**தேர்ச்சி 1**

**1.1** நாகரிகம், பண்பாடு இவற்றுக்கிடையே காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகள் இவற்றின் தனித் தன்மை பற்றிய விவரங்களை அறிந்திருப்பது இப்பாடத்திற்கு அடிப்படையாகும். இதனை இங்கு கற்றறிவோம்.

**1.2** ஒரு நாகரிகத்தின் தோற்றம், வளர்ச்சிக்கு இன்னுமொரு நாகரிகம், அல்லது பல நாகரிகங்கள் காரணமாகின்றன. கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றத்துக்கு யூதநாகரிகம் மூலகாரணமாகும். இங்கு கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றத்துக்கு செல்வாக்கு செலுத்திய யூத நாகரிகக் கூறுகளைக் கற்றறிவோம்.

**1.3** காலப் போக்கில் கிரேக்க,உரோமை நாகரிகங்களின் தாக்கத்தை கிறிஸ்தவ நாகரிகத்தில் காண முடிகிறது. இப்பகுதி அதனை விளக்குகிறது.

**தேர்ச்சி 2**

ஒருநாகரிகத்தின் தோற்றத்துக்கு ஒரு நிலத்தை அண்டிவாழும் மக்களின் வாழ்வியல் தன்மைகள் காரணங்களாகும்.அந்நிலத்தின் புவியியல் நிலையும், மக்களின் வரலாற்றுப் பின்னணியும் ஒருநாகரிகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்புச் செய்கின்றன.

**2.1** கிறிஸ்தவ நாகரிகத்துக்கு அடிப்படையான யூதநாகரிகம் பாலஸ்தீன நிலத்தில் தோன்றியதாகும். மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், மத்தியதரைக் கடலையும், யோர்தான் ஆற்றையும், பாலைநிலத்தையும் கொண்ட இந்நிலத்தின் புவியியல் நிலையை இங்குகாண்போம்.

**2.2** யூதநாகரிகமே இஸ்ரயேல் மக்களின் நாகரிகமாகும். இந்நாகரிக, கலாசார வளர்ச்சியில் வரலாற்று நிகழ்வுகளான எகிப்திய அடிமைத்தனம், உடன்படிக்கை, நீதித்தலைவர்கள், அரசர்கள் காலங்கள், பிளவுபட்ட அரசு, நாடுகடத்தப்படல், நாடுதிரும்புதல் போன்றவையும் முக்கியமானவையாகும்.

**தேர்ச்சி 3**

கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றத்தில் யூதரான இயேசுவின் காலத்து பலஸ்தீனாவின் ஆட்சிமுறை, சமூகஅமைப்பு, சமயப்பின்னணி, யூதமொழி சமூக, சமய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் தாக்கம் காணப்படுகின்றது. இதனை இப்பாடத்தில் கற்போம்.

**3.1** பாலஸ்தீனத்தில் உரோமை ஆட்சிமுறை,

**3.2** உயர் குலம், நடுத்தர, தாழ்த்தப்பட்ட மக்கள், சிதறி வாழ்ந்த யூதமக்களைக் கொண்ட சமூகப் பின்னணி,

**3.3** சமயநிறுவனங்களையும் பலசமயக் குழுக்களைக் கொண்ட சமயப் பின்னணி,

**3.4** யூதமொழி, சமூகப் பின்னணி.

**தேர்ச்சி 4**

கிறிஸ்தவ நாகரிகத்துக்கு அடிப்படை இயேசுகிறிஸ்துவே. அவரின் வாழ்வில், படிப்பினைகளில், செயற்பாடுகளில், பாடுகள், மரணம், உயிர்ப்பில் பிரதிபலிக்கப்படும் விழுமியங்கள் கிறிஸ்தவ நாகரிகத்துக்கு முக்கியமானவையாகும்.

**4.1** இறையாட்சி சமூகத்தை உருவாக்குவதே இயேசுவின் இலட்சியமாகும். அவரது வாழ்க்கை முறைகளிலும், பணிகளிலும், படிப்பினைகளிலும் இறையாட்சி சமூகத்தின் தன்மை பிரதிபலிக்கிறது என்பதை அறிவோம்.

**4.2** இயேசுவின் இறையாட்சி பற்றிய படிப்பினைகளை அவரது மலைப்பொழிவு, உவமைகளில் காணலாம். அவரது புதுமைகள் இறையாட்சியின் அடையாளங்களாகும். இப்பகுதியில் இவற்றைக் காணலாம்.

**4.3** இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா நிகழ்வுகள் இறையாட்சியின் அடையாளங்களாகும். இப்பகுதியில் இதனைக் கற்றுக் கொள்ளலாம்.

**தேர்ச்சி 5**

கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட தொடக்கக் கிறிஸ்தவர்கள் தூய ஆவியின் வருகைக்குப் பின்னர், அவரது படிப்பினைகளைப் பின்பற்றி வாழ ஆரம்பித்தார்கள். இதற்குத் திருத்தூதர்களின் படிப்பினைகள், வழிகாட்டல்கள் என்பன உதவின. அதனால் கிறிஸ்தவ நாகரிகத்தின் பண்புகள், வளரவும், பரவவும் தொடங்கின.

**5.1** திருத்தூதர்களின் படிப்பினைகளையும், கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை பற்றிய விடயங்களையும் இங்கு காணலாம்.

**5.2** தூய பவுலின் அழைப்பு, புறவினத்தாருக்கு நற்செய்திப் பணி, படிப்பினைகள் வழியாக தோன்றிய கிறிஸ்தவ வாழ்வின் தன்மைகள் பற்றிய விடயங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

**தேர்ச்சி** 1.0 :- கிறிஸ்தவ நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைந்த வேற்று நாகரிகக் கூறுகளை உய்த்துணர்ந்து நல்வாழ்விற்கான பின்னணியை அமைத்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 1:1 **:-** நாகரிகத்தினதும் பண்பாட்டினதும் தன்மைகளை உய்த்துணர்வார்.

**பாடவேளை** **:-** 10

**கற்றல் பேறுகள்** :-

- நாகரிகம் மற்றும் பண்பாடு பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- நதிக்கரையோரங்களை அடியொட்டியே நாகரிகங்கள் தோன்றி வளர்ச்சியடைந்தது என்பதை ஏற்பார்.
- நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைப் பண்புகளை வேறுபடுத்திக் காட்டுவார்.
- நமது பண்பாட்டுக் கலாசார சிறப்பம்சங்களைப் பேணிப் பாதுகாப்பார்.
- குழுச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி :

## 1.1.1 நாகரிகத்தின் தோற்றம் :

- ஆரம்ப காலத்தில் மனிதன் வேட்டையாடி மலைக்குன்றுகளில் வாழ்ந்து வந்தான்.
- உணவே அவனது முக்கிய பிரச்சனையாகக் காணப்பட்டதால், உணவு கிடைக்கும் இடத்திலேயே தங்கி வாழ்ந்தான்.
- ஒருவரோடு ஒருவர் கூடி வாழும் முறை கி.மு 40,000 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்திருக்கலாம் எனக் கொள்ளப்படுகிறது. எனினும் கி.மு 8000 ஆண்டுகளுக்குப் பின்பே நாகரிகத்தைக் குறித்துப் பேச முடிகிறது.
- குறிப்பாக ஆற்றங்கரைகளை அண்டிய பகுதிகளிலேயே, மக்கள் குழுக்களாக குடிசையமைத்து கிராமச் சூழலை ஆரம்பித்து வாழ்ந்துள்ளனர்.
- குறிப்பாக கி.மு 5000 ஆண்டுகளில் எகிப்து, மொசப்பதேமியா, பபிலோனியா நாகரிங்கள் நைல்நதி, யூப்பிரடீஸ் - தைக்கிறிஸ் ஆற்று வெளிகளிலும், கி.மு 3000 ஆண்டுகளில் சிந்துவெளி நாகரிகம், சிந்து நதியை அடுத்த பகுதிகளிலும் வளர்ந்துள்ளது.
- இவ்வாற்றுப் பள்ளத்தாக்குகளில் நீர் வளமும், நில வளமும் சிறந்து விளங்கியமையால் உழவுத்தொழில் செழித்தோங்கியது.
- தேவைகளுக்கு மிகுதியாக உணவுப் பொருட்கள் விளைந்தன.
- இதன் பின்னணியில், விவசாயத்துடன் தொடர்புடைய தச்சு, இரும்பு வேலைகள் முதலிய பல தொழில்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன.
- நகரவாசிகளின் வாழ்வியலைக் குறிக்கும் நாகரிகம் எனும் பதமானது, நாகரிகம் அடைந்த, நகர வாழ்வியலில் வளர்ச்சி பெற்ற விவசாயம், அதன் பின்னணியில் தோன்றிய பல்தொழில் துறைகள், வர்த்தகத் தொடர்புகள், அதற்கான ஊடகங்கள், நிர்வாக சீர்மைகள், முறைசார், முறைசாராக் கல்வி வளர்ச்சி, நுண்கலை வளர்ச்சி, குறிப்பாக எழுத்துக்கள் வடிவம் பெறல், எண்கணித தோற்றம், வானியல் அறிவு போன்ற இன்னோரன்ன விடயங்களைத் தன்னகமாய்க் கொண்டு காணப்படுவதாகும்.

- நாகரிகமானது நகரத்தோடு இணைந்து, வாழ்வின் எல்லாக் கூறுகளையும் விடயங்களையும் உள்ளடக்கியதான நிலையில் நோக்கப்பட்டு நகர வாசிகளின் வாழ்வியலைக் குறிக்கும் சொல்லாக மாறியது.
- நாகரிகம் என்பது (civilization) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாகும். இது (civitas) நகரம் என்ற இலத்தீன் சொல்லில் இருந்து உருவாகியது.
- citizen என்பது நகர வாசிகளைக் குறிக்கும் - இதில் இருந்தே civilization என்ற ஆங்கிலச் சொல் தோன்றியது.
- இது நகரவாசிகளின் வாழ்வியலைக் குறித்து நிற்கிறது.
- இதனை நகர் + அகம் எனப் பிரித்து நோக்கலாம்.
- நகர் என்ற சொல்லுக்கு நகரம், மண்டபம், அரண்மனை, கோயில் எனப் பல பொருள்கள் உண்டு. அது நகர்ப் புறங்களில் வாழும் மக்களின் வாழ்வியல், வாழ்க்கை முறை என்பவற்றைக் குறிக்கிறது என தேவநேயப்பாவாணர் எனும் ஆசிரியர் கூறுகிறார்.

### 1.1.2 நாகரிகத்தின் வரைவிலக்கணம் :-

- நாகரிகம் என்பது நகரத்தோடு இணைந்தது. நகர அமைப்பைத் தேவைக்கும் கலையுணர்விற்கும் பொருந்த அமைத்தல்; பிறரோடு நன்முறையில் பழகுதல்; உள்ளத்தோடு உடலையும் தூய்மையாக வைத்திருத்தல், சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கையாளுதல்; போக்குவரத்திற்கான ஊர்திகள்; பொது வாழ்விற்கான நிறுவனங்களை உருவாக்கிச் செம்மையுறக் கையாளுதல்; பொருளாதார சீரமைப்பு; அரசியற் கட்டமைப்பு; நீதி நிர்வாகச் சீர்மை எனப் பல்வேறு அம்சங்களையும் தன்னகத்தே கொண்டது என வரைவிலக்கணப்படுத்தலாம்.
- இருப்பினும் நாகரிகம் பற்றிய கருத்துக்கள் காலத்திற்கேற்ப மாறி வருகின்றன.
- பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அடிமைமுறை, குடியேற்ற நாடுகளைச் சுரண்டுதல் போன்றவை நியாயமானவையாகக் கருதப்பட்டன.
- ஆனால் இன்று சுதந்திரமும் - சனநாயகமும் சமத்துவமும் சமபங்கேற்பும் சுய நிர்ணயமும் நாகரிகத்தின் இயல்புகளாகக் கருதப்படுகின்றன.
- இன்றைய போர்முறை, இயற்கை வளத்தை வீணாக்குதல், மனித வளச் சுரண்டல் என்பன அநாகரிகப் பழக்கங்களாகக் கருதப்படுகின்றன.

### 1.1.3 பண்பாட்டின் தோற்றம் :-

- பண்பாடு என்ற தமிழ்ச் சொல் "culture" என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாகும்.
- "culture"என்ற ஆங்கிலச்சொல் "cultura" என்ற இலத்தின் சொல்லின் மொழி பெயர்ப்பாகும்.
- "cultura" என்ற இலத்தீன் பெயர்ச் சொல் "colere" என்ற வினைச் சொல்லின் அடியில் இருந்து தோன்றியது. அது விவசாயத்துடன் தொடர்புடைய ஒரு சொல்.
- "பண்பாடு" எனும் பெயர்ச்சொல் பண்ணுதல் என்னும் வினைச்சொல்லில் இருந்தே பிறந்ததாகும்.
- உள்ளப்பண்பாடே பண்பாடு எனும் பதத்திற்கு நிறைவான பொருளைக் கொடுத்தது.
- விவசாயத்திற்கு நிலத்தைப் பண்படுத்தல் போல, மனித வாழ்விற்கு உள்ளப் பண்படுத்தல் அவசியமானதாகும்.
- பண்பாடே நாகரிகத்தின் அடிப்படையாகும். இப்பண்பாடானது, அது தோன்றிய மண்ணிற்கும், அம்மண்ணில் வாழும் அனைவருக்கும் உரியதாகும்.

- அத்தோடு அம்மண்ணின் மக்களுக்கு தம்மூதாதையரிடம் இருந்து வருகின்ற பாரம்பரிய உரிமையுமாகும். இது அம்மண்ணின் மக்களின் வாழ்வியலில் பல்லாயிரம் ஆண்டு காலமாகச் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்ததாகும்.

## 1.1.4 பண்பாட்டின் வரைவிலக்கணம்

- ஒரு மக்கள் இனத்தின் தனித்துவமான வாழ்வியலை, அவர்களுக்குரிய நிலத்துடன் இணைத்து, உருக்கொடுத்து வளர்ப்பதோடு மானிடரைத் தனி ஆளாகவும், குழுமமாகவும் சிந்தனை சொல், செயல் வடிவங்களிற் கட்டுப்படுத்தக் கூடிய ஒட்டுமொத்த மதிப்பீடுகள், கருத்தியல், நம்பிக்கைகள் என்பவற்றின் வெளிப்பாடே பண்பாடு எனப்படுகிறது.

- இதன் பரிணாமமாக சமயநெறி, தத்துவநோக்கு, அழகியலுணர்வு, குறிக்கோள்கள் என்ற பலவும் வெளித்தோன்றுகின்றன.

- **2ம் வத்திக்கான் சங்கம்**, மனிதன் தன் உடல் உள இயல்புகளை, திறமைகளைப் பண்படுத்தி, வளப்படுத்தி, வளர்ச்சியுறச் செய்ய எடுக்கும் அனைத்து முயற்சிகளும் பண்பாடு என்கிறது.

- மேலும், மனிதன் தனது அறிவு, உழைப்பு என்பவற்றால், தன் சமூக வாழ்விற்கு ஏற்ற பழக்க வழக்கங்களையும், தன் ஆன்மீக அனுபவங்களையும், பிறரோடு பகிர்ந்து வாழ்ந்து, பலரின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் அவற்றை நிலை நிறுத்திக் காப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் எனவும் கூறுகிறது.

- சுருங்கக்கூறின் பண்பாடு பெரும்பாலும் அகவயமானதாயும், நாகரிகம் அகவயமும், புறவயமும் ஆனதாயும் கொள்வது பொருத்தம் போல் தென்படுகிறது.

- நாகரிகமும் பண்பாடும் பொதுப்படையில் ஒரே பொருளில் பெரும்பாலும் வழங்கி வருகின்றன. (பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை)

➢ **நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகள்.**

**ஒற்றுமைகள்**

1. நாகரிகம், பண்பாடு ஆகிய இரு பதங்களும் மனித சமூகத்தின் வளர்ச்சி நிலையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்ற எண்ணக் கருக்களாகும்.
2. பண்பாடு மனிதனின் ஒழுக்க மதிப்பீடு என்னும் நிலையில் நோக்கப்பட, நாகரிகம் மனிதனது வாழ்வின் எல்லாக் கூறுகளையும், விடயங்களையும் உள்ளடக்கியதான நிலையில் நோக்கப்படுகின்றது.
3. ஒவ்வொரு இனத்திற்கும் உரித்தான பண்பாடு அல்லது நாகரிகம் ஒன்று உண்டு.
4. ஒரு நாட்டில் பல இனக் குழுவினர் அல்லது நாடுகளில் வேற்றினக் குழுவினரோ வாழும் போது, ஒரு இனத்தவரின் பண்பாட்டுக் கூறுகள் மற்ற இனத்தவரின் பண்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.
5. நாகரிகமும் பண்பாடும் மாறும் தன்மை, வளரும் தன்மைகளைக் கொண்டவை.
6. இன்று பொதுப்படையில் ஒரே பொருளில் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
7. இவை இரண்டும் ஒரு மனித சமூகத்தின், வாழ்க்கை முறையின் வளர்ச்சியைக் குறிக்கின்றது.

**வேற்றுமைகள்**

| இல | பண்பாடு | நாகரிகம் |
|---|---|---|
| 1 | ஒரு சமூகத்தின் நடை, உடை பாவனை, பழக்க வழக்கம், மதிப்பீடு போன்ற தனித்துவமான அம்சங்களை கவனத்தில் கொள்கிறது. | வாழ்வின் எல்லாக் கூறுகளையும் அதாவது மானிட சமூகத்தின் முழுமையான வளர்ச்சிக்குரிய அனைத்தையும் உள்ளடக்குகிறது. |
| 2 | அகவயமானது (பருப்பொருள் சாராதது) | புறவயமானது பருப்பொருள் சார்ந்தது (கட்டடம்) |
| 3 | ஒரு சமூகம் உலகுடனும், சக மனிதருடனும் தாம் வாழ்வதற்காக அமைத்துக்கொள்ளும் நம்பிக்கை, விழுமியங்கள், பழக்க வழக்கம், ஒழுக்கம், கலை போன்றவற்றின் பகிர்வு முறையைக் குறிக்கிறது. (இது கற்றல் வழியாக ஒரு தலைமுறையில் இருந்து மறு தலைமுறைக்குக் கையளிக்கப் படுகிறது). | பல நகரங்கள், பல சமூக வகுப்பினர், அரசாங்கம் போன்ற பகுதிகளை உள்ளடக்கும் பெரிய சமுதாயமாகக் காணப்படுகின்றது. |
| 4 | கூடுதலாக ஆன்மீகத் தன்மையை வலியுறுத்துகிறது. | தேர்ந்ததிறன் பொருளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. |
| 5 | நாகரிகத்திற்கு முன் தோன்றியது. | பண்பாட்டிற்குப் பின் தோன்றியது |
| 6 | சிறு கிராமப்புற மக்கள் சமூகம், பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து பாதுகாத்து வரும் பாரம்பரிய வாழ்க்கை முறையைக் காட்டுகிறது. | நாட்டின் நகர்ப்புற மக்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. |
| 7 | பழமைத் தன்மையை வலியுறுத்தி நிற்கின்றது. | புதுமைத் தன்மையை வலியுறுத்தி நிற்கிறது. |

பண்பாடு நாகரிகத்தின் ஒரு அம்சமேயாகும். நாகரிகம் இன்றி பண்பாடு இருக்கலாம் ஆனால் பண்பாடு இல்லாமல் நாகரிகம் இருக்க இயலாது.

## உத்தேச கற்பித்தல் செயற்பாடுகள்

1. நாகரிகம்,பண்பாடு போன்ற சொற்களை வரைவிலக்கணப்படுத்துவார்.
2. நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைப் பண்புகளை இனங் கண்டு விளக்குவார்.

## உசார்துணை நூல்கள் :-


1. ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன், *கிறிஸ்தவமும் நாகரிகங்களும், கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்*, நல்லாயன் நிலையம், திருநெல்வேலி – 2008
2. கு.சொர்க்கலிங்கம், *இந்து நாகரிகம்*, குமரன் புத்தக இல்லம் - 2009 (பார்க்கவும்)
3. அருட்பணி. ஜெரால் டீ ரொசய்ரோ அமதி
   *கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றுவாய்களும் தொடர்புகளும்.*
   அன்னை அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம் - 2012

**தேர்ச்சி 1.0 :-** கிறிஸ்தவ நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைந்த வேற்று நாகரிகக் கூறுகளை உய்த்துணர்ந்து நல்வாழ்விற்கான பின்னணியை அமைத்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.2 :-** கிறிஸ்தவ நாகரிகத்திற்கு அடிப்படையாக அமையும் பண்பாடுகளையும், நாகரிகங்களையும் மதிப்பார்.

**பாடவேளை :-** 20

**கற்றல் பேறுகள் :-**

- கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய நாகரிகங்கள், பண்பாடுகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- கிறிஸ்தவ நாகரிகத்தின் உருவாக்கத்திற்கு கீழைத்தேய நாகரிகங்களின் பங்களிப்பு இருந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்வார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன் வைப்பார்.
- கீழைத்தேய பண்பாட்டுக் கலாசாரக் கூறுகளின் சிறப்பம்சங்களை அறிந்து, அவற்றை மதிக்கப் பழகிக் கொள்வார்.
- குழுச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி :-

### 1.2.1 கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய நாகரிகங்கள் பற்றிய அறிமுகம்.

- கிறிஸ்தவ நாகரிகத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்திய நாகரிகங்களாக யூதநாகரிகம், மற்றும் கிரேக்க, உரோமைய நாகரிகங்களைக் குறிப்பிடலாம்.
- யூத நாகரிகமானது மொசபெத்தேமிய மற்றும் எகிப்திய நாகரிகங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகும்.
- குறிப்பாக சுமேரிய பண்பாடு, கானானேயப்பண்பாடு, அசிரிய பண்பாடு, பபிலோனிய பண்பாடுகளின் சிறப்பு அம்சங்களுடன் வளர்ச்சி பெற்ற நாகரிகம் இதுவாகும்.
- மேலும் இஸ்ரயேலின் முடிமன்னர்களாகத் திகழ்ந்த சவுல், தாவீது, சாலமோன் மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கம் பெற்ற பாலஸ்தீனப் பேரரசில் வளர்ச்சி கண்டதே யூத நாகரிகம் எனக் குறிப்பிடலாம்.
- கிறிஸ்து இயேசு யூத நாகரிகத்தின் நெறிமுறைகளுக்கு உட்பட்டவராய் இருந்தாலும் இந்நாகரிகத்தில் காணப்பட்ட நெறிமுறைகளைப் புதியதோர் கண்ணோட்டத்தில் விளக்கி அதனை வாழ்ந்து காட்டினார்.
- அத்துடன் யூத நாகரிகத்தில் தாக்கம் செலுத்திய கிரேக்க, உரோமைய நாகரிகங்களின் பண்புகளையும் தமது வாழ்க்கையிலும், போதனையிலும் கைக்கொண்டு தம்மைப் பின்பற்றி வாழ்ந்த மக்களுக்கும் வாழக் கற்றுக் கொடுத்தார்.
- இதனையே கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படை என்று குறிப்பிடலாம்.
- கிறிஸ்துவின் வாழ்க்கையிலும், போதனைகளிலும் மிளிர்ந்த நீதி, உண்மை, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், தாழ்ச்சி, எளிமை, இரக்கம், மன்னிப்பு, விட்டுக் கொடுப்பு போன்ற பண்புகளைத் தமதாக்கி வாழ்வதே கிறிஸ்தவ நாகரிகத்தின் தன்மையாகும்.

**மேற்கண்ட பின்னணியில்**

கிறிஸ்தவ நாகரிகத்தில் யூத நாகரிகம் மற்றும் கிரேக்க உரோமைய நாகரிகங்களின் தாக்கம் அண்டைய நாட்டுப் பண்பாட்டுக்களின் தாக்கமும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பது தெளிவாகின்றது.

## 1.2.2 மொசப்பத்தேமிய நாகரிகம்:- (யூப்பிரடீஸ் - தைகிறீஸ் நதிக்கரை நாகரிகம்)

- மனித வரலாற்றிலே தோன்றிய பழைமை வாய்ந்த நாகரிகங்களுள் **சுமேரிய நாகரிகமும்** ஒன்றாகும்.
- கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதி “நாகரிகங்களின் தொட்டில்” என வர்ணிக்கப்பட்டது.
- மொசப்பத்தேமியா முன்னர் **சுமேரியா** என்றும், கல்தேயா என்றும் பின்னர் **பபிலோனியா** என்றும் அழைக்கப்பட்டது.
- இன்றைய மத்திய கிழக்கு நாட்டில் **ஈராக்** எனக் குறிப்பிடப்படும் பகுதியே **மொசப்பத்தேமியா** என்ற பகுதியாகும். கிமு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் “கலாசாரத்தின் தொட்டில்” என வர்ணிக்கப்பட்ட பகுதி இதுவாகும்.
- பாரசீகக் குடாவில் கடலுடன் கலக்கும் யூப்பிரட்டீஸ் தைக்கிறீஸ் என்ற நதிப்பகுதிகளில் இந்நாகரிகம் வளர்ச்சியடைந்தது.
- ஊர், நிப்பூர், உருக், சிஷ், லாகாஸ், இரிடு போன்ற நகரங்கள் இந்நாகரிகத்தில் வளர்ச்சி பெற்ற மாநகரங்களாகவும் இராசதானிகளாகவும் வளர்ச்சியடைந்தன.

### சிறப்பம்சங்கள் :-

- மொசபபத்தேமிய அரசனே நாட்டின் தலைவனாவான். தலைவனுக்கு ஆட்சி செய்யும் உரிமையை கடவுளே வழங்கியிருப்பதாக நம்பப்பட்டது.
- ஆட்சி நிருவாகத்தைக் கொண்டு நடத்துவதற்கான வருமானம், வரி அறவிடுவதன் மூலம் பெறப்பட்டது.
- அமுராபியினர் சிறந்த நிருவாகிகளாகவும், போர் வீரர்களாகவும், நீதித் துறையில் பண்டிதர்களாகவும் செயற்பட்டனர். இவர்களால் பல்வேறு துறைகளுக்குமான சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை அமுராபி சட்டங்கள் என அழைக்கப்பட்டன.
- முதன் முதலாக நாணயங்களைப் பயன்படுத்திய நாகரிகம். இதனால் பண்டை மாற்று முறையை விட, பணமூலமான கொடுக்கல் வாங்கல்களே அதிகம் மேற்கொள்ளப்பட்டன.
- மொசபபத்தேமிய மக்களிடம், கடவுள் நம்பிக்கை அதிகமாகக் காணப்பட்டது. மர்டுக், இஆ, சின், சமாஸ் முதலிய தெய்வங்கள் அவர்களின் பிரபல்யமான தெய்வங்கள். சூரியனும், சந்திரனும் நீளமான தாடிகளையுடைய அறிவாளிகளைப் போன்ற உருவத்தில் சித்தரிக்கப்பட்டனர்.
- தீய ஆவிகள் மனிதனுக்கு தொல்லை கொடுப்பனவாகவும், அத்தீய ஆவிகளைக் கட்டுப்படுத்த பூசகர்கள் காணப்பட்டனர்.
- ஆப்பு வடிவ எழுத்துக்கள் காணப்பட்டன. இவ் எழுத்துக்களில் சித்திரங்கள் காணப்பட்டதுடன், ஒவ்வொரு உருவமும் பொருள் உடையனவாகவும் அமைந்தன. நட்சத்திரம் கடவுளையும், பாதங்கள் பயணத்தையும் குறித்து நின்றன.
- கனவுகளுக்குப் பலன் கூறும் பழக்கமும் இவர்களிடம் காணப்பட்டது. அத்துடன் நோய்களை மாய சக்திகள் மூலம் குணப்படுத்தலாம் என நம்பப்பட்டது.
- சுமேரியாவின் சிற்ப வேலைப்பாடு ஒன்றில் அமுராபி மன்னனுக்கு சமாஸ் எனும் சூரியக் கடவுள் மோதிரம் ஒன்றையும்,கோல் ஒன்றையும் அன்பளிப்புச் செய்வதாக சித்தரிக்கப்பட்டது.
- விவசாயமும், விலங்கு வளர்ப்பும் பொருளாதார நடவடிக்கைகளாக அமைந்தன.
- ஓவ்வொன்றிற்கும் தனிப்பட்ட தெய்வங்கள் காணப்பட்டன. மனிதனை மீட்கக் கூடிய சக்தி தெய்வங்களுக்கேயுரியது என நம்பப்பட்டது.

- ஊர் என்னும் நகரில் பிரமாண்டமான கட்டிடம் சிகுராத் என்னும் தேவாலயமாகும்.
- கலண்டர் முறையும் இங்கு காணப்பட்டது. உலகின் முதல் வரைபடம் மொசப்பத்தேமியாவிலேயே வரையப்பட்டது. சக்கரத்தின் உபயோகமும் இங்கு தான் ஆரம்பமாகியது.
- 600 வகைக்கும் மேலான மூலிகைச் செடிகள் மருந்துகளாகப் பயன்படுத்தப்பட்டன.
- உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு தோட்டம் கட்டடக்கலைக்கும், கருங்கல்லில் வடிக்கப்பட்ட கௌடியா அரசனின் சிலை சிற்பக் கலைக்கும், உயிரோட்டமும் யதார்த்தமுமாக அமைக்கப்பட்ட, ஆண்பெண் உடலமைப்பு செதுக்கல் கலைக்கும் ஆதாரமாக அமைந்ததுடன், அக்கால கலைஞர்களின் திறமைகளை வெளிக்காட்டவும் உதவுகிறது.

### 1.2.3 எகிப்திய நாகரிகம் (நைல்நதி)

- பழைமைவாய்ந்த நாகரிகமாகும். கி.மு 3300 முதல்,கி.மு 1070 வரை இது நிர்வாகப் பொருளாதார, சமூக கலாசார விடயங்களில் மிகச் சிறப்புற்று விளங்கியுள்ளது.
- இது ஆபிரிக்கக் கண்டத்தின் மிஸிர் (எகிப்து) பிரதேசத்தில், நைல்நதியை அண்டி வளர்ச்சியடைந்தது.
- இந் நைல் நதியானது ஆபிரிக்காவில் விக்டோரியா ஏரியில் ஆரம்பித்து, எகிப்தினூடாகப் பாய்ந்து, மத்திய தரைக் கடலில் சங்கமமாகிறது.
- எகிப்தின் கிழக்கு எல்லையிலே செங்கடல் அமைந்துள்ளது. முற்கால வர்த்தகர்கள் இலங்கை, சீனா ஆகிய நாடுகளுக்கூடாகவும் எகிப்தின் நைல்நதிக் கழிமுகத்தை அண்மித்த பிரதேசத்தில் (சுயஸ் கால்வாய்) ஊடாகவும், மேற்கு நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்தியதால் இது வாணிப மத்திய நிலையமாகக் காணப்பட்டது.
- கி.மு. 3000 ஆண்டில் வட எகிப்து, தென் எகிப்து என்று காணப்பட்ட இரு பகுதிகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன.

### சிறப்பம்சங்கள் :-

- சிறப்பான செழிப்பு மிக்க மண். வாற்கோதுமை, கோதுமை, மிலட் முதலிய தானியங்கள் வளர்வதற்கு ஏற்றதாக அமைந்தது.
- ஆட்சி அதிகாரம் தெய்வத்திடம் இருந்தே அரசனுக்குக் கிடைத்திருப்பதாக நம்பினர். அரசனே ஆன்மீகத் தலைவனாகவும், லௌகீகத் தலைவனாகவும் விளங்கினான்.
- அரசனின் கீழ் அமைச்சர்களும், சமயக் குருமார் அரசனுக்கு அடுத்த கட்டத்திலும் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டனர்.
- நிருவாகம், சமயம், பொருளாதாரம், என்ற வகையில் ஆட்சிக் கடமைகள் ஒன்றிணைக்கப் பட்டிருந்தன.
- பெரும்பாலும் ஆட்சி உரிமை தந்தையிடம் இருந்து மகனுக்கு வழங்கப்பட்டது. ஆண் பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் பெண்களும் ஆட்சிப் பீடம் ஏற அனுமதிக்கப்பட்டது.
- “பைப்பிரஸ்” என்ற புல் எழுதப் பயன்படுத்தப்பட்டது.
- தெய்வங்கள், தீயஆவிகள், பற்றியும் அவற்றின் ஆற்றல்கள், அவற்றோடு தொடர்பு கொள்ளக் கூடிய முறைகள், ஈமச்சடங்கு முறைகள், மரணச் சடங்கில் ஓத வேண்டிய மந்திரங்கள் போன்றன எழுதப்பட்ட சுவடிகள் கண்டெடுக்கப்பட்டன.
- மரணத்தின் பின்பு வாழ்வு உண்டு என்ற நம்பிக்கை இவர்களிடமும் காணப்பட்டது. உதாரணம்: அவர்களின் பிரமிட் கல்லறையாகும்.

- கட்டிடக் கலையும், எகிப்திய நாகரிகத்தின் சிறப்பம்சமாகும். சிற்ப வேலைபாடுகள், சித்திரங்கள் போன்றனவும் உருவ எழுத்துக்கள் என்பனவும் இந்நாகரிகத்தூடே வளர்ச்சி பெற்றன.
- ஆண்டுகள், மாதங்கள் தினங்களைக் கணிப்பதற்கும் இவை பயன்படுத்தப்பட்டன.
- அரசர்கள் பார்வோன் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டனர்.
- கணிதத்துறை, வைத்தியத்துறை சோதிடக் கலை என்பனவும் வளர்ச்சி பெற்றது.
- தானியங்களை அளப்பதற்கும், களஞ்சியங்களின் பரப்பளவைக் கணிப்பதற்கும், கட்டிடங்களுக்குத் தேவையான கற்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கும்,கணித எண்ணக் கருக்கள் பயன்படுத்தப்பட்டன.
- விளக்கெண்ணெய், பேரீச்சம் பழம், அத்திப்பழம் முதலியவை மருந்துகளாகப் பயன்படுத்தப்பட்டன.

### 1.2.4 யூத நாகரிகம்

- இஸ்ரயேலரின் வாழ்க்கை வரலாறானது அண்ணளவாக கி.மு 1800 – 1700 ற்கு இடைப்பட்ட காலத்தில் மொசப்தாமியாவிலுள்ள காரான் (Haran) நாட்டில் இருந்து கானான் நாட்டிற்கு ஆபிரகாம் இறைவனால் அழைக்கப்பட்டதுடன் ஆரம்பமானது.
- யூத மறையானது இஸ்ரயேல் மக்களை அண்மித்து வாழ்ந்த சுமேரியா, எகிப்து, அசீரியா, பாரசீக, கிரேக்க, உரோமய நாகரிகங்களின் தாக்கங்களுக்கு உட்பட்டது.
- மீட்பின் வரலாறு ஆபிரகாமின் அழைப்புடனே ஆரம்பமாகிறது. ஆபிரகாம் மொசப்தாமியாவிலுள்ள “ஊர்” என்ற இடத்தில் இருந்து அண்ணளவாக கி.மு 1900 – 1800 காலப்பகுதியிலேயே அழைக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகிறது.
- ஆபிரகாம் மொசப்தாமியாக் கலாசாரத்தின் பின் புலத்திலேயே பிறந்து வளர்ந்தவர் என்பது தெளிவு.
- மந்தை மேய்த்தல் அவரது தொழிலாகக் காணப்பட்டமையினால் யூப்பிரடீஸ் - தைக்கிறீஸ் ஆறுகள் வழியாகப் பயணஞ் செய்து பலஸ்தீனாவின் யோர்தானை அடைந்தார்.
- இப்பகுதி கானானியர் பூர்விகமாக வாழ்ந்த பகுதியாகும்.
- ஆபிரகாமிற்கு ஈசாக்கும், ஈசாக்கிற்கு ஏசா, யாக்கோபுவும், யாக்கோப்பிற்கு பன்னிரண்டு புதல்வர்கள் பிறந்ததையும், அவர்களில் ஒருவராகிய யோசேப்புப் பற்றியும் திருவிவிலியம் கூறுகிறது.
- யோசேப்பின் காலத்திலேயே இஸ்ரயேல் மக்கள் எகிப்துக்குச் சென்றனர்.

  எகிப்து நன்கு வளர்ச்சி பெற்ற நாகரிகத்தைக் கொண்டிருந்தது.

  இஸ்ரயேலர் எகிப்தில் 450 ஆண்டுகள் வாழ்ந்தனர். இதனால் அவர்கள் எகிப்திய நாகரிகத்தின் கணிசமான செல்வாக்குச் செலுத்தியது.
- எகிப்தில் இருந்து இஸ்ரயேல் மக்கள் மோசே ஆரோன் தலைமையில் வெளியேறினர்.
- எகிப்தில் இருந்து கானானை அடைந்த இஸ்ரயேலர், சவுல் அரசனின் கீழ் கி.மு. 1020 இல் ஒரு இஸ்ரயேல் அரசை நிறுவினர். பின்னர் அது வட அரசு, தென் அரசு எனப் பிளவுபட்ட போது, கி.மு 722 இல் அசீரியர் வட அரசைக் கைப்பற்றியதால் இஸ்ராயேலர் 200 ஆண்டுகளுக்கு மேலாக அசீரியரின் ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர். இதனால் அசீரியரின் நாகரிகம் இஸ்ரயேலரின் நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- கி.மு 604 -586 களில் பபிலோனியர் யூதேயாவையும்,பாலஸ்தீனாவையும் முழுமையாகக் கைப்பற்றி, எருசலேம் நகரை அழித்து, அங்கிருந்த இஸ்ரயேலரை பபிலோனியாவிற்கு நாடு கடத்தினர். அங்கு அவர்கள் 70 ஆண்டுகள் அடிமைகளாக வாழ்ந்தனர். இக்காலப் பகுதியில் இஸ்ரயேலர் பபிலோனிய நாகரிகத்தின் தாக்கத்திற்குள்ளாகினர்.

- பபிலோனியரின் ஆட்சி நீண்ட காலம் நிலைக்கவில்லை. ஏனெனில் பாரசீகம் மேற்கு ஆசியாவிலே மிகப் பெரிய பேரரசாகக் காணப்பட்டமையினால், தன்னுடைய எல்லைகளை விரிவுப்படுத்தத் தொடங்கிய வேளையில் கி.மு 539 இல் மொசப்பத்தேமியா (பபிலோனியா) வும் அதன் ஆட்சியின் கீழ் வந்து, ஏறக்குறைய 200 ஆண்டுகள் இஸ்ராயேலர் அங்கு வாழ்ந்தனர். அதன் விளைவாக பாரசீகரின் நாகரிகத்தின் தாக்கங்களுக்குள்ளாயினர்.
- பாரசீகர் ஆட்சியைத் தொடர்ந்து பலஸ்தீனா கி.மு 333 இல் மகா அலெக்ஸ்சாண்டரின் தலைமையில் கிரேக்கரின் ஆட்சியின் கீழ் வந்தது. இஸ்ரயேலரின் மேல் கிரேக்கரின் ஆட்சி, கி.மு 63 வரை நீடித்தது. இக்காலப் பகுதியில் இஸ்ரயேலர் கிரேக்க நாகரிகத்தின் தாக்கத்திற்குள்ளாயினர்.
- மக்கபேயரின் காலத்தில் அந்தியோக்கு எப்பிபாவுஸ் என்ற கிரேக்க மன்னன், கிரேக்க பண்பாட்டை புகுத்தமுற்பட்டபோது உள்நாட்டுப் போர் மூண்டது.
- கி.மு 63இல் உரோமைத் தளபதி பொம்பேயி பாலஸ்தீனாவுக்குள் நுழைந்து ஜெருசலேமை முற்றுகையிட்டான். ஜெருசலேம் உரோமையரின் ஆட்சிக்கு உட்பட்டது.
- யூதர்களின் வேத நூலாகிய எபிரேய விவிலியத்தில் (மசரோடிக்) மூதாதையரின் இறையனுபவங்கள் சமூகவாழ்வு, வரலாறுகள், கலாசார கூறுகளும் அண்டை நாடுகளின் பண்பாட்டு விழுமியங்கள், இலக்கியங்கள் ஆகியனவும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது (செல்வாக்குச் செலுத்தியுள்ளது).
- இஸ்ரயேலரின் வாழ்வில் குறிப்பாக யூத நாகரிகத்தின் தோற்றத்தில் கணிசமான செல்வாக்கை செலுத்தியதாக மொசப்பத்தேமிய நாகரிகமும் அமைந்தது.
- பபிலோனிய நாகரிகங்களில் காணப்பட்ட பல்வேறு கூறுகள் யூத நாகரிகத்தால் உள்வாங்கப்பட்டன.

### 1.2.5 கிறிஸ்தவ நாகரிகம்

- ஆரம்பத்தில் கிறிஸ்தவம் யூதமத்தின் கிளையாக கருதப்பட்டது. காரணம் யூதமத்தின் சட்டங்கள், சடங்குகள், சம்பிரதாயங்களை கடைப்பிடித்து கிறிஸ்து இயேசு வாழ்ந்தமையாகும். எனினும் இயேசு சொல்வடிவில் இருந்த யூத சட்டங்களை செயல் வடிவில் ஆக்கி புதிய நெறியின் நிறுவனராகவும் புதிய கிறிஸ்தவ நாகரிகத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாகவும் உள்ளார்.
- யூத கலாசார சிறப்பு அம்சங்களுடன் கிறிஸ்தவ நாகரிகம் தோன்றி வளர்ந்தது. பாலஸ்தீனத்துக்கு வெளியே கிறிஸ்தவம் பரவிய போது கிறிஸ்தவம் யூத கலாசார கூறுகள் பலவற்றைக் கைவிட்டு அச்சூழமைவின் வாழ்வியல் பழக்க வழக்கங்களுக்கும், சிந்தனைப் போக்குகளுக்கும் ஏற்ற கூறுகளை தமதாக்கி வளர்ந்தது.

- **மொசபத்தேமிய நாகரிகத்தின் பின்வரும் கூறுகள் யூத நாகரிகத்தில் ஏற்படுத்திய தாக்கம்**
  - மரணத்தின் பின் வாழ்வு உண்டு என நம்பினார்
  - தீய ஆவியை விரட்டுதல்.
  - நீதி நிர்வாக முறை
  - உரோமை நாணயங்கள் பயன்பாடு
  - ஓர் இறைக் கொள்கை.
  - பல்சமயப் பின்னணியில் வாழ்ந்த மக்கள்
  - கனவு காணல், கனவுகளுக்கு பொருள் கூறுதல்

- சுமேரிய சிறிய கட்டளைகள்
- மனித மீட்புக்கு தெய்வங்களின் துணை அவசியம் என்ற நம்பிக்கை
- கட்டிடம், சிற்பக் கலை.

- **எகிப்திய நாகரிகத்தின் பின்வரும் கூறுகள் யூத நாகரிகத்தில் ஏற்படுத்திய தாக்கம்**
  - விவசாய நடைமுறைகள் பின்பற்றப்பட்டது.
  - அரசன் தெய்வ அதிகாரம் பெற்றவர் என்ற நம்பிக்கை
  - ஆட்சி நிர்வாக முறை
  - தந்தைக்குப் பின் ஆட்சி அதிகாரம் மூத்த மகனுக்கு உரித்தானது என்ற பண்பு
  - மரணத்தின்பின் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கைகள், மரணச்சடங்கு முறைகள்
  - எகிப்திய கட்டிட, சிற்ப வேலைப்பாடுகள்
  - கணித, வைத்தியத்தினர்.

- **யூத சமயத்தின் சிறப்பம்சங்கள், கிறிஸ்தவ நாகரிகத்தில் ஏற்படுத்திய தாக்கம்.**
  - ஒரு கடவுள் நம்பிக்கை
  - உடன்படிக்கை வாழ்வு
  - எபிரேய விவிலிய நூல்கள்
  - யூத சமயத்தில் காணப்பட்ட சமய சடங்குகள்
  - யூத விழாக்கள், பலிகள், ஆலய வழிபாடுகள்

## உத்தேச கற்பித்தல் செயற்பாடு :-

1. கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சி பற்றியும், அதற்கு அடிப்படையாக அமைந்த ஏனைய நாகரிகங்களைப் பற்றியும் ஆராய்வார்.
2. யூத நாகரிகத்தின் தோற்றுவாயாக அமைந்த நாகரிகங்களையும் அதன் சிறப்பம்சங்களையும் விபரிப்பார்.
3. மொசப்பத்தேமிய, எகிப்திய நாகரிகங்கள் யூத,கிறிஸ்தவ நாகரிகத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தின எனக் கலந்துரையாடுவார்.

## உசாத்துணை நூல்கள்


1. ஆ.பீட்டர் அபீர், ஆ.அலோசியஸ் சேவியர்,*விவிலியம் ஓர் அறிமுகம்.* அருள் வாக்கு மன்றம், திருச்சி 2005
2. தியாகு –*"விவிலியக் களஞ்சியம் III, விவிலிய அறிமுகம்"*,தியான ஆச்சிரமம் சென்னை,1993
3. ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன், *கிறிஸ்தவமும் நாகரிகங்களும்*, கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், நல்லாயன் நிலையம், திருநெல்வேலி – 2011

**தேர்ச்சி 1.0** :- கிறிஸ்தவ நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைந்த வேற்று நாகரிகக் கூறுகளை உய்த்துணர்ந்து நல்வாழ்விற்கான பின்னணியை அமைத்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.3:-** கிறிஸ்தவ நாகரிகத்திற்கு அடிப்படையாக அமையும் மேலைத்தேய நாகரிகங்களை மதிப்பார்.

**பாடவேளைகள் :- 20**

**கற்றல் பேறுகள்** :-

- கிரேக்க உரோமய நாகரிகங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சியில் மேலைத்தேய நாகரிகங்கள் முக்கியமான பங்களிப்பை செய்துள்ளன என்பதை ஏற்பார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன் வைப்பார்.
- கிரேக்க, உரோமய நாகரிகங்களின் பண்பாட்டு சிறப்பம்சங்களை அறிந்து தமதாக்கிக் கொள்வார்.
- குழுச்செயற்பாட்டிற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி :-

கிறிஸ்தவ நாகரிகம் யூத நாகரிகத்தின் பின்புலத்தில் தோன்றியது. எனினும் பிற்பட்ட காலத்தில் கிரேக்க – உரோமை நாகரிகத்தின் சிறப்பம்சங்கள் பலவற்றையும் உள்வாங்கி வளர்ச்சி அடைந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே, நாம் இங்கு கிரேக்க, உரோமைய நாகரிகங்கள் பற்றியும், அவற்றின் சிறப்பம்சங்கள் எவ்வாறு கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதைப் பற்றியும் நோக்குவோம்.

## 1.3.1 கிரேக்க – உரோமய நாகரிகம்

- யூத நாகரிகம் அதன் வளர்ச்சியின் பிற்பட்ட காலப்பகுதியில், யூதர்கள் பபிலோனியாவில் இருந்து தம் தாய் நாடான பாலஸ்தீனாவிற்கு சென்ற பின்னர், மேற்கத்தேய நாகரிகங்களான கிரேக்க, உரோமய நாகரிகங்களின் தாக்கத்திற்கு உள்ளாகினர்.

## 1.3.2 கிரேக்க நாகரிகம் :-

- கலாசாரத் தொன்மையும் மெய்யியல் மேன்மையும் இலக்கிய வளமும் செழுமையும் கொண்டது கிரேக்க நாடு.
- மேனாட்டு நாகரிகங்களுக்கு அடிப்படையான இந்நாகரிகம், கிறீட் என அழைக்கப்பட்ட தீவிலிருந்து ஈயோலிய, அயோனிய, டோரிய இனங்களின் கலப்பினால் உருவானது.
- இந்தோ – ஐரோப்பிய இனத்தவர்களான கிரேக்கர்கள் முதலில் நாடோடி இடையர்களாக வாழ்க்கை நடாத்தி, நாளடையில் மேய்ச்சல் நிலங்களில் குடியேறி உழவுத்தொழிலை மேற் கொண்டார்கள்.
- இப்புதுக் கலப்பால் தோன்றிய கிரேக்க நாகரிகம் வெண்கல காலத்திற்கு முன்பே சுமார் கி.மு 3000 – 2000 ஆண்டுகளில் சிறந்து விளங்கியுள்ளது.
- பாலஸ்தீனாவை பாரசீகர் ஆட்சி செலுத்தியகாலத்திலே, கி.மு 333 இல் மகா அலெக்ஸ்சாண்டரின் தலைமையின் கீழ் கிரேக்க அரசு பாரசீக அரசைக் கைப்பற்றியது.

- மகா அலெக்சாண்டர் முழு உலகையும் கைப்பற்றி எங்கும் ஒரே (கிரேக்க) மதத்தையும், ஒரே மொழியையும், ஒரே கலாசாரத்தையும் நிலை நாட்டுவதை தனது கனவாகக் கொண்டிருந்தார்.
- இஸ்ரயேலரின் மேல் கிரேக்கரின் ஆட்சி 270 ஆண்டுகள் நீடித்தது. இக்காலப் பகுதியில் இஸ்ரயேலர் கிரேக்க நாகரிகத்தின் தாக்கத்திற்கு உள்ளாகினர்.
- கிரேக்க மொழி கற்றோரின் மொழி என அழைக்கப்பட்டது.

## சிறப்பம்சங்கள் :-

- மனித சமூகத்தின் மேம்பாட்டிற்குப் பெரும் பங்களிப்பு செய்த நாகரிகங்களில் கிரேக்க நாகரிகம் முதன்மையானது.
- அறிவியல் வளர்ச்சிக்கும் பல விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களுக்கும் வித்திட்டது.
- கிரேக்கர்கள் விவசாயத்தையும் கடல் வழி வர்த்தகத்தையுமே முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர்.
- கிரேக்கர் பல்துறைசார் பங்களிப்புக்களாக மெய்யியில்,தர்க்கம், பௌதிகம், வானியல், கணிதம், கேத்திர கணிதம் எனும் துறைகள் வழியாக தத்துவ ஞானம் என்னும் அறிவியல் துறைக்கு வித்திட்டனர்.
- சாஸ்திரம், புவியியல், தாவரவியல், விலங்கியல், மருத்துவம், விளையாட்டு போன்ற துறைகளில் வெற்றியும் கண்டனர்.
- இவ்வாறே, கலை இலக்கியம் நாடகம் போன்ற துறைகளுக்கும் வித்திட்டனர்.
- தனி மனித ஆற்றலை வளர்ப்பதிலும், உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகளில் திறமையாகச் செயற்பட்டோரை கௌரவிக்கும் முறைமைக்கும். இராணுவப் பயிற்சி செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- பகுத்தறிவின் அடிப்படையில் விடயங்களைப் புரிந்து முடிவுகளை எடுக்கும் முறைமை இவர்களின் பெரும் பங்காகும்.
- பகுத்தறிவிற்கு முதலிடம் வழங்கி, சிந்தித்து, சிக்கல்களை அலசி ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் முறைமையை உலகிற்கு வழங்கி, பல வழிகளிலும் புதிய கண்டு பிடிப்புக்களிலும் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்தவர்கள் கிரேக்கர்கள்.
- சோக்கிறட்டீஸ், பிளேற்றோ, அரிஸ்டோட்டில் ஆகியோர் சிறந்த கிரேக்க சிந்தனையாளர்களாவர்.
- கிரேக்கர், உரோமரிடம் அரசியல் சுதந்திரத்தை இழந்தாலும் தங்கள் நாகரிகத்தின் சிறப்பை இழந்து விடவில்லை. 2ம் பிலிப்புவின் மகன் அலெக்சாண்டரின் ஆட்சி விரைவில் சீரியா, பபிலோனியா, பாரசீகம், எகிப்து போன்ற நாடுகள் முதல் இந்தியா வரையும் வேகமாகப் பரவியது.
- கிரேக்க நாகரிகமும், கிழக்காசிய நாகரிகமும் இணைந்து ‘ஹெல்லனிசம்” எனும் கிரேக்கக் கூட்டு நாகரிகம் தோற்றம் பெற வழி சமைத்தது.

### கிறிஸ்தவ நாகரிகத்தில் கிரேக்க நாகரிகம் ஏற்படுத்திய தாக்கம்

- திருவிவிலியத்தில் கிரேக்க மொழியின் தாக்கம் (செப்துவாஜிற்)
- கிரேக்க கட்டிடக்கலைகள், சிற்பக்கலைகள்
- கிரேக்க மெய்யியல் தாக்கம்
- கிரேக்க வாழ்க்கை முறை (விளையாட்டு, மருத்துவம்)

### 1.3.2.1 கிரேக்க மொழி :-

- கிரேக்க மொழி இந்தோ, ஐரோப்பிய மொழிகளுள் ஒன்றாகும்.
- இலத்தின், சமஸ்கிருதம், ஜெர்மானிய ஆகிய மொழிகளுடன் தொடர்புடையது.
- இசைபோல் இனிமையுடைய இம்மொழி ஏராளமான வடிவ வேறுபாடுகளையுடைய சொற்களைக் கொண்டுள்ளது.
- கிரேக்க மொழியும், கிரேக்க நாகரிகம் போன்றே சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தது.
- கிரேக்க விஞ்ஞானிகளாலும், ஆய்வாளர்களாலும் சிந்தனையாளர்கள், கலைஞர்களாலும், ஏனைய துறைசார் கண்டு பிடிப்புக்களாலும் தங்கள் முடிவுகளையும், கண்டுபிடிப்புக்களையும், ஆய்வுகளையும், அவைசார் கருத்துக்களையும், ஏனையோருக்கு வெளிப்படுத்தும் போதும், விளக்கமளிக்கும் போதும்,தம் தாய் மொழியாகிய கிரேக்க மொழியையே பயன்படுத்தினர். இதனால் மொழியின் சொல்வளம் பெருகுவதற்கும் பல புதிய சொற்களின் தோற்றத்திற்கும் வழியேற்பட்டது.
- விஞ்ஞான அல்லது மெய்யியல் சிந்தனையின் வரைவிலக்கண முறையில் சிந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் போது மிகச் சரியான சொற்பதம் பாவிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.
- பல விடயங்களை விளக்கும் போது மொழி வளமும், வசன நடையும் மொழியின் ஏனைய இயல்புகளும் வளர்ச்சி பெறுகின்றன.
- மகா அலெக்சாண்டரின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலும்,அவனது ஆட்சியிலும் அதனைத் தொடர்ந்தும் கிரேக்க மொழி செல்வாக்குப் பெற்ற மொழியாகத் திகழ்ந்தது.
- உரோமய, பைசாந்திய பேரரசுகளில் இம்மொழி சிறப்புற்று விளங்கியது.
- உரோமப் பேரசும் மேலவையும் தங்களுக்கு வேண்டிய சட்டங்களை ஆக்குவதற்கு கிரேக்க மொழியையே பயன்படுத்தினர்.

### 1.3.2.2 கிரேக்க மொழியில் திருவிவிலியம் :-

- பலஸ்தீனர் பல அன்னிய படையெடுப்புக்களுக்கும் ஆட்சி அதிகாரங்களுக்கும் அடிமைகளாக இருக்க வேண்டிய நிலை உருவாகியது. அதனடிப்படையில் எகிப்தியர், அசீரியர், பபிலோனியர், பாரசீகர், கிரேக்கர், உரோமயர் ஆகியோரின் ஆளுகைக்கு உட்பட்டனர்.
- இவ்வாறான வரலாற்றுப் பின்னணி இஸ்ரயேல் மக்களின் கலாசாரத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின.
- இம்மாற்றம் அவர்கள் மொழியிலும் ஏற்பட்டதன் விளைவாக எபிரேய மொழியை படிப்படியாக மறந்து, பபிலோனியாவில் பேசப்பட்ட அரமேய மொழி யூதர்களின் பேச்சு மொழியாக மாறியது. இந்நிலையில் எபிரேய மொழியில் எழுதப்பட்ட வேதாகமத்தைப் படித்து பயன் பெற முடியாத நிலை தோன்றியது.
- எனவே அரமேய மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட திருவிவிலியத்தை “தார்கும்” (Targum) என்று அழைத்தனர்.
- கி.மு 333 முதல் கி.மு 63 வரையான காலப்பகுதி கிரேக்க மன்னன் அலெக்சாண்டரின் தலைமையின் கீழ் கிரேக்கரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டதால், கிரேக்க கலாசாரம் எகிப்து முதல் அப்கானிஸ்தான் வரை பரவியது.
- இக்காலப் பகுதியில் சாதாரண மக்கள் “கொய்னே” எனும் கிரேக்க மொழி பேசினர். கிரேக்க மொழி தெரியாதோர் நாகரிகமற்றோர் எனக் கருதப்பட்டனர்.
- புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிரேக்க ஆட்சியின் கீழ் பல இடங்களிலும் பரவி வாழ்ந்த யூதர்கள், கிரேக்க கலாசாரத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டவராகவும் கிரேக்க மொழியை நன்கு அறிந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

- பழைய ஏற்பாட்டு நூல்கள் பெரும்பாலானவை எபிரேய மொழியில் எழுதப்பட்டாலும் சில நூல்கள் அரமேய மொழியிலும், சில நூல்கள் கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.
- மக்கபேயர் இரண்டு நூல்களும், சாலமோனின் ஞான நூலும், புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களுமே கிரேக்க மொழியில் எழுதப்பட்டன.
- கிரேக்க மொழி திருவிவிலியத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- பழைய ஏற்பாடு முழுவதும் கிரேக்கத்தில் மொழி பெயர்க்க வேண்டிய வரலாற்றுத் தேவை ஏற்பட்டது. கிரேக்கத்திற்கு மொழி பெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டு நூல் “செப்துவாஜிந்து” அல்லது “எழுபதின்மர் நூல்கள்” என்ற கிரேக்க மொழி பெயர்ப்பு பல இடங்களிலும் சிதறி வாழ்ந்த யூதர்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.
- கிரேக்க மொழி பெயர்ப்பு (செப்துவாஜிந்து) திருச்சபையின் வரலாற்றில் குறிப்பாக தொடக்கத் திருச்சபையில் மிக முக்கிய நூலாகக் கருதப்படுகின்றது.
- திருத்தூதர்களும் ஆரம்ப கிறிஸ்தவர்களும் இம்மொழிபெயர்ப்பை அதிகம் பயன்படுத்தியுள்ளனர்.
- இம்மொழி பெயர்ப்பின் அதிகாரப் பூர்வத்தன்மை திருச்சபையின் கிரேக்க இலத்தீன் தந்தையர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. யோவான் நற்செய்தியிலும் பவுலின் எழுத்துக்களிலும் கிரேக்கத் தாக்கம் அதிகம் காணப்படுகின்றது.
- ஆரம்ப கால திருச்சபையின் தந்தையர்கள் (ஜஸ்டின், தெர்தூலியன், ஐரேனியஸ், கிளமென்து, ஒறிஜின்) கிறிஸ்தவ விசுவாசத்தை பேணுவதற்காக கிரேக்க மொழியில் எழுதியவை (Apologetics) கிறிஸ்தவ நாகரிகத்தக்குப் பங்களிப்பு செய்துள்ளன.

### 1.3.2.3 கிரேக்க மெய்யியல் :-

### நொஸ்திக்கம் :-

- இதனை முன் வைத்தவர்கள் ஞான மார்க்கத்தினர் என அழைக்கப்படுகின்றனர். இது ஞான உணர்வுக் கொள்கை அதாவது அறிவு சார்ந்த மீட்புக் கொள்கையாகும்.
- இது மனித வாழ்வின் முக்கிய விடயங்களாகிய, மனிதர் எங்கிருந்து வந்தவர்கள்? எங்கே செல்ல வேண்டும்? எவ்வாறு செல்ல வேண்டும்? ஆகிய அடிப்படை பிரச்சனைகளுக்கு விடையளிக்க முற்பட்டுள்ளது.
- இவ்வுலகம் ஆவி உலகு, சடப் பொருள் உலகு என இரு விதமாகக் காணப்படுகின்றது. ஆவி உலகு நல்லது எனவும் அதுவே நன்மைக்குக் காரணம் எனவும், சடப்பொருள் உலகு தீயது எனவும் அதுவே தீமைக்குக் காரணம் எனவும் கூறுகிறது.
- இறைவன் சடப்பொருள் உலகைப் படைக்கவில்லை. இறைவனிடம் இருந்து பிரிந்து சென்ற ஒரு சக்தியே தீயதாக மாறி சடப்பொருள் உலகைப் படைத்தது.
- மனித ஆன்மா இவ்வுலகைச் சார்ந்ததல்ல எனக் கூறும் ஞான உணர்வுக் கொள்கையினர் வானின்று வெளிப்படுத்தப்படும் உண்மை வழியாகவே மீட்பைக் கண்டடைய முடியும் எனும் கொள்கையையும் கொண்டுள்ளனர்.
- இக் கொள்கையின் தொடக்க காலத்தை அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது.

**பிளேற்றோனிசம் :-**

- இது கிரேக்க தத்துவஞானி பிளேற்றோ (கி.மு 428 – 348) என்பவரால் முன் வைக்கப்பட்டது.
- உண்மை உலகு, சாயல் உலகு என இரண்டு உலகுகள் உள்ளன.
- இவ்வுலகில் நாம் காண்பவை எல்லாம் உண்மை உலகின் சாயல்களே, இதைப் பிளேற்றோ சடப் பொருள் உலகு என அழைக்கிறார்.
- இதற்கு எதிர்மாறானதை உண்மை உலகு என அழைக்கிறார்.

**ஸ்தோயிக்கம் :-**

- ஸ்தொயிக்க சிந்தனை மரபைத் தோற்றுவித்தவர் சீனோ (Zeno – BC 300) என்பவராவர்.
- இவரது கருத்துப்படி எச்சூழ்நிலையிலுமுள்ள சமநிலையுடன் இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்கும் தன்மையே ஸ்தொயிக்க மனப்போக்காகும்.
- எல்லா நிகழ்வுகளும் "விதி" என்னும் நியதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
- மனித ஆன்மா என்பது இறைவனிடம் இருந்து பறந்த சிறிய பொறியே, இப்பொறி மீண்டும் இறைவனுடன் இணையும். இதற்குத் தன்னை முழுமையாகக் கையளிப்பதே விதி. இச்சட்டத்திற்கு கையளிப்பதே விடுதலை. கையளிக்க மறுக்கும் எதிர்ப்புச் செயற்பாடு மடமையாகும்.
- ஸ்தொயிக்க மனிதன் கடும் துறவு பூண்டவராகவும் தன் இயல்புணர்ச்சியைக் கட்டுப்படுத்துபவராகவும் கற்பு நெறியுடன் வாழ்பவராகவும், பிறர்க்கென உழைக்கும் மனப்போக்குடையவராகவும் கருணை கொண்டவராகவும் விளங்குவார்.

**அரிஸ்டோட்டில் (கி.மு 384 – 322)**

- அரிஸ்டோட்டில் முன் வைத்த காரணகாரியக் கொள்கை மிக முக்கியமானதொன்றாகும். இவரின் கருத்துப்படி நான்கு காரண காரியத் தொடர்புகளுண்டு.
- உலகில் நிகழும் எல்லாச் செயற்பாடுகளையும் இந்த 4 வகையான காரண காரியத் தொடர்புக்குள் அடக்கலாம்.
  1. உபாதன காரணி (Material Cause)

     உ +ம் :- சிலை – மாபிள் காரணம் (மாபிள் உபாதனக் காரணம்)
  2. உந்தியல்புக் காரணி (Formal cause)

     உ + ம் :- சிற்பியின் சிந்தனையில் இருக்கும் வடிவம் உந்தியல்புக் காரணி.
  3. நிமித்த காரணி (Efficient Cause)

     உ+ம் :- சிலையைத் தோற்றுவிக்க காரணமான சிற்பி, இவரே நிமித்த காரணி.
  4. முடிவுக் காரணி (Final cause)

     உ +ம் :- ஒரு செயற்பாடு என்ன காரணத்திற்காக செய்யப்படுகின்றதோ அதுவே முடிவுக் காரணி.
- கிரேக்க மெய்யியல் வழி தோன்றிய தத்துவச் சிந்தனைகள் பவுல், யோவான் ஆகிய இரண்டு எழுத்தாளர்களின் சிந்தனைகளிலும் எழுத்துக்களிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

### 1.3.3 உரோமய நாகரிகம் :-

- தைபர் (Tiber) ஆற்றின் கரையோரத்தில் அமைந்துள்ள உரோம நகர், இலத்தீன் மக்கள் குழுவினரின் வதிவிடமாகவும், வாணிப மையமாகவும் விளங்கியது.
- இந்த நகரின் பெயரே மக்களின் நகரத்தின் பெயராகவும் கொள்ளப்பட்டது.
- உரோமைக்கு அடித்தளமிட்டவர்களான ரோமுலஸ் என்பவரும் அவர் தம் முன்னோரும் கிரேக்க நாட்டில் இருந்து போர் காரணமாக இங்கு வந்து குடியேறினார்கள்.
- இலத்தின் மக்கள் குழுவினரைத் தவிர இத்தாலிய குடா நாட்டின் ஏனைய பகுதிகளில் மேலும் பல இத்தாலிய மக்கள் குழுவினரும் காணப்பட்டனர். அவர்கள் அனைவரும் இந்தோ – ஐரோப்பிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

### சிறப்பம்சங்கள் :-

- உரோம் பரந்த பேரரசாக மாறியமைக்கு இம்மக்களிடம் இயல்பிலேயே காணப்பட்ட ஆதிக்க தன்மையும், அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்த, மக்கள் மேல் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களும் அதில் கண்ட வெற்றிகளும் காரணங்களாக அமைந்தன.
- உரோம நகர் ஏனைய நாடுகளுடன் நெடுஞ்சாலைகளினால் இணைக்கப்பட்டிருந்தமையினால் பல கலாசாரங்களும், பண்பாடுகளும் சந்திக்கும் இடமாக மாறக் காரணமாக இருந்தது.
- கி.மு. 5ஆம் நூற்றாண்டு தோன்றிய உரோமப் பேரரசு, கி.பி. 5ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது.
- இதன் ஆட்சிக்குட்ப்பட்ட பிரதேசமாக அத்திலாந்திக் சமுத்திரம் முதல் யூப்பிரட்டீஸ் நதிவரையும், வடக்கில் றைன், டன்யூப் நதி முதல் தெற்கில் சகாரப்பாலைவனம் வரையும் இருந்தது.
- உரோமப் பேரசின் காலத்தில் ஐரோப்பா முழுவதும் மத அடிப்படையிலும், அரசியல் அடிப்படையிலும், நாகரிக அடிப்படையிலும் ஒற்றுமை நிலவியது.
- கி.பி 4ம் நூற்றாண்டில் நாகரிகம் அடையாத மக்களின் படையெடுப்பினாலேயே ஐரோப்பாவில் உரோமப் பேரரசு வீழ்ச்சி கண்டது.

**கிறிஸ்தவ நாகரிகத்தில் உரோம நாகரிகம் ஏற்படுத்திய தாக்கம்**

- திருவிவிலியத்தில் இலத்தின் மொழி (வுல்கத்தா)
- உரோம கட்டிடக்கலைகள்
- வழிபாட்டு முறைகள்
- சமூக நிர்வாக முறைகள்

### 1.3.3.1 இலத்தீன் மொழி :-

- உரோமயருடைய ஆட்சிக் காலத்தில் பேரரசின் ஆட்சி மொழியாகவும் நிர்வாக மொழியாகவும் இலத்தீன் விளங்கியது.
- பல ஐரோப்பிய மொழிகளுக்கு இலத்தீன் தாய் மொழியாக விளங்கியது. (இத்தாலிய, ஸ்பானிய, போர்த்துக்கேய, பிரான்சிய, ருமேனிய மொழிகள்)
- ஆங்கில மொழியின் பெரும் எண்ணிக்கையிலான சொற்களுக்கு இலத்தீன் மொழியே மூல மொழியாகும்.

- சட்டத்துறை, விஞ்ஞானம், மருத்துவம். கல்வித் துறைகளிலும் இம்மொழி முக்கிய மொழியாகத் திகழ்ந்தது.
- ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு மேல் (18ம் நூற்றாண்டு வரை) அறிஞர்களால் இலக்கிய மொழியாகவும் பயன்படுத்தப்பட்டது.
- இன்றும் உரோம கத்தோலிக்கமறையின் தலைமைப் பீடத்தில், நிர்வாக மொழியாக இருப்பதுடன் தலைமைப் பீடத்தினால் அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் அறிக்கைகள் எல்லாம் இலத்தீன் மொழியிலே வெளியிடப்படுகின்றன.
- 2ம் வத்திக்கான் சங்கம் இடம் பெறும் வரையும் (1962-1965) இலத்தீன் மரபின் வழிபாட்டு மொழியாக இலத்தீன் மொழியே விளங்கியது.
- மேலும் இதே காலம் வரையும் கத்தோலிக்க மறையின் பெரிய குருமடங்களில் எல்லாம் குருமாணவர்களுக்கு போதனை மொழியாக இம்மொழியே பயன்படுத்தப்பட்டது.

### 1.3.3.2 திருவிவிலிய மொழி பெயர்ப்பு :-

- உரோமப் பேரரசில் இலத்தீன் மொழியின் செல்வாக்கு அதிகரித்தமையினால் திருவிவிலியத்தையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.
- கி.பி 390 இல் தமாஸ்கஸ் (Damascus) என்னும் திருத்தந்தை இலத்தீன் திருவிவிலியத்தை மாற்றியமைக்க விரும்பி கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த தூய ஜெரோம் என்பவரிடம் இப்பணியை ஒப்புவித்தார்.
- கி.பி 4ஆம் நூற்றாண்டின் இறுதியில் தூய ஜெரோம் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட திருவிவிலியத்தின் இலத்தீன் மொழி பெயர்ப்பே “வுல்காத்தா”(vulgate)என அழைக்கப் பெற்றது.
- இங்கு பயன்படுத்தப்படும் “வுல்கத்துஸ்” என்பது பொதுமை, எளிமை எனப் பொருள்படுவதோடு எளியவர்களுக்கும் விளங்கும் வண்ணம் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது எனப் பொருள்படும்.
- கி.பி 1546 ஆம் ஆண்டில் இடம் பெற்ற திரிதெந்து சங்கத்தில் “வுல்காத்தா” என்னும் இலத்தீன் மொழி பெயர்ப்பு வழிபாட்டிற்கு ஏற்றதாக அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 1.3.3.3 கட்டடக் கலை :-

- உரோமர்கள் கட்டிடக் கலையில் சிறந்து விளங்கினர் என்பதற்கு இவர்களால் நிர்மாணிக்கப்பட்ட பொதுப்பாதைகள், பாலங்கள், அணைக்கட்டுகள், துறைமுகங்கள், களியாட்ட அரங்குகள், நீர்த்தேக்கங்கள் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.
- இவர்களது பசிலிக்கா கட்டிட அமைப்பு முறையை அடியொற்றியதாக கிறிஸ்தவ பசிலிக்கா ஆலயங்கள் அமைக்கப்பட்டன.
- கொன்தாந்திநோபிள் என்னும் இடத்தில் தூய ஆவியின் பெயரால் ஆலயமும் கல்லாரி மலையில் கல்லறை ஆலயமும், ஒலிவ மலையில் ஆரோபண ஆலயமும், பெத்லகேமில் கிறிஸ்து பிறப்பு ஆலயமும் நிறுவப்பட்டன.இந்த ஆலயங்கள் எல்லாம் பசிலிக்கா வடிவமைப்பைக் கொண்ட ஆலயங்களாகவே அமைக்கப்பட்டன.
- பசிலிக்காவின் அமைப்பு நீள் சதுர வடிவமைப்பைக் கொண்டவையாகவும்,அதன் நீள்பகுதி மூன்று பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டதாகவும்,அவற்றுள் ஒன்று நடுப்பகுதியாகவும், மற்றையவை நடுப்பகுதியுடன் இணைந்த இருமருங்கிலும் அமைந்த பகுதியாகவும் காணப்பட்டன.

### 1.3.3.4 அரசியல் அமைப்பு முறை :-

- உரோமர் சமூக அடிப்படையிலே இரு பெரும் பிரிவுகளைக் கொண்டனர். முதலாவது பற்றீசியன், இரண்டாவது பிளேபியன்ஸ்
- **பற்றீசியன்** - இவர்கள் 10 வீதத்தினராகக் காணப்பட்ட போதும், பெரும் பகுதியினர் நிலவுடமையாளராகவும்,ஆட்சியில் கூடிய பங்கு வகிக்கிப்பவர்களாகவும் காணப்பட்டனர். உரோமய சமூக அமைப்பில் அதிக செல்வாக்குப் பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

- **பிளேப்பியன்ஸ் :-** 90 வீதமானவர்கள் இந்த வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்களில் சிறு வர்த்தகர்கள். சிறு விவசாயிகள், சிறு கைத்தொழிலாளர்கள், சிறுபகுதி நிலத்தை உரிமையாக்கிக் கொண்டவர்களும் உள்ளடங்குவர்.
- 4ம் நூற்றாண்டின் முதல் உரோமயில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கிறிஸ்தவர்களை அங்கீகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதோடு அவர்களது சமூக அந்தஸ்தும் உயர்ந்தது.
- திருச்சபையிலும் குருக்கள் (clergy), பொதுநிலையினர் (laity) என்னும் தெளிவான வேறுபாடு வளரலாயிற்று.
- இந்நிலையில் உரோமய அரச நிறுவனங்களின் தன்மைகளின் தாக்கங்களைக் காணலாம்.
- முக்கோண வடிவமைப்பைக் கொண்ட படிமுறை, அதிகார அமைப்பு நிலை உரோமய அரசியல் சமூக மட்டத்தில் காணப்பட்டது.
- இந்த அமைப்பு முறையில் முக்கியமான நகரத் திருச்சபையை நிர்வாகிக்கும் அதிகாரம் கொண்டவராகப் பேராயரும், ஏனைய நகரங்களுக்கு ஆயர்களும், பங்குகளுக்கு குருக்கள், திருத்தொண்டர்கள், துறவியர் என்றும் இதன் உச்ச நிலையாகத் திருத்தந்தையும் காணப்படுகின்றார். இவ்வதிகாரப் படிமுறையில் பொது நிலையினர் அடிமட்டத்தில் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.
- திருச்சபையின் செயற்பாடு பற்றிய முக்கிய தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பும், செயற்படுத்தும் அதிகாரமும் குருக்களிடமே காணப்பட்டது.
- பொது மக்களின் பங்கும் செயற்பாடும் அரிதாக அல்லது முற்றாக அற்ற நிலையே நிலவியது. எனினும் உரோமர்கள் மத்தியில் பிளேப்பியன்ஸ் ஓரளவேனும் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்.
- இவ்வாறான அமைப்பு நிலை வேறுபாடு 2ம் வத்திக்கான் சங்கம் கூட்டப்படும் வரையும் நிலவியது. இதனை மாற்றியமைக்க இச்சங்கம் பரிந்துரைத்தது.

### 1.3.3.5 வழிபாட்டு முறைகள் :-

- உரோமப் பேரரசில் நிலை கொண்டிருந்த கிறிஸ்தவம், உரோமய மக்களின் வழிபாட்டு மரபில் வழக்கில் இருந்த பல பழக்கங்களை உள்வாங்கி மாற்றியமைத்தது.
- உரோமர்கள் தம் தெய்வங்களுக்கும் வீரர்களுக்கும் அரசர்களுக்கும் விழா எடுத்தது போன்று கிறிஸ்தவர்களும் விசுவாசத்திற்கு சான்று பகர்ந்த மறைசாட்சிகளுக்கு விழா எடுத்தனர்.
- உரோமர் டிசம்பர் – 25 ஆம் திகதியை சூரியன் பிறந்த தின விழாவாகப் பெரும் ஆடம்பரமாகக் கொண்டாடினர். இத்தினத்தையே உரோமப் பேரரசில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கி.பி 366 முதல் நீதியின் ஆதவனான அறிவாளனான யேசு பிறந்த தினமாக இத்தினத்தை ஆடம்பரமாகாக் கொண்டாடினர்.

- கி.பி 366 இல் இருந்து மேற்கு நாடுகளில் உரோமய இலத்தீன் வழிபாட்டு முறையை பின்பற்றி கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது.
- கிறிஸ்தவர்களின் வழக்கிலுள்ள மன்றாட்டு, நோன்பு நாட்கள், (யூதர் மத்தியிலும் உள்ளது) பவனிகள் முதலியன உரோமயர்களின் மரபில் இருந்து தோன்றியவை.
- உரோமர்கள் மத்தியில் காணப்பட்ட அரசர்களுக்கும், தளபதிகளுக்குமான மரியாதை, வழக்கில் இருந்த உடை மரபு ஆகியன கிறிஸ்தவ கலாச்சாரத்தினுள் நுழைந்தது.
- வழிபாட்டின் போது முழந்தாளிடும் மரபும் இவர்களிடம் இருந்து பின்பற்றப்பட்டது. உரோமர்கள் மத்தியில் அரசனுக்கும், தளபதிக்கும் படைவீரர் ஒற்றைக் காலில் முழந்தாளிடுவது அவர்களுக்கு அளிக்கும் உயர்மரியாதையாகக் கருதப்பட்டது.

## உத்தேச கற்பித்தல் செயற்பாடு :-

1. கிரேக்க நாகரிகங்களின் சிறப்பம்சங்களை முன் வைப்பார்.
2. உரோமய நாகரிகத்தின் பண்பாட்டு அம்சங்களை விபரிப்பார்.
3. மேலைத்தேய நாகரிகங்கள் எவ்வாறு கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியுள்ளது எனக் கலந்துரையாடுவர்.

## உசாத்துணை நூல்கள்:-


1. பிலிப்ஸ் இ.யேசுதாசன், *கிறிஸ்தவ வாழ்வு*, கொழும்புத்துறை
2. பிலிப்ஸ் இ.யேசுதாசன், *பரிசுத்த ஏடுகளைக் கற்றல்*, கொழும்புத்துறை
3. ஞானமுத்து விக்கர் பிலேந்திரன், *கிறிஸ்தவமும் நாகரிகங்களும்*, கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், நல்லாயன் நிலையம், திருநெல்வேலி – 2011

**தேர்ச்சி** 2.0 : பாலஸ்தீனப் புவியியல் வரலாற்றுப் பின்னணியை விளங்கி தம் வாழ்வை அமைத்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 2.1 : பாலஸ்தீனப் புவியியல் பின்னணியை உய்த்துணர்வார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றல் பேறுகள்**

- பாலஸ்தீனாவின் புவியியல் பின்னணி பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- பாலஸ்தீனா புனித நாடு என்பதை ஏற்றுக்கொள்வார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- எமது நாட்டிலுள்ள யாத்திரை தலங்களின் புனிதத் தன்மையை பேணும் வகையில் நடந்து கொள்வார்.
- பங்கு ஆலயத்தின் தூய்மையை பாதுகாக்க பங்கு மக்களோடு ஒன்றித்து செயலாற்றுவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி :-

## 2.1.1 பாலஸ்தீனப் புவியியல் பின்னணி

ஒரு நாகரிகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒரு நிலத்தின் புவியியல் தன்மையும், அந்நிலத்தை அண்டி வாழும் மக்களின் வாழ்வியலும் வரலாற்றுப் பின்னணியும் பெரும் பங்களிப்புச் செய்கின்றன. அவ்வகையில் யூத, கிறிஸ்தவ நாகரிகங்கள் தோற்றம் பெற்று வளர்ந்த பாலஸ்தீனாவின் புவியியல் தன்மைகளையும் அதன் சிறப்புக்களையும் இங்கு நோக்குவோம்.

- பாலஸ்தீனா நாம் வாழும் ஆசியாக் கண்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ளது. பாலஸ்தீனாவின் வடக்கே லெபனான் மலைத் தொடரும், தெற்கே இதுமேயாப் பாலைவனமும், மேற்கே மத்திய தரைக்கடலும், கிழக்கே அராபியப் பாலைவனமும் அமைந்துள்ளன.
- இதனை யூதர்கள் இஸ்ரயேல் நாடு என்றும், கிறிஸ்தவர்கள் புனித நாடு என்றும், அராபியர்கள் பாலஸ்தீனா என்றும் அழைக்கின்றனர். மேலும் இது வாக்களிக்கப்பட்ட நாடு, பாலும் தேனும் பொழியும் நாடு என்றும் அழைக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் இது கானான் நாடு எனப்பட்டது.
- மத்தியதரைத் தீவுகளில் இருந்து வந்த பெலிஸ்தியர்கள் பாலஸ்தீனாவின் கடற்கரைப் பிரதேசத்தின் தென்னரைப் பகுதியைக் கைப்பற்றி அங்கு குடியேறினர். இவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட கிரேக்கர்கள் இதனைப் 'பிலிஸ்தீன்' என அழைத்தனர். இப்பெயர் காலப்போக்கில் மருவி பாலஸ்தீன் எனப்பட்டது.
- மீட்பு வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் பாலஸ்தீனா பரப்பளவில் மிகச் சிறயதொரு நாடாகும். இதன் பரப்பளவு அண்ணளவாக 1120 சதுரக் கிலோ மீற்றர்.
- நைல்நதி நாகரிகத்தின் பிறப்பிடமாகிய எகிப்து பேரரசுக்கும், யூப்பிரஸ்தீசு – திக்ரீசு நாகரிகத்தின் பிறப்பிடமாகிய அசீரிய, பபிலோனிய பேரரசுகளுக்கும் இடையே பாலஸ்தீனம் அமைந்துள்ளது.

- பாலஸ்தீனாவின் நடுவே வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ஓடுகின்ற யோர்தான் நதியை மையமாக வைத்து அதனை யோர்தான் நதிக்கு மேற்கேயுள்ள பகுதி, யோர்தான் நதிக்கு கிழக்கேயுள்ள பகுதியென இரண்டாகப் பிரித்து நோக்கலாம்.
- எகிப்தில் இருந்து புறப்பட்டு சென்ற இஸ்ரயேல் மக்கள் யோசுவா தலைமையில் இந்த யோர்தான் ஆற்றைக் கடந்தே பாலஸ்தீனாவைக் கைப்பற்றினர்.
- திருமுழுக்கு யோவான் யூதர்களுக்கு போதித்து திருமுழுக்கு கொடுத்ததும், இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றதும் இந்நதிக் கரையிலேயே.

### 2.1.1.1 மத்தியதரைக் கடற்கரைப் பகுதி

- பாலஸ்தீனாவின் இப்பகுதி அலெக்சாந்திரியா வளைகுடாவிலிருந்து வாடி-எல்-அரிஸ் என்ற இடம் வரைக்கும் பரவியுள்ளது. இது வடக்கில் ஒடுக்கமாகவும் தெற்கில் விசாலமாகவும் அமைந்துள்ளது.
- 'கடல்வழி' என அழைக்கப்படும் பிரசித்தி பெற்ற வீடு வடக்கு எல்லையிலிருந்து தெற்கு எல்லை வரைக்கும் செல்லுகின்றது. இப்பகுதியை சமவெளிப்பகுதி எனவும் அழைப்பர். இப்பகுதியில், எஸ்திரலோன் சமவெளி, சாரோன் சமவெளி, பெலிஸ்திய சமவெளி, செப்பேலா சமவெளி, ஆக்கோ சமவெளி என பல சமவெளிகள் உண்டு.

### எஸ்திரலோன் சமவெளி

- இப்புல்வெளி திருவிவிலியத்தில் மெகிதே புல்வெளி என்றும், இஸ்ரியேல் புல்வெளி என்றும் அழைக்கப்படுகின்றது.
- இது பாலஸ்தீனத்தின் நடுவேயுள்ள மலைத்தொடரையும், மற்றும் கலிலேயாவையும் சமாரியாவையும் பிரித்து, கடலோரப் பகுதியையும் யோர்தான் பள்ளத்தாக்கையும் இணைக்கிறது.
- முக்கோண வடிவிலிருக்கும் இப்பகுதியின் மூன்று முனைகளிலும் முறையே கார்மேல் மலையும், தபோர் மலையும், ஏபால் மலையும் அமைந்துள்ளன.
- இப்பகுதியூடாகவே கீசோன் நதி பாய்கின்றது.

### சாரோன் சமவெளி

- இது கடற்கரைப் பகுதியின் மையப் பகுதியாகும்.
- கார்மேல் மலையிலிருந்து யோப்பாவரை 64 கி. மீ. நீளமுடையது.
- இன்றைய நவீன நகரமான ரெல் - அவிவ் (TEL AVIV) இதன் தென்பகுதியில் அமைந்துள்ளது.
- இங்குதான் யோப்பா (JAFFA) நகரமும் அமைந்துள்ளது.

### பெலிஸ்திய சமவெளி

- இப்பகுதி யோப்பாவுக்கு தெற்கே எகிப்தின் எல்லையை நோக்கி விரிந்துள்ளது.
- எகிப்திலிருந்து விடுதலை பெற்று வந்த இஸ்ரயேலர் சிம்சோன், தாவீது, சாலமோன் போன்றோரின் தலைமையில் பெலிஸ்தியருடன் போராடி இப்பகுதியைக் கைப்பற்றினர்.
- இங்கு ஒலிவ மரங்களும், தானிய வகைகளும் அதிகம் வளர்ந்தன.
- அசுதோசு (ASHDOD), அஸ்கலோன் (ASHQELON), காசா (GAZA) என்ற முக்கிய நகரங்கள் இப்பகுதியில் உள்ளன.

### செப்பேலா சமவெளி

- பெலிஸ்திய சமவெளிக்கும் யூதேயா மலைப் பகுதிக்கும் இடையில் செப்பேலா சமவெளி உண்டு
- ஏற்றமும் இறக்கமும் நிறைந்த பகுதி. சிறு சிறு குன்றுகளும் ஆங்காங்கு காணப்படுகின்றன.
- பெத்தல், ஆய், கிபயோன் போன்ற பகுதிகளை யோசுவா கைப்பற்றியவுடன் அவரது படையெடுப்பு செப்பேலா நகரங்களை நோக்கியதாய் இருந்தது. ( யோசு 10: 28-40)
- தாவீதின் படைகள் பெலிஸ்தியருக்கு எதிராகப் போரிடச் செப்பேலா சமவெளி மிகவும் பயன்பட்டது.
- இஸ்ரயேலர் பெலிஸ்தியருக்கு எதிராகவும் பின்னர் அசீரியர், பபிலோனியருக்கு எதிராகவும் போரிட செப்பேலா சமவெளி இராணுவத் தளமாகப் பயன்படுத்தப்பட்டது.

### ஆக்கோ சமவெளி

- மத்தியதரைக் கடலோரமாய் அமைந்திருந்த புகழ் பெற்ற துறைமுக நகரப்பகுதிஆகும்.
- மத்தியதரை, கீழைத்தேச நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த வளரும் வணிக மையமாக 2500 ஆண்டுகளாகத் திகழ்ந்தது.
- மக்கபேயருக்கும் கிரேக்கருக்கும் இடையே இப்பகுதியிலேயே யுத்தம் நடைபெற்றது. (1 மக் 5:14-15, 20-23)
- தூய பவுல் தனது மூன்றாவது பயணத்தின் போது இந்நகரை தரிசித்துள்ளார். (திப 21:7)

### 2.1.1.2 மேற்கு மலைப்பகுதியும் பள்ளத்தாக்கும்

- பாலஸ்தீனாவின் முதுகெலும்பாகத் திகழ்வது இப்பகுதியாகும்.
- இது முழுப் பாலஸ்தீனாவிலும் மிகச் செழிப்பான பிரதேசமாகும்.
- மேற்கு மலைப்பகுதியை புவியியல் அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கலாம். அவை முறையே.
    1. கலிலேயாப் பகுதி
    2. சமாரியாப் பகுதி
    3. யூதேயாப் பகுதி

### கலிலேயாப் பகுதி

- இப்பகுதி பாலஸ்தீனாவின் மிகச் செழுமை வாய்ந்த பகுதியாகும்.
- லெபனான் மலைத் தொடரையும் சீரியாவையும் வடக்கு எல்லையாகவும், கார்மேல் மலைத்தொடரையும் எஸ்திரலோன் புல்வெளியையும் தெற்கு எல்லையாகவும் கொண்டுள்ளது.
- புதிய ஏற்பாட்டில் முக்கிய பங்கினை வகிக்கும் கலிலேயாவினை மேல் கலிலேயா, கீழ்க் கலிலேயா எனப் பிரிப்பர்.
- பாலஸ்தீனாவில் காணப்படும் அதி உயர்ந்த மலைப்பகுதி மேல் கலிலேயாவில் உள்ளது.
- சிறிய குன்றுகளும், செழிப்பான பகுதிகளும் கீழ் கலிலேயாவில் உள்ளது.

### சமாரியாப் பகுதி

- கலிலேயாவுக்கும் யூதேயாவுக்கும் இடையே உள்ள மலைப்பகுதியாகும். கிழக்கே யோர்தான் ஆற்றங்கரையையும், மேற்கே மத்தியதரைக் கடலையும் அரண்களாகக் கொண்டு மத்திய பாலஸ்தீனாவில் உள்ளது. இஸ்ரயேல் வட அரசு, தென்னரசு எனப் பிரிந்த பின் சமாரியா புகழ் பெற்றது.

- வட அரசை கி.மு 722இல் அசீரியர்கள் கைப்பற்றி அங்குள்ளவர்களை நாடு கடத்திய பின் பிற இனத்தவர்களைக் கொண்டுவந்து குடியேற்றினர். அவர்களுடன் யூதர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டமையால் உருவாகிய புதிய இனமே சமாரியர் என அழைக்கப்பட்டது (2அர. 17: 24).
- சமாரியாவில் கெரிசிம் மலை உள்ளது. இங்குதான் சமாரியர் ஆலயம் அமைத்து வழிபட்டனர். யூதர்களால் புறக்கணிக்கப்பட்ட சமாரியரை இயேசு அன்பு செய்வதையும் அவர்களோடு பழகுவதையும் நற்செய்தி நூல்களில் காணலாம் (யோவா 4:1-42).

### யூதேயாப் பகுதி

- பாலஸ்தீனாவின் மூன்றாவது பெரும் பகுதி இதுவாகும்.
- இது சமாரியாவுக்குத் தெற்காகவும், எகிப்து சீனாய் பாலைவனத்திற்கு வடக்காகவும் அமைந்துள்ளது.
- இப்பகுதி சிறிய மலைகளைக் கொண்ட பிரதேசமாகக் காணப்பட்டது.
- யூதர்களின் ஆன்மீக – சமூக வாழ்வின் மத்திய இடமான எருசலேம் இப்பகுதியிலேயே அமைந்துள்ளது. இதுவே யூதேயா (தென்) அரசின் தலைநகராகவும் இருந்தது.
- யூதர்களே இப்பகுதி முழுவதும் குடியிருந்தனர். கலிலேயா, சமாரியா போன்று செழிப்பான பகுதியன்று.

### மேற்குப் பள்ளத்தாக்கு

- யோர்தான் ஆற்றுப்பள்ளத்தாக்கு, கடல் மட்டத்திலிருந்து பல அடி உயரத்தில் ஆரம்பித்து, யோர்தான் ஆறு சங்கமிக்கும் இடமான சாக்கடலுக்கு அருகில் கடல் மட்டத்திற்குக் கீழே 1000 அடிக்கும் அதிகம் ஆழமுடையது.
- பாலஸ்தீனாவின் வடக்கே எர்மோன் என்னும் மலைத்தொடரிலிருந்து யோர்தான் நதி ஆரம்பமாகின்றது.
- இங்கு சாக்கடல் உள்ளது. இங்கு தான் யோர்தான் ஆறு சங்கமமாகின்றது. ஏறத்தாழ 80 கிலோமீற்றர் நீளமும் 16 கிலோமீற்றர் அகலமும் கொண்ட இந்நீர்ப்பரப்பை உப்புக்கடல் (இச 3:17) எனவும் அழைப்பர். இக்கடலினுள் எந்தவிதமான உயிரினங்களும் வாழமுடியாது. இதன் கரையில் எந்தப் பயிர்ச்செய்கையும் செய்ய முடியாது. எனவே இது சாக் கடல் என்று (Dead Sea) அழைக்கப்படுகின்றது.

### 2.1.1.3 கிழக்கு மலைப்பகுதியும் பாலைநிலமும்

- பாலஸ்தீனாவின் கிழக்குப் பகுதியில் யோர்தான் மலைத்தொடர் அமைந்துள்ளது. இப்பகுதி பாலஸ்தீனாவின் மத்திய மலைத்தொடரைவிடச் சற்று உயரமானது. இப்பகுதியை பாசான், கிலயாது, அம்மோன், மோவாபு, ஏதோம் எனப் பிரிக்கலாம்.
- பாசான் பகுதி மனாசே கோத்திரத்திற்கு அளிக்கப்பட்டது. இதன் மேற்குப் பகுதி செழிப்புள்ளதாயும், கிழக்கு வறட்சியுள்ளதாயும் உள்ளது. இப்பகுதி நல்ல கொழுத்த, பருத்த மாடுகள், பசுக்களின் மேய்ச்சலுக்கு பெயர்பெற்றது.
- பாசானுக்கும் மோவாபுக்கும் இடையே கிலயாது அமைந்துள்ளது. இப்பகுதி ரூபன், காத், மனாசே கோத்திரங்களுக்கு கொடுக்கப்பட்டது. இங்கு மலைகளும், காடுகளும், ஒலிவ மரங்களும் காணப்பட்டன.
- யோர்தான் நதிக்குக் கிழக்கே அம்மோன் காணப்படுகின்றது. ஆபிரகாமின் சகோதரன் ஆரானின் மகன் லோத். லோத்தின் மகன் அம்மி என்பவரே இந்நாட்டின் ஸ்தாபகர் எனக் கூறப்படுகின்றது. அவரின் சந்ததியினரே அம்மோனியர்கள்.

- சாக்கடலுக்கு கிழக்கே அமைந்துள்ள உயர்ந்த மலைநாடு மோவாபு ஆகும். கடல் மட்டத்தில் இருந்து ஏறக்குறைய 3000 அடி உயரமானது. விடுதலைப் பயணத்தின் போது, மோசே இஸ்ரயேலரை இப்பகுதியினூடாகப் பாதுகாப்பாக வழிநடாத்திச் சென்றார். (எண் 35:1). இப்பகுதியிலுள்ள நேபோ என்ற மலையில் இருந்துதான் மோசே வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டைப் பார்த்தார். (இச 34:1-4).
- பாலஸ்தீனாவின் தென்பகுதியில் ஏதோம் பாலைநிலம் உள்ளது. இங்கு வாழும் மக்கள் இதுமேயர் என அழைக்கப்படுகின்றனர். உரோமையரின் ஆட்சிக்காலத்தில் பாலஸ்தீனாவை ஆட்சிசெய்த ஏரோது மன்னன் இதுமேயன் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2.1.1.4 பிரதான நிலப்பகுதியும் நகரங்களும்

யூத, கிறிஸ்தவ நாகரிகங்களின் தோற்றமானது பாலஸ்தீன மண்ணிலேயே நிகழ்ந்துள்ளது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பாலஸ்தீனாவின் பிரதான நிலப்பகுதிகளாக கலிலேயா, சமாரியா, யூதேயா ஆகியன விளங்கின.

### 2.1.1.4.1 கலிலேயா

நாசரேத்து இயேசுவின் வாழ்நாட்களில் அதிக காலம் கலிலேயப் பகுதியிலேயே கழிந்தன. கலிலேயாப் பகுதியில் நாசரேத்து, கானா, நயீன், கப்பர்நாகும், திபேரியா, பெத்சாய்தா தாபோர் மலை போன்ற முக்கியமான இடங்கள் காணப்பட்டன.

#### நாசரேத்து

எருசலேமிலிருந்து 72 கிலோமீற்றர் தூரத்திலுள்ள இவ்வூர் கடல்மட்டத்திலிருந்து 1200 அடி உயரத்திலுள்ளது. இயேசு தனது இளமைப் பருவத்தை இங்கேயே கழித்தார். இயேசுவின் சொந்த ஊர் என அழைக்கப்பட்ட நாசரேத்து பயிர்வளம் நிறைந்தது. திராட்சையும், அத்தியும், ஒலிவ மரங்களும் செழித்து வளரும் இடம். இங்கு தச்சுத்தொழில் செய்பவர்களும், ஆடு மேய்ப்பவர்களும், விவசாயிகளும் வாழ்ந்தனர். இயேசு நாசரேத்துத் தொழுகைக் கூடத்திலேயே எசாயா இறைவாக்கினரின் சுருள் ஏட்டை வாசித்து, விளக்கி தம் பகிரங்கப் பணியை ஆரம்பித்தார்.

#### கானா

நாசரேத்துக்கு எட்டுக் கிலோமீற்றர் வடக்கேயுள்ள ஒருமலைப் பகுதி. யோவான் நற்செய்தி நூலின்படி இயேசு இங்கேயே தமது முதல் அருளடையாளமாக தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றினார். (யோவா 2:1-11)

#### நயீன்

தாபோர் மலைக்கு சற்றுத் தெற்கே நயீன் ஊர் உள்ளது. இங்கு தான் இயேசு கைம்பெண்ணின் மகனை உயிர்ப்பித்தார். (லூக் 7:11-16)

#### கப்பர்நாகும்

இந்நகர் கலிலேயாக் கடலின் வடகரையில் உள்ளது. தீய ஆவி பிடித்தவரைக் குணமாக்கியது (மாற் 1: 21-28), பேதுருவின் மாமியாரின் காய்ச்சலைக் குணமாக்கியது (மாற் 1: 29-31), முடக்குவாதமுற்றவரைக் குணமாக்கியமை (மாற் 2: 1-12) ஆகிய புதுமைகளை இங்கேயே இயேசு செய்தார்.

### திபேரியா

உரோமையப் பேரரசர் திபேரியு சீசரின் பெயரில் ஏரோது அந்திப்பாஸ் அரசன் உரோமைய கலாசார முறைப்படி இந்நகரைக் கட்டியெழுப்பினான். இந்நகர் பெற்ற முக்கியத்துவத்தின் காரணமாக இதன் அருகிலிருந்த கலிலேயாக் கடலை திபேரியாக் கடல் என மக்கள் அழைத்தனர். மூன்று மைல்கள் நீளமுள்ள சுற்றுச்சுவர் இந்நகரைச் சூழ்ந்திருந்தது. இதனுள் ஆலயம், வீடுகள், பொதுக்கழிவறைகள், அரண்மனை, கலைக்கூடம், நாடக அரங்கம் போன்றவை இருந்தன. திபேரியாவுக்கு அருகில் பழங்காலக் கனானேயரின் நகரமொன்றை அகழ்வாராட்சியாளர் அண்மையில் கண்டு பிடித்துள்ளனர்.

### பெத்சாய்தா

கப்பர்நாகுமுக்கு மிக அருகில் பெத்சாய்தா என்ற ஊர் உள்ளது. சிறிய மீனவர் கிராமமாக இருந்த பெத்சாயிதாவை ஏரோதின் மகன் பிலிப்பு, உரோமையரின் கலைப்படி ஒரு நகரைக் கட்டியெழுப்பித் தனது தலைநகரமாக மாற்றிக்கொண்டார். திருத்தூதரான பேதுரு, அந்திரேயா என்பவர்களின் ஊரும், பிலிப்புவின் பிறப்பிடமும் இதுவே. தன்மேல் நம்பிக்கை கொள்ளாத இந்நகரை இயேசு சபித்தார். (லூக் 10:13-15). இன்று இந்நகர் பாழடைந்து காணப்படுகின்றது.

### தாபோர் மலை

எஸ்திரலோன் சமவெளியின் ஒரு மூலையில் தாபோர் மலை உள்ளது. இதுகடல் மட்டத்திற்கு மேல் 1800 அடி உயரமுடையது. இம்மலையின் மீதிருந்து கார்மேல் மலையையும், எர்மோன் மலையையும் காணாலாம்.இம்மலையில் தான் இயேசு தோற்றம் மாறினார். (மாற் 9:1)

## 2.1.1.4.2.சமாரியா

சமாரியாவின் முக்கியமான ஒரு இடமாக செக்கேம் விளங்குகின்றது. பாலஸ்தீனாவின் பழம்பெரும் நகர்களில் இதுவும் ஒன்று. ஆபிரகாம் கானான் நாட்டில் நுழைந்தபோது இவ்விடத்திலேயே முதன் முதலில் தங்கியதோடு இங்கு ஒரு பலிபீடத்தையும் அமைத்தார் (தொநூ 12: 6-7). இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் இருந்து கொண்டுவந்த யோசேப்பின் எலும்புகள் இங்குதான் புதைக்கப்பட்டன (யோசு 24:32). யாக்கோபின் கிணறும் இங்குதான் உள்ளது (யோவா 4:6). இங்கேதான் யோசுவா தனது இறுதியுரையை மக்களுக்கு ஆற்றினார் (யோசு 24:1-29).

## 2.1.1.4.3.யூதேயா

எபிரோன், எருசலேம், பெத்லகேம், எரிக்கோ, பெத்தானியா, ஒலிவமலை என்பவற்றை யூதேயாவிலுள்ள முக்கியமான இடங்களாகக் குறிப்பிடலாம்.

### எப்ரோன்

கடல் மட்டத்திலிருந்து 3300 அடி உயரத்தில் உள்ள இவ்வூர் யூதேயாவிலே மிக உயரத்திலுள்ளது. இங்கு தான் ஆபிரகாமும் சாராளும் அடக்கம் செய்யப்பட்டனர் (தொநூ 23:19, 25:9). தாவீது மன்னன் இங்கு தான் முடிசூட்டப்பட்டார் (2சாமு 2:1-4, 15:7-10). நீர்வளம் உள்ளதால் பழமரங்கள் இங்கு செழித்து வளருகின்றன. துணி செய்தல், கண்ணாடித் தொழில் போன்றன முதன்மையான தொழில்களாகும். இன்று இது ஒரு இஸ்லாமிய நகரமாகும்.

### எருசலேம்

மீட்பு வரலாற்றின் மையமாகத் திகழும் இந்நகர் ஏறக்குறைய 2550 அடி உயரமுள்ள ஒரு மலையின் மீதுள்ளது. மத்தியதரைக் கடலில் இருந்து 53 கிலோமீற்றர் கிழக்கிலும், சாக்கடலின் வடக்கு முனையில் இருந்து 22 கிலோமீற்றர் மேற்கிலும் இந்நகர் உள்ளது. கடவுளின் நகரம் என்றழைக்கப்படும் இந்நகர் கி.மு 1000ஆம் ஆண்டில் தாவீது அரசனால் கைப்பற்றப்பட்டு உருவாக்கப்பட்டது. மிகவும் புகழ்பெற்ற யூதர்களின் ஆலயம் இங்கு தான் அமைக்கப்பட்டது. இயேசுக்கிறிஸ்துவின் வாழ்வின் முக்கிய பல நிகழ்வுகள் இங்கு தான் நடைபெற்றன.

### பெத்லகேம்

எபிரோனுக்கு வடக்கே 24 கிலோ மீற்றர் தூரத்திலும், எருசலேமுக்கு தெற்கே 8 கிலோ மீற்றர் தூரத்திலும் இந்நகர் அமைந்துள்ளது. இறைமகன் இயேசு இங்குதான் பிறந்தார். கி.பி. 4ஆம் ஆண்டில் கொன்சன்ரைன் மன்னன் இங்கு பெரியதொரு ஆலயத்தைக் கட்டினார். இன்று பெத்லகேமில் வாழும் அதிகமான மக்கள் கத்தோலிக்கர்.

### எரிக்கோ

எருசலேமிலிருந்து 27.2 கிலோமீற்றர் தொலைவில் இந்நகர் உள்ளது. மேலும் கடல்மட்டத்திற்கு 800 அடி கீழே உள்ளது. இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் இருந்து வெளியேறி கானான் நாட்டினுள் நுழைந்தபோது முதலில் எரிக்கோவையே கைப்பற்றினர் (யோசு 6). இயேசு எரிக்கோவின் அருகில் உள்ள யோர்தான் ஆற்றில்தான் திருமுழுக்குப் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இயேசு நல்ல சமாரியன் உவமையில் இவ்வூரைக் குறிப்பிடுகின்றார் (லூக் 10: 30).

### பெத்தானியா

பெத்தானியா எருசலேமுக்கு கிழக்கே 3.2 கிலோமீற்றர் தூரத்திலுள்ளது. இயேசு அன்புகூர்ந்த இலாசரும், அவரது சகோதரிகளான மார்த்தாவும் மரியாளும் வாழ்ந்த இடம். இங்கேயே இயேசு இலாசரை உயிர்ப்பித்தார் (யோவா. 11: 35-53). தொழுநோயாளர் சீமோன் வீட்டில் இயேசு உணவருந்தும் போது அவரது காலடிகளை பாவிப்பெண்ணொருவர் நறுமணத்தைலத்தால் பூசியதும் இங்கு தான் (மத் 26: 6, மாற் 14: 3, யோவா 12: 3).

### ஒலிவமலை

எருசலேமுக்கு அருகே, கெதரோன் பள்ளத்தாக்கிற்குக் கிழக்கே ஒலிவமலை அமைந்துள்ளது. இம்மலைச் சரிவில் ஒலிவ மரங்கள் செழித்தோங்கி வளர்ந்து நிற்கின்றன. இங்கு தான் கெத்சமனித் தோட்டம் உள்ளது. இயேசு தம் வாழ்நாளில் பல தடவை இங்கு வந்து தந்தையை நோக்கி செபித்ததாக நற்செய்தி நூல்கள் கூறுகின்றன. இயேசு தம் பாடுகள், மரணத்தை எதிர்கொள்ள முன் இங்கு சென்றே தந்தையை நோக்கி செபித்தார். இன்று இங்கே பல ஆலயங்கள் காணப்படுகின்றன.

## உத்தேச கற்பித்தல் செயற்பாடு

1. பாலஸ்தீனாவின் புவியியல் பின்னணி பற்றி கட்டுரை ஒன்று வரைவர்.
2. பாலஸ்தீனாவிலுள்ள முக்கியமான இடங்களையும் அவற்றின் முதன்மையான சிறப்புக்களை குறிப்பிடுவர்.
3. ஆலயங்கள், புனிதத்தலங்களின் தூய்மையைப் பேணுவோம் என்னும் தலைப்பில் சுவரொட்டி ஒன்று தயாரிப்பர்.
4. ஆலயத்ததின் புனிதத்தன்மையை பேணும் செயற்பாடொன்றை ஒழுங்கு செய்வர்.

## உசாத்துணை நூல்கள்


1. அ. பீற்றர் அபீர், ஆ. அலோசியஸ் சேவியர், *விவிலியம் ஓர் அறிமுகம்*, அருள்வாக்கு மன்றம், திருச்சிராப்பள்ளி, தமிழ் இறையியல் நூலோர் குழு, மதுரை, 2005.
2. பிலிப்ஸ் இயேசுதாசன், *மனுவார்த்தையில் இறைவார்த்தை*, அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.
3. அ. பீற்றர் அபீர், *நற்செய்தி அறிமுகம்*, புனித பவுல் விவிலிய நிலையம், சென்னை, 1997.
4. பிலிப்ஸ் இயேசுதாசன், *புளிப்புமாவு*, அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.
5. The New Jerome Biblical Commentary, (Relevant articals), ed Raymond E. Brown, Theological Publication in India, Bangalore, 1997.

**தேர்ச்சி** 2.0 : பாலஸ்தீனப் புவியியல் வரலாற்றுப் பின்னணியை விளங்கி தம் வாழ்வை அமைத்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 2.2 : யூத வரலாற்றுப் பின்னணியை அறிந்து ஆக்க பூர்வமான செயற்பாட்டில் ஈடுபடுவார்

**பாடவேளைகள்** : 30

**கற்றல் பேறுகள்**

- யூதர்களின் வரலாறு பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- இஸ்ரயேலர் வரலாற்றில் இறைவெளிப்பாடு நடைபெற்றுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களினூடாக இறைவனைக் கண்டுணர்வார்.
- குழுச்செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி

## 2.2.1 புராதன இஸ்ரயேல் வரலாற்றின் முக்கிய கட்டங்கள்

### 2.2.1.1 குலமுதுவர்கள் காலம்

- திருவிவிலியத்தின் பழைய ஏற்பாடு ஏறக்குறைய இஸ்ரயேல் மக்களின் 2000 ஆண்டு கால வரலாற்றினை உள்ளடக்கியுள்ள ஒரு நூல்.
- அதன்படி இஸ்ரயேல் வரலாறானது குலமுதுவரான ஆபிரகாமின் அழைப்போடு ஆரம்பமாகின்றது.
- குலமுதுவர் என்ற பதம் ஒரு இனத்தின், குலத்தின் தந்தையைக் குறிக்கும் சொல்லாகும்.
- ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு என்போர் இஸ்ரயேலரின் குலமுதுவர்கள் ஆவர். இவர்களின் வரலாற்றினை நாம் தொடக்க நூல் 12ஆம் அதிகாரம் முதல் 50ஆம் அதிகாரம் வரையான பகுதிகளில் காணலாம்.
- ஆபிரகாம் மெசப்பத்தேமியாவைச் சேர்ந்தவர். ஆபிரகாம் காரான் என்னும் இடத்தில் மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்த போது இறைவனால் அழைக்கப்பட்டு கானான் நாட்டிற்கு அனுப்பப்பட்டார். (தொநூ 12: 1-6)
- கானான் நாட்டில் மம்ரே பள்ளத்தாக்கில் எபிரோன் என்னும் இடத்தில் நிலையாக குடியேறி வாழ்ந்து வரும்போது இறைவன் அவரோடு உடன்படிக்கை செய்துகொண்டார். (தொநூ 15:1-21, 17:1-22)
- இறைவன் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கையை அவர் மகன் ஈசாக்கோடும், ஈசாக்கின் மகன் யாக்கோபுடனும் புதுப்பித்துக் கொண்டார்.
- மீட்புத்திட்டத்தில் ஆபிரகாமிற்குப் பின் யாக்கோபு முக்கியத்துவம் பெறுகின்றார். யாக்கோபுக்கு '**இஸ்ரயேல்**' என்ற பெயர் வழங்கப்பட்டது. (தொநூ 32: 28)
- யாக்கோபைத் தொடர்ந்து அவருடைய பன்னிரெண்டு பிள்ளைகளும் பன்னிரெண்டு குலங்களாக உருவெடுத்ததோடு இஸ்ரயேல் என்ற தங்கள் தந்தையின் பெயரையே தம் இனத்தின் பெயராகவும் கொண்டனர்.

## 2.2.1.2விடுதலைப் பயணம்

- யாக்கோபின் பன்னிரு புதல்வர்களில் ஒருவராகிய யோசேப் எகிப்தில் ஆளுநனாக இருந்த காலத்தில் யாக்கோபு அவரின் பிள்ளைகள் குடும்பத்தார் என எழுபது பேர் எகிப்திற்குச் சென்று கோசேன் என்ற செழிப்பான பகுதியில் குடியேறினர்.
- அக்காலத்தில், அதாவது கி.மு 1720 – 1550 காலகட்டத்தில் 'கிக்கோஸ்' என்ற பிற இனத்தவர்கள் எகிப்தைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இவர்களும் செமித்திய இனக்கலப்பைச் சேர்ந்தவர்களே.
- இக்காலத்தில் செமித்திய இனத்தைச் சேர்ந்த பலரும் எகிப்தில் நுழைந்தனர். இவர்கள் அனைவரும் எபிரேயரோடு ஒன்று சேர்ந்து பெரிய இனமாக உருவெடுத்தார்கள்.
- ஆனால் 3ஆம் தோத்மாசு (கி.மு 1490 – 1430) என்ற பார்வோன் மன்னன் கிக்கோஸ் என்பவர்களின் ஆட்சியை முறியடித்து புதிய எகிப்திய பேரரசை நிறுவினான்.
- கி.மு 1375 – 1366 இடைப்பட்ட காலத்தில் எகிப்தை ஆட்சி செய்த 4ஆம் ஆமன் கோட்டபு என்னும் பார்வோன் மன்னன் தன்னை சூரியக் கடவுளாக பிரகடனப்படுத்தி தன்னைத் தவிர வேறு எவரையும் வணங்கக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தான்.
- எகிப்தை இரண்டாம் இராம்சேசு என்னும் பார்வோன் மன்னன் ஆட்சி செய்த காலத்தில் (கி.மு 1290 – 1224) இஸ்ரயேல் மக்கள் அடிமைத்தன வாழ்வை அனுபவித்தனர்.
- புதிய மன்னன் இஸ்ரயேல் மக்களின் தொகை அதிகரிப்பதையும் அவர்களின் ஆள்பலம் வலிமையடைவதையும் கண்டு அஞ்சியதோடு அவர்களின் வலிமையைக் குறைக்க, அவர்களுக்கு எதிராக மிகக் கொடூரமான இன அழிப்புக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தினார்.
- எகிப்தில் இஸ்ரயேல் மக்கள் மிகக் கடுமையான வேலைகள் செய்யப் பணிக்கப்பட்டனர். அடிமைவேலை வாங்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். கடினமான சாந்து, செங்கல் வேலையாலும், வயல் வேலைகளாலும் அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். பித்தோம், இராம்சேசு என்னும் இரு பெரிய நகரங்களைக் கட்ட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.
- இவற்றைவிட எபிரேயருக்கு பிறக்கும் ஆண் குழந்தைகளை கொன்று விட தாதிமாருக்கு கட்டளையிடப்பட்டதோடு, அவர்கள் கையில் இருந்து தப்பும் குழந்தைகளை நைல் நதியில் எறிந்து கொல்ல தாய்மாருக்கு கட்டளையிடப்பட்டது. இவ்வாறு இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் பல துன்பங்களை அனுபவித்தனர்.
- எகிப்தியரின் அடிமைத்தனம் தாங்கமுடியாத இஸ்ரயேல் மக்கள் அங்கிருந்து மோசே, ஆரோன் தலைமையில் வெளியேற ஆரம்பித்தனர்.
- மோசே தலைமையில் வெளியேறிய இஸ்ரயேலர் செங்கடலைக் கடந்து சீனாய் மலையில் யாவே இறைவனோடு உடன்படிக்கை செய்து கொண்டனர். யாவே இறைவனே பல அரும்செயல்கள் மூலம் தம்மை எகிப்திலிருந்து விடுவித்தார் என்பதையும் உறுதியாக நம்பினர்.

## சீனாய் உடன்படிக்கை

- இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதலாம் நாள் சீனாய் மலையை வந்தடைந்தனர். இஸ்ரயேல் மக்கள் சீனாய் மலையில் பாளையம் இறக்கிய போது அங்கு இறைவெளிப்பாட்டைக் கண்டு அனுபவித்தனர்.
- சீனாய் மலையில் இறைவன் மோசே மூலமாக இஸ்ரயேல் மக்களுடன் ஓர் உடன்படிக்கையினைச் செய்து கொண்டார். அவ்வுடன்படிக்கை மூலம் ஒரே கடவுளாகிய யாவேயை வழிபட வேண்டும் என்பதை இஸ்ரயேல் மக்கள் ஏற்றுக்கொண்டனர். மேலும் இவ்வுடன்படிக்கை மூலம் இஸரயேல் மக்கள் இறைவனுக்குச் சொந்தமான அரச, குருத்துவ, தூய மக்களினம் ஆனார்கள். (விப 19: 5-6)

- சீனாய் மலையில் இறைவன் இஸ்ரயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை பற்றிய விபரிப்பு புராதன இத்தியர், அசீரியர் ஆகிய கீழைத்தேச நாடுகளில் கி.மு 14, 13ஆம் நூற்றாண்டு காலத்தில் பேரரசர்களுக்கும் அவர்கள் கைப்பற்றும் சிறிய நாடுகளின் சிற்றரசர்களுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அமைப்பை ஒத்ததாக காணப்படுகின்றது. அவ் உடன்படிக்கை அமைப்பில் பின்வரும் முக்கியமான அம்சங்கள் காணப்பட்டன.

1. உடன்படிக்கை செய்யப்போகின்றவரை, பேரரசரை இனம்கண்டு, நன்றாக முன்னறிந்து கொள்ளுதல்.
2. பேரரசரால் முன்னைய காலங்களில் கைப்பற்றப்பட்ட இடங்களுக்கு செய்யப்பட்ட உதவிகள், நன்மைகள் பற்றிய வரலாற்றை அறிந்து கொள்ளுதல்.
3. உடன்படிக்கையால் கட்டுப்படுத்தப்படும் நிபந்தனைகள், கடமைகள், உரிமைகள்.
4. இறைசாட்சிகள், ஆசீர்கள், சாபங்களின் பட்டியல்.
5. உடன்படிக்கை வாசிக்கப்பட்டு, விருந்துடன் முடிவுறும்.
6. பின்னர் உடன்படிக்கைப் பத்திரம் ஒரு புனிதமான இடத்திலே பாதுகாப்பாக வைக்கப்படும்.

- சீனாய் உடன்படிக்கையிலும் இவற்றை ஒத்த அம்சங்கள் காணப்படுகின்றன. கடவுளை இனம் கண்டு, அவர் இஸ்ரயேலருக்கு முன்னர் செய்த அரும்பெரும் செயல்களை அறிந்து கொள்ளுதல் (விப 19: 4-6, 20: 2), நிபந்தனைகள், கடமைகள், கட்டளைகள் (விப 20:3, 23: 33) உடன்படிக்கையை வாசித்தல் (விப 24: 7), விருந்து பரிமாறல் (விப 24: 9-11), புனிதமான இடத்தில் பத்திரத்தை பாதுகாப்பாக வைத்தல் (விப 25:16), இறைசாட்சிகள், ஆசீர்கள், சாபங்கள் போன்றன இணைச்சட்ட நூலில் காணப்படுகின்றன. (4:26, 30:19, 27:11-26).
- சீனாய் உடன்படிக்கை மூலம் சாதாரண மேய்ப்பர்களாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் இறைவனுக்குச் சொந்தமான அரச, குருத்துவ, தூய மக்களினமானார்கள்.
- அவர்களுக்கென தனித்துவமான ஒரு வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள இவை அனைத்தும் அடிப்படையாக அமைந்தன.

### 2.2.1.3 நீதித்தலைவர்கள் காலம் (கி.மு 1300 – 1100)

- இஸ்ரயேல் மக்கள் சீனாய் மலையில் இறைவனோடு உடன்படிக்கை செய்துகொண்ட பின்னர் எரிகோ வழியாக கானான் நாட்டிற்குள் நுழைந்து அங்கிருந்து கானானியரோடும், பெலிஸ்தியரோடும் போரிட்டு அவர்களை வீழ்த்தி படிப்படியாக அந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர்.
- யோசுவா இஸ்ரயேல் மக்களுக்கு தலைமைதாங்கி அவர்களை கானான் நாட்டுக்கு அழைத்துச் சென்றதோடு அங்கு அவர்களுக்கு நீதி வழங்கி முதல் நீதித்தலைவராகவும் செயற்பட்டார்.
- கானான் நாட்டில் இஸ்ரயேல் மக்கள் கோத்திரங்களாகப் பிரிந்து வாழ்ந்ததோடு கானானியரோடு கலந்தும் வாழ்ந்தனர். காலப்போக்கில் இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கையின் கடவுளை மறந்து தம்மைச் சுற்றி வாழ்ந்த மக்களினங்களின் தெய்வங்களை வழிபட ஆரம்பித்தனர். இதன் விளைவாக இஸ்ரயேல் மக்கள் பல இன்னல்களுக்கும் ஆளாகினர் (நீதி 2: 11- 3: 6, 10: 6-16).

- இஸ்ரயேலர் கானான் நாட்டை கைப்பற்றியதற்கும் அவர்களிடையே முடியாட்சி தொடங்கியதற்கும் இடைப்பட்ட காலத்தில் இஸ்ரயேல் மக்களை வழிநடத்திய தலைவர்களே நீதித் தலைவர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் வலிமைமிகு வீரர்களாகவும் படைத்தலைவர்களாகவும் ஆளுனர்களாகவும் இருந்தனர். ஒத்னியேல் (நீதி 3: 7-11), தெபோரா (நீதி 4: 1-24), கிதியோன் (நீதி 6:1), அபிமெலக் (நீதி 9:1), இப்தா (நீதி 10: 6), சிம்சோன் (நீதி 13:16) என்போர் இஸ்ரயேல் மக்களை வழிநடாத்திய பிரதானமான நீதித்தலைவர்கள் ஆவர்.
- ஒத்னியேல் எட்டு வருடங்களாக இஸ்ரயேல் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருந்த மெசப்பத்தேமிய மன்னன் கூசான் ரிசத்தாயிடமிருந்து அவர்களை மீட்டெடுத்தார்.
- இஸ்ரயேல் மக்களுக்கு நீதிவழங்கி வந்த தெபோரா இஸ்ரயேல் மக்களை இருபது வருடங்களாகத் துன்புறுத்திய கானானிய மன்னன் யாபினையும் அவன் படைகளையும் பாராக்கின் உதவியுடன் அழித்து அவர்களைக் காப்பாற்றினார்.
- கிதியோன் ஏழு ஆண்டுகளாக இஸ்ரயேல் மக்களைத் துன்புறுத்திய மிதியானியரைத் தோற்கடித்து அவர்களைப் பாதுகாத்தார்.
- சிம்சோன் இஸ்ரயேலரை துன்புறுத்திய பெலிஸ்தியரை தோற்கடித்து அவர்களைப் பாதுகாத்தார்.

**இஸ்ரயேலரின் நீதித்தலைவர்களுக்கு இறைவனால் ஒப்படைக்கப்பட்ட முக்கியமான பணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

1. அன்னியரின் படையெடுப்புக்களில் இருந்து மக்களை மீட்டெடுத்தல்.
2. சமூகத்தில் நீதியை நிலைநாட்டல்.
3. சமூகத்தின் முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் தீர்த்தல்.
4. அவர்களின் வாழ்நாளெல்லாம் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இருந்து இறைதிட்டத்தை நிறைவேற்றல்.

### 2.2.1.4அரசர்கள் காலம்

- இஸ்ரயேலர் வரலாற்றின் முக்கியமான ஒரு காலகட்டமாக அரசர்கள் காலம் விளங்குகின்றது. இக்காலத்திலேயே இஸ்ரயேலரின் சமய, சமூக, கலாசாரங்களில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. இலக்கியங்கள் தோற்றம் பெற ஆரம்பினத்தன. அரண்மனை, ஆலயம், கட்டடங்கள் என கட்டடக் கலையிலும் பாரிய வளர்ச்சி ஏற்பட்டது.
- நீதித்தலைவர்களின் காலத்தில் இஸ்ரயேல் மக்கள் அடிக்கடி அவர்களைச் சுற்றி வாழ்ந்த அன்னிய அரசர்களால் ஆக்கிரமிக்கப்பட்டமையால் தம்மை அவர்களிடமிருந்து பாதுகாக்க தமக்கு ஓர் அரசன் வேண்டும் என உணர ஆரம்பித்தனர்.
- கடைசி நீதித்தலைவராகவும் இறைவாக்கினராகவும் இருந்த சாமுவேல் வயது முதிர்ந்ததும் தம்பணியை தம் புதல்வரிடம் ஒப்படைத்தார்.

### அரசாட்சி உருவானமைக்கான காரணங்கள்

1. அருகில் உள்ள நாடுகளில் அரசாட்சி காணப்பட்டமை.
2. அரசாட்சி வழியாக இஸ்ரயேலர் ஒரு தனித்துவமான பண்பாட்டுக்கலாசாரங்களையுடைய மக்கள் என்பதை மற்றவர்களுக்கு அடையாளப்படுத்த வேண்டிய தேவை.
3. தமது பகைவர்களை வெற்றிகொள்வதற்கு அரசனும் படைகளும் அவசியம் என்ற எண்ணம்.

4. இஸ்ரயேலர் மத்தியில் சாமுவேலின் பிள்ளைகள் ஒழுங்காக செயற்படவில்லை.அவர்கள் கையூட்டுப் பெற்று நியாயத்தை திரித்துக் கூறியதால் சீற்றமடைந்த மக்கள் தமக்கு ஓர் அரசனை ஏற்படுத்தித் தருமாறு கேட்டனர் (1சாமு 8: 3,5). சாமுவேல் அதற்கு முதலில் இணங்கவில்லை. ஏனெனில் யாவே இறைவனே இஸ்ரயேலரின் அரசன் என்ற நம்பிக்கைக்கு அது எதிரானது. எனினும் கடவுளின் கட்டளைப்படி சவுலை அரசனாக ஏற்படுத்தினார்.

## சவுல் அரசன் (கி.மு 1020 –கி.மு 1000)

- பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்த கீஸ் என்பவரின் மகனான சவுலை சாமுவேல் முதல் அரசனாக திருநிலைப்படுத்தினார். (1சாமு 10:1-24)
- சவுல் அரசன் அம்மோனியரையும், பெலிஸ்தியரையும் தோற்கடித்து இஸ்ரயேலருக்கு புதிய நம்பிக்கையைக் கொடுத்தார்.
- காலப்போக்கில் சவுல் அரசன் சாமுவேலுக்கு அமைய மறுத்து, அவரின் கோபத்திற்கு ஆளானார். (1சாமு 13: 5)
- அமலேக்கியருடனான போரில் அமலேக்கிய அரசர் ஆகாயையும், நல்ல பொருட்களையும் பாதுகாத்து, கடவுளின் கட்டளையை மீறி இறைவனின் கோபத்துக்கு ஆளானார் (1சாமு 15:10).
- எனவே இறைவன் அவரைச் சபித்து அரசை தாவீதிடம் ஒப்படைத்தார்.

## தாவீது அரசன் (கி.மு 1000 – கி.மு. 962)

- தாவீது பெத்லகேம் ஊரைச் சேர்ந்த ஈசாயின் கடைசி மகன். அழகிய தோற்றமுடைய தாவீது யாழ் மீட்டுவதில் வல்லவராகவும், போர்த்திறன் கொண்டவராகவும் விளங்கினார்.
- சவுல் அரசன் பிரமாணிக்கமில்லாதவராக இருந்தமையால் இறைவன் ஆடுகள் மேய்க்கும் சிறுவனாக இருந்த தாவீதை சாமுவேலைக் கொண்டு அரசனாக திருப்பொழிவு செய்தார்.
- பெலிஸ்தியரின் தலைவனான அரக்கன் கோலியாத்தை கொன்று, பெலிஸ்தியரை தோற்கடிக்கச் செய்ததால் மக்களால் மிகவும் விரும்பிப் போற்றப்பட்டார். (1சாமு 17:41-54)
- ஆரம்பத்தில் தாவீது எபிரோனில் இருந்து யூதாவை மட்டும் ஏழு ஆண்டுகள் ஆட்சிசெய்தார். பின்னர் இஸ்ரயேலரின் பன்னிரெண்டு கோத்திரங்களுக்கும் அரசனானார். (2சாமு 5:1). இஸ்ரயேலரின் பன்னிரு கோத்திரங்களையும் ஒன்று சேர்த்து ஒரு தனியரசை நிறுவிய பெருமை தாவீதிற்கே உரியது.
- தாவீது எபூசேயர், வசமிருந்த எருசலேமைக் கைப்பற்றி அங்கு தனக்கு ஓர் அரண்மனையைக் கட்டியதோடு, உடன்படிக்கை கூடாரத்தையெழுப்பி உடன்படிக்கைப் பெட்டகத்தை அங்கு கொண்டுவந்து வைத்து எருசலேமை சமய முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாக ஏற்படுத்தினார்.
- இவ்வகையில் சிறப்புற்ற தாவீது ஊரியாவைக் கொலை செய்து அவன் மனைவியை தனதாக்கி பாவம் செய்தான். அவனுடைய பாவத்தை நாத்தான் இறைவாக்கினர் எடுத்துணர்த்தி தாவீதை மனம்வருந்தச் செய்தார்.
- தனக்குப் பின் தன்மகன் சாலமோனை அரசனாக்கி தந்தைக்குப் பின் மகன் ஆட்சிக்கு வரும் முறைமையை உருவாக்கினார்.

## தாவீதின் ஆட்சியில் நாட்டின் வளர்ச்சி

- தாவீதின் வெற்றிகள் இஸ்ரயேல் ஒரு தனித்துவமான அரசாக மாற உதவியது.
- எருசலேம் தலைநகராக்கப்பட்டு, அங்கு ஒரு வழிபாட்டிடம் ஏற்படுத்தப்பட்டதோடு உடன்படிக்கைப் பேழையும் அங்கு கொண்டுவந்து வைக்கப்பட்டது.
- வழிபாட்டின் போது திரு இசையைப் பயன்படுத்தும் முறை தோற்றுவிக்கப்பட்டது.
- தாவீது அங்கு தனக்கென ஓர் அரண்மனையைக் கட்டியதோடு, ஆலயம் கட்டுவதற்கான பொருட்களையும் சேகரித்து வைத்தார்.
- எருசலேம் வழிபாட்டில் பலி செலுத்த குருக்கள் நியமிக்கப்பட்டனர்.
- ஆளுநர்களும், அலுவலர்களும், அரண்மனைப் பணியாளர்களும் நியமிக்கப்பட்டனர்.
- பல படைத்தளபதிகள் நியமிக்கப்பட்டனர்.
- இவ்வாறாக தாவீது அரசனால் இஸ்ரயேலில் புதியதொரு கலாசாரம் தோற்றுவிக்கப்பட்டது.

## சாலமோன் அரசன் (கி.மு 962 – கி.மு 922)

- சாலமோன் அரசனாக திருப்பொழிவு செய்யப்பட்டதும் இறைவனிடம் மன்றாடி தன் மக்களை நல்வழியில் நடாத்துவதற்கு தேவையான ஞானத்தை கொடையாகப் பெற்றுக் கொண்டார். (1அர 3: 9)
- தாவீதின் மகன் சாலமோன் சிறந்த நிர்வாகியாகவும், அரசியல் சாணக்கியம் உள்ளவராகவும், வியாபாரத்தில் திறமைசாலியாகவும், கட்டடக்கலைஞராகவும் விளங்கினார்.
- பல நாடுகளுடனும் வியாபாரத் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட சாலமோன் வாணிபப் போக்குவரத்திற்காக செங்கடலோரத்தில் ஒரு துறைமுகத்தைக் கட்டினார்.
- நாட்டை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க பல கோட்டைகளையும் அரண்மனைகளையும் கட்டியதோடு படையணியொன்றையும் உருவாக்கினார்.
- தாவீது மன்னன் சேகரித்து வைத்த பொருட்களைக்கொண்டு பிறநாடுகளில் இருந்து அழைத்த பல கலைஞர்களைப் பயன்படுத்தி இறைவனுக்காக மிக அழகானதொரு ஆலயத்தினைக் கட்டினார்.
- எருசலேமை நன்கு கட்டியெழுப்புதவற்காக சிறந்த கலைஞர்களையும், சிற்பிகளையும், பொருட்களையும் வெளிநாடுகளில் இருந்து கொண்டுவர அதிக பணத்தினை செலவு செய்தார். இதனால் ஏற்பட்ட சுமையைக் குறைக்க ஒவ்வொருவரும் ஒரு மாதம் கூலி இல்லாமல் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டதோடு மக்கள் மீது அதிக வரிகளும் சுமத்தப்பட்டது. இதனால் மக்களின் வெறுப்புக்கும் ஆளானார்.
- சாலமோன் அரசன் தன் வயோதிப காலத்தில் யாவேயை மறந்து அன்னிய தெய்வங்களை வழிபட ஆரம்பித்தார். அதனால் அவர் ஆண்டவரின் வெறுப்புக்கு ஆளானார்.

  (1அர 11:1-15)
- சாலமோன் வயது முதிர்ந்து இறந்தபின் அவருடைய மகன் ரெகபேயாம் அரசனானார்.

## சாலமோனின் ஆட்சிச் சிறப்பு

- உள்நாட்டுக் கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததோடு, நிர்வாகத்தை சிறப்பாக மேற்கொள்ள நாட்டைப் பன்னிரெண்டு மாவட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு ஆளுநரை ஏற்படுத்தினார். (1அர 4:7-19)
- புதிய பல ஆயுதங்களையும், படை இரதங்களையும் பயன்படுத்தி படைபலத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம் எதிரிகளின் ஊடுருவல்களைத் தடுத்தார்.

- பல அரேபிய நாடுகளுடன் வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தி பாலஸ்தீனாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தினார்.
- கட்டடப் பணிகளை சிறப்பாக முன்னெடுத்து புதிய நகரங்களை உருவாக்கி மக்களுக்கு சிறந்த குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தினார்.
- இவரிடமிருந்த தலைசிறந்த ஞானத்தின் வெளிப்பாடாக சிறந்த இலக்கியங்கள் உருவாகின (1அர 4: 29-34). மேலும் யாவே பாரம்பரியம் (J மரபு) இவருடைய ஆட்சிக்காலத்திலேயே உருவாகியது.
- தன் ஆட்சிக்கு குந்தகம் விளைவித்தவர்களை தோற்கடித்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார்.
- இவ்வாறாக சமய, சமூக, பொருளாதார, கலை, கலாசாரத்தில் முன்னேற்றமடைந்த ஒரு நாட்டை உருவாக்குவதில் சாலமோன் அரசன் முழுமூச்சுடன் உழைத்ததோடு அதில் வெற்றியும் கண்டார்.

### 2.2.1.5 இஸ்ரயேல் அரசு பிளவுபடல்

- சாலமோன் அரசர் அன்னிய நாட்டுப்பெண்கள் பலரையும் திருமணம் செய்து, அவர்களின் தெய்வங்களை வழிபட்டு இறைவனின் கோபத்திற்கு ஆளாகியமை, மக்கள் மீது திணித்த வரிச்சுமையால் வட இஸ்ரயேல் மக்களின் அதிருப்தி என்பன இஸ்ரயேல் அரசு பிளவுபடுவதற்கு பிரதான காரணமாகும். (1அர 11:1-15)
- சாலமோனின் மரணத்தைத் தொடர்ந்து அவன் மகன் ரெகபெயாம் ஆட்சிக்கு வந்தார். அவனின் தவறான அரசியல் முறைகளினால் ஒருங்கிணைந்திருந்த பாலஸ்தீன அரசு கி.மு 922இல் வட அரசு, தென்னரசு எனப் பிளவுற்றது.
- பத்துக் கோத்திரங்களைக் கொண்ட வட அரசு இஸ்ரயேல் என்றும், இரண்டு கோத்திரங்களைக் கொண்ட தென்னரசு யூதா என்றும் அழைக்கப்பட்டது.

#### வட அரசு

- சாலமோனின் மகன் ரெகபேயாமின் விவேகமற்ற தன்மையால் அதிருப்தி அடைந்த படைத்தளபதி எரோபவாம் வட அரசை தனியாகப் பிரித்து கி.மு 922 முதல் 901வரை ஆட்சி செய்தார்.
- அவர் தன் மக்கள் எருசலேம் ஆலயம் செல்வதைத் தடுக்க பெத்தலிலும், தாணிலும் கோவில்களைக் கட்டி தங்கத்தினாலான கன்றுக்குட்டிகளை செய்துவைத்து மக்களை அங்கு வழிபடச் செய்தார்.
- அடுத்து வந்த 50 ஆண்டுகளுக்கு நாதாப், பாஷா, ஏலா, சிம்ரி, ஓம்ரி, ஆகாப் ஆகியோர் ஆட்சிசெய்தனர்.
- ஆகாப்பின் ஆட்சிக்காலத்திலேயே (கி.மு 869 – 850) இறைவாக்கினர் எலியா உண்மைக் கடவுளை எடுத்துக்காட்டி பாகால் வழிபாட்டைக் கண்டித்தார்.
- இறைவாக்கினர் எலியா, எலிசேயு, மீக்காயா (எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினர்), ஆமோஸ், ஓசேயா போன்றவர்கள் வட அரசை சிறந்த நெறிவாழ்வுக்கு இட்டுச் சென்றனர்.
- கி.மு 722இல் அசீரியர்கள் வட அரசைக் கைப்பற்றி இஸ்ரயேல் மக்களை நாடுகடத்தவே வட அரசின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

### தென்னரசு

- சாலமோனின் மகன் ரெகபெயாம் எருசலேமை தலைநகரமாகக் கொண்டு யூதா, பெஞ்சமின் கோத்திர மக்களை ஆட்சிசெய்தார். ரெகபெயாமுக்குப் பின் அவர் மகன் அபியா ஆட்சிக்கு வந்தார்.
- தாவீது அரச குடும்பமே தொடர்ச்சியாக ஆட்சி செய்தது.
- யோசபாத்து, அமட்சியா ஆகிய அரசர்கள் சிறப்பாகவும், நேர்மையாகவும் மக்களை ஆட்சி செய்தனர்.
- தென்னரசை ஆகாசு மன்னன் ஆட்சிசெய்த காலத்தில் எசாயா, மீக்கா ஆகிய இறைவாக்கிளர்கள் பணிபுரிந்தனர்.

- இவர்கள் தென்னரசில் நிலவிய அநீதிகளை எடுத்துக்காட்டி அதன் அழிவை சுட்டிக்காட்டியதோடு அரசனையும், மக்களையும் நீதியாக வாழ அழைத்தனர்.
- எசாயா இறைவாக்கினர் மெசியாவின் வருகையினை முன்னறிவித்தார்.
- பபிலோனிய மன்னன் யூதேயாவைக் கைப்பற்றியதோடு தென்னரசின் ஆட்சி முடிவுக்கு வருகின்றது.

## 2.2.1.6 பபிலோனிய நாடுகடத்தல்

- பபிலோனிய நாடுகடத்தல் மூன்று கட்டங்களாக இடம்பெற்றது.
- யோயாக்கீம் யூதாவை ஆட்சிசெய்த காலத்தில் பபிலோனிய மன்னன் நெபுகத்னேசர் எருசலேமுக்குள் நுழைந்து யூதாவின் முக்கியமான சிலரை நாடு கடத்தினான். அவர்களுள் தானியேலும் ஒருவர்.
- பபிலோனிய மன்னன் மீண்டும் கி.மு 597இல் எருசலேமைக் கைப்பற்றி யோயாக்கீம் அரசனையும் அவன் மனைவி, தாய், அலுவலகர்கள், படைவீரர்கள், கலைஞர்கள் எனப் பலரையும் நாடுகடத்தியதோடு எருசலேம் ஆலயத்தில் இருந்த விலையுயர்ந்த பொருட்களையும் சூறையாடிச் சென்றான்.
- பபிலோனிய மன்னன் மூன்றாம் முறையாகவும் முழுப்படைப் பலத்துடன் வந்து எருசலேமை முற்றுகையிட்டு அழித்து எஞ்சியிருந்தவர்களையும் நாடுகடத்தினான்.
- பபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்ட யூதர்கள் 50 ஆண்டுகள் அங்கு வாழ்நதனர். இக்காலத்தில் அவர்கள் தங்கள் தனித்துவத்தை இழந்தனர்.
- பலி செலுத்துவதற்கு ஆலயம் இருக்கவில்லை. அவர்களின் சமய, சமூக, கலாசார வாழ்வில் பாரிய மாற்றங்களும் சீரழிவுகளும் ஏற்பட்டன.
- இக்காலப்பகுதியில் இரண்டாம் எசாயா, எரேமியா, எசெக்கியேல் போன்ற இறைவாக்கினர்கள், அவர்கள் மத்தியில் பணிபுரிந்து அவர்களை வழிநடத்தினர்.
- எசேக்கியேல் இறைவாக்கினர் அவர்கள் தம் சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்வர் என நம்பிக்கையூட்டினார். (எசெ 37:1-14)
- இங்குதான் யூதர்களின் தொழுகைக்கூட வழிபாடு ஆரம்பமாகியது. யூத குருக்கள் தொழுகைக் கூடங்களை அமைத்து அங்கு யூதர்களை ஒன்றுகூட்டி போதனைகளை வழங்கினர். இப்போதனைகளே குருக்கள் பாரம்பரியம் தோன்ற வழிசமைத்தது.

### 2.2.1.7 நாடுதிரும்புதல்

- பாரசீக அரசன் சைரஸ் தம் எல்லைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் பல நாடுகளையும் கைப்பற்றிய போது கி.மு 539இல் பபிலோனியாவையும் 538இல் பாலஸ்தீனாவையும் கைப்பற்றி அதனைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தான்.
- மக்களின் உரிமைகளை மதித்த பாரசீக மன்னன் பபிலோனியாவில் வாழ்ந்த யூத மக்களை அவர்களின் சொந்த நாடு சென்று சுதந்திரமாக வாழ அனுமதியளித்தான்.
- மேலும் பபிலோனிய அரசன் ஜெருசலேம் ஆலயத்திலிருந்து சூறையாடிச் சென்ற செல்வங்கள், பொன் வெள்ளிப் பாத்திரங்கள், பொற் தூண்கள் என்பவற்றை திருப்பி அனுப்பவும் கட்டளையிட்டார்.
- யூதர்கள் சேஸ்பட்சர், செருபாபேல், யோசியா ஆகியோர் தலைமையில் 538இல் எருசலேமுக்குத் திரும்பிச் சென்றனர்.

### யூத சமய, சமூக, கலாசார மறுமலர்ச்சி

- பபிலோனியாவில் இருந்து, சொந்த நாடு திரும்பிய யூதர்களின் வாழ்வில் சமய, சமூக, கலாசார மறுமலர்ச்சி ஏற்பட்டது.
- செருபாவேலின் தலைமையில் எருசலேம் ஆலயத்தினை மீண்டும் கட்டும் பணியினை ஆரம்பித்து அதனை கி.மு 513இல் திருநிலைப்படுத்தினர்.
- யூத சமய – சமூக, கலாசார மறுமலர்ச்சிக்கு எஸ்ரா, நெகேமியா ஆகியோர் பெரும் பங்களிப்பை செய்துள்ளனர்.
- இவர்கள் இருவரும் புதிய எருசலேம், புதிய ஆலயம், புதிய வழிபாடுகளை அமைத்து, உடன்படிக்கையைப் புதுப்பித்து யூத சமயத்தை புனரமைத்தனர். (எஸ் 3: 6, நெகே 1-6)

### எஸ்ரா

- எஸ்ரா தலைமைக்குருவான ஆரோனின் குடும்பத்தில் வந்த சாராயியாசின் மகன். திருச்சட்ட வல்லுனர்.
- ஆண்டவரின் திருச்சட்டத்தை கற்றறிவதிலும் அதன்படி நடப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார்.
- யூத மக்களை ஒன்றுகூட்டி சட்டங்களை எடுத்துரைத்து, அவற்றைக் கடைப்பிடிக்கும் வழக்கத்தை மீளவும் ஏற்படுத்தினார்.
- வழிபாட்டைப் புதுப்பித்து, உடன்படிக்கைக்கு மீண்டும் முக்கியத்துவம் கொடுத்தார்.
- ஞான வாழ்விலும், நன்நெறியிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.
- உடன்படிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து யூதர்களை ஒழுக்கமுள்ள மக்களாக்க இவர் செயற்பட்டார்

### நெகேமியா

- இவர் பாரசீகத் தலைநகரான சூசாவில் மன்னர் அர்த்தக்கஸ்தாவுக்குப் பானப் பணிவிடைக்காரனாக இருந்தவர்.
- பாரசீக மன்னரால் யூதநாட்டிற்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
- பல எதிர்ப்புக்கள் மத்தியில் கி.மு 444இல் எருசலேம் நகர மதிலைக் கட்டியெழுப்பினார்.
- எஸ்ராவுடன் இணைந்து பல சமய – சமூக சீர்திருத்தங்களை இஸ்ரயேல் மக்களிடையே செய்தார். (நெகே 1- 6)

### 2.2.1.8 பாலஸ்தீனாவில் கிரேக்க ஆட்சி

- கிரேக்க பேரரசன் மகா அலெகசாண்டர் கி.மு 333இல் பாரசீக மன்னன் மூன்றாம் தாரியுசைத் தோற்கடித்த பின் யூதேயா, சமாரியா என்பன கிரேக்கர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.
- கிரேக்கர்கள் யூத சமய,பழக்க வழக்கங்களைப் பின்பற்ற அவர்களுக்கு அனுமதியளித்தாலும் கிரேக்க கலாசாரமும் வாழ்க்கை முறையும் அவர்களைப் பெரிதும் பாதித்தன.
- கிரேக்க மொழி தெரியாதோர் நாகரிகமற்றவர்களாக கருதப்பட்டனர். நகர்கள் பலவும் கிரேக்க பெயருக்கு மாற்றப்பட்டன.
- கலைக்கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், குளியலறைகள் என்பன கிரேக்க கட்டடக்கலை முறைப்படி அமைக்கப்பட்டன.
- மகா அலெக்சாண்டரின் மரணத்தின் பின் எகிப்திய தளபதி தாலமி எருசலேமைக் கைப்பற்றினான். இக்காலத்திலேயே பழைய ஏற்பாடு எகிப்தில் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
- பாலஸ்தீனாவின் அதிகாரம் தலைமைக் குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் தலைமைச் சங்கத்தை ஏற்படுத்தியதோடு யூதர்களின் சமய – சமூக வாழ்வுக்கான வழிமுறைகளை அமைத்துக் கொடுத்தனர்.
- கி.மு 200இல் தாலமியிடமிருந்து சீரிய மன்னன் மூன்றாம் அந்தியோக்கு பலஸ்தீனாவைக் கைப்பற்றினான். இவனுடைய காலத்தில் பலஸ்தீனாவில் கிரேக்கப் பண்பாடு மீண்டும் தலைதூக்கியது.
- இக்காலத்திலேயே பரிசேயர், சதுசேயர் போன்ற சமயப் பிரிவினர் தோன்றினர்.
- 4ஆம் அந்தியோக்கு எப்பிப்பானின் ஆட்சியில் யூதர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டனர்.
- அவனை எதிர்த்து மக்கபேயர் புரட்சிசெய்தனர்.
- கி.மு 63இல் உரோமையப் படைத்தளபதி பொம்பேயி எருசலேமைக் கைப்பற்றியதன் ஊடாக பாலஸ்தீனா உரோமைய ஆட்சியின் கீழ் வந்தது.

### உத்தேச கற்பித்தல் செயற்பாடு

1. இஸ்ரயேல் வரலாற்றின் முக்கிய கட்டங்கள் என்னும் தலைப்பில் குழு ஒப்படை தயாரிப்பர்.
2. இஸ்ரயேல் மக்கள் மத்தியில் அரசாட்சி உருவாகிய முறையை விவரிப்பர்.
3. தமது அன்றாட வாழ்க்கை சூழலில் இறைவனை அனுபவித்த முறையினை விளக்குவர்.

### உசாத்துணை நூல்கள்


1. அ. பீற்றர் அபீர், ஆ. அலோசியஸ் சேவியர், *விவிலியம் ஓர் அறிமுகம்*, அருள்வாக்கு மன்றம், திருச்சிராப்பள்ளி, தமிழ் இறையியல் நூலோர் குழு, மதுரை, 2005.
2. பிலிப்ஸ் இயேசுதாசன், *மனுவார்த்தையில் இறைவார்த்தை*, அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.
3. அ. பீற்றர் அபீர், *நற்செய்தி அறிமுகம்*, புனித பவுல் விவிலிய நிலையம், சென்னை, 1997.
4. பிலிப்ஸ் இயேசுதாசன், *புளிப்புமாவு*, அமல உதயம், உப்புவெளி, திருமலை, 2010.

**தேர்ச்சி 3.0** : இயேசுவின் காலத்து பாலஸ்தீன பண்பாட்டின் பின்னணியை அடிப்படையாக கொண்டு புதிய ஏற்பாட்டின் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 3.1 : இயேசுவின் காலத்து பாலஸ்தீன அரசியல் பின்னணியை அறிந்து கொள்வார்

**பாடவேளைகள்** : 14

**கற்றல் பேறுகள்** :

- இயேசுவின் காலத்து பாலஸ்தீன நாட்டு அரசியல் பின்னணி பற்றிய விடயங்களை சேகரிப்பார்
- கிறிஸ்தவ மறை உருவாக்குவதற்கு பின்னணியாக இவ்விடயங்கள் அமைந்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்வார்.
- சேகரித்த தகவல்களை ஆக்கமொன்றின் மூலம் முன்வைப்பார்.
- அரசின் விதிமுறைகளுக்கு கீழ்ப்படிவார்.
- குழுச் செயற்பாடுகளின் போது ஒத்துழைப்பு வழங்குவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி**

**முன்னுரை:- :** கிறிஸ்தவ நாகரிகத்தின் அடித்தளமாய் விளங்கும் பெருமை மிக்க பாலஸ்தீன நாட்டின் ஆட்சி முறை பற்றியும், அங்கு வாழ்ந்த மக்களின் சமுதாய அமைப்பு, மற்றும் பழக்கவழக்கங்கள், ஆலய அமைப்புமுறை வழிபாடுகள், பின்பற்றிய சடங்குமுறைகள் பற்றியும் இத்தேர்ச்சியில் கற்கவுள்ளோம்.

### 3.1.1 உரோமய ஆட்சிமுறை

- அக்டோவியஸின் (அகஸ்து) ஆட்சியில் வளமையும், பாதுகாப்பும் நிலவியமையால் இங்கு புதிய ஆட்சி முறை உருவானது. இவர்களது ஆட்சிமொழி இலத்தீன் ஆகும். இந்தோ ஐரோப்பிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், இத்தாலியர்களும் இங்கு வாழ்ந்த முக்கிய குழுவினராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் தாம் கைப்பற்றிய பகுதிகளை 72 நாடுகளாகவும், 40 மாநிலங்களாகவும் பிரித்து ஒவ்வொரு மாநிலங்களையும் கண்காணிக்க அரச பிரதிநிதிகளாக ஆளுனர்களை நியமித்தனர்.
- தாம் கைப்பற்றிய நாடுகளில் ஏற்கனவே ஆட்சி செய்த அரசர்களை சிற்றரசர்களாக நியமித்தனர். உரோமைக்குரிய பணவருவாயை பெற வரி வசூலிப்பவர்களை அதிகாரிகளாக நியமித்தனர்.

### 3.1.2. பாலஸ்தீனாவில் உரோமையர் ஆட்சிமுறை

கி.மு.63ல் படைத்தளபதியான பொம்பேயின் படையெடுப்புடன் பாலஸ்தீனாவில் உரோமையரின் ஆட்சி ஆரம்பமானது. கி.மு. 37ற்கு பின் பாலஸ்தீனாவின் முழுப்பகுதியிலும் உரோமையரின் ஆட்சி உறுதி பெற்றது.

### 3.1.2.1. பேரரசர்

- உரோமைப் பேரரசு ''ரோமுலஸ்'' என்பவரால் அடித்தளமிடப்பட்டது. இதன் ஆட்சிப் பேரவை Senate என அழைக்கப்பட்டது. இதனை ஆளும் அதிகாரமுடையவர் ''பேரரசர்'' என அழைக்கப்பட்டார்.
- உரோமைப் பேரரசின் முதல் பேரரசன் அதன் தளபதியும் தாபகருமான யூலியஸ் சீசர் ஆவார். (கி.மு 100-44)
- இவர் கொலையுண்ட பின் உரோமைத் தளபதியான ஒக்ரோவியன் ''அகஸ்துஸ் சீசர்'' என்ற பெயருடன் உரோமைப் பேரரசராக முடிசூட்டப்பட்டார். இவருடைய ஆட்சிக் காலத்திலே இயேசு பெத்லகேமில் பிறந்தார்.
- அகஸ்து சீசரைத் தொடர்ந்து பின்வருவோர் உரோமையின் பேரரசர்களாக ஆட்சி செலுத்தினர்.

  திபேரயு சிசர், கலிகுலா, குளோடியஸ், நீரோ, கல்பே, ஒத்தோ விரெல்லியஸ, வெஸ்பசியன், ரைற்றஸ், தொமியன், நேர்வா, திராயன்,
- உரோமைப் பேரரசின் கடைசிப் பேரரசர் தியோக்கிளேசியன் ஆவார்.

### 3.1.2.2. ஆளுநர்கள்

- உரோமயர்கள் தாம் கைப்பற்றிய பகுதிகளை 72 நாடுகளாகவும், 40 மாநிலங்களாகவும் பிரித்து ஒவ்வொரு மாநிலங்களையும் கண்காணிக்க அரச பிரதிநிதிகளாக ''ஆளுநர்களை'' நியமித்தனர்.
- கி.மு 63 இல் பாலஸ்தீனத்தில் உரோமய ஆட்சி நிறுவப்பட்டது. பாலஸ்தீனா பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவை இவ் ஆளுநர்களால் நிர்வகிக்கப்பட்டது.
- உரோம அதிகாரிகள் எருசலேமில் தங்காமல் செசாரியாவில் தங்கினார்கள். இவர்கள் பெரிய திருவிழாக்களில் மக்கள் கூட்டம் அதிகரிக்கும் வேளையில் மட்டும் எருசலேமுக்குவருவார்கள்.
- இவர்கள் கலகம் நேர்ந்தால் உடனே தீர்த்து விடுவதையும் எருசலேமின் ஒழுங்கையும், அமைதியையும் நிலை நாட்டுவதையும் முதன்மையான பணியாகக் கொண்டிருந்தனர்.
- இவர்களும் ,இவர்களது மெய்க்காப்பாளரும் ஏரோதின் அரண்மனையில் தங்குவார்கள்.இவ்வித அலுவல் கி.பி. 41ல் கால்சின் ஏரோதுவுக்கும் பின்னர் 2வது அக்கிரிப்பாவுக்கும் அளிக்கப்பட்டது. கொட்டோனியு, அம்பிலியு, ரூபு, வலேரியு, சிராகு போன்றோர் கி.பி. 6 – 26வரை பாலஸ்தீனாவில் உரோம அதிகாரிகளாக இருந்தனர்.
- கி.பி. 26 - 36 வரை இயேசுவின் பாடுகளுடன் தொடர்புடைய போந்தியு பிலாத்து ஆளுனாராக இருந்தார்.செசாரியாவில் ஆளுனர்களாக இருந்த பெஸ்து, பெலிக்ஸ் என்பவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.
- கேசியு ப்ளோரு (கி.பி 64-66) என்பவரே பாலஸ்தினாவில் இறுதி உரோம அதிகாரியாவார்.

### 3.1.2.3 குறுநில மன்னர்கள்

#### பெரிய ஏரோது (கி.மு37-கி.மு.4)

பெரிய ஏரோது பாலஸ்தீனாவில் இதுமேயா பகுதியைச் சேர்ந்தவர். இதுமேய அந்திப்பாத்தருக்கும் அரேபிய நாட்டவளான இப்ரோஸ் என்பவளுக்கும் பிறந்தவர். கட்டடக்கலை, நகராக்கம் போன்றவற்றில் கவனம் செலுத்தியமையாலும், பாலஸ்தீனா முழுவதையும் தந்திரத்தால் கைப்பற்றி ஆட்சி செலுத்தியமையாலும் இவர் ''மா ஏரோது'' அல்லது ''பெரிய ஏரோது'' என அழைக்கப்பட்டார்.

- பாலஸ்தீனா முழுவதையும் கைப்பற்றி சர்வாதிகாரியாக மாறி கொடுரத்துக்கும் அக்கிரமத்துக்கும் பெயர் பெற்றவர் ஆனார்.(மத். 2:16-18)
    - யூதர்களின் நன் மதிப்பை பெற எருசலேம் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினார்.
    - யேசுவின் காலத்தில் அகஸ்துஸ்சீசர் உரோமைப் பேரரசராக இருந்தார். ஏரோது இறந்தவுடன் பாலஸ்தீனாவில் அவர் ஆண்ட பகுதியை அவரது மூன்று மகன்களும் பிரித்துக் கொண்டனர்.

    **அ**.அர்க்கெலா **ஆ**.அந்திப்பா **இ**.பிலிப்பு

**அ. அர்க்கெலா** (கி.மு. 4 – கி.பி 6)

- அர்க்கெலா பெரிய ஏரோதின் மூத்த மகன் ஆவார். பாலஸ்தீனாவின் பாதி (யூதேயா, சமாரியா, இதுமேயா) இவருக்கு அளிக்கப்பட்டது. அரசர் என்னும் பட்டத்தை வழங்க உரோமைப் பேரரசு விரும்பவில்லை. எனவே இவருக்கு ஆளுநர் பட்டத்தை வழங்கியது. இவர் தனது விருப்பப்படி தலைமைக் குருக்களை மாற்றினார். பதவிப்பித்துப் பிடித்து அலைந்தார். தந்தையைப் போல சந்தேகப் பேர்வழியாக விளங்கினார்.
- யூதேயாவில் அர்க்கெலா தன் தந்தைக்குப் பின் அரசாள்வதாகக் கேள்விப்பட்டு அவர் (யோசேப்பு) அஞ்சினார் (மத் 2:22) என்றும் யோசேப்பும், மரியாவும் குழந்தை இயேசுவுடன் எகிப்திலிருந்து திரும்பிய போது நிலவிய சூழ்நிலையை மத்தேயு குறிப்பிடுகின்றார். இவர் கட்டட வேலைகளை ஆரம்பித்தார். பழ மரத்தோப்பு ஒன்றை எரிக்கோவில் நிறுவி அதற்கு ‘‘அர்க்கெலாயிஸ்’’ என பெயரிட்டார். யூத சமாரிய அலுவலர்கள் அவருக்கு எதிராக குற்றம் சாட்டியதால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். கி.பி 6ம் ஆண்டில் வியன்னாவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

**ஆ.பிலிப்பு** (கி.மு 4 - கி.பி 34)

- பிலிப்பு பெரிய ஏரோதுவுக்கும், எகிப்திய கிளியோபாட்ரா என்பவருக்கும் எருசலேமில் பிறந்தவர் ஆவார். கலிலேயாவின் கிழக்குப் பகுதிகளுக்கும், வடக்குப் பகுதிகளுக்கும் குருநில மன்னராக பொறுப்பேற்றார்.
- நீதிக்கும், நேர்மைக்கும், அன்பிற்கும் ஆதரவிற்கும் பெயர்போனவர். இவரை ஏரோதின் குடும்பத்தில் தனிப் பிறவி எனலாம். மீன்பிடித் துறைமுகமான பெத்சாயிதாவைத் தலைநகராகக் கொண்டவர். இதற்கு அகுஸ்துஸ் மன்னன் மகள் ஜூலியாவின் பெயரில் ‘‘ஜூலியாஸ்’’ எனப் பெயரிட்டார்.
- யோர்தான் ஆறு தொடங்கும் இடத்தின் அருகில் இருந்த ‘‘பெனராஸ்’’ எனும் இடத்திற்கு ‘‘பிலிப்பு செசரியா’’ என்று பெயரிட்டார்.(மாற் 8:27, மத் 16:13) 37 ஆண்டுகள் ஆட்சி செய்து கி.பி. 34ல் வாரிசு இன்றி இறந்தார். இவரது இறப்பின் பின் இவரது பகுதி சிரியாப்பகுதியுடன் இணைக்கபட்டது. சிறிது காலத்தின் பின் அது அகிரிப்பாவுக்கு அளிக்கப்பட்டது.

**இ. ஏரோது அந்திப்பா** (கி.மு 4 – கி.பி 39)

- ஏரோது அந்திப்பா ‘‘அரசர்’’, ‘‘சிற்றரசர்’’ என அழைக்கப்பட்டார்.கலிலேயாவுக்கும், பெரேயாவிற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். கலிலேயாவின் மேற்குக் கரையோரத்தில் தனக்கென ‘‘திபேரியா’’ என்ற பெரிய தலைநகர் ஒன்றினை எழுப்பினார். தந்தையின் எல்லாத் தீய குணங்களும் இவரிடம் காணப்பட்டன இதனால்தான் இயேசு கூட இவரைக் குறித்து ‘‘நீங்கள் போய் அந்த நரியிடம் கூறுங்கள்’’ என்று கூறுகின்றார். ( லூக் 13:32) அரேத்தா படையெடுத்து கி.பி 39 இவரைத் தோற்கடித்ததால் லியோன் என்ற இடத்துக்கு நாடுகடத்தப்பட்டார்.

**ஈ. 1 வது ஏரோது அக்ரிப்பா (கி.பி 37-44)**

- ஏரோது கி.பி 41ல் பாலஸ்தீனா முழுவதையும் ஆண்டு வந்தார். அரசியல் நோக்கத்திற்காக பரிசேயர்களின் ஒழுக்க முறைகளைக் கடைப்பிடித்ததாகக் காட்டிக் கொணடார்.
- யூதர்களைத் திருப்பதிப்படுத்த கிறிஸ்தவர்களை துன்புறுத்தினார். இவரது ஆட்சியில் கிறிஸ்தவம் விரைவாகப் பரவியது. திருத்தூதரான யாக்கோபுவை (செபதேயுவின் மகன்) இவரே கொன்றார்.
- புனித பேதுருவை சிறைப்படுத்தினார் (தி.ப. 12ம் அதிகாரம்) இவருக்குப் பின் இவரது மகன் இரண்டாம் ஏரோது அக்ரிப்பா ஆட்சி செய்ததாக வரலாறு கூறுகின்றது.

### 3.1.2.4 வரிதண்டுவோர்

- இயேசுவின் காலத்தில் தாழ்த்தப்பட்டோர் என்று யூதர்கள் புறக்கணித்த பிரிவினர் வரிதண்டுவோர் ஆவர். யூத வழக்கப்படி இவர்கள் திருடர், கொள்ளையர்கள் பாவிகள் எனக் கருதப்பட்டார்கள்.
- ''மிஸ்னா'' என்ற யூத சட்டத்தொகுப்பில் பாவமான தொழிலாக வரிதண்டுதலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் குலத்தால் யூதர்கள், பாலஸ்தீனாவில் உரோமையர் ஆட்சிதோன்றிய போது உரோமைப் பேரரசுக்காக யூதரிடையே வரிவசூலிக்க ஒரு சில யூதர்கள் நியமிக்கப்பட்டனர்.
- இவர்கள் பாவிகள் என ஒதுக்கப்பட சில காரணங்கள் இருந்தன. அவையாவன
    1. அந்நியருக்காக சொந்த மக்களிடம் வரி வசூலித்தமை.
    2. கடுமையான வரிவசூலிப்பு முறைகளை கையாண்டமை.
    3. மக்களை வஞ்சித்துப்பணம் பறித்தமை.

- இரு விதமான வரிகள் வசூலிக்கப்பட்டன. அவை

**i.** பெரிய ஏரோது பாலஸ்தீனாவுக்கு ஆட்சியாளனாக நியமிக்கப்பட்ட போது தமது உல்லாச வாழ்வுக்கு தேவையான செலவுகளுக்காக ஒவ்வொரு நாளும் மக்கள் மேல் புதுப்புது வரிகளைச் சுமத்தினார்.

**உதாரணம்:-** நகர்களையும், கோட்டைகளையும், துறைமுகங்களையும் கட்டுதல், எருசலேம் கோவிலைக் புதுப்பித்தல் போன்றவற்றிற்காக மக்களின் வருவாயில் பெரும் பகுதி இவர்களைக் கொண்டு ஏரோது சுரண்டினார். இவை பொருளாகவோ, பணமாகவோ செலுத்தும் நிலை காணப்பட்டது. (மத் 17:25 சுங்கவரி)

**ii.** சொத்து வரி தேவைப்படும் போதெல்லாம் இந்தவரி வசூலிக்கப்பட்டது. உணவுக்கும், சொத்துக்களை இடமாற்றம் செய்வதற்கும், அடிமையை விற்பதற்கும், நிலம் விற்பதற்கும் ஒரு யூதன் உரோமைப் பேரரசுக்கு வரி செலுத்த வேண்டியிருந்தது. ஏற்றுமதிவரி, விற்பனைவரி, இறப்புவரி போன்ற வரிப்பழுவால் மக்கள் மேலும் துன்பமடைந்தனர்.

**உதாரணம்:-**

1. **லேவி (மத்தேயு)** கப்பர்நகுமுக்கு அருகில் தமஸ்துவுக்கும் ஆக்ரேவிற்கும் செல்லுகின்ற நெடுஞ்சாலையில் தனது சுங்கத்துறையை அமைத்திருந்தார்.''**என்னைப் பின் பற்றி வா**'' என இயேசு அழைத்த போது அவரைப்பின்சென்றார். (மத்:9.9)

2. **எரிகோ நகர சக்கேயு** இவர் தலைமை வரிதண்டுவோர் ஆவார். இவருக்குக் கீழ் பல வரிதண்டுவோர் இருந்தனர். இவரிடம் செல்வம் அதிகமாக இருந்தது. (மத் :19:1-10)

### 3.1.2.5 படை வீரர்கள்

- பாலஸ்தீனாவின் வரலாற்றில் படை வீரர்கள் முக்கிய இடம் வகிக்கின்றனர். உரோமையர் பாலஸ்தீனாவை கைப்பற்றிய பின் தமது பிரதிநிதிகளாக ஆளுநர்களை நியமித்த போது அவர்களுக்கு கீழ் படை வீரர்கள் பணிக்காக நியமிக்கப்பட்டனர்.
- ஆயிரம் படை வீரர்களுக்கு தலைவனாக படைத்தலைவனும் (ஆயிரத்தவர்) நூறு படைவீரர்களிற்கு ஒருதலைவனாக(நூற்றுவத் தலைவனும்) நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் நகரை பாதுகாத்தல், வரிவசூலிப்பவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், விழாக்காலங்களில் கண்காணிப்பு மேற்கொள்ளுதல், குற்றவாளிகளைக் கைது செய்தல் அவர்களுக்குத் தண்டனை நிறைவேற்றுதல், உரோமைக்கு சேர வேண்டிய நிதியை கொண்டு செல்லுதல் போன்ற பணிகளைச் செய்தனர்.
- இயேசுவைக் கைது செய்தமை, தண்டனை வழங்கியமை, இயேசுவின் சிலுவையடியில் நின்றமை, இயேசுவின் திருக்கல்லறையை காவல் செய்தமை, போன்ற சர்ந்தப்பங்களிலும், திருத்துாதர் பணி நூலிலும், இவர்களது செயற்பாடுகளை நாம் அதிகம் காணலாம். **(யோவா:19:31, தி:ப 23:31-35)**

### 3.1.2.6 தலைமைக் குருக்கள்

- இஸ்ரயேலின் பன்னிரு கோத்திரங்களில் ''லேவியர்'' கோத்திரத்தார் மட்டுமே கோவிலில் குருத்துவ பணியாற்றும் பொறுப்பை பெற்றிருந்தனர் லேவியர் கோத்திரத்தில் ''ஆரோன்'' குடும்பத்தாரும், ஆரோன் குடும்பத்தில் ''சாதோக்'' வம்சத்தாரும் மட்டுமே குருத்துவ பணி புரிவதில் சிறப்பிடம் பெற்றிருந்தனர்.
- இஸ்ரயேலின் முடியரசு காலத்தில் சிறப்பாக தாவீது அரசனின் காலத்தில் ''சாதோக்'' என்பவர் குருத்துவப்பணிக்கு தெரிவுசெய்யப்பட்டு எருசலேமில் பலி நிறைவேற்றப்பட்டது அதன் பின் மன்னன் சாலமோனின் காலத்தில் தலைமைக்குருவாக ''சாதோக்'' நியமிக்கப்பட்டார் அன்று முதல் சாதோக்கின் குடும்பத்தினர் குருத்துவ பணியில் முக்கிய இடத்தை பெற்றனர்.
- பபிலோனிய அடிமைத்தனம் வரை சாதோக்கின் வழி மரபினர் பரம்பரையாக குருத்துவப் பணி செய்து வந்த போதிலும் பபிலோனிய அடிமைத்தனத்திற்கு பின்னர் சாதோக்கின் வழி மரபினர் என எண்பித்தவர்கள் மட்டுமே தலைமை குருக்களாக நியமிக்கப்பட்டனர்.
- இஸ்ரயேல் அரசரும் தலைமைக்குருக்களும் சமுதாய நிர்வாகத்தில் இணைந்து செயற்படுவதால் இரு நிலையில் உள்ளவர்களும் சம அந்தஸ்தில் வைத்துப் போற்றப்பட்டனர். நாடு கடத்தலின் பின் தலைமைக்குருக்களின் செல்வாக்கு அரசியலிலும் சமயத்திலும் மேலோங்கியது.
- கி.மு. 2ஆம் நூற்றாண்டில் குருக்கள் மறைவல்லுனர்கள் குடும்பத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டத்திற்கு தலைமைக்குருவே தலைமை தாங்கினார். தலைமைக்குரு என்ற பதவி வாழையடி வாழையாக தொடர்ந்து வருகின்றது. தலைமைக்குருவாக அர்ப்பணம் செய்யப்பட்ட ஒருவர் தமது வாழ்நாள் முழுவதும் அப்பணியில் நிலைத்து நிற்க வேண்டும்.
- இயேசுவின் காலத்தில் ஒரு தலைமைக்குருவே நியமிக்கப்பட்டிருந்தாலும் ஓய்வு பெற்ற தலைமைக்குருவுக்கும் அதிகாரம் இருந்து வந்தது (யோவா.18:19-24).
- உரோமையரின் ஆட்சி யூதர்களிடையே பரவியகாலத்தில் யூத மக்களின் வாழ்வில் தலைமைக் குரு பெற்றிருந்த செல்வாக்கைக் கண்டு கொண்டதனால் தமக்கு வேண்டப்பட்டவர்களையே தலைமைக் குருக்களாக அவர்கள் நியமித்தனர்.
- சமுதாயத்தில் மேல்மட்டத்தில் இருந்தவர்கள், சதுசேயர்களான தலைமைக்குருக்களே ஆவார். இவர்கள் பணக்கார வியாபாரிகளாகவும், நிலச்சுவாந்தர்களாகவும், நாட்டின் முக்கிய பொறுப்புக்களில் இருந்துவந்த காரணத்தாலும் செல்வந்தர்களாகவும் இருந்தனர்.

- ஆலயப்பணிகளின் முழுக் கண்காணிப்பும், பரிகாரத்திருவிழா(Yomkippur யோம்கிப்பூர்) போன்ற முக்கிய திருவிழாவின் போது அதிதூயகத்துக்குள் சென்று சிறப்புச் சடங்குகளை நிறைவேற்றுவதும் அவரது பணியாகும். இவர்தான் யூதேயாவின் உண்மையான அரசாங்கமாக இருந்து ஆளும் அதிகாரிகளுக்கு முன் யூதமக்களின் பிரதிநிதியாக செயற்படுவார். யூதரின் நீதி வழங்கும் தலைமைச் சங்கத்தற்கு தலைமை தாங்கினார்.
- அதிக வருவாய் தரும் பதவியாக இது காணப்பட்டது.ஏனெனில் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் காணிக்கைகளிலும், மிருக விற்பனையிலும் அவருக்கு பங்கு உண்டு. காலப்போக்கில் தலைமைக்குரு உரோமைப் பேரரசால் நியமிக்கப்பட்டார். தமது விருப்பத்திற்கு ஏற்ப செயற்படும் ஒருவரை இவர்கள் நியமித்தனர். ஏனையவரை பதவி நீக்கம் செய்தனர்.
- இயேசுவின் காலத்தில் அன்னா குடும்பமே தலைமைக் குருவாக தெரிவானது. அன்னா உரோமை பேரரசால் கி.பி. 7 ம் ஆண்டில் தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டு கி.பி. 11ம் ஆண்டில் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இவருக்கு பின் இவரது ஐந்து மருமகன்மார்கள் தலைமைக் குரு நியமனம் பெற்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள்.
- இறுதியாக அவரது மருமகன் கயபா கி.பி. 18-36 வரை தலைமைக்கருவாக நியமனம் பெற்றார். பதவி நீக்கம் செய்யப்பட்டாலூம் அன்னா தலைமைக்குரு குடும்பத்தின் தலைவராக இருந்தமையால் இவர் முக்கிய இடம் வகிக்கின்றார் இயேசுவின் விசாரணையின் போது இவர் முக்கிய இடம் வகிப்பதை காண்கின்றோம்.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

01. இயேசுவின் காலத்தில் பாலஸ்தினாவில் உரோமையர் ஆட்சி நிலவியது என்பதற்கு பொருத்தமான உதாரணங்களை முன்வைப்பார்
02. இயேசுவின் மரணத்திற்கு பின்வருவோர் எத்தகைய பங்களிப்பினை செய்தனர் என்பதைக் குழு ஒப்படை ஒன்றின்முலம் எடுத்து காட்டுவார்.

    **(அ)** ஆளுனர் பிலாத்து (**ஆ**) ஏரோது (**இ**)படைவீரர்கள் (ஈ)தலைமைக்குருக்கள்
03. நாட்டின்சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படிய மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை முன்வைப்பார்.

**உசாத்துணை நூல்கள்.**


01. அ.பீட்டர் அபீர்,ஆ.அலோசியஸ் சேவியர் ''***விவிலியம் ஓர் அறிமுகம்***'' அருள்வாக்கு மன்றம்,திருச்சி,2005.
02. பிலிப் இயேசுதாசன் ''***புளிப்புமாவு***'' மெக்லின் அச்சகம் 2010.
03. ம.ஆரோக்கியராஜ் ***"இயேசுவின் காலத்தில் எருசலேம்"***வைகறைப் பதிப்பகம்,**2009.**
04. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, கிறிஸ்தவ நாகரிகம், தரம் 13.

**தேர்ச்சி 3.0** : இயேசுவின் காலத்து பலஸ்தீன பண்பாட்டின் பின்ணணியை அடிப்படையாக கொண்டு புதிய ஏற்பாட்டின் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 3.2**: இயேசுவின் காலத்து பாலஸ்தீன சமுகப்பின்னணியை அறிந்து சமூகத்திலுள்ள அனைவரையும் மதித்து வாழப்பழகுவார்.

**பாடவேளைகள்** : 16

**கற்றல் பேறுகள்** :

- பாலஸ்தீன நாட்டில் நிலவிய சமூகப்பின்னணி பற்றிய விடயங்களை கோவைப்படுத்துவார்.
- யூத சமூகத்தின் தாழ்ந்த சமூக மக்களை இயேசு மதித்தார் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- யூத சமுகக் குருக்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் ஆக்கமொன்றை முன்வைப்பார்.
- சமூகத்தின் தாழ்த்தப்பட்ட மக்களை அன்பு செய்வார்.
- குழுச் செயற்பாடுகளின் போது ஒத்துழைப்பு வழங்குவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி:

### 3.2.1. யூத சமூகப்பிரிவுகள்

- முதல் நூற்றாண்டில் யூத சமுதாயமானது பாலஸ்தீன யூதர்கள், சிதறி வாழ்ந்த யூதர்கள், புறவினத்தார் என பல பிரிவுகளாக காணப்பட்டனர்.
- பாலஸ்தீன யூதர்களில் உயர்குலத்தோர், நடுத்தரவகுப்பினர், தாழ்த்தப்பட்டோர் என வேறுபாடுகள் காணப்பட்டன. இவை பற்றியே நாம் இத் தேர்ச்சி மட்டத்தில் கற்கவுள்ளோம்.

### 3.2.2. பாலஸ்தீன யூதர்கள்

- இவர்கள் பாலஸ்தீனாவிலேயே பிறந்து, வளர்ந்து வாழ்ந்தவர்கள்.
- இவர்கள் எபிரேய மொழி பேசும் யூதர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
- அந்நிய நாடுகளுடனோ, அந்நியநாட்டு மக்களுடனோ அவர்களின் கலை, கலாசாரம் பண்பாட்டுடனோ எவ்வித தொடர்பும், உறவும், பழக்கமும் அற்றவர்கள் ஆவர்.
- தமது இனத்தின், மதத்தின் பண்பாட்டின் தூய்மையைப் பாதுகாக்க அந்நியராட்சிக் காலத்தில் அதிக முயற்சியெடுத்தனர்.
- அந்நியரையும் அவர்களது செயற்பாடுகளையும் மோசேயின் சட்டங்களுக்கு ஒவ்வாதவையாக இருந்தமையால் அவற்றை வெறுத்தனர். ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.
- தம் தந்தையாகிய இறைவனுக்கும் மோசேயின் சட்டங்களுக்கும் விசுவாசமாக வாழ்ந்து தமது இனத்தூய்மையின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட கட்டளைகளையும், ஒழுங்குகளையும் மிகப்பிரமாணிக்கமாக அனுசரித்து வாழ்ந்தனர்.
- இப்போக்கு இயேசுவின் காலத்திலும் அதற்கு பின்பும் தொடர்ந்தது.
- எடுத்துக்காட்டாக சிலர் அந்தியோக்கியாவிலும், எருசலேம் பொதுச்சங்கத்திலும் புறவினக் கிறிஸ்தவர்களுக்கு எதிராக வாதாடியதைக் காண்கின்றோம். (தி.ப 15:1-15)
- அந்நியரின் பல தெய்வ வழிபாடுகள், சிலைவழிபாடுகள் யூத மறைக்கு அச்சுறுத்தலாக இருந்தமையால் அவற்றையும் வெறுத்து ஒதுக்கினர்.

**அ. உயர்குலத்தோர்:-**

- உயர் குலத்தோராகக் கருதப்படுவோர். அரச குடும்பத்தினரும், அரசகுடும்பத்தாருடைய நெருங்கிய உறவினர்களும், அவர்களது தூரத்து உறவினர்கள், நண்பர்களும் ஆவர்.
- இயேசுவின் காலத்தில் ஏரோதிய குடும்பமே உயர்குலத்தோர் என்பதில் முன்னிடம் வகித்திருந்தனர். மூபப்ர்கள் என அழைக்கப்பட்ட மக்கள் தலைவர்களும் இதில் அடங்குவர். உதாரணம்:- பணக்காரரான அரிமத்தியா யோசேப்பு
- மேலும் பெரும் வியாபாரிகள், நிலப்பிரபுக்கள் மற்றும் சொந்த தொழில்கள் மேற்கொண்ட, பல தலைமைச் சங்க உறுப்பினர் 71 பேர், பணக்கார வர்க்கத்தினராய் இருந்தபடியால் இவர்களும் உயர் குலத்தோராய் கருதப்பட்டனர். தோரா கற்ற பரிசேயரும் இதில் அடங்குவர்.
- நாட்டின் பொதுச்சொத்து முழுவதிற்கும் அரச குடும்பமே உரிமை பாராட்டியது.
- அதனால் இவர்களது உணவு உடை உறைவிடம் போன்றன ஆடம்பரமாக அமைந்து காணப்பட்டது.
- பல நிலைகளில் தமது உல்லாச வாழ்வை வெளிப்படுத்தினர்.
- கிரேக்க ஆட்சியின் தால்மூட் என்னும் சட்ட ஒழுங்கின்படி யூதர்கள் மத்தியில் பலதாரக் கொள்கை பின்பற்றப்பட்து. இப்பழக்கம் ‘‘மிஸ்னா’’ என்னும் யூத சட்டத்தினால் வரையறுக்கப்பட்டது.
- பணக்காரர் தமது செல்வ நிலையைக்காட்டிக் கொள்வதற்காக அடிக்கடி விருந்து ஏற்பாடு செய்வார்கள் (லூாக்:14:15-24). இவ் விருந்திற்கு ஏராளமானோர் அழைக்கப்படுவர்.
- இதற்காக தனியாகவும் சமையற்காரர்கள் நியமிக்கப்படுவார்கள்.
- தண்ணீர் கலக்காத உயர்தர திராட்சை இரசம் கண்ணாடிக்குவளைகளில் பரிமாறப்படும்.
- இதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் யாவரும் நடனமாடி மகிழ்வர்.
- பணம் படைத்தவர்கள் தமது மனைவியருக்கு வாசனைப்பொருட்கள் உயர்ரக ஆடைகள் நகைகள் வைரம்,முத்து தங்கச் சங்கிலிகள் மற்றும் வெள்ளி போன்ற பொருட்களுக்காக பெருந்தொகை பணத்தை செலவு செய்தனர்.
- சில பணக்காரத் தலைமைக் குருக்களின் மனைவியர் தமது வீட்டில் இருந்து கோயில் வரை நடந்து செல்வதற்காக ‘தரைவிரிப்பு’ விரிக்கச் செய்வார்கள்.

**ஆ நடுத்தர வகுப்பினர்**

- அடுத்த நிலையில் இருந்தவர்கள் நடுத்திரவர்க்கத்தினராவர்.
- இவர்களில் குருகுலத்தவர்களும், சிறுவியாபாரிகளும், கட்டிட கலைஞர்களும் அடங்குவர்.
- எருசலேமில் திருவிழாக்காலங்களில் சிறு வியாபாரிகளுக்கும் கலைஞர்களுக்கும் அதிக வருமானம் கிடைக்கும் நிலை காணப்பட்டது.
- யூத குருக்களில் 24 பிரிவினர் இருந்தனர்.
- இவர்களில் எருசலேம் குருக்களைத் தவிர ஏனையோர் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களாவர்.
- இக்குருக்களுக்கு வாரப்பணியின் காலத்தில் கிடைக்கும் பலிப் பொருட்களும், பாவப்பரிகாரப் பலிப்பொருட்களும், ஆலயக் காணிக்கையில் முதற் கனியும், நிலத்தின் விளைச்சலில் பத்தில் ஒரு பகுதியும் கிடைத்தது.
- அது உல்லாச வாழ்வுக்குப் போதுமானதாக இல்லாவிடினும் வறியவர்கள் என்று கூறுமளவிற்கு இவர்கள் தாழ்ந்து விடவில்லை.

## இ தாழ்த்தப்பட்டோர்

- இயேசுவின் காலத்தில் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்கள், ஏழைகள் அல்லது தாழ்த்தப்பட்டோராகக் கருதப்பட்டார்கள்.
- இவர்களுடன் அடிமைகள், வரிதண்டுபவர்கள். சமாரியர், பாவிகள், பெண்கள் ஆகியோரும் அடங்குவர்.

### i. ஏழைகள்.

- ஏழைகள் பொருளாதாரத்தில் வறிய நிலையில் இருந்தவர்கள், இவர்களை ''அம்-ஹா-அரஸ்'' (AM-HA-RET) என்று அழைத்தனர். அதாவது **நிலத்தின் மக்கள்** என ஏளனமாக அழைக்கப்பட்டனர்.
- நாட்டுப்புற மக்கள் என்பது இதன் பொருளாகும்.
- இவர்கள் மனிதர்களாக இருந்தாலும் ஆன்மா அற்ற சடப்பொருட்களாகவே கருதப்பட்டனர்.
- நோயுற்றவர்கள், இடையர்கள், கூலி வேலை செய்பவர்கள் போன்றோர் இதில் அடங்குவர்.
- இந்த ஏழைகள் மட்டில் தான் இயேசு அதிக கரிசனை கொண்டார்(லூக்:15:1-7).

### ii. அடிமைகள்

- பாலஸ்தீனாவில் கி.மு 3ம் நூற்றாண்டிலிருந்தே அடிமை வியாபாரம் அமோகமாக நடைபெற்றது.
- ஒரு கல்லின் மீது அடிமையை அமர்த்தி ஏலம் விட்டனர்.
- சந்தையிலுள்ள பொருட்கள் போல அடிமைகளும் கருதப்பட்டனர்.
- கிராமங்கள், நகர்ப்புறங்களில் இத்தகைய கொத்தடிமைகள் அதிகமாக வாழ்ந்தார்கள்.
- போதுமான இழப்பீடு அல்லது கடனைத்திருப்பித்தர இயலாத யூதன் தன்னை அடிமையாக விற்க வேண்டியிருந்தது.
- பெரிய ஏரோதின் காலத்தில் அடிமைகள் தொடர்பாக சட்டம் கடுமையாக்கப்பட்டது.
- ஓராண்டுக்குள் யூதனாக மாறாத புறவினத்தார் அடிமையாக விற்கப்பட்டனர்.
- அநாதையாய் இருக்கும் ஒருவன் இன்னொருவனுக்குத் தன்னை விற்றுவிடலாம்.
- ஒரு பெண் 12வயதுக்குள் இருக்கும் தனது மகளைத் தனது வறுமையின் காரணமாக அடுத்தவனுக்கு அடிமையாக விற்றுவிடுவாள்.
- போரில் பிடிபட்டவர்களும் அடிமைகளாக்கப்பட்டார்கள்.
- தால்முட் குறிப்பின் படி ஒரு யூத அடிமை ஒன்று அல்லது இரண்டு செப்பு காசுகளுக்கு (MINAS)விற்கப்பட்டனர்.ஆனால் ஒரு புறவின அடிமையின் விலை 5லிருந்து 10செப்பு காசுகள் வரை காணப்பட்டது.
- ஒரு யூத அடிமை ஆறு ஆண்டுகள் மட்டுமே தன் தலைவனுக்கு ஊழியம் புரிய வேண்டும்.
- ஒரு யூத அடிமைப்பெண் தனக்கு 12வயது ஆகும் போது விடுதலை பெறுவார். அத்தருணத்தில் அவள் தலைவனோ அல்லது அவன் மகனோ அவளை மணந்து அதே அடிமை நிலை வாழ்க்கையை அளிப்பது வழமை.
- இயேசுவின் காலத்தில் தமது போதனைகளின் மூலம் இத்தகைய அடிமைநிலைகளிலிருந்து மக்கள் மீட்கப்பட வேண்டும் என்பதற்காக பல போதனைகளையும், கருத்துக்களையும் இயேசு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். (மத்-10-24)

- இயேசுவின் போதனைகளை சிரமேற்கொண்டு பணி செய்த தூய பவுல் ஒனேசிம் என்றஅடிமையை குறித்து பிலமோனுக்கு கடிதம் எழதுவதை காண்கின்றோம்.(பில்:1.6)

### iii. பெண்கள்:-

- இயேசுவின் காலத்தில் யூத சமுதாயத்தில் பெண்கள் மிகவும் தாழ்ந்தவர்களாகவே கருதப்பட்டனர். இவர்களுக்கு சமுகத்தில் தகுந்த இடம் கிடைக்கவில்லை.
- இவர்கள் சமயரீதியாகவும், சமூகரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். குடும்பங்களிலும் இவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டன.
- சமூகரீதியாக பாலஸ்தீனப் பெண் ஒருத்தி வீட்டை விட்டு வெளியே புறப்படும் போது தலையை மூடி முகத்திரை அணிந்து செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாவிடின் கணவன் அவளை மணவிலக்குச் செய்யலாம்.
- அப்படி மணவிலக்கு அளிக்கும் போது அவளுக்கு கொடுக்க வேண்டிய தாபரிப்பு எதையும் வழங்கத் தேவையில்லை.
- எந்த பெண்ணும் ஒரு ஆணுடன் தனியாக இருக்கவோ அல்லது ஒரு ஆண் திருமணமான வேறொரு பெண்ணைப் பார்ப்பதோ அல்லது அவளுக்கு வாழ்த்துக் கூறுவதோ கூடாது.
- எந்த மனைவிக்கும் கணவனில் சட்டப்படியான அதிகாரமில்லை.
- ஆனால் கணவனுக்கு அவனுடைய மனைவி தனிப்பட்ட உடைமையாகக் கருதப்பட்டாள்.
- எனவே கணவன் தன் மனைவியை இலகுவில் விலக்கி விடச் சட்டம் அனுமதித்திருந்தது.
- மணவிலக்கு வழங்குவதில் ஆண்களுக்கு அனுமதியுண்டு பெண்களுக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டது.
- பெண்கள் ஆண்களுடன் சரிநிகராக அமர்ந்து உணவருந்தக் கூடாது.
- ஆண்கள் உணவருந்தும் போது பெண்கள் அவர்களுக்கு பரிமாறிக்கொண்டு நிற்க வேண்டும்.
- தெருக்களிலும், ஆலயத்திலும், தொழுகைக்கூடத்திலும் பெண்களுக்கு தனியான இடம் உண்டு.
- பொதுவாக இவர்களுக்கு வீடே உலகம். வீட்டு யன்னல்கள் திரை போட்டு மறைக்கப்பட்டிருக்கும்.
- கணவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பது ஆன்மிக செயலாகக் கருதப்பட்டது.
- பெண்களில் கைம்பெண்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள்.எவ்வித தொழிலிலும் அவர்கள் ஈடுபட முடியாத நிலை காணப்பட்டது.
- மனித பண்பற்ற முறையில் இவர்கள் நடத்தப்பட்டார்கள். காலடி கழுவுதல், போன்ற இழிவான செயல்களில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.
- சமயக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது ஆண்களுக்குரிய கடைமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர்.
- “ஷேமா” என்ற யூதர்களின் செபத்தை இவர்கள் சொல்லத் தேவையிருக்கவில்லை.
- துணி நெய்தல், உரொட்டி சுடுதல், வீட்டுப்பொருட்கள் செய்தல் , நீரூற்றிலிருந்து நீர் கொண்டு வருதல், எண்ணெய் தயாரித்தல், போன்ற வேலைகள் பெண்களுக்கு உரித்தான வேலைகளாகக் கருதப்பட்டன.
- கோவிலில் பெண்கள் பகுதிக்கும், மற்றப் பகுதிக்குமிடையில் தடுக்கும் தட்டு வைக்கப்பட்டிருந்தது.

- கோவிலில் இவர்கள் கற்பிக்கக் கூடாது.
- ஷேமாவைத் தினமும் வாசித்தல், கூடாரத் திருவிழாவின்போது கூடாரத்தில் தங்கியிருத்தல், வலது கையில் பேரீச்ச ஓலைகளையும், அலரி இலைகளையும் எடுத்துச் செல்லல் போன்றவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

**iv.சமாரியர்**

- இயேசுவின் காலத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் பட்டியலில் இவர்களும் முக்கிய இடம் பெறுகின்றர்கள்.
- இவர்கள் யூதர்களாயிருந்தாலும் அரசியல், சமயக் காரணங்களினால் கொள்கை மாறுபட யூதர்களிடமிருந்து பிரிந்து, தனித்து வாழ்ந்தார்கள்.
- கி.மு 922ல் சாலமோன் மன்னனின் இறப்பிற்குப் பின் பாலஸ்தீன நாடு வடஅரசு, தென்னரசு என இரு அரசுகளாகப் பிரிக்கப்பட்டது.
- சமாரியாவின் அரசன் 'எரோபவாம்' தென்னாட்டில் இருக்கும் எருசலேமுக்கு தன் மக்கள் செல்வதையும் வழிபடுவதையும் விரும்பவில்லை.
- எனவே சமாரியாவில் 'தாண் பெத்தேல்' ஆகிய இடங்களில் திருத்தலங்களை உருவாக்கி வழிபடச் செய்தான்.
- இதனால் யூதர்கள் இவர்களை பிரிவினைக் கூட்டமாக கருதி வெறுத்து ஒதுக்கினர்.
- அத்துடன் கி.மு 722 அசீரிய அரசர் (எத்கிளார் பலசார்) இஸ்ரயேலரை நாடுகடத்தி அந்த வெற்றிடத்தில் பிறஇனத்தவர்களை குடியமர்த்தினார்.
- எஞ்சியிருந்த யூதரும் இவர்களும் கலப்புத் திருமணம் செய்தனர். இவர்களிடமிருந்து தோன்றியவர்களே ' சமாரியராவர்.
- இதனால் இவர்கள் தீட்டானவர்களென்றும் இனத்தூய்மை இழந்த கலப்பு இனம் என்றும் அரை யூதர்கள் என்றும் கருதி இவர்களை யூதர்கள் ஒதுக்கினர்.
- யூதர்கள் சமாரியருடன் உரையாடுவதையும், சமாரியா வழியாகப் பயணம் செய்வதையும் கூடத் தவிர்த்துக் கொண்டனர். (லூக் 9:53, யோவா 4:9)
- இயேசு யூதரின் பொருளற்ற சட்டத்தை உடைத்து சமாரியப் பெண்ணுடன் உரையாடி, சமாரியா வழியாக பயணம் செய்து மனித மாண்பின் மேன்மையை நிலைநாட்டினார்.
- இவர்கள் தவிர மந்தைமேய்ப்பவர்கள், தொழுநோயாளர்கள், பகிரங்க பாவிகள்(விபச்சாரிகள், ஆயக்காரர்) போன்றோரும் தாழ்த்தப்பட்டவர்களாகவே கருதப்பட்டனர்.

### 3.2.3 சிதறிவாழ்ந்த யூதர்கள்:-

- பாலஸ்தீன நாடு வெவ்வேறு காலகட்டங்களில் வல்லரசுகளால் கைப்பற்றப்பட்டு அந்நிய அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டது.
- யூதர்கள் அந்நிய நாடுகளுக்கு நாடு கடத்தப்பட்டனர்.யூதர்களில் பெரும்பாலானோர் தம் சொந்த நாடான பாலஸ்தீனாவுக்கு திரும்பிவரவில்லை.
- கிரேக்கர், உரோமயர் பாலஸ்தீனாவைக் கைப்பற்றி ஆண்ட காலத்தில் யூதர்களில் சிலர் தொழில், வியாபாரம், போன்ற பொருளாதார முன்னேற்றம் காரணமாக அல்லது படைவீரர்களாக கீழைத் தேச நாடுகளுக்கும், மத்திய தரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளுக்கும் சென்று குடியேறினர்.

- அந்நாட்டு அரசு அவர்களுக்கு பாதுகாப்பும், சலுகைகளும் வழங்கியது. சுதந்திரமாக அவர்கள் அங்கு வாழ்ந்தார்கள்.
- அவர்கள் சீரியா, அசீரியா, மொசப்பத்தேமியா, எகிப்து, (அலெக்சாந்திரியா, கிறீஸ்,) உரோமை, சின்ன ஆசியா, சிசிலியா, தெசலோனிக்கா, லிபியா, போன்ற நாடுகளில் குடியேறி வாழ்ந்தனர்.
- இவர்கள் கிரேக்க மொழி பேசும் யூதர்கள், அல்லது யௌவன பண்பாட்டினர் என அழைக்கப்பட்டனர்.
- பாலஸ்தீன யூதர்கள் இவர்களை தம்மை விடக் குறைந்தவர்களாக கருதினர்.
- பிறநாடுகளில் வாழ்ந்தாலும் பாலஸ்தீனாவைத் தமது தாய்நாடாகவும், எருசலேமைத் தமது மதத்தின் தலைநகராகவும் கொண்டு வாழ்ந்தனர்.
- ஆலயப் பராமரிப்புக்கென வருடாவருடம் பணமும் காணிக்கைகளும் அனுப்பி வைப்பதுடன் வருடத்திற்கு ஒரு முறை சிறப்பாக பெந்தக்கோஸ்தே் விழாவிற்காக எருசலேம் ஆலயம் செல்வர்.
- இவர்கள் எருசலேமில் பெந்தக்கோஸ்தே விழாவிற்காக குழுமியிருந்த வேளையில்தான் தூய ஆவியின் வருகையுடன் திருச்சபை ஆரம்பமானது(தி.ப. 2:1-13).
- பேதுருவின் மறையுரையைக் கேட்டு இவர்களில் பலர் (3000 பேர்) மனம்மாறி கிறிஸ்தவ மறையில் இணைந்து கொண்டனர் (2:14-41).
- அந்நிய பண்பாடுகள் தொடர்பாக பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக இருந்தமையால் இவர்களுக்கும், பாலஸ்தீன யூதர்களுக்குமிடையில் அடிக்கடி முரண்பாடு காணப்பட்டது.
- இவர்கள் தொலைவில் வாழ்ந்தாலும் மோசேயின் சட்டத்திலும், பாரம்பரிய சமயத் தாபனங்களிலும் அதிக பற்றுடையோராகக் காணப்பட்டனர்.
- ஸ்தேவானின் மறை சாட்சி மரணத்திற்கு இவர்களே காரணமாயிருந்தனர்(தி.ப:7).
- தூய பவுல் தனது தூதுரைப் பயணங்களில் இவர்களைச் சந்தித்து தமது போதனைகளை நிகழ்த்தியுள்ளார்.
- பல இடங்களில் பவுலுக்கு எதிராக கிளர்ச்சி செய்தவர்களும் இவர்களேயாவர்.

### 3.2.4 புறவினத்தார்

- யூதர்கள் தவிர்ந்த ஏனைய இனத்தவர்கள் புறவினத்தவர்கள் என அழைக்கப்பட்டனர்.
- யூதர்கள் தாம் இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்றும் ஏனையோர் புறவினத்தார் அல்லது குறைவானவர்கள் எனவும் கருதினர். காரணம் புறவினத்தார் கடவுளின் திருச்சட்டத்தை அறியாதவர்கள்.
- யூத இனத்தவர்களுக்கு இருந்த உரிமைகள் இவர்களுக்கு இருக்கவில்லை.
- இவர்களோடு உண்பதும், அவர்கள் வீடுகளுக்குச் சென்று தங்குவதும் யூத சட்டங்களுக்கு எதிரான செயல்களாகக் கருதப்பட்டதால் தான் தூய பேதுரு கொர்னேலியுவின் வீட்டுக்குச் சென்றதை யூத கிறிஸ்தவர்கள் விமர்சனத்துக்கு உள்ளாக்கினர்.
- யூதர் அல்லாதவருக்கு மீட்பு கிட்டாது என்று யூதர்கள் கருதினர்.
- இவர்களுக்குப் பணியாற்றுவதை தூய பவுல் தனக்குக்கிடைத்த பெருமையாக கருதுகிறார்.(உரோ 11:13)

**உத்தேச கற்பித்தல் செயற்பாடுகள்**

01. பாலஸ்தீன சமுகபின்னணி பற்றி சுருக்கமாக விளக்குவார்

02. கிறிஸ்தவ மறையின் உருவாக்கத்தில் இயேசுவின் கால சமுகப்பிரிவு செல்வாக்குச் செலுத்தியது என்பதனை உதாரணங்களுடன் முன்வைப்பார்

03. ''தாழ்த்தப்பட்ட மக்கள்'' மத்தியில் பணி செய்வதன் அவசியத்தை எடுத்துக் கூறுவார்.

04. பாடத்தில் குறிப்பிடப்படும் ''தாழ்த்தப்பட்ட மக்கள்'' மத்தியில் பணி செய்யும் செயல் திட்டமொன்றில் ஈடுபடுவர்.

**உசாத்துணை நூல்கள்.**


01. அ.பீட்டர் அபீர்,ஆ.அலோசியுஸ் சேவியர் "***விவிலியம் ஓர் அறிமுகம்***" அருள்வாக்கு மன்றம்,திருச்சி,2005.

02. பிலிப் இயேசுதாசன் அ.ம.தி "***புளிப்புமாவு***" மெக்லின் அச்சகம் 2010.

03. ம.ஆரோக்கியராஜ் ***"இயேசுவின்காலத்தில் எருசலேம்"***வைகறைப் பதிப்பகம்,**2009.**

**தேர்ச்சி 3.0** :- இயேசுவின் காலத்து பாலஸ்தீன பண்பாட்டின் பின்னணியை அடிப்படையாகக்கொண்டு புதிய ஏற்பாட்டின்படி தம் வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** :- இயேசுவின் காலத்து பாலஸ்தீன சமயப் பின்னணியை அறிந்து வழிபாட்டிடங்களுக்கும், சமயப் பெரியோருக்கும் மதிப்பளிப்பார்.

**பாடவேளைகள்** :- **20**

**கற்றல் பேறுகள்** :-

- இயேசுவின் காலத்து பாலஸ்தீனாவின் சமயப் பின்னணி பற்றிய விடயங்களைக் கோவைப்படுத்துவார்.
- யூதர்கள் எருசலேம் ஆலயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- யூத மத நிறுவனங்களையும், குழுக்களையும் பற்றிய ஆக்கம் ஒன்றினை முன்வைப்பார்.
- வழிபாட்டிடங்களின் புனிதத் தன்மையைப் பேணும் செயல்களில் ஈடுபடுவார்.
- குழுவினரின் ஒத்துழைப்புடன் செயற்படுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**3.3.1 சமய நிறுவனங்கள் :**

- சமயம் என்பது மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையில் உறவை ஏற்படுத்துகின்றது.
- மனிதரின் சமய வாழ்வில் உன்னத இடம் கடவுளுக்குரியதே ஆகும்.
- இஸ்ரயேலரின் ஆன்மீகம், மற்றும் சமூக, அரசியல், பொருளாதார வாழ்வு முழுவதுமே கடவுளை மையப்படுத்தியதாகவே அமைந்தது
- இஸ்ரயேலரின் நம்பிக்கை தமது முன்னோர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு கிடைத்த இறை வெளிப்பாட்டின் அடிப்படையிலும் சீனாய் உடன்படிக்கையின் அடிப்படையிலும் கட்டி எழுப்பப்பட்டதாகும். இதன் அடிப்படையில் இஸ்ரயேலரின் இறை நம்பிக்கை “ ஓர் இறைக் கொள்கை “ ஆக அமைந்தது.
- இவர்களது வாழ்க்கையின் பல்வேறு கால வரலாற்றின் அடிப்படையில் தமது அனுபவங்களின் தன்மைக்கு ஏற்ப ஒரே இறைவனை பல பெயர்களில் அழைத்து வழிபட்டனர். “ ஏல் “ என்பது கடவுள்/இறைவன் என்னும் பொது பெயர் ஆகும்.
- எனினும் கீழ் வரும் பெயர்கள் இறைவனின் தனித்துவமான பண்புகளை குறிப்பதாக அமைந்துள்ளது.
- ஏல், ஏலோகிம் – (படைத்தவரான கடவுள் / விண்ணில் உள்ள இறைவன்)

  ஏல், ஏலியோன் – (உன்னதரான இறைவன்)

  ஏல், சடாய் – (எல்லாம் வல்ல இறைவன் /மாட்சியில் உள்ளவர்.)

  ஏல் பெரித் – (உடன்படிக்கையின் இறைவன்)

  யாவேயீரே – (இருக்கிறவராக இருக்கின்றவர்/ முதலும் முடிவுமற்ற இறைவன்)

  அதோனாய் – (என் ஆண்டவர்) என்ற நாமங்களை சூட்டி அழைத்து தமது வேண்டுதல்களையும், தமது நேர்ச்சைகள், காணிக்கை, பலிகளையும் நிறைவேற்றி வந்தனர்.
- மேலும் கில்கால், பெத்தெல், செக்கேம், சீலோ, தாண் ஆகிய இடங்களில் பலிப்பீடங்களை அமைத்து வழிபட்டனர்.

- முறையான அமைப்புக் கொண்டதான மதநிறுவனங்கள் மன்னர்களின் ஆட்சிக்காலத்திலேயே தோற்றம் பெற்றன.
- மன்னன் தாவீதின் ஆட்சி காலத்தில் எருசலேமில் உடன்படிக்கை கூடாரம் அமைக்கப்பட்டு அதனை திரு உறைவிடம் ஆக்கி வழிபாடுகளை மேற்கொள்ள வழிசெய்தார். இதுவே பிற்பட்ட காலத்தில் பிரம்மாண்டமான ஆலயமாக அமைவதற்கு காரணமானது.
- இத்தகைய மத நிறுவனங்களில் முதன்மை பெற்றது எருசலேம் ஆலயமாகும்.
- இவை தவிர தொழுகைக் கூடங்களும், யூததலைமைச்சங்கமும் யூதமத நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன.
- இத்தகைய நிறுவனங்களின் தோற்றம், அமைப்பு, அதன் பணியும் சிறப்பும் பற்றிய விடயங்களை ஆராய்வது அவசியமாகும்.

### 3.3.0.1 எருசலேம் ஆலயம்

## தோற்றம்

- " ஆலயம் " என்பது ஆண்டவர் உறையும் திரு இல்லம், இறையருளின் சின்னம், இறைபிரசன்னத்தின் மையம் என்று கருதப்பட்டது.
- இஸ்ரயேல் மக்களின் வாழ்விலும் இத்தகைய எண்ணம் மிக்க வலிமையுடைய ஒன்றாக அமைந்திருந்தது.
- இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்ததே எருசலேம் ஆலயம் ஆகும்.
- எருசலேம் ஆலயம் யூதமக்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்து தமது உயிரைவிடவும் மேலானதாக கருதப்பட்டது.
- தாவீது மன்னரின் ஆட்சிக்காலத்தில் எருசலேம் தலைநகராக்கப்பட்டபோது தமது இறைவனுக்கென ஓர் இல்லம் அமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.
- ஆனால் இம்முயற்சி பயனற்று மன்னனின் மகன் சாலமோன் இதனை கட்டி முடித்தான். இவ்வாலயமானது உலக நாடுகள் அனைத்திலும் காணப்படும் மிகச்சிறந்த கட்டிடப் பொருட்களாலும், கலைப் பொருட்களாலும் கட்டப்பட்டதென கூறப்படுகின்றது.
- ஆனால் இவ்வாலயம் பல்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு வல்லரசுகளால் அழிவுக்குட்பட்டும், ஆலயக் கருவூலங்கள் கொள்ளையடிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டன (கி. மு 597, கி. மு 587, கி. மு 169, கி.பி 70) (2 அர 16: 40 –16 21: 4 – 5,7)
- ஆயினும் மீண்டும் மீண்டும் புனரமைக்கப்பட்டு புதுப் பொலிவு பெற்றது.
- இறுதியாக கி. மு 19 இல் யூதேயா மன்னனான பெரிய ஏரோது மிகப் பிரமாண்டமான அமைப்பில் இதனை புனரமைத்தான். இவ்வேலைகள் முழுமைபெற 46 ஆண்டுகள் சென்றன. (யோவா 2:20)

## அமைப்பு

- இவ்வாலயத்தையும் அதனைச் சார்ந்த இடமும் 2350 அடி சுற்றளவாகும்.
- இது அகன்ற சுவர்களையும் மண்டபங்களையும் கொண்டதும், நான்கு திசைகளிலும் 8 பெரிய நுழைவாயில்களையும் கொண்டிருந்தது. (வடக்கில் 1, தெற்கில் 2, கிழக்கில்1 மேற்கில் 4)
- தெற்கு நுழைவாயில்கள் இரண்டும் சுரங்க வாயில்களாகும். இதன் வழியாக உள்நுழைந்தால் முதலில் இருப்பது " புற இனத்தார் முற்றம் " ஆகும்.
- வடக்கில் அரசமண்டபமும் கிழக்கில் சாலமோன் மண்டபமும் அமைந்துள்ளது. (தி.ப 3:11, 5:12 யோவா 10:23)

- இப்பகுதியில் நாணயம் மாற்றுதல், பலிப்பொருட்கள் விற்பனை செய்தல் போன்ற நிகழ்வுகள் நடக்கும். (மத் 21:12–13)
- புறஇனத்தவர் முற்றத்தை அடுத்து 2ம் பகுதியில் 9 வாயில்கள் இருந்தன இப்பகுதியின் கிழக்கு பகுதியில் 'ஒப்பனைவாயில்" (அழகு வாயில்) (தி.ப 3:2) அமைந்திருந்தது.
- இப்பகுதிக்குள் யூதர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். இதற்குள் மூன்று முற்றங்களை கொண்ட மேடைகள் உள்ளன. அவை 1ம் மேடை பெண்கள் முற்றம், 2ம் மேடை இஸ்ரயேல் முற்றம், 3ம் மேடை குருக்கள் முற்றம் ஆகியன ஆகும்.
- இப்பகுதியில் உள்ள காணிக்கைப் பெட்டியில் மக்கள் தமது காணிக்கைகளை செலுத்துவதுடன் குருக்களிடம் பலிப்பொருட்களைக் கொடுத்து பலியிடுவர்.
- பலிப்பீடப்பகுதியை அடுத்திருக்கும் உட்பகுதியே "திருத்தூயகம் " என்று அழைக்கப்பட்டது.
- இது ஒரு திரைச்சீலையால் மறைக்கப்பட்டிருக்கும்.
- முற்காலத்தில் இங்கிருந்த கல்மேடையில் "உடன்படிக்கைப் பேழை" வைக்கப்பட்டிருந்தது.
- நாடுகடத்தலின் பின்னர் " கல்மேடை " மட்டுமே இருந்தது.
- இத்திருத்தூயக பகுதியில் தலைமைக்குரு மட்டும் ஆண்டில் ஒருமுறை பரிகாரத் திருவிழாவின்போது உள்ளே சென்று இவ்மேடையில் இரத்தம் தெளித்து பலி நிறைவேற்றுவார்.
- இவை தவிர ஆலயத்தை சூழ சிறிதும், பெரிதுமான பல அறைகள் இருந்தன.
- ஆலயம் வெள்ளை சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டிருந்தது.
- தங்கத்தகடுகள் பொதிக்கப்பட்டும், பொன்மூலாம் பூசப்பட்ட கோபுரங்களும் ஆலயத்தை அழகுபடுத்தின.

### முக்கியத்துவம்

- எருசலேம் ஆலயம் யூதர்களின் சமய சமூக ஒருமைப்பாட்டின் மையமாக அமைவதால் யூதர்களின் வாழ்வியல் நிகழ்வுகள் அனைத்தும் அங்கிருந்தே ஆரம்பிக்கப்பட்டன.
- யூத குழந்தை ஒன்றை ஆலயத்தில் காணிக்கையாக்கி இறைவனுக்கு உடைமையாக்குவதும் ஆண்டுவிழாக்களில் பங்கெடுப்பதும் பலி நிறைவேற்றுவதும் ஆலயத்தை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்ததுடன் இவை ஒவ்வொரு யூதர்களினதும் கட்டாய கடமையாகவும் கருதப்பட்டது.
- ஒவ்வொரு யூதனும் ஆண்டில் ஒரு முறையாவது ஆலயம் வரவேண்டும் என்பது நியதியாகும்.
- ஆலய பரிபாலனத்துக்கென யூதர்கள், வரி செலுத்துவதை தமது உரிமையாகக் கருதியமையால் ஆலயக்கருவூலம் எப்போதும் நிறைந்தே இருக்கும்.
- இவ்வாலயம் கி.பி 70 இல் உரோமைப்பேரரசன் தீத்தூஸ் என்பவனால் முற்றாக அழிக்கப்பட்டது.
- மேற்கு மதில் மட்டுமே இன்று அதன் அடையாளச்சின்னமாக உள்ளது. இதனை யூதர்கள் " கண்ணீர் சுவர் " என்று அழைக்கின்றனர்.

### 3.3.1.2 தொழுகைக் கூடம்

- கிரேக்க மொழியில் " சினகொக் " என்று அழைக்கப்படுகின்றது.
- " சினகொக்" என்பது " ஒன்று கூடுதல் " எனப் பொருள்படும்.
- இங்கே யூதர்கள் ஒன்றுகூடி வந்து செபித்தும், இறைவார்த்தைகளை வாசித்தும், அதன் விளக்கங்களைக் கேட்டும் வந்தனர்.

## தோற்றம்

- முதன் முதலில் இத்தகைய தொழுகைக்கூடங்கள் பபிலோனிய நாடுகடத்தல் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக கருதப்படுகின்றது.
- நாடு திரும்பிய பின்னரும் இத்தகைய முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன.
- சிதறி வாழ்ந்த யூதர்கள் மத்தியிலும் இத் தொழுகைக்கூடங்கள் கட்டப்பட்டிருந்தன.

## அமைப்பு

- இது நீள் சதுர அமைப்பைக் கொண்டதாகும். எருசலேமை நோக்கியதாகவே இது கட்டப்பட்டிருக்கும்.
- தொழுகைக் கூடத்தின் உட்பகுதியில் ‘‘ புனித இடம் ‘‘ என்ற பகுதியில் இறைவாக்குகள் அடங்கிய ஏட்டுச்சுருள் வைக்கப்பட்டு அவை திரைச்சீலையால் மறைக்கப்பட்டிருக்கும்.
- அதன் அருகில் ‘பேச்சு மேடை’ ஒன்று இருக்கும். இதில் நின்றே இறைவார்த்தை வாசிக்கப்படும்.
- திருமறைச் சுருள் வைக்கப்பட்டிருக்கும் பகுதியின் அண்மையில் பணம் படைத்தவர்களுக்கு இருக்கை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- தொழுகைக் கூடத்தில் பலிப்பீடம் இல்லை. ஆயினும் விளக்குத்தண்டு ஒன்று ஐந்து அல்லது ஏழு கிளைகள் கொண்டதாக வைக்கப்பட்டிருக்கும்.
- தொழுகைக் கூடத்தினுள் நுழைவதற்கு முன்னர் கைகால்களைத் துப்பரவு செய்யும் வண்ணம் வெளிவாயிலில் நீர்த் தொட்டி வைக்கப்பட்டிருக்கும்.

## பயனும் பணியும்

- இத்தொழுகைக் கூடங்களில் செபவழிபாடுகள் நடத்தப்படுவதுடன், அவை மறைப்பாடசாலையாகவும், நீதி விசாரணை மன்றமாகவும் பயன்பட்டன.
- மக்களுக்கு அறிவுரை கூற தொழுகைக் கூடத் தலைவர்கள் சிறந்த போதகர்களை அழைத்து வந்து மறை உரை ஆற்றச் செய்வர்.
- ஆலயத்தின் சொத்துக்களும் கண்காணிக்கப்பட்டு வந்தன.
- இத் தொழுகைக்கூடங்களில் இயேசு கற்பித்து வந்துள்ளார் என்பதை நற்செய்திகளில் அறியமுடியும் (லூாக்-4:16-17, மாற்-12:28, மத்-12:38)
- தூய பவுல் அடிகளாரும் மறைத்தூதுப் பயணங்களில் இத் தொழுகைக் கூடங்களிலேயே நற்செய்தியை கற்பித்து வந்தார் (தி.ப 13: 15).
- இத்தொழுகைக் கூடங்களில் நடைபெற்ற வழிபாட்டு முறைமைகள் இன்று திருச்சபையில் அமைப்பு பெற்ற திருவழிபாட்டு முறைமையுடன் ஒத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.
- யேசுவின் காலத்தில் 300 தொடக்கம் 400 வரையான தொழுகைக் கூடங்கள் இருந்துள்ளன என கணிக்கப்பட்டுள்ளது.

### 3.3.1.3 யூத தலைமைச் சங்கம்

- இதுவே யூதர்களின் உயர் நீதி மன்றமாக கருதப்பட்டது.
- இது ‘செனத்திரின் சங்கம்,’ ‘பொதுச்சங்கம்,’ ‘தலைமைச் சங்கம்‘ எனப் பல பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது.

## தோற்றம்

- பாலஸ்தீனா உரோமையரின் ஆட்சிக்குட்பட்டிருந்த போது இச்சங்கத்தினரின் செல்வாக்கு உன்னத நிலையில் இருந்துள்ளது என்பதும் தெளிவாகும்.

## அமைப்பு

- இதில் 71 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் மூன்று நிலைகளில் உள்ளடங்குவர்.

  அ— தலைமைக்குருக்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுமாவர் (சதுசேயர்கள்).

  ஆ— மூப்பர்கள், பெரியோர்கள், பிரபுக்களின் தலைவர்கள், மறைநூல் அறிஞர்கள்,

  இ— பரிசேயர்கள்
- இத் தலைமைச் சங்கத்திற்கு காவல் படையினரும் இருந்தனர்.

## முக்கியத்துவம்

- யூதர்களின் மதச் சடங்குத் தூய்மையையும், சட்டங்களையும் முறையாகக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்று வலியுறுத்தி நிற்பதே இதன் நோக்கம்.
- இத்தலைமைச்சங்கத்திற்கு எருசலேம் ஆலய வழிபாடுகளை மேற்பார்வை செய்யவும் ஆலயத்திற்கு கிடைக்கும் வருமானத்தை உரியமுறையில் பயன்படுத்தவும் அதிகாரம் இருந்தது.
- குற்றங்களை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தையும் கொண்டிருந்தது.
- கசையடி, தெண்டம் அறவிடல், கல்லால் எறிந்து கொல்லுதல், ஆலயத்திற்குப் புறம்பாக்குதல் போன்ற தண்டனைகள் இவர்களால் வழங்கப்பட்டன.
- மரணதண்டனை வழங்கும் அதிகாரம் இருந்தாலும் அதனை நிறைவேற்றும் ஆணையை உரோம ஆளுனர்கள் அளிக்கவேண்டும்.
- இச்சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான விதிமுறைகள் ''மிஸ்னா'' என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

  **அவையாவன**

  I. இச்சங்கம் ஆலயத்தில் அதற்கென அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்பட வேண்டும்.

  II. திருவிழாக்காலங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பகல் வேளைகளில் கூட்டப்பட வேண்டும்.

  III. ஒரு யூதன் தனது மதத்திற்கு எதிராக குற்றம் இழைத்தால் அவனுக்கு நீதி விசாரணை செய்ய இது கூட்டப்பட வேண்டும்.

  IV. குற்றவாளி தொடர்பாக இரண்டு சாட்சிகள் தனித்தனியாக விசாரிக்கப்பட வேண்டும்.

  V. குற்றம் சாட்டப்பட்டவரின் வாய்மூலத்தை வைத்து தீர்ப்பிடக்கூடாது.

  VI. சாட்சியங்கள் இரண்டும் ஒரே மாதிரி அமைந்திருந்தாலேயே தண்டிக்கப்படலாம்.

  VII. விடுதலைத்தீர்ப்பாயின் குற்றவாளி அன்றைய தினமே விடுதலை செய்யப்படல் வேண்டும்.

  VIII. மரணதண்டனைத் தீர்ப்பாயின் இருநாட்களின் பின்னரே அது நிறைவேற்றப்பட வேண்டும்.
- இச்சங்கத்தின் அதிகாரம் யூதர்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
- இவை போன்ற சங்கங்கள் சிதறுண்டு வாழ்ந்த யூதர்கள் மத்தியிலும் இருந்தன.

### 3.3.2. யூத சமயக் குழுக்கள்

- யூதர்களுக்கு சமயம் முதன்மை பெற்றதைப் போன்று சமயக் குழுக்கள் முக்கியம் பெற்று விளங்கின.
- அவை சதுசேயர், பரிசேயர், மறைநூல் வல்லுனர், எசீனியர், தீவிரவாதிகள் போன்றனவாகும்.
- இக்குழுக்கள் சமயக்கோட்பாடுகள், அரசியல் சார்பு, மற்றும் சமூகக்கலப்பு அடிப்படையில் உருவாக்கம் பெற்றன.
- இக்குழுவினர் ஒவ்வொருவரும் தாமே யூதமத மரபுகளை தூய்மையாகக் கடைப்பிடித்தவர்கள் எனக் கருதி வந்தனர்.
- இதனால் இவர்களுக்கிடையே கருத்து முரண்பாடும் போட்டிகளும் இருந்தன.
- இவர்களது தோற்றம், கொள்கைகள் தொடர்பான விடயங்களை ஆராயும்போது பல வேறுபாடுகளைக் காணலாம்.

#### அ) சதுசேயர்கள்

- இவர்களது தோற்றம் பற்றிய விபரங்கள் தெளிவாக அறியப்படாவில்லை.
- அரசியல் இலாபத்திற்காக ஆட்சியாளர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.
- இதனால் பணம்படைத்த உயர்மட்ட குடிமக்களாகவும், நில உடைமையாளராகவும், தலைமைக்குருக்களாகவும் இருந்தனர்.
- மதக் கொள்கைகளில் விவிலியத்தின் ''ஐந் நூலை''மட்டுமே ஏற்றுக்கொண்டனர்.
- இறந்தபின் உயிர்ப்பு, தீர்ப்பு, மெசியாவின் வருகை, ஆன்மாவின் அழியாமை, வானதூதர் முதலிய கோட்பாடுகளை ஏற்க மறுத்தனர்.
- தோராவின் தண்டனைச் சட்டங்களை மிகக் கடுமையாக செயற்படுத்தினர்.
- கிரேக்க, உரோமய பண்பாடுகளுக்கு மதிப்பளித்ததுடன் ஆடம்பரப் போக்கிலும் வாழ்ந்தனர்.
- யூதத் தலைமைச்சங்கத்தில் உறுப்பினர்களாக விளங்கினர்.
- இவர்களின் மிதவாதப் போக்கினால் மக்களின் மதிப்பை இழந்தனர்.

#### ஆ) பரிசேயர்

- ''பரிசேயர்'' என்ற வார்த்தை ''PERUSIM'' பெருஷ்சிம் '' என்ற எபிரேயச் சொல்லில் இருந்து வந்ததாகும்.
- இதன் பொருள் '' பிரிந்து நிற்பவர் அல்லது தனித்து நிற்பவர் '' என்பதாகும்.
- இவர்கள் யூதமறையைச் சாராத ஏனைய நாட்டுப் பண்பாடுகளிலிருந்தும், மறை ஒழுக்கத்திற்கும், சட்டத்திற்கும் முரண்பட்ட அனைத்திலும் இருந்து பிரிந்து வாழந்தனர்.
- யூதர்கள் மேல் வேற்றரசர்களின் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்து நின்றதுடன் '' கடவுளே ஒரே அரசர்'' என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர்.
- இவர்களது மதக்கொள்கை மோசே அளித்த சட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதனால் '' சட்டத்தின் மக்கள் '' என்றும் இவர்கள் கருதப்பட்டனர்.
- விவிலியத்தின் ஐந் நூலையும் (தோரா) அவற்றின் விளக்கங்களையும். பாரம்பரியங்களையும் அதிகாரப்பூர்வமானவையாக ஏற்றுக் கொண்டனர்.
- ஓய்வுநாள், சடங்குத்தூய்மை, கோயில் காணிக்கை போன்ற சட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.
- அத்துடன் சட்டத்தை நூற்றுக்கணக்கான உபபிரிவுகளாக்கி அவற்றிற்கு விரிவான விளக்கங்களை எழுதினர்.

- ஆன்மாவின் அழிவின்மை, இறந்தபின் தீர்ப்பு, உயிர்ப்பு, வானதூதர்கள் முதலியவற்றை ஏற்று நம்பினர்.
- இறையாட்சியின் நிறைவை ஆவலுடன் எதிர்பார்த்து மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்தனர்.
- மக்கள் மத்தியில் செல்வாக்கும் மதிப்பும் பெற்று விளங்கினர்.
- இவர்களும் தலைமைச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தனர்.

**இ) மறைநூல்அறிஞர்**

- இஸ்ரயேலர் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட போது " திருச்சட்டமே"அவர்களின் சமய வாழ்வின் மையமாக இருந்தது.
- நாடு திரும்பிய பின்பு கி.மு. 526 இல் ஆலயம் மீளக்கட்டப்படும் வரையும் " திருச்சட்டங்களே" வழிபாட்டுக்கு இணையாகக் கருதப்பட்டன.
- இத்திருச்சட்டத்தை வாசித்து விளக்கமளிக்க வேண்டிய தேவைப்பாடு உருவாகியது.
- இப்பின்னணியில் தோற்றம் பெற்ற குழுவினரே மறைநூல் அறிஞர் ஆவர்.
- இவர்கள் லேவி குடும்பத்தினர் மட்டும் அன்றி வேறு குடும்பத்தில் இருந்தும் உருவாக்கம் பெற்றனர்.
- இவர்களுள் முதன்மையானவராக " எஸ்ரா " கருதப்படுகிறார்.
- இயேசுவின் காலத்தில் கிரேக்கப் பண்பாட்டுத் தழுவலினால் திருச்சட்டத்தில் ஆர்வம் குறைந்தவர்களைக் கண்டித்து திருச்சட்டத்தில் பற்றுறுதியை ஏற்படுத்த இவர்கள் முனைந்தனர்.
- யூத தலைமுறை நூல்களை வரையறை செய்தனர்.
- யூதமறையின் இலக்கியங்களை சேகரித்து அவற்றைப் பிரதி எடுத்தும், கலப்படம் இன்றி பாதுகாப்பதிலும் முனைந்து செயற்பட்டனர்.
- இவர்கள் சமய அறிவைப் புகட்டுவதுடன் சமூகச் சிக்கல்களுக்கும் தீர்வு கூறிவந்தனர்.
- திருச்சட்டங்களுக்கு தமது முன்னோர்கள் கொடுத்து வந்த மரபு வழிப்போதனை விளக்கங்களையே கூறிவந்தனர்.
- இதனால் இயேசுவை பகைக்க முற்பட்டனர்.
- இயேசுவிடம் கேள்விகேட்டு அவரது அறிவை சோதித்தனர்.
  (மத் 12:38–41), (மத் 15:1–12), (மாற் 12:28–34,11:8), (லூக் 5:17–25, 10:25–37)

**ஈ) எசீனியர்**

- எசீனியர் யூதா மக்கபேயரின் புரட்சிக்காலத்தில் (கி. மு 200) தோற்றம் பெற்றிருந்த யூதமதவாதிகளாவர்.
- இவர்களது வாழ்க்கை குறிப்புக்கள் கும்ரான் அகழ்வாராச்சிகள் மூலம் கிடைத்துள்ளன.
- பபிலோனிய நாடுகடத்தல் வாழ்வு யூதர்களுக்கு ஏற்பட்ட இறைத்தண்டனை என்று கருதி மீண்டும் ஒரு பேரழிவு ஏற்படாவண்ணம் தமது வாழ்க்கையில் தூய்மையை கடைப்பிடித்து வாழப்போவதாக மணத்துறவு பூண்டு வாழ்ந்தனர்.
- கி. பி 1ம் ஆண்டளவில் சாக்கடலின் வடமேற்கு பகுதியில் உள்ள பாலைநிலப்பரப்பில் வாழ்ந்தனர்.
- இவர்களது வாழ்க்கை (முறை) கூட்டு வாழ்க்கை முறையாக அமைந்திருந்தது.
- எப்போதும் தமது தலைவருக்கு கட்டுப்பட்டு அவரது அறிவுரைப்படி வாழ்ந்தனர்.
- இவர்கள் தமது உடைமைகள் அனைத்தையும் பொதுப் பொருளாய் வைத்திருந்தனர்.

- அதிகாலையில் எழுந்து இறைவேண்டுதல் செய்வதும், நண்பகல் வரை வயல் வேலைகளில் ஈடுபட்ட பின்னர் குளித்து தம்மை தூய்மையாக்கி பசியைத்தீரும் அளவு உணவு உண்பர்.
- மாலைவரை மீண்டும் வேலை செய்து இரவு உணவில் பங்கேற்பர்.
- மௌனம் கடைப்பிடித்தல் இவர்களது சிறப்பு அம்சம் ஆகும்.
- இவர்களது மதக்கோட்பாட்டின்படி மனித ஆன்மாவானது உடலுக்குள் சிறைவைக்கப்பட்டுள்ளது என்றும், இறப்பின் பின்னர் அச் சிறையில் இருந்து ஆன்மா விடுதலை பெறுகின்றது என்றும் கருதினர்.
- மனிதனின் தண்டனையோ மீட்போ கடவுளின் கைகளிலேயே தங்கியுள்ளன''என்பது இவர்களது நம்பிக்கை.
- ''மனிதனின் செயற்பாடுகள் யாவும் கடவுளால் ஏற்கெனவே திட்டமிடப்பட்டுள்ளன'' என்றும் போதித்துவந்தனர்.
- இயேசுவின் அப்போஸ்தலர் குழுவில் யாக்கோபுவும், யோவானும் எசீனிய குழுவினராக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.
- கி. பி 68 இல் 10ம் உரோமயப் படையணி எரிக்கோவை முற்றுகையிட்டு போர் செய்தபோது எசீனியரின் நகரம் முற்றாக அழிக்கப்பட்டது.
- பிற்பட்ட காலத்தில் தோன்றிய துறவற வாழ்க்கை முறைக்கு இவர்களே காரணமாக கருதப்படுகின்றனர்.

**உ) தீவிரவாதிகள்**

- இயேசுவின் காலத்தில் தோற்றம் பெற்ற அரசியல் பிரிவுகளில் ஒன்றாக இவர்கள் கருதப்படுகின்றனர்.
- கி. பி 6ம் ஆண்டில் கலிலேயனான யூதாஸ் என்பவன் உரோமயரின் ஆதிக்கத்தை முறியடிக்கும் நோக்கில் இதனை தோற்றுவித்தான்.
- கி. பி 6இல் யூதேயாவை ஆண்டு வந்த ஏரோது ஆர்க்கெலாவை உரோமப் பேரரசு நீக்கிவிட்டு தமது ஆளுனர்கள் மூலம் நேரடியாக ஆட்சி செய்ய முனைந்ததை எதிர்க்கும் நோக்கில் இக்குழு செயற்பட்டது.
- இக்குழுவினர் மெசியாவின் வருகைக்காக காத்திருப்பதை விடுத்து தாமே நேரடியாக விடுதலையைக் அடையவேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டனர்.
- யூதர்கள் மேல் உரோமயர்கள் அதிக வரிச்சுமைகளை விதித்தமையை கண்டித்தும் கிளர்ச்சி செய்தனர்.
- பேரரசை நேரடியாக எதிர்க்கமுடியாமல் மலைப்பகுதிகளில் மறைந்திருந்து உரோமப்படைகளைத் தாக்கி வந்தனர்.
- மக்களிடம் உரோமயர் வசூலித்த வரிப்பணத்தை இவர்கள் கொள்ளையடிக்க முனைந்ததனால் இவர்கள் கொள்ளைக்காரர், திருடர் என்றும் கருதப்பட்டனர்.
- கி.பி. 70இல் நடைபெற்ற யூத உரோம யுத்தத்தின் போது இவர்களது தாக்குதல் தீவிரமாய் அமைந்திருந்ததுடன் ''மசாதா'' என்ற இடத்தை தமது கட்டுப்பாட்டில் நீண்ட காலம் வைத்திருந்தனர்.
- நற்செய்திகளின் அடிப்படையில் இயேசுவின் சீடர்களுள் தீவிரவாதியான சீமோன், இக்குழுவினர்களில் ஒருவராவார்.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடுகள்**

01. இயேசுவின் காலத்தில் காணப்பட்ட மத அமைப்புக்களையும் அதன் தோற்றம், பணி, ஆகியவற்றின் விபரங்களையும் பின்னணி பற்றிய விபரங்களையும் கோவைப்படுத்துவார்.
02 தமது பங்குகளில் உள்ள சமய, சமூக நிறுவனங்கனின் தோற்றம், அமைப்பு, பணி பற்றிய ஆக்கம் ஒன்றை ஒப்படையாக முன்வைப்பார்.
03 இயேசுவின் காலத்தில் யூத சமுதாயத்தில காணப்பட்ட சமூகப்பிரிவினர்களின் தோற்றம் கோட்பாடுகள் பற்றி ஆராய்ந்து முன்வைப்பார்.

**உசாத்துணை நூல்கள்**

01 பீட்டர் அபீர்,ஆ அலோசியஸ் சேவியர், *விவிலியம் ஓர் அறிமுகம்*, அருள்வாக்கு மன்றம், திருச்சி 2005
02 பிலிப். யேசுதாசன் அ.ம.தி, *புளிப்புமாவு*, அமல உதயம், உப்புவெளி, திருமலை 2010

**தேர்ச்சி 3.0** : இயேசுவின் காலத்து பாலஸ்தீன பண்பாட்டின் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு புதிய ஏற்பாட்டின்படி வாழ்கை முறையை அமைத்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 3.4 :** முதல் நூற்றாண்டு கால பாலஸ்தீனாவின் யூதப் பண்பாட்டு மரபுகளை அறிந்து தமது பண்பாட்டு மரபுகளைப் பின்பற்றுவார்.

**பாடவேளை :- 20**

**கற்றல் பேறுகள்-**

- இயேசுவின் காலத்தில் யூதப்பண்பாடுகள், வழிபாட்டு மரபுகள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- யூத சமய,சமூக பண்பாட்டு மரபுகளை இயேசு பின்பற்றினார் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- யூத சமய பழக்கவழக்கங்கள்,விழாக்கள் பற்றிய ஆக்கம் ஒன்றை முன்வைப்பார்.
- இறை விருப்பத்திற்கேற்ப செயற்படப் பழகுவார்.
- குழுவினரின் ஒத்துழைப்பைப் பெற்று செயற்படுவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி

### 3.4.1 பாலஸ்தீனாவின் யூதப்பண்பாட்டு மரபுகள்

- கிறிஸ்து இயேசுவின் கொள்கைகள் போதனைகள் வாழ்க்கை முறைகளை ஏற்று அதனை வாழ்வாக்க முயலும் தன்மையே கிறிஸ்தவ நாகரிகமாகும்.
- ஆயினும் இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு, பணிகள் யாவும் பாலஸ்தீன யூத பண்பாட்டு மரபுகளைக் கொண்டதாகும்.
- இப்பண்பாடானது பல்வேறுப்பட்ட பண்பாடுகளின் பல அம்சங்களை தன்னுள் கொண்டதாகும்.
- ஆபிரகாமின் வழிமரபிலிருந்து மந்தை மேய்ப்பவர்களாக விளங்கியவர்கள் காலப்போக்கில் விவசாயத்திலும் பல்வேறுப்பட்ட தொழில்முயற்சிகளிலும் ஈடுபட்டு முன்னேற்றம் கண்டனர்.
- இவர்கள் செமித்திய இன மொழியான எபிரேய மொழியை பேசியதால் எபிரேயர் எனவும் அழைக்கப்பட்டனர். எபிரேயர் என்பதற்கு 'ஆற்றைக்கடந்தவர்கள்.' என்றும் ஒரு பொருள் உண்டு.
- இவர்களது பண்பாட்டு மரபுகளை விரிவாக ஆராயும் போது பல சிறப்பம்சங்களைக் காண முடியும்.

#### 3.4.1.1. யூதமொழி

- பொதுவாக யூதர்களின் மூலமொழி எபிரேயம் ஆகும்.இது செமித்திய மொழிகளில் ஒன்று.
- இஸ்ரயேலரின் வழிமரபினர் எகிப்தில் குடியேறி இருந்த போது இவர்கள் எபிரேய மொழியில் பேசியதால் "எபிரேயர்கள்" என்று அழைக்கப்பட்டனர்.
- யூதர்களின் வேதநூல்கள் பெரும்பான்மையாக எபிரேய மொழியிலேயே எழுதப்பட்டிருந்தன.
- இயேசுவின் காலத்தில் தொழுகைக்கூடங்களில் வாசிக்கப்பட்ட வாசகங்கள் எபிரேய மொழியிலேயே வாசிக்கப்பட்டன.
- அன்றாட வாழ்வில் யூதர்கள் அரமேய மொழியை பேச்சு மொழியாகக் கொண்டிருந்தனர்.
- இது பபிலோனிய நாடுகடத்தலின் பின்னரே வழக்கில் வந்தது.

- பாலஸ்தீன் கிரேக்க, உரோமயரின் ஆட்சிக்குட்பட்டதினால் கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளும் நடைமுறையில் இருந்தன.

### 3.4.1.2. சமூக மரபுகள்

- ஒவ்வொரு சமூகமும் தனித்துவமான பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் சமூகக் கோட்பாடுகளையும் தமக்கென கொண்டிருந்தன.
- யூதசமூகமும் தமக்கென சில மரபுகளைக் கொண்டிருந்தது. இவை அவர்கள் வாழ்ந்த இடங்களில் இருந்து பெற்றுக்கொண்டவை ஆகும்.
- எனினும் காலப்போக்கில் யூதர்களுக்குரிய தனித்துவத்தைப் பெற்று விளங்கியது.
- இம்மரபுகளை இயேசுவும் கடைப்பிடித்தாலும் சில மரபுகளுக்கு புதிய கண்ணோட்டத்தில் சிறந்த விளக்கங்களை அளித்தார் என்பதை காணலாம்.

#### அ. குடும்பம்

- யூத குடும்பத்தில் தலைமை என்பது ''இல்லத்தலைவனே''.
- பெரும்பாலும் தந்தையே குடும்பத்தின் முழுஅதிகாரத்தையும் கொண்டிருந்தார்.
- திருமணம் முடித்திருந்தாலும் பிள்ளைகள் தமது தந்தைக்கு கட்டுப்பட்டிருந்தனர்.
- குடும்பத்தில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளுக்கும், விழாக்களுக்கும் தந்தையே தலைமை ஏற்பார்.
- யூதகுடும்பத்தில் குழந்தைப்பேறு ஆசீராக கருதப்பட்டது.
- பொதுவாக முதல்குழந்தை ஆண்குழந்தையாக பிறக்க வேண்டும் என விரும்பினர்.
- குழந்தை பிறந்தவுடன் அதனைக் கழுவி உப்புக் கொண்டு துடைத்து விடுவர்.
- இரட்டைக்குழந்தை பிறந்தால் முதலில் வெளிவந்தது எக்குழந்தை என உன்னிப்பாக அவதானித்து அடையாளமிடுவர்.
- குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவது யூதத் தாய்மார்களின் கட்டாயக் கடமையாகும்.
- குழந்தை பிறந்து 8ம் நாளில், அல்லது 40 நாட்களுக்குள் விருத்தசேதனம் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.
- அத்துடன் குழந்தைக்கு பெயர் சூட்டுவதும் தந்தையின் பொறுப்பாகும்.

#### ஆ திருமணம்

- ஒரு யூத ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமண வாழ்வே சிறந்த இலட்சியமென யூதர்கள் கருதினர்.
- இதனால் ஆண் 13 வயதிலும் பெண் 12ம் வயதிலும் திருமணம் செய்ய அனுமதி இருந்தது.
- பெற்றோர்களே தமது பிள்ளைகளுக்கு மணமக்களைத் தேடி மணமுடித்து வைப்பர்.
- திருமணம் செய்ய இருக்கும் ஆணும் பெண்ணும் அல்லது இருவரினதும் பெற்றோர் சம்மதம் தெரிவித்து ஒப்பந்தம் செய்துக்கொள்வர். இது ''கெற்றுபா'' என்று அழைக்கப்பட்டது.
- திருமண ஒப்பந்தம் செய்து ஒரு வருடத்தின் பின்னர் திருமணம் நடக்கும்.
- மணப்பெண்ணை அலங்கரித்து மணமகன் இல்லத்திற்கு அழைத்து வந்து அங்கு திருமண ஒப்பந்த வார்த்தைகளைக் கூறி திருமணம் நிறைவு பெறும். இதில் மணமகன் ''இன்று முதல் இவள் என் மனைவி, நான் இவளது கணவன்'' என்று அறிக்கை இடுவான். பெண் எதுவும் கூறுவதில்லை.

- இது ''ஆரால்'' என அழைக்கப்பட்டது.
- முணமகன் தான் மணமுடிக்கும் பெண்ணுக்காக பெண்ணின் தந்தைக்கு பணமோ, பொருளோ, அன்றேல் உழைப்பையோ பரிசம் அல்லது நன்கொடையாக கொடுக்கவேண்டும். இது ''மோகர்'' என்று அழைக்கப்பட்டது.
- திருமண வீட்டிற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு விருந்தும், திருமண ஆடையும் வழங்கப்பட்டது.
- திருமணத்தின் பின்னர் தனிக்குடித்தனம் நடத்தினர்.
- திருமணமான பின் மனைவியின் நடத்தையில் தவறு கண்டால் கணவன் அவளை மணவிலக்கு செய்யும் உரிமைப் பெற்றிருந்தான். ஆனால் பெண்ணுக்கு அவ்வாறு செய்யும் உரிமை இல்லை.

### இ. விருந்தோம்பல்

- யூதர்கள் சமூக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.
- இதற்காக அடிக்கடி விருந்தாடி மகிழந்தனர்.
- பெரும்பாலும் இது பணம் படைத்த செல்வந்தர்களின் இல்லங்களில் அடிக்கடி நடந்தது.
- விருந்தினரை வீட்டுத்தலைவன் கட்டி அணைத்து முத்தமிட்டு வரவேற்று தனது பணியாளர்களைக் கொண்டு அவர்களது பாதங்களைக் கழுவி நறுமண எண்ணைய் பூசச் செய்வான்.
- விருந்துகளில் திராட்சை இரசம் கண்ணாடிக் கோப்பையில் தண்ணீர் கலக்காது பரிமாறப்படும்.
- கோதுமை, வாற்கோதுமை உரொட்டிகளும், ஆடு, மாடு, கோழி போன்ற இறைச்சிவகைகளும் குழம்புகளாக இருக்கும்.
- ஏழைகளின் விருந்தோம்பலில் உரொட்டியும் ஒலிவெண்ணையும் பயறு மற்றும் பால் வகைளும் பழங்களும் பரிமாறப்படும்.
- உண்ணுமுன்பு இறை புகழ் கூறி செபித்த பின்னரே உண்ணுவர்.
- செல்வந்தர்கள் அமர்ந்து உண்பர்.
- ஏழைகள் தரையில் அமர்ந்து உண்பர்.
- பால் உணவையும் இறைச்சி வகை உணவையும் ஒரே நேரத்தில் பரிமாற மாட்டார்கள்.

### ஈ. கல்வி முறைகள்

- சிறு வயதிலே மத ஒழுக்கவிழுமியங்களையும் சமூக நடைமுறைகளையும் தாயிடம் இருந்தே கற்றுக்கொள்ள வேண்டும்.
- யூதகுழந்தை ஆறு வயதில் தந்தையின் பொறுப்பில் கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- தொழுகைக் கூடங்களில் உள்ள மறைப்பாடசாலைகளில் சமய, சட்ட நெறிகளை மனப்பாடமாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.
- அன்றாட செபம் (ஷேமா) புகழுரைச் செபங்கள், நீதிநூல்கள், ஞானநூல்களை கற்றுக்கொடுக்கும் பொறுப்பு, தந்தையர்களுக்கு உரியதாகும்.
- அத்துடன் யூதச்சட்டங்களையும், சடங்குகளின் வரலாற்றுப்பின்னணிகளையும் தெரிந்து வைத்திருக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.
- வாய்மொழிப் போதனை மூலமாகவே இவர்கள் கற்றுக் கொண்டார்கள்.
- மனனம் செய்ய உரத்து சத்தமிட்டு ஞாபகத்தில் பதித்தனர்.
- சில பிள்ளைகளுக்கு தந்தையர்கள் தாம் செய்து வந்த தொழில்கள் தொடர்பான தொழில்கல்வியையும் கற்றுக் கொடுத்தனர்.

- மேலும் வரலாறு, புவியியல், இலக்கணம் என்பவற்றை விவிலியப்பின்ணனியில் கற்றுக் கொள்ளவும் சிலர் முயன்றனர்.

## உ. வீடு

- யூதர்களின் வீடுகளில் கட்டிடக்கலை நுட்பங்கள் எதுவும் இல்லை.
- அது அவர்களுக்கு ஓர் ஓய்வு இடமாகக் கருதப்பட்டது.
- மண்ணால் எழுப்பப்பட்ட சுவர்களின் மேல் இலகுவான கூரை வேய்ந்து சிறு மரக்கொப்புக்களை பரப்பி அதன்மேல் இறுக்கமாக சேறு பூசுவார்கள்.
- செல்வந்தரின் வீடுகள் சுடப்பட்ட கற்களால் கட்டப்பட்டிருக்கும்.
- வீட்டிற்கு ஒளி கொடுக்க விளக்குகளைப் பொருத்தி வைக்க விளக்குத் தண்டுகளும் பயன்படுத்தப்பட்டன. சிலர் விளக்குகளை ஏற்றி மரக்காலின் மேல் வைப்பர்.
- செல்வந்தர்களின் வீடுகளில் வெண்கலத்தால் செய்யப்பட்ட விளக்குத்தண்டுகள் இருக்கும்.
- பொதுவாக வீட்டின் சகல செயல்களும் ஒரு பகுதியிலேயே நடைபெறும். அத்துடன் வீட்டிற்கு ஒரே ஒரு வாயில் கதவை மட்டும் அமைத்திருப்பர்.
- சிலர் தமது மந்தைகளையும் வீட்டின் முன் பகுதியில் உஷ்ணத்திற்காக அடைத்து வைத்திருப்பர்.
- பொதுவாக வீடுகள் தெருக்களை அண்டியே இருக்கும் எப்போதும் அத்தெருக்கள் சனசந்தடி நிறைந்ததாக இருக்கும்.

## 3.4.1.3 யூத மத மரபுகள்

- இயேசுவின் காலத்தில் பாலஸ்தீனாவில் யூதர்களின் மத நம்பிக்கைகளும் வாழ்க்கை முறைகளும் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையில் உறவை ஏற்படுத்துவதாக கருதி வந்தனர்.
- எனவே அவர்களது அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் சமய சடங்குகள், கொண்டாடும் விழாக்கள், செப வழிபாடுகள் யாவும் இஸ்ரயேலரின் சமயப்பற்றுக்கு எடுத்துக் காட்டுகளாய் அமைந்தன.
- இம்மத மரபுகள் பல்வேறு நாட்டினரின் மதக்கலாசாரங்களின் தாக்கத்திற்குட்பட்டிருப்பினும் ‘‘ஒரே இறைவன்’’ என்ற மதக்கோட்பாட்டிலிருந்து அவர்கள் ஒரு போதும் தவறவில்லை.
- இவர்களின் வழிபாடுகளில் முக்கியத்துவம் பெற்ற விடயம் பலி செலுத்துவதாகும்.
- அத்துடன் செபமும், நோன்பு முறைகளும், சடங்கு சுத்திகரிப்பு, பொருத்தனை, நேர்ச்சைகள், காணிக்கைகள், ஓய்வுநாள் அனுசரிப்பு போன்ற மரபுகள் தனித்துவம் பெற்று விளங்கின.

## 1. பலிகள்

- யூதர்களின் வழிபாட்டில் முதலிடம் பெறுவது பலி செலுத்துவதாகும்.
- இவை எரிபலி, நல்லுறவுப் பலி, பழிநீக்கும் பலி, (பாவக் கழுவாய்ப்பலி குற்றப்பழி நீக்கும் பலி) தூபப்பலி, காணிக்கைப்பலி போன்றனவாகும்.

- இப்பலிகள் எருசலேம் ஆலயத்தில் நாளாந்தம் நிறைவேற்றப்பட்டன.

### அ- எரி பலி

இதற்கு மேலே எழும்புதல் என பொருள்படும் எரிபலி செலுத்தும் போது பலியிடும் பலிப்பொருள், பறவையோ விலங்கோ ஆண் இனமாக இருத்தல் வேண்டும்.

### ஆ- நல்லுறவுப் பலி

பலிப்பொருள் மூன்று பகுதி ஆக பிரிக்கப்பட்டு இறைவனுக்கும், குருவுக்கும், பலியிடுபவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். இதில் விலங்குகள் மட்டுமே பலியிடப்படும். அத்துடன் புளியாத அப்பமும் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும். (லேவி 3:6-17)

### இ- பழிநீக்கும்பலி

இப்பலிப் பொருள் நிறைவேற்றும் நபரின் தரத்திற்கேற்ப அமையும். இவை தவிர தானியம், இரசம், அகில்(தூபம்) போன்ற பொருட்களும் பலியாக்கப்பட்டன (லேவி4:1-35).

- இப் பலிகள் மூலம் மனிதர் புனிதம் அடைகின்றனர் என்றும் கடவுளுக்கு மனிதர் அளிக்கும் உடன்பாடு என்றும், மண்ணும் மக்களும் இறைவனுக்கு சொந்தம் என்றும், இறைவனுடன் மனிதர் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடு என்றும் கருதினர்.
- இயேசுவின் காலத்திலும் இப்பலி நிறைவேற்றும் சடங்குகள் இருந்து வந்தன. (மாற் 10:45 மத் 5:23)
- இயேசு தமது போதனையில் "தம்மிடம் அன்பு கொள்வது போல் அடுத்திருப்பவரிடம் அன்பு செலுத்துவது எல்லாப்பலிகளையும் விட மேலானது" என்கின்றார். (மாற் 12:34, ஓசே 6:6)

## 2. செபம்

- இஸ்ரயேலரின் சமய வழிபாட்டில் செபம் சிறப்பான இடம் பெற்றது. பலியிடுவதையும் அவர்கள் செபமாகவே கருதினர்.
- ஆண்டவருடன் உரையாட வேண்டிய நேரத்தில் உன் நகரிலுள்ள செபக்கூடம் சென்று செபம் செய். முடியவில்லை என்றால் படுக்கையில் இருந்தாவது உன் இதயத்தை திறந்து இறைவனுக்கு காட்டு என்று "குருக்கள்" போதித்தனர்.
- யூதர்களின் அன்றாட செபம் "ஷேமா" என்று அழைக்கப்பட்டது. "ஷேமா" என்பது இஸ்ரயேலே கர்த்தருக்கு செவிகொடு என்பது பொருள் ஆகும்.
- இது இரு பகுதிகளைக் கொண்டது. நாள்தோறும் மூன்று முறை செபித்து வந்தனர்.
- இவை தவிர 'ஹெமோயே எஸ்ரே' என்ற பதினெட்டு புகழுரைச் செபங்களையும் யூதர்கள் செபித்து வந்தனர்.
- இயேசுவின் காலத்தில் காலை, நண்பகல், மாலை வேளைகளில் செபம் செய்தனர்.
- செபம் செய்யும் போது "தெபிலின் " என்னும் மறைவாசகங்கள் அடங்கிய தோல் பேழையை அணிந்து "தாலித் " எனப்படும் சால்வையால் தம்மைப் போர்த்திக் கொண்டு கடவுளின் நகராம் எருசலேம் நகரை நோக்கி மண்டியிட்டு கைகளை உயர்த்தி உரத்த குரலில் செபிப்பர்.
- பொதுவாக யூதர்கள் கோயிலிலும், தொழுகைக் கூடங்களிலும் செபித்து வந்தனர்.

## 3. நோன்பு

- யூதர்களின் சமய மரபுகளில் நோன்பு இருத்தலும் சிறப்பான பண்பாகும்.
- பொதுவாக ஒவ்வொரு யூதனும் பாவப்பரிகார பலி விழாவின்போது உண்ணா நோன்பிருப்பர்.
- யூதர்களில் சிலர் தமது தேவைகள் நிறைவேற வேண்டுமென்று நேர்ச்சை செய்து உண்ணா நோன்பிருப்பர்.
- நோன்பிருக்கும் போது தலைக்கு எண்ணெய் தடவி, உடலில் சாம்பல் பூசி, கோணி(சாக்கு) அல்லது முரட்டு ஆடை உடுத்தி இருப்பர்.

- சிலர் வாரத்தில் ஒருநாள் உணவை ஒறுத்தும் நோன்பிருப்பர்.
- இயேசு நாற்பது நாட்கள் பாலைநிலத்தில் உண்ணா நோன்பிருந்தார் என்று நற்செய்தி நூல்களில் காண்கின்றோம்.
- இயேசு நோன்பு இருக்க வேண்டிய முறைப்பற்றி மத்தேயு (6:16-18) குறிப்பிடுகின்றார்.

## 4. ஈகை

- யூதர்களின் சமயமரபுகளில் ஈகை அளித்தலும் (தருமம்) சிறப்பான பண்பாகும்.
- செல்வந்தர்கள் தமது வருமானத்தில் சிறிய அளவை தருமம் கொடுத்தனர்.
- தாம் தருமம் செய்வதை இட்டு பெருமை பாராட்டி வந்தனர். அத்துடன் தாம் தருமம் கொடுப்பதை மற்றவர்கள் காண வேண்டுமென்று எண்ணிச் செய்தனர்.
- ஏழைகளும் தமக்கு கிடைக்கும் வருமானத்தில் இருந்தும் தருமம் கொடுத்தனர்.
- இயேசு ''உன் வலது கை செய்வதை இடது கை அறியாதிருக்கட்டும்'' என்று தருமம் கொடுப்பது தொடர்பான உட்பொருளை முன்வைக்கின்றார் (மத்6:2-4).

### 3.4.1.4. சடங்கு சுத்திகரிப்பும் பொருத்தனைகளும்

- யூதா்களின் சடங்கு சுத்திகரிப்பு நிகழ்வுகள் பிறப்பு, இறப்பு, மற்றும் நோய்கள் ஏற்படும்போது அதற்கு பரிகாரமாக நிகழ்த்தப்பட்டன.
- ஒரு யூதன் பிறந்த எட்டாம் நாள் அல்லது 40ம் நாள் விருத்தசேதன சடங்கை நிறைவேற்றுவதற்குரிய சட்டம் அமுலாக்கத்தில் இருந்தது.
- இதற்கென பெற்றோர் இரண்டு காட்டுப்புறாக்கள், அல்லது இருமாடப்புறாக்களை கோயிலுக்கு காணிக்கை செலுத்துவர்.
- ஒருவர் மரணித்தால் இறந்தோரின் உடலைக் கழுவி பரிமள தைலத்தால் பூசி, வெள்ளை நிற பரிவட்டத்தால் சுற்றி புதைப்பர். (மாற்கு 16:1,மத் 27:59)
- ஈமச் சடங்கில் பங்கெடுத்த அனைவரும் தீட்டுப்படாமல் இருக்க மூன்று அல்லது ஏழாம் நாளில் குளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.
- இறந்தவரை இழந்து வாடுவோருக்கு, உறவினர்கள், நண்பர்கள் உணவு சமைத்துக் கொடுத்து தேற்றுவர்.
- ஒருவர் தொற்றுநோயினால் பீடிக்கப்பட்டிருந்தால் அவர்கள் குருக்களால் சமூகத்தில் நின்று நீக்கப்பட்டு புறம்பாக்கப்படுவர்.
- குணமானபின் மீண்டும் தலைமைக்குருக்களிடம் தம்மைக் காட்டி நலம் அடைந்தமைக்கான அத்தாட்சி பத்திரத்துடன் சமூகத்திற்குள் வருவர்.

### ஓய்வு நாள் அனுசரிப்பு

- யூதர்களின் சமயமரபுகளில் ஓய்வுநாள் அனுசரிப்பு முக்கியமானதாகும்.
- இந் நாளை ''சபாத்'' என்று கூறுவர். சபாத் என்ற எபிரேயச் சொல்லுக்கு ஓய்வு, நிறுத்துவது, தவிர்ப்பது, முடிப்பது என்று பொருள் உண்டு.
- ஓய்வுநாளை உடன்படிக்கையின் சின்னம் என யூதர்கள் ஆழமாக நம்பியதால் அதனை மிக கவனமாகக் கடைப்பிடித்தனர்.
- ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் வானத்தில் மூன்று விண்மீன்கள் தோன்றியதும் இரவு ஆரம்பம் ஆகின்றது என்ற போதனையின் படி தொழுகைக்கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஓய்வுநாள் எக்காளம் ஒலிக்கப்படும். இவ் ஒலியுடன் ஓய்வு நாள் ஆரம்பிக்கப்படும்.

- அன்றைய நாளில் சமையல் உட்பட முப்பத்தொன்பது வகையான வேலைகள் செய்வது தடை செய்யப்பட்டிருந்தன.
- வீடுகளில் மக்கள் விளக்கேற்றி வைத்து அமைதியாக இறைவேண்டுதல் செய்வர்.
- இயேசு ஓய்வுநாளில் மனிதாபிமானப் பணிகளைச் செய்து ‘‘சபாத்’’தை விட பிறரன்பு உயர்ந்தது என காட்டினார்.

### 3.4.1.5. விழாக்கள்

- யூதர்களின் சமய வழிபாடுகளில் திருவிழாக்கள் முக்கிய இடத்தை எடுத்தன.
- அவர்கள் பல திருவிழாக்களைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.
- இத்தகைய திருவிழாக்களை கொண்டாடுவதன் மூலம் இறைவனுக்கும் தமக்கும் உள்ள உறவை உறுதிப்படுத்திக் கொண்டனர்.
- இத்திருவிழாக்களை ஒட்டியே திருப்பயணங்களும் மேற்கொள்ளப்பட்டன.
- இவ்விழாக்களில் எருசலேம் நகரைத் தூய்மைப்படுத்தி அழகுற அலங்கரிப்பர்.
- பல்வேறு பகுதிகளிலும் இருந்து இவ்விழாவிற்கு வருகை தரும் பயணிகள், பயணக்களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக திருப்பாடல்களைப்பாடியும், இசைக்கருவிகளை மீட்டியும் ,இறைவனைப் புகழ்ந்து கொண்டு எருசலேமை நோக்கி வருவர். இத்தகைய விழாக்களின் விபரங்களை அறிந்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**யூதர்களின் முக்கிய விழாக்கள்**

1. பாஸ்காத்திருவிழா
2. கூடாரத் திருவிழா
3. புளியாத அப்பத் திருவிழா
4. பெந்தக்கோஸ்தே திருவிழா
5. பாவப்பரிகாரத் திருவிழா
6. ஆலய அர்ப்பணத் திருவிழா

### 1. பாஸ்காத்திருவிழா:-

- யூதர்களின் திருவிழாக்களில் பாஸ்காத்திருவிழாவே முதன்மையும் முக்கியத்துவமும் பெற்றதாக அமைந்தது.
- இது கடத்தல் விழா என்றும் புளியாத அப்ப விழா என்றும் அழைக்கப்பட்டது.
- இவ்விழா இஸ்ரேயலரின் விடுதலைப் பயணத்திற்கு முன்னரே வழக்கத்தில் இருந்தாலும் விடுதலைப்பயண நிகழ்வுக்கு பின்னர் தனித்துவமும் முக்கியத்துவமும் வாய்ந்ததாகவும் அமைந்தது.
- யூதர்கள் 450 வருட எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து விடுதலைப் பெற்று வெளியேறிய நிகழ்வை நினைவு கூரும் நாளாகவும், தமக்கும் தமது வழிமரபினருக்கும் இறைவனின் பராமரிப்பை உணர்த்தக்கூடிய நாளாகவும் கருதி இதனை கொண்டாடி வந்தனர்.
- யூதர்களின் முதல்மாதமான நிசான் மாதத்தின் 14ம் நாளில்(பங்குனி-சித்திரை) பாஸ்கா உணவு உண்ணும் நிகழ்வுடன் இவ்விழா ஆரம்பமாகும்.
- இது எருசலேம் நகர எல்லைக்குள்ளேயே கொண்டாடப்படவேண்டும் என்ற நியதியும் இருந்தது.

- இயேசுவும் தமது சீடர்களுடன் இத்திருவிழாவைக் கொண்டாடியுள்ளார் என்பதை நற்செய்தி நூல்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (லூாக். 2:41-4, லூக். 19:28-29, மத். 2:11-11, மத். 26:6-13, மாற். 12:1-12, மாற். 14:3-9, யோவா 2: 12-19, 23-24)
- இந்த விழாவானது கிறிஸ்துவின் பாடுகள், மரணம்,உயிர்ப்பின் பின்னர் கிறிஸ்தவர்களால் மனுக்குலம் விடுதலைப்பெற்று புத்துயிர் பெற்றநாளாக கொண்டாடப்படுகின்றது.

## 2. பெந்தக்கோஸ்தே திருவிழா:-

- யூதர்கள் கொண்டாடும் திருவிழாக்களுள் 2ம் நிலையில் சிறப்பு பெறுவது பெந்தக்கோஸ்து திருவிழா ஆகும்.
- "இது வாரங்களின் விழா","50ம் நாள் விழா", "முதற்கனி விழா" என்றும் அழைக்கப்படும்.
- பாஸ்கா விழாவின் பின் ஏழு வாரங்கள் கழிந்து மறுநாள் (50 நாள்) இது கொண்டாடப்பட்டது.
- யூதர்கள் விளைநிலங்களின் பயனையும், தமது மந்தைகளின் தலையீற்றையும் காணிக்கையாக்கி, பலிசெலுத்தும் நன்றி விழாவாக இவ்விழா அமைந்தது.
- விடுதலைப் பயணத்தின் பின்னர் சீனாய் உடன்படிக்கையின் நினைவாகவும் இவ்விழா அமைந்தது.
- உலெகெங்கும் சிதறி வாழ்ந்த யூதர்கள் இவ்விழாவிற்கே எருசலேமுக்கு யாத்திரை வருவர்.
- இயேசுவின் உயிர்ப்பின் பின்னர் திருத்தூதர்கள் தூயஆவியைப் பெற்றுக் கொண்ட நிகழ்வு இவ்விழாவின் போது இடம் பெற்றது.
- இன்று கிறிஸ்தவர்கள் இதனை தூயஆவியின் திருவிழாவாகவும் திருச்சபையின் பிறந்தநாளாகவும் கொண்டாடுகின்றனர்.

## 3. கூடாரத் திருவிழா:-

- யூதர்களின் விழாக்களில் மிகப் பழமையான விழா இதுவேயாகும்.
- எபிரேய மொழியில் இது "சுக்கோத்" என்று அழைக்கப்படுகின்றது. இதன் பொருள் கூடாரம் குடிசை கொட்டில் என்பதாகும்.
- ஆரம்பத்தில் தமது மந்தைகளை மேய்ச்சல் நிலங்களை நோக்கி நடாத்திச் சென்ற போது அங்கு கூடாரம் அமைத்து தங்கி இருந்ததை நினைவுகூர்ந்தும், பின்னர் தமது வயல் நிலங்களில் அறுவடைக்காக கூடாரம் அமைத்து தங்கி இருந்ததையும் நினைவுகூர்ந்தும் இவ்விழா கொண்டாடப்பட்டது.
- விடுதலைப் பயணத்தின் பின்னர் "சீன்" பாலைநிலத்தில் தாம் கூடாரம் அமைத்து தங்கி இருந்தமையையும், சீனாய் உடனபடிக்கையையும் நினைவு கூர்ந்து இதனை "யாவேயின் விழா" என்று சிறப்பித்து மகிழ்வுடன் கொண்டாடி வந்தனர்.
- இது "திஸ்ரி" (புரட்டாதி- ஐப்பசி) மாதம் 15ம் நாளின் பின் எட்டு நாட்கள் தொடர்ச்சியாக கொண்டாடப்படும்.
- செழிப்பான ஒலிவக்கிளைகளையும் பேரீச்சை குருத்துக்களையும் ஏந்திய வண்ணம் ஆலயத்தை ஏழு முறை சுற்றி வந்து கூடாரங்களில் தங்கி இருப்பது சிறப்பாகும்.

## 4. புளியாத அப்பத் திருவிழா

- இத் திருவிழா எபிரேய மொழியில் 'மசொத்' என்று அழைக்கப்படுகின்றது. இதன் பொருள் 'புளியாத' என்பதாகும்.
- இவ்விழா அறுவடையுடன் தொடர்புபட்டதாகும்.

- பாஸ்காத்திருவிழாவின் பின்னர் வரும் ஏழு நாட்களின் முடிவில் இவ்விழா கொண்டாடப்பட்டது.
- தமது விளைநிலங்களில் முதல் ஏழு நாட்களில் அறுவடை செய்த கோதுமை வாற்கோதுமை மணிகளை அரைத்து மாவெடுத்து புளிக்க வைக்காமல் உரொட்டி செய்து அதனை காணிக்கைபலியாக்குவதுடன் தாமும் உண்பர்.
- அத்துடன் ஆடு மாடுகளின் தலையீற்றையும் கடவுளுக்கு காணிக்கையாக்குவர்(வி.ப. 34:18-20 லேவி. 23: 5-8).
- பாஸ்கா விழாவும் புளியாத அப்பத்திருவிழாவும் நிசான் மாதத்திலேயே கொண்டாடப்பட்டதால் இவை இரண்டும் பின்னர் ஒருமித்து கொண்டாடப்பட்டன.

### 5. பாவக்கழுவாய்ப் பலி விழா

- இது எபிரேயத்தில் "யோம் கிப்பூர்" என்று அழைக்கப்படுகின்றது.
- யூதர்களின் ஏழாம் மாதமான திஸ்ரி (புரட்டாதி-ஐப்பசி) மாதத்தின் பத்தாம் நாளில் அனுசரிக்கப்பட்டது.
- இவ்விழா யூதர்களுக்கு முக்கிய நாளாக இருந்தது.
- அன்றைய நாளில் குருக்களும் மக்களும் ஓய்வு நாள் அனுசரிப்பு முறைகளை அனுசரித்து தமது பாவங்களுக்கு பரிகாரப்பலிகளை நிறைவேற்ற வேண்டும் என்பது நியதியாகும்.
- அன்றைய நாளில் உண்ணா நோன்பிருத்தல் முக்கியமானதாகும்.
- வருடத்தில் ஒருமுறை நடைபெறும் இவ்விழாவின் போது மட்டுமே தலைமைக்குரு ஆலயத்தின் அதிதூயகத்திற்குள் சென்று அங்குள்ள கல்மேடையில்(இரக்கத்தின் அரியணை) இரத்தம் பூசி பரிகாரப்பலி நிறைவேற்றுவார். மீதி இரத்தம் மக்கள் மீது செலுத்தப்படும். (லேவி. 16:1-37).
- மக்களின் பாவங்களுக்கு பலிப்பொருளாகும் ஆட்டில் ஒன்று பாலைநிலத்திற்கு விரட்டி விடப்படும். அது "போக்கு ஆடு" எனப்படும்.

### 6. ஆலய அர்ப்பண விழா

- எபிரேய மொழியில் இது "ஹனுக்கா" என்று அழைக்கப்படுகின்றது. இதன் பொருள் புதுப்பித்தல், தொடங்குதல் என்பதாகும்.
- கி.மு.175 இல் அந்தியோக்கு எபிப்பானுஸ் என்னும் கிரேக்க மன்னன் எருசலேம் ஆலயத்தையும் பலிப்பீடத்தையும் தீட்டுப்படுத்தியதால் எருசலேம் ஆலயத்தின் தூய்மை இழந்ததாகக் கருதப்பட்டது.
- இதனை தூய்மைப்படுத்த யூதா மக்கபேயு மேற்கொண்ட முயற்சி கி.மு.164இல் முழுமை பெற்று கிஸ்லு (டிசம்பர் 25) மாதத்தில் மீண்டும் ஆலயம் அர்ப்பணம் செய்யப்பட்டு பலிகளும் விழாக்களும் நிறைவேற்றப்பட்டன.
- இதனை நினைவுக் கூரும் நாளாகவே இவ்விழா கொண்டாடப்பட்டது.
- தொடர்ச்சியாக எட்டு நாட்கள் வரை இவ்விழா சிறப்பாக ஆடல்பாடல்களுடன் ஒவ்வொரு நாளுக்கும் ஒன்று, இரண்டு என ஏழு விளக்குகள் எழாம் நாளில் ஏற்றி வைக்கப்பட்டு கொண்டாடப்படும்.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடுகள்**

01 இயேசுவின் காலத்தில் யூத சமுதாயத்தில் நிலவிய சமூக மரபுகளை அறிந்து விபரிப்பார்.

02 இயேசுவின் காலத்தில் யூதர்களின் சமய மரபுகளையும் சடங்கு முறைகளையும் ஒப்படையாக முன்வைப்பார்.

03 யூதர்கள் கொண்டாடிய சமய விழாக்களின் தன்மைகளை அறிந்து தாமும் கடைப்பிடிப்பார்.

**உசாத்துணை நூல்கள்**

01 பீட்டர் அபீர்,அலோசியஸ் சேவியர்,*விவிலியம் ஓர் அறிமுகம்*, அருள்வாக்கு மன்றம், திருச்சி 2005

02 ஞானமுத்து பிலேந்திரன்,*கிறிஸ்தவமும் நாகரிகங்களும்*, கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், நல்லாயன் நிலையம், திருநெல்வேலி யாழ்காணம் 2008

03 பிலிப்யேசுதாசன், *புளிப்புமாவு,*அமலஉதயம், உப்புவெளி, திருமலை 2010

.

**தேர்ச்சி: 4.0** : கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படை கிறிஸ்துவே என்பதை ஏற்று, தம் வாழ்வை அமைத்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.1:** இயேசுவின் இறையாட்சி பற்றிய படிப்பினைகளைத் தமதாக்கிக் கொள்வார்.

**பாடவேளைகள்** : 36

**கற்றல் பேறுகள்** :

- இயேசுவின் இறையாட்சியை விளக்கும் மலைப்பொழிவு, உவமைகள், புதுமைகள், பற்றிய விடயங்களை கோவைப்படுத்துவார்.
- இயேசுவின் புதிய சமூகப்பார்வை அன்றைய சமூகத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது என்பதை ஏற்றுக்கொள்வர்.
- மலைப்பொழிவு, உவமைகள், புதுமைகள் பற்றிய ஆக்கமொன்றை முன்வைப்பார்.
- இறையாட்சிப் பண்புகளை வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்.
- இயேசுவின் அடிப்படை கோட்பாடு, ஒழுக்கநெறி பற்றிய படிப்பினைகளை வாழ்வாக்கிட ஒத்துழைப்பு நல்குவார்.

## விடய உள்ளடக்கம்:

### 4.1.1 நசரேத்தூர் இயேசு – அறிமுகம்

- இயேசுக்கிறிஸ்து நாசரேத்தூரில் ஒரு யூதகுடும்பத்தில் பிறந்தார். யூதக்காலச்சாரத்தில் வளர்ந்தார். யூத வரலாற்றை யூத பள்ளியில் கற்றறிந்தார். யூத சூழமைவில் சிந்திக்கவும், வாழவும் பயிற்றப்பட்டார்.
- இயேசு அறிவிலும், ஞானத்திலும் வளர்ந்தார் (லூக்.2:52). தாய் மரியாளிடம் காணப்பட்ட இறை நம்பிக்கையிலிருந்து (லூக் 1:47-55) கற்று, இறைவன் இரக்கமும், பரிவும், நேர்மையும், நீதியும் உள்ளவரென நம்பினார்.
- ‘‘நீதிமானும், நேர்மையாளருமான’’ யோசேப்பிடமிருந்து யூத சட்டங்களைக் கடந்து, நேர்மைக்கும், உண்மைக்கும் **முதலிடம் அளிக்க வேண்டும் என்ற விழுமிய மனப்பான்மையில் வளர்ந்தார்.** யூத சட்டங்களுக்குள் மூழ்கிடாமல், முழுமனித நலனைப் பேணிக்காத்திட வேண்டும் என்று திடம்கொண்டார்.
- இயேசு செபக்கூட வழிபாடுகளில் பங்குகொண்டார். திருப்பாக்களைச் செபிக்கக் கற்றார். யூதசமய மரபைப் பின்பற்றி, யாத்திரையாக எருசலேம் ஆலயத்துக்குச் சென்றார். பாரம்பரிய யூத பாஸ்கா விழாவைக் கொண்டாடினார்.
- திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றபோது அவர் பெற்ற அனுபவத்துடன், யூதக்கடவுள் ‘யாவே’யை அப்பா என அழைத்தார். இறைவனோடு தந்தை-மகன் உறவில் வளர்ந்தார். இறைநம்பிக்கையில் வேரூன்றி, இறைசமூகமாக வாழ்ந்து, நிறைவு காண்பதே இறைவன் விருப்பு என நம்பினார்.
- எனவே ‘‘இறையாட்சி நெருங்கிவிட்டது, மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்’’ (மாற். 1:14-15) என்று போதித்தார். **இறையாட்சியின் தன்மையை மற்றவர்கள் அறிந்திடும் வழிகளில் கற்பித்தார். இறையாட்சி வந்துவிட்டது என்பதை வெளிப்படுத்தும் செயற்பாடுகளைப் புரிந்தார்.** இறையாட்சிக்காகவே வாழ்ந்து, மரணித்து, உயிர்த்தார்.
- இயேசுவின் வாழ்வும், போதனைகளும், படிப்பினைகளும், செயல்பாடுகளும் ஒரு புதிய கலாச்சாரம் தோற்றுவதற்கு அடித்தளங்களாயிற்று.

### 4.1.2 இயேசுவின் புதிய சமூகப் பார்வை

- இறைவனே தம்மை ஒரு ஆயனைப்போல காப்பாற்றி, வழிநடத்தி, ஒரு இனமாக வாழவைத்தார் என்பது இஸ்ரயேல் மக்களின் நம்பிக்கையாகும். இந்நம்பிக்கையில் தோன்றிய நட்புறவு வாழ்க்கையே இறையாட்சியாகும்.
- அடிப்படையில் இறையாட்சி ஒரு உடன்படிக்கை வாழ்வாகும். யூதர்கள் மரபில் இறையாட்சி பற்றிய எதிர்பார்ப்பும் இருந்தது. ஆனால் அவர்கள் இறையாட்சி சமூகத்தவராக வாழ்வதில் குறைகள் இருந்தன; முரண்பாடுகள் காணப்பட்டன.
- அவர்களிடம் காணப்பட்ட சமூக வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும், திருச்சட்டத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்தால் ஏற்பட்ட விளைவுகளும் இறையாட்சிக்கு முரணாண அவர்களின் வாழ்க்கைக்கு சில எடுத்துக்காட்டுகளாகும்.
- இம்மரபு வழிநின்று இயேசு நம்பியது, போதித்தது, வாழ்ந்து காட்டியது, செயல்பட்டது, உயிரைக் கையளித்தது யாவும் இறையாட்சிக்காகவே. இறையாட்சி என்பது அவர் மண்ணுலகில் மூட்டவந்த தீயாகும் (லூக். 12:49).
- இறையாட்சியை இறைவனின் பண்புகளாகிய அன்பு, உண்மை, நீதியை வாழும் ஒரு புதிய மானிட சமூகமாக இயேசு கண்டார். இறைவனையே அரசராகப் கொண்ட ஒரு சமத்துவ, சகோதரத்துவ வாழ்க்கை முறையாக உருவாக்குவதற்கு இயேசு முயன்றார்.
- இறையாட்சி என்பது இயேசுவின் பார்வையில் ஓர் மாற்றுச் சமூகமாகும். தூய பவுல் ‘‘இறையாட்சி என்பது நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாகத் தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டது.’’ (உரோ. 14:17) என்கிறார்.
- ‘‘ஆண்டவருடைய ஆவி என்மேலே உள்ளது; ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார்’’ (லூக். 4:18) என அறிக்கையிட்ட இயேசு, இறையாட்சியை வாழ மக்களை மலைப் பொழிவு வழியாக அழைத்தார். இறையாட்சி என்றால் என்ன என்று உவமைகள் வழியாக அவர்களுக்கு கற்பித்தார். இறையாட்சி அவர்கள் நடுவே இப்பொழுதே நடக்கிறது என்பதை புதுமைகள் வழியாக வெளிப்படுத்தினார்.

- இயேசு மக்களுக்கு இறையரசைப் பறைசாற்றினார் என்பதை மூன்று சமநோக்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிடுகின்றனர் (மத். 4: 17; மாற். 1:15; லூக். 4:43). தூய மத்தேயு இயேசுவின் இறையரசு அறிவிப்பை ஐந்து அறிவுரைகளாக நமக்கு அளிக்கிறார். அவையாவன:
  1. மலைப்பொழிவு (அதி. 5-7)
  2. திருத்தூதுரை (அதி. 10)
  3. உவமைகள் (அதி. 13)
  4. திருச்சபையின் வாழ்வு (அதி. 18)
  5. நிறைவுகாலம் (அதி. 24-25).

- இவ்வைந்து அறிவுரைகளும் பழைய ஏற்பாட்டு ஐந்நூல்களுக்கு (தோரா) ஒப்பானவையாக அமைந்துள்ளன.

### 4.1.2.1 மலைப்பொழிவு (மத். 5-7)

- மத்தேயு நற்செய்தியில் காணப்படும் இயேசுவின் இறையரசுபற்றிய ஐந்து அறிவுரைகளில் மலைப்பொழிவு முதலாவதாகும். இயேசு தமது இறையாட்சிப் பணியை ஆரம்பித்தபோது அவர் தேர்ந்து கொண்டவர்களும், அவரிடம் வந்தவர்களும் கடைப்பிடித்து வாழ வேண்டிய பண்புகள், விழுமியங்கள், அறநெறிகள், அவர்களில் வளரவேண்டிய மனநிலை பற்றி அவர்களுக்கு கற்பித்தார். இப்படிப்பினைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில், வேறுபட்ட இடங்களில் இயேசுவால் வழங்கப்பட்டவையாகும். இவற்றின் தொகுப்பே மலைப்பொழிவு அறிவுரையாகும்.
- இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு, மலைமீது ஏறி அமர்ந்து தம் அறிவுரையை வழங்கியதாக மத்தேயு குறிப்பிடுகிறார். மோசே சீனாய் மலையில் ஏறி இஸ்ரயேலர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குச் சட்டத்தைக் கொடுத்தது போல, இயேசுவும் மலைமீது அமர்ந்து இறையாட்சியின் சமூகத்தை உருவாக்குவதற்கு மக்களுக்கு கற்பிக்கின்றார். அவை எரேமியா இறைவாக்கினர் கூறுவதுபோல, அவர்களின் இதயங்களில் எழுதப்பட்ட புதிய உடன்படிக்கை வாழ்க்கை முறையாகும் (எரே. 31:31). இயேசுவின் மலைப்பொழிவு அறிவுரையில் பின்வரும் விடயங்கள் காணப்படுகின்றன:

**(அ)** எட்டுப் பேறுகள் (5: 3-12)

**(ஆ)** சீடர்களின் இறையாட்சி வாழ்வின் தன்மை – உப்பு, ஒளி (5:13-16)

**(இ)** அடிப்படைக் கோட்பாடும், ஒழுக்க நெறியும் (5:17- 7:12)

**(ஈ)** இறைவனுடன் உறவு (6:1-18)

**(உ)** உண்மைச் செல்வமும் அதனைத் தேடலின் விளைவும் (6:19-34)

**(ஊ)** பொன்விதி (7:12).

#### (அ) எட்டுப் பேறுகள் (5: 3-12)

- இயேசு கற்பிக்கும் பேறுகள் ஒரு இறைவாக்கினரின் செய்தியாகும். பேறுகள் என்பதன் கிரேக்கச் சொல் மகாரியோ. பேறுபெற்றவர் என்றால் இறையருள் பெற்றவர், இறைவனின் கொடைகளைப் பெற்றவர், இறைவனுக்கு ஏற்புடையவரானவர், வாழ்வின் நிறைவை அடைதல் என்பது பொருளாகும்.
- இந்நிலையை அடைவதற்கு இறைவனின் பண்புகளை, நன்மைத்தனத்தை ஏழை எளியவர்கள், துன்புறுவோர், நோய்வாய்ப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டோர், ஆகியவர்களுடன் திறந்த மனத்துடன் வாழ வேண்டும் என்கிறார் இயேசு.
- ஏழையரின் உள்ளத்தோராய், கனிவுடையோராய். நீதியும், நேர்மைத் தன்மையும் கொண்டோராய், இரக்கமுடையவராய், தூய உள்ளத்தவராய், இருந்தால் இறையாட்சி வாழ்வுக்கு தகுதியுடையவராவோம் என்பது இயேசுவின் படிப்பினையாகும்.
- எட்டுப்பேறுகளில் முதல் மூன்றும் ஒருவர் இறைவனோடு கொண்டிருக்க வேண்டிய உறவின் மனநிலையை உணர்த்துகின்றன. 5ம், 6ம், 7ம் பேறுகள் ஒருவர் ஒருவரோடு கொண்டிருக்க வேண்டிய உறவின் தன்மையைக் குறிப்பிடுகின்றன. 4ம் 8ம் பேறுகள் இறைவனோடும், ஒருவர் ஒருவரோடும் கொண்டுள்ள உறவில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க, நீதி நெறிகளைத் தருகின்றன.

#### (ஆ) சீடர்களின் இறையாட்சி வாழ்வின் தன்மை –உப்பு, ஒளி (5:13-16)

இறையாட்சி வாழ்வின் தன்மையை உப்பு, ஒளி ஆகிய உருவகங்கள் வழியாகக் குறிப்பிடு கின்றார். உப்பும், ஒளியும் நாளாந்த வாழ்வில் முக்கியம் பெறுகின்றன. அவை பிறருடைய தேவைக்கு அவர்களுடன் உடனிருந்து பயன்படுகின்றன. இயேசுவின் சீடர்களும் மண்ணுலகில் உப்பாகவும், ஒளியாகவும் இருக்க வேண்டும் என அழைக்கிறார் இயேசு.

**(இ) அடிப்படைக் கோட்பாடும் ஒழுக்க நெறியும் (5:17- 7:12)**

- மத். 5:17-20 மலைப்பொழிவின் முக்கிய பகுதியாகும். இவை யூதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திருச்சட்டத்திற்கும், இயேசுவின் படிப்பினைகளுக்கும் உள்ள தொடர்பும், வேறுபாடுகள் பற்றி பேசுகின்றன.
- ''சட்டம் இதைக் கூறுகிறது, நானோ உங்களுக்கு கூறுகிறேன்'' என்ற இயேசுவின் வார்த்தைகள் அவற்றின் உண்மையான, உள்ளகப் பொருளை உணர்ந்து வாழ வேண்டும் என்ற படிப்பினையைத் தருகின்றன.
- திருச்சட்டத்தின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தும் இயேசு, பரிசேயரும், மறைநூலறிஞரும் அவற்றுக்குக் கொடுத்த விளக்கத்துக்கு மாறாக விளக்கம் அளித்தார். (5:21-48).
- இயேசு திருச்சட்டமும் நிறைவாழ்வும் பற்றி அளித்த விளக்கங்கள் எதிர் கூற்றுக்களாகும். அவை அயலவருடன் கொள்ளும் உறவில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளாகும். எடுத்துக்காட்டாக சினங்கொள்ளுதல், விபச்சாரம், ஆணையிடுதல், பழிவாங்குதல், பகைவரிடம் அன்பு ஆகியவை பற்றியதாகும்.

**1. சினங்கொள்ளுதல்**

''கொலை செய்யாதே; கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்'' (வி.ப. 20:13) என்று முற்காலத்தவர்களுக்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: சகோதரர், சகோதரிகளிடம் சினம் கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார்.'' இங்கு இயேசு சட்டத்தை மாற்றவில்லை. மாறாக, அதற்கு புதிய விளக்கம் அளிக்கின்றார். சினம் கொள்வது ஒருவரது மனநிலையாகும். அம்மனநிலை மற்றவருடன் கொண்டுள்ள உறவைப் பாதிக்கும். மற்றவர்பற்றி இல்லாதது பொல்லாதது சொல்லத் தூண்டும். மற்றவர் பெயரைக்கெடுக்கும். அது கொலையும் செய்யும். சினத்தால் செய்யப்படும் எல்லாமே கடவுளுக்கு ஏற்புடைய செயல்கள் அல்ல. ஆகவே முதலில் சினம் கொள்ளக் கூடாது என்கிறார் இயேசு.

**2. பழிவாங்குதல்**

''கண்ணுக்குக் கண்...(லே. 24:19). தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்கள் வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்''. மற்றவர் ஏற்படுத்திய சிறிய பாதிப்புக்காக அளவு மீறிப் பழிவாங்கும் வழக்கத்தை ஒழிக்க, இயேசு அளித்த மாற்று அறிவுரையாகும்.

**3. விபச்சாரம் செய்யாதே**

''விபச்சாரம் செய்யாதே… (விப.20:14). இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தில் ஏற்கனவே அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று.'' ''மணவிலக்கு…(இசநூ. 24:1-2) எவரும் பரத்தமைக்காக அன்றி வேறு எந்தக் காரணத்திற்காகவும் விலக்கிவிடக்கூடாது.''

**4. மணவிலக்கு**

''மணவிலக்கு … (இசநூ 24:1-2) எவரும் பர்த்தமைக்காக அன்றி வேறு எந்தக் காரணத்திற்காகவும் விலக்கிவிடக்கூடாது''. இயேசு இதற்கு எதிர் கூற்றாக பரத்தமைக்காக அன்றி, வேறு எந்தக் காரணத்திற்காகவும் மனைவியை விலக்கிவிடக் கூடாது என்கிறார். மேலும், மனைவியை விலக்கி வைப்பவர் விபச்சாரத்துக்கு வழிசெய்கிறார் எனவும் எச்சரிக்கிறார். இயேசுவின் இப்படிப்பினையில் மண உறவுக்குப் புறம்பான பிற உறவு மணவாழ்க்கை ஒழுக்கத்துக்கு முரணானது என்கிறார். அத்துடன் மணவாழ்வின் ஒருமைத் தன்மையையும், பிரிவுபடாத நிலையையும் உயர்த்துகிறார். (மத். 5:31-32)

### 5. ஆணையிடாதீர்

“பொய்யாணை இடாதீர்…(லேவி. 19:12). ஆணையிடவே வேண்டாம்.” ஆணையிடும் போது எங்கள் கூற்றுக்கு கடவுளைச் சாட்சியாக அழைத்து, கடவுளையே அவமதிக்கின்றோம்; இறைமக்கள் நடுவே நம்பகத்தன்மையைப் பேணுவதில் தவறுகிறோம். “ஆம் என்றால் ஆம், இல்லை என்றால் இல்லை என்று சொல்லுங்கள் என்கிறார் இயேசு.

### 6. பகைவரிடம் அன்பு

“அடுத்தவரிடம் அன்பு…பகைவரிடம் வெறுப்பு…(லேவி. 19:18). பகைவரிடம் அன்பு கூருங்கள்…” யூத வரலாற்றில் அடுத்தவராக இஸ்ரயேலரையும், பகைவர்களாக இஸ்ரயேலர் அல்லாதவர்களையும் கருதி வாழ்ந்தார்கள். இவ்வெறுப்புக் கொள்ளும் மனநிலை இறைசமூக வாழ்வுக்கு ஏற்றதல்ல என்கிறார் இயேசு.

### (ஈ) இறைவனுடன் உறவு (6:1-18)

யூதசமயத்தில் இறைவேண்டல், தர்மம் செய்தல், நோன்பு இருத்தல் இம்மூன்று பக்தி முயற்சிகளும் ஒருவருடைய கடவுள் பற்றின் வெளிப்பாடாக இருந்தன. இவை அவர்களின் சமய வாழ்வில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. ஆனால் நடைமுறையில் தம்மை நீதிமான் எனப் பிறர் முன் காட்டிக் கொள்ளவும், தமக்கு விளம்பரம் கொடுக்கவும் இவற்றைச் செய்யும் பழக்கம் பரிசேயர்களிடமும், மறைநூல் அறிஞரிடமும் காணப்பட்டது. இவர்களின் இந்நோக்குக் கொண்ட செயலைக் கண்டிக்கும் இயேசு, “மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள்முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்கு கைமாறு கிடைக்காது” என்கிறார்.

### 1. தர்மம் செய்தல்

தர்மம் செய்யும்போது “உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்” என்று கூறி இயேசு வெளிவேடக்காரரும் சீடரும் தர்மம் செய்யும் முறையை ஒப்பிட்டு வேறுபடுத்திக் காட்டுகிறார். அதாவது ஒருவர் செய்யும் தர்மம் நெருங்கிய நண்பருக்கும் தெரியாதிருக்கட்டும் என்பது இயேசுவின் படிப்பினையாகும்.

### 2. இறை வேண்டுதல்

- யூத சமயத்தில் தினமும் மூன்று முறைசெய்யும் பொது மன்றாட்டு வேளைகள், அதனை ஒன்றுகூடி நிறைவேற்றும் முறை வழக்கில் இருந்தது. அவ்வாறு ஒன்றுகூடிச் செபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்தார் (மத். 18:19-20).
- ஆனால் தனித்துச் செபிக்கும் போது பிறர் தன்னைப் பார்க்க வேண்டும்; பக்திமானாகக் கருத வேண்டும் என்ற நோக்கம் கொண்ட செபித்தலைக் கண்டிக்கின்றார். “உங்கள் உள்ளறைக்குச் சென்று கதவை அடைத்துக்கொண்டு செபியுங்கள்” என்று இறைவாக்கினர் எசாயா கூறியதை நினைவுபடுத்துகிறார் (எசா. 26:20).
- “நீங்கள் இறைவனிடம் வேண்டும், பிற இனத்தவரைப்போல பிதற்ற வேண்டாம்…ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிவார்” என்று இறைவாக்கினர் எலியா கற்பித்தது போல இயேசு கூறுகிறார் (எசா. 65:24).
- தம் சீடர்கள் செபிக்க தன் செபவாழ்வாலும், படிப்பினையாலும் வழிகாட்டிய இயேசு அவர்கள் பின்பற்றக் கூடிய மாதிரிகைச் செபத்தை அவர்களுக்குக் கொடுத்தார் (மத்.6:9-13).

### 3. நோன்பு நோற்றல்

யூதசமயத்தில் நோன்பு இறைவன்பால் மனந்திரும்புவதன் அடையாளமாக கடைப்பிடிக்கப்பட்டது. யூதர்களது பாவப்பரிகார விழாவின்போது பொது நோன்பை நோற்றார்கள். எனினும் தனித்து நோன்பிருக்கும் பழக்கம் இருந்தது. இதில் காணப்பட்ட வெளிவேடத்தன்மைக்கு மாறாக, பிறர் அறியாதபடி, பிறர் கவனத்தை ஈர்க்காது நோன்பிருக்குமாறு கூறுகிறார். நோன்பிருத்தல் தம்மைத் தூய்மைப்படுத்தும், வெறுமையையும், இயலாமையையும் உணரச் செய்யும் தியாகச் செயலாகும். அதனை சரியான நோக்கத்துடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பது இயேசுவின் அறிவுரையாகும்.

### (உ) உண்மைச் செல்வமும் அதனைத் தேடலின் விளைவும் (6:19-34)

''ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையதையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துத் தரப்படும்'' (மத். 6:33). இயேசுவின் இவ்வறிவுரை இறையாட்சிக்குரிய வாழ்க்கையில் ஒருவரின் முக்கிய கவனம் எதுவாக இருக்க வேண்டும் எனக்கூறுகிறது. செல்வம் தேடுவது வாழ்க்கையில் முதன்மையானால் மிஞ்சுவது கவலையும், நம்பிக்கையின்மையுமாகும். இறை பராமரிப்பில் நம்பிக்கை கொள்வது இறையாட்சி வாழ்க்கைக்கு அடிப்படை என்கிறார்.

### (ஊ) பொன்விதி (7:12)

''பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் சட்டமும் கூறுவது இதுவே'' (5:17). மலைப்பொழிவின் சிகரமாகவும், முடிவுரையாகவும் இப்பொன்விதி அமைந்துள்ளது. ''திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிப்பதற்கல்ல, நிறைவேற்றவே வந்தேன்'' என்று தொடங்கி, ''இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே'' என முடிகிறது.

இப்பொன்விதி பழைய ஏற்பாட்டில் யூத ராபிகளின் மரபில் காணப்படுகின்றது. அது ''உனக்குப் பிடிக்காத எதையும் பிறருக்குச் செய்யாதே'' (தொபி.4:15) என்று சட்டத்தின் சுருக்கமாகக் காணப்படுகின்றது. குருவும், ஆசிரியருமான இயேசுவின் படிப்பினைகளில் இறைவனை அன்பு செய்வதுடன், அயலவருக்கு அன்பு காட்டுவது சட்டம் முழுவதினதும் சுருக்கமாகும் (மாற். 12:28-34; மத். 22:34-40). இதனையே மேற்கண்டவாறு பொன்விதியாக இயேசு தருகிறார்.

### 4.1.2.2 உவமைகள் -

- இயேசு இறையாட்சியை விவேகிகளுக்கும் ஞானிகளுக்கும் அல்ல, குறிப்பாக, அவரது சமூகத்தின் சின்னஞ் சிறியவர்களுக்கு அறிவித்தார். இறையாட்சியின் தன்மை, இயல்பு பற்றி அவர்களுக்கு கதைகள், உருவகங்கள், உவமைகள் வழியாகக் கற்பித்தார். ஒத்தமை நற்செய்திகளில் அவை நிறைந்து காணப்படுகின்றன.
- உவமைகள் அந்நாட்களில் மத்தியதரை நாடுகளில் வழக்கிலிருந்த செமத்திய இலக்கிய நடையாகும். கிரேக்க தத்துவ ஞானிகளும், இஸ்ரயேலின் இறைவாக்கினரும் இவ்விலக்கிய வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக, 2 சாமு. 12:1-4 ல் இவ்வடிவம் காணப்படுகிறது. இயேசுவின் காலத்து யூத ராபிகளும் அதைப் பயன்படுத்தியுள்ளனர்.
- கிரேக்கத்தில் 'பரபோல்' என்ற சொல் உவமையைக் குறிக்கின்றது. அதன் பொருள் ஒப்பிடுதலாகும். எபிரேயத்தில் 'மார்சல்' என்ற சொல் உண்டு. அது பழமொழி, நொடி, ஒப்புமை, உருவகம், உவமை எனப் பல பொருளில் பயன்படுத்தப்படுகின்றது.

- ஆனால் மக்களுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்வையோ, கற்பனை செய்த நிகழ்வையோ, சுற்றுச் சூழலிருந்து ஒரு இயற்கைக் காட்சியையோ உருவகம் செய்து, கேட்போருக்கு இலகுவாக ஒரு செய்தியைப் புரிந்துகொள்ளும் ஒரு இலக்கிய நடையே உவமையாகும். உவமைகள் கேட்போர் சுயமாகச் சிந்திந்து முடிவுகளைச் செய்ய தூண்டுதலளிக்கும் தன்மை கொண்டவையாகும்.
- அவை கேட்போரின் மனநிலை மாற்றத்துக்கு தூண்டுதளிக்கின்றன (லூக்.10:25-37; 15:11-32). இவை நீண்ட கதை வடிவத்தில் அமைந்துள்ளன. மத்தேயு அதி. 13ல் காணப்படும் விதைப்பவர் உவமை வயல்வெளி நிகழ்வை உருவகப்படுத்துகின்றது. இவை உணர்த்தும் செய்தி வெளிப்படையானதாகும்.
- கடுகு விதை, புளிப்பு மாவு, புதையல், முத்து, வலை உவமைகள் சிறிய உவமானங்களாகும். ஆயினும் அவை தரும் செய்தி மறைமுகமாயுள்ளது. அவை சிந்தித்து அறிய வேண்டிய ஆழமான உண்மைகளை உணர்த்துபவையாகும்.

#### 4.1.2.2.1 இறையாட்சியின் தன்மை (மத். 13:31-50)

இறையாட்சியின் தன்மையை பல உவமைகள் வழியாக இயேசு உணர்த்த முயன்றார்.

**(அ)** கடுகு விதை

**(ஆ)** புளிப்பு மாவு

**(இ)** புதையல்

**(ஈ)** முத்து

**(உ)** வலை

#### (அ) கடுகு விதை உவமை

- கடுகு விதை விதைகளுக்குள் மிகச்சிறியதாகும். ஆனாலும் அது வளரும் போது, மற்றைய செடிகளைவிடப் பெரிதாகும். அது பனிரெண்டு அடி உயரமுள்ள ஒரு செடியாகும். வயல்களில் வளர்ந்த இச்செடியின் கிளைகளில் பறவைகள் வந்து தங்கும் அளவுக்கு அது பெரிய மரமாகும். இவ்வியற்கை நிகழ்வை உவமானமாக்கி இறையாட்சியின் தன்மையை உணர்த்துகிறார் இயேசு.

- இயேசுவின் படிப்பினைகளையும் வல்ல செயல்களையும் கண்ட போது பெருந்திரனான மக்கள் இயேசுவைப் பின்பற்றுவார்கள் என்று சீடர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் காலப்போக்கில் இயேசுவுக்கு எதிர்ப்பு பலரிடமிருந்து தோன்றியது. பலர் அவரை விட்டுப் பிரிந்து சென்றார்கள். சீடர்களே இதனால் நம்பிக்கை இழந்தார்கள்.
- இக்கட்டத்தில் இயேசு இவ்வுவமை மூலம் இறையாட்சி மெல்ல வளரும் கடுகுச் செடியைப் போன்றது. ஆயினும் ஒரு பெரிய மரத்தை நாடிப் பல பறவைகள் வந்து தங்குவது போல, அதில் பலரும் பங்குகொள்வார்கள்; பயனடைவார்கள் என்று இயேசு தம் சீடருக்கு நம்பிக்கை அளிக்கிறார்.

#### (ஆ) புளிப்புமாவு உவமை

- இயேசுவின் செயல்களையும், அவருக்கு மக்களிடம் காணப்பட்ட மதிப்பையும் கண்டபோது இயேசுவே இஸ்ரயேலில் எதிர்பார்க்கப்பட்ட ஆட்சியை அமைப்பார் எனப் பலரும் நம்பினார்கள். ஆனால் இயேசு அவர்களுக்கு இறையாட்சியின் தன்மையை ஒரு வீட்டுப் பெண்ணின் சமயலறைச் செயலை ஒப்பிட்டு விளக்குகிறார். ஒரு பெண் மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்த புளிப்பு மாவு போன்ற தன்மை கொண்டது இறையாட்சி என்கிறார்.

**(இ) புதையல் உவமை**

- புதையல் தேடுவது யூத சமூகத்தில் இடம்பெற்ற சாதாரண நிகழ்வாகும். இஸ்ரயேல் அயல்நாட்டவருடன் பல தடைவைகள் போர் புரிந்துள்ளனர். போர் வேளைகளில் மக்கள் இடம்பெயர்ந்தபோது, தங்கள் உடமைகளை வயல்வெளிகளில் புதைத்துவிட்டுச் சென்றனர்.
- பின்னர் நாடு திரும்பிய அவர்கள் சந்ததியினர் அந்நிலங்களில் குடியிருந்து விவசாயம் செய்தபோது, எதிர்பாராத விதமாக அச்செல்வங்களைக் கண்டெடுத்தார்கள். புதையலைக் கண்டவர் உடனுக்குடன் செயல்பட்டு, தனக்குள்ளதெல்லாம் விற்று அதைத் தனதாக்கிக் கொண்டார்.
- யூத சமூகத்திலே காணப்பட்ட இப்பழக்கத்தை இயேசு உவமையாகப் பயன்படுத்தி, இறையாட்சியும் புதைக்கப்பட்ட செல்வம் போல அவர்கள் நடுவே இருக்கிறது; அதைக் கண்டடைவது அனைத்துக்கும் மேலானது என்கிறார். ஏனென்றால் இறையாட்சி விலைமதிப்பற்ற தன்மை கொண்டது.

**(ஈ) முத்து உவமை**

- முத்து ஒரு விலையுணர்ந்த பொருளாகும். முத்துக்களுள் மிக விலை உயர்ந்தவை உள்ளன. வணிகர் முத்துக்களுள் மிக விலை உயர்ந்த முத்தைத் தேடி அலைவார்கள். தாம் வைத்திருக்கும் முத்துக்கள் அனைத்துக்கும் மேலாக அதைத் தேடுவார்கள். அதை அடைவதற்காக தம்மிடம் இருக்கும் பெறுமதி குறைவானவற்றையும் இழக்கத் தயாராக இருப்பார்கள்.
- யூத சந்தையில் நிகழ்வதை இயேசு உவமானமாக்கி, அவர்கள் நடுவேயிருக்கும் இறையாட்சியைத் தேடி அடைய வேண்டும் என்கிறார். அதனைத் தேடிக் கண்டடைவதற்கு தியாகங்களும், இழப்புக்களும், அர்ப்பணிப்பும் வேண்டும் என்கிறார்.

**(உ) வலை உவமை**

- இயேசுவின் சீடர்களில் பெரும்பாலானவர்கள் மீனவர்களாவர். அவர்களுக்கு கரைவலையில் மீன் பிடிப்பதை ஒப்புவமையாக்கி இறையரசின் தன்மையை விளக்குகிறார் இயேசு. கடலில் வீசப்பட்ட வலை எல்லாவகையான மீன்களையும், பிறவற்றையும் வாரிக்கொள்கிறது. வலை நிறைந்ததும் அதை இழுத்துக் கொண்டு போய்க் கரையில் உட்கார்ந்து நல்லவற்றைச் சேர்த்துவைப்பர். கெட்டவற்றை வெளியே எறிவர்.
- வலையில் பிடிபட்ட மீன்கள் போல, தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேலர்கள் மட்டுமல்ல, உலகில் வாழும் அனைவரும் இறையாட்சிக்குள் இருக்கிறார்கள். ஏனெனில், ''அவர் (இறைவன்) நல்லோர் மேலும், தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும், நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்'' (மத் 5:45).
- இறைவனின் இப்பாரபட்சமற்ற அன்பும், நன்மைத்தனமும் அனைவருக்கும் உரியதாகும். ஆனால் அதை உணர்ந்து வாழ்பவர்கள் யார்? அதைத் தீர்மானிப்பதற்கும், தீர்ப்பிடுவதற்கும் நாம் யார்? அதனை இறைவனே அருள்வார். அதுவரை இறையாட்சியெனும் இறைவனின் பரிவு, நீதி, அமைதி என்பன மக்கள் மத்தியில் காணப்படும் என்கிறார் இயேசு.

### 4.1.2.3 இறையாட்சியின் அடையாளமான புதுமைகள் - அறிமுகம்

- அன்றைய சமுதாயத்தில் இயேசு பல்வேறு பிணிகளால் வருந்தியவர்களைச் சந்தித்தார் (மாற். 1: 34). அவை பாவத்தின் விளைவும், கடவுளின் தண்டனையும் என்று குற்றப்பழி சுமத்தப்பட்டிருந்தது. இக்குற்றப்பழி உணர்வுக்கு ஆளானவர்கள் மனநோயாளராக இருந்தார்கள். இவர்களில் சிலர் பேய்பிடித்தவர்கள் எனக்கருதப்பட்டு பலவகைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

- நோயாளர்களுக்கு நலமளிப்பதும், பேயோட்டுவதும் இயேசுவின் முக்கிய பணியாகும். பாவமே எல்லா நோய்களுக்கும் காரணம் எனும் கருத்தை இயேசு மாற்றுகிறார் (யோவா.9:3); நோயாளர்கள் தீட்டுப்பட்டவர்கள் எனும் எண்ணத்தை மாற்றும் வகையில் அவர்களைத் தொடுகிறார் (மாற். 1:31; 6:56); அவர்களை நலமாக்குகிறார் (மத். 4:24; மாற். 3:10). இயேசு இவற்றை அவர்கள் மீது பரிவிரக்கம் கொண்டு செய்கிறார் (மாற்.1: 41).
- இயேசுவின் காலத்தில் மதத்தலைவர்களால் புதுமைகள் செய்யப்பட்டன. இயேசு புதுமைகள் செய்த போது அவர் பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலின் அதிகாரத்தைக் கொண்டு புதுமைகள் செய்வதாக குற்றம் சுமத்தப்பட்டார்.
- ஆனால் இயேசு இறைவனின் ஆற்றலில் இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது என்பதன் அடையாளமாகவே அவற்றைச் செய்தார். இறைவனின் ஆற்றலை வெளிப்படுத்தவும், இறைவனைப் புகழவுமே இயேசு புதுமைகளைச் செய்தார். புதுமைகளைச் செய்யும் முன் இயேசு செபித்தார்.
- வானத்திலிருந்து சான்று கேட்டவர்களுக்கு அது தரப்படமாட்டாது என இயேசு உறுதியாக மறுத்தார் (மாற். 8:11-13; 15:31-32). மாறாக, அவரது பணியின் மூலம் இங்கு இறையாட்சி மலர்ந்திருக்கிறது என்பதற்கு அவை அடையாளங்களாகும். "நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா!" (லூக். 11:20).
- புதுமைகள் அவர் அறிவித்த இறையாட்சி செய்தியின் நம்பகத்தன்மைக்கு அடையாளங்களாகும். இயேசு புதுமைகள் வழியாக இறைவனின் பரிவன்பை வெளிப்படுத்தினார். இயேசுவின் புதுமைகள் இறைநம்பிக்கையின் அடிப்படையில் செய்யப்பட்டன. அதாவது இறைநம்பிக்கை நலமாவதற்கு அவசியம் என்பதை இயேசு வலியுறுத்துகிறார் (மாற்..5:36; 10:52). விசுவாசம் அற்றவர்களிடம் இயேசு புதுமைகள் செய்யவில்லை (மாற்.6:5; மத்.13:38).
- இறைநம்பிக்கை என்பது இறைவன் நம்முடன் இருக்கிறார்; அவரின் அன்பும், அருளாற்றலும் நம்முடன் இருந்து வாழ்வு தருகிறது; நம் நலனும் நிறைவுமே அவரது திட்டம் என்ற உறுதிப்பாடாகும். இந்நம்பிக்கையை இயேசு தீய ஆவியால் பீடிக்கப்பட்டவர்கள், நோயாளர்கள், ஆகியோரின் மனதில் தூண்டியெழுப்பினார். அதனால் அவர்கள் நலம் பெறுகின்றனர். இவ்வாறு மனிதரின் உடல், உள்ள முழு நலம் இறையாட்சியின் முக்கிய ஒரு பரிமாணம் என இயேசு காட்டுகிறார்.

- புதுமைகள்தான் ஏழை எளிய மக்களை அதிகமாக ஈர்த்திருக்க வேண்டும். நீண்ட போதனைகளைவிட இயேசு புரிந்த வியத்தகு செயல்கள் சாதாரண மக்களின் இதயத்தை ஆழமாகத் தொட்டிருக்க வேண்டும். நற்செய்தியை மக்கள் எளிதாக ஏற்றுக்கொள்வதற்குப் புதுமைகள்தான் பொருத்தமாக அமைந்தன.

இயேசுவின் புதுமைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை

**(அ)** தீய ஆவிகளை விரட்டுதல் (மாற். 5:1-20)

**(ஆ)** இயற்கை தொடர்பானவை (மாற். 6:30-44)

**(இ)** குணமளித்தல் (லூக். 7: 1-10)

**(ஈ)** இறந்தவர்களை உயிர்ப்பித்தல் (கைம்பெண்ணின் மகன் லூக். 7:11-17) என்பனவாகும்.

**(அ) தீய ஆவிகளை விரட்டுதல் (மாற். 5:1-20)**

- கெரசேனர் பகுதியில் பேய்பிடித்த ஒருவரை இயேசு நலமாக்குகிறார். இயேசு அவரது உளப்பிணியைக் குணப்படுத்துகிறார். அவர் பல உடல் வாதைக்கும் உள்ளாக்கப் பட்டிருந்தார். இறுதிநாளில் பேய்களின் வல்லமை வீழ்ச்சியடையும் என்பது யூதர்களின் நம்பிக்கையாகும்.
- ஆயினும் இயேசுவின் வருகையுடன் இறையாட்சி வந்து விட்டது; இயேசுவுக்கு தீய ஆவிகளும் கட்டுப்படுகின்றன; தீய ஆவிகளுக்கு இடமில்லை என்பது உறுதி செய்யப்படுகிறது. தீயஆவி பிடித்தவர் இயேசுவிடம் பணிந்து சொல்வதன் மூலம் இது வெளிப்படுகிறது.
- குணம் பெற்றவர் தாமும் இயேசுவுடன் கூட இருக்கவேண்டும் என இயேசுவிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் இயேசு அவரை ''உமது வீட்டுக்குப் போய் ஆண்டவர் உம்மீது இரக்கம் கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்க அறிவியும்'' என்றார். அவரும் சென்று இயேசு செய்ததையெல்லாம் தம் ஊரவரிடம் அறிவித்தார்.
- இயேசுவின் இச்செயலால் குணமடைந்தவர் மீண்டும் தன் குடும்பத்தவருடனும் ஊரவருடனும் ஒன்று சேர்கின்றார். மேலும் அவர் இறையாட்சியை அறிவிக்கும் சீடத்துவ குடும்பத்தில், இயேசுவின் மாற்றுச் சமதாயத்தில் உறுப்பினராகின்றார்.

**(ஆ) இயற்கை தொடர்பானவை (மாற். 6:30-44)**

- இயற்கை சார்ந்த புதுமைகள் இயேசுவின் உயிர்ப்பில் கொண்ட விசுவசத்தின் விளைவாக தொடக்க கிறிஸ்தவ சமூகத்தில் தோற்றம் பெற்றவையாகும். பிறப்பும் இறப்பும், கடலில் அமைதியும் கொந்தளிப்பும், போன்றவை இயற்கையான செயல்பாடுகளாகும்.
- ஆனால் இயற்கைச் செயல்பாடுகளும் கடவுளின் ஆணைக்கு உட்பட்டே நிகழ்கின்றன. உயிர்த்த இயேசு இறைதன்மை கொண்டவர், அவர் கடவுள் வடிவில் விளங்கினார் என்று விசுவசித்த தொடக்க கிறிஸ்தவ சமூகத்தவர்கள் அவருக்கு இயற்கை தொடர்பானவையும் கீழ்ப்படிகின்றன என்று கூறுகின்றார்கள். அவரது இறைதன்மையை அறிக்கையிடுகிறார்கள்.
- இறந்தோரை உயிர்பெறச் செய்தல், காற்றையும், கடலையும் அடக்குதல், தண்ணீரை இரசமாக்குதல், உணவு பலுகச் செய்தல் போன்றவை இயற்கை தொடர்பான புதுமைகளாகும். இவை இயேசுவின் இறைதன்மையை உணர்த்துபவையாகும்.
- இவற்றுள் இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்த நிகழ்வும் ஒன்றாகும். இந்நிகழ்வை அனைத்து நற்செய்திகளிலும் காணலாம். இதன் வழியாக இறையாட்சி அனைத்து மக்களையும் வரவேற்கும் பராமரிக்கும் தன்மை கொண்டது என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

**ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்தல் (மாற். 6:30-44)**

- இயேசு பாலைநிலத்திலுள்ள ஒரு தனியான இடத்தில் தம் சீடர்களுடன் இருந்த வேளையில், அவரைத் தேடி பெருந்திரளான மக்கள் வந்திருந்தார்கள். அவர்களை இயேசு ஆயனில்லா ஆடுகள் போல இருக்கக் கண்டு அவர்கள் மீது பரிவு கொண்டார்.
- மக்கள் எப்படி ஆயனில்லா நிலையை அடைந்தார்கள் என்பதை எசேக்கியல் இறைவாக்கினர் கூறுகிறார் (அதி. 34). இறைவனே மக்களுக்கு ஆயனாக இருந்து அவர்களை வழிநடத்துவார்; வாழ்வளிப்பார் என்பது எசேக்கியேல் இறைவாக்கினரின் கூற்றாகும். பாலைவனத்தில் இயேசு இம்மக்களுடன் இருப்பது இறைவனின் வழிநடத்தலை உணர்த்துகிறது.
- இயேசு அவர்களுக்கு ஐந்து மீன்களையும் இரண்டு அப்பங்களையும் பலுகச்செய்து உணவளிக்கிறார். அனைவரும் வயிராற உண்ட பின்பு மிகுதியானவற்றை பனிரெண்டு கூடைகளில் சேர்த்தார்கள். இந்நிகழ்வு இறையாட்சி நிறைவானது என்பதைக் காட்டுகிறது. இறையாட்சி வாழ்வு என்பது மெசியாவின் தலைமையில் இறைவன் அளிக்கும் ஒரு விருந்தை ஒத்ததாகும் என்பது யூதசமய நம்பிக்கையாகும்.

**(இ) குணமளித்தல் (லூக். 7: 1-10)**

- இயேசு நோயுற்றிருந்த யூதரல்லாதவர்களையும் குணமாக்கியுள்ளார். இயேசு குணமாக்கிய பத்து தொழுநோயாளர்களுள் ஒருவர் சமாரியர் (லூக். 17:11-19). கானானேயப் பெண்ணின் இறை நம்பிக்கையைப் பாராட்டி, அவள் மகளைத் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவித்தார். (மாற். 7: 24-30).
- இப்படி யூதர்களால் புறவினத்தார் என கருதப்பட்ட சமாரியர், கானானேயர், உரோமையர் ஆகியவர்கள் இயேசுவிடம் வந்து, குணமளிக்கும்படி அவரைக் கேட்டபோது அவர்களின் விசுவாசத்தைக் கண்டு வியந்து, அவர்கள் கேட்டது கிடைக்குமென உறுதியளிக்கிறார்.
- இயேசு நூற்றுவர் தலைவர் ஒருவரின் பணியாளரைக் குணமாக்குகிறார். அப்பணியாளர் சாகும் தறுவாயிலிருந்தார். நூற்றுவர் தலைவன் ஒரு உரோமையர். யூதர்களினால் உரோமையர்கள் வெறுக்கப்பட்டவர்கள். அத்தகைய ஒருவர் இயேசுவைத் தேடி வந்து தமக்கிருந்த நம்பிக்கையை அறிக்கையிடுகிறார். இயேசுவை ஒரு வார்த்தை சொல்லும் தன் ஊழியர் குணமடைவார் என வேண்டிக்கொள்கிறார். யூதர்கள் புறவினத்தார் இருக்கும் இடங்களுக்குச் செல்வதில்லை. இயேசு வியப்புற்று அவரது நம்பிக்கையைப் பாராட்டுகிறார். அவரது பணியாளர் இயேசு குணமடைகிறார்.
- இறைவனின் பரிவன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேலருக்கு மட்டும் உரியது அல்ல என்பதை இயேசுவின் இக்குணமளித்தல் உணர்த்துகிறது. அத்தோடு இயேசுவின் குணமளித்தல் அவரது மனித நேயச் செயல்பாடாகும். அவை மனித மாண்பைப் பேணும், மதிக்கும் செயல்பாடுகளாகும்.

**(ஈ) இறந்தவர்களை உயிர்ப்பித்தல் (கைம்பெண்ணின் மகன் லூக். 7:11-17)**

- அன்றைய யூதச் சமுதாயத்தில் பெண்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்தார்கள். பெண்கள் இழிவாகக் கருதவும் பேசவும்பட்ட சூழ்நிலையில் இயேசு இறையாட்சிச் சமூகத்தில் ஆணுக்கும் பெண் சமம் என்பதை உறுதி செய்கிறார்.
- அவர்களைப்பற்றி பெருமையாகப் பேசினார் (மாற். 7:11-17; லூக். 7:11-17). குறிப்பாக, பட்டணத்துப் பாவி எனப் பழித்துரைக்கப்பட்ட பெண்ணுக்கும், விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணுக்கும் பரிவு காட்டினார். (லூக். 7:36-50; யோவா. 8:3-11). தம்மைக் கூட்டத்துக்குள் வந்து தொட்ட பெண் இரத்தப்போக்கிலிருந்து குணமாகியதை பிறர் அறியச் செய்து பெண்களால் தீட்டு எனும் எண்ணத்தை மாற்றினார் (மாற். 5: 25-34). ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கையைப் பாராட்டினார் (லூக். 21:1-4). அவரது காலடிகளுக்கு தைலம் பூசி, அவற்றைத் தம் கூந்தலால் துடைத்த பெண்ணை வரவேற்றார் (மாற். 14: 3-9). பெண்களும் தம் சீடர்களாக ஊர் ஊராகச் சென்று பணி செய்யவும் வாய்ப்பளித்தார்.

- பெண்களைச் சமத்துவமாக நடத்திய இயேசு தன் ஒரே மகனை இழந்த நயீன் ஊர்க் கைம் பெண்மீது இரங்கி, அவள் மகனை உயிர்ப்பித்தார். இந்நிகழ்வு இறைவாக்கினர் எலியா சரேத்தா ஊர்க் கைம் பெண்ணின் மகனை உயிர்த்தெழச் செய்த நிகழ்வை ஒத்திருக்கின்றது.
- இயேசு நயீன் மகனை உயிர்தெழச் செய்ததைக் கண்ட மக்கள், ‘‘நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கிறார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார்’’ என்று சொல்லிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்’’ (7: 16). ஏனென்றால் இஸ்ரயேல் மக்களிடம் எலியா மீண்டும் தோன்றுவார் என்ற நம்பிக்கை இருந்தது. ஆக, இயேசுவின் இப்புதுமையால் இறையாட்சி வந்து விட்டது என்பது வெளிப்படுகிறது. இறையாட்சியின் முழுமையும், மாட்சியும் வெளிப்படுகிறது.

**உத்தே கற்பித்தல் செயற்பாடு**

படி 1: இயேசு அறிவித்த இறையாட்சியின் விழுமியங்களைப் பட்டியலிட்டு ,அவை ஒரு சம உரிமையும் சகோதரத்துவமும் கொண்ட சமூக உருவாக்கத்துக்கு அடிப்படையாகும் தேவையை விளக்குவார்.

படி 2: மலைப்பொழிவு தரும் படிப்பினைகளை பட்டியலிட்டு, அவை அடிப்படையான கிறிஸ்தவ மனநிலையில் வளருவதற்கு அவசியமாவவை என்பதை அறிவிப்பார்.

படி 3: இயேசு தம் சமகால சமூகத்திலிருந்து வேறுபட்ட ஒருவராக திகழ்ந்தார் என்பதை ஏற்று, தாமும் தம் சமகால சூழலில் இயேசுவைப் பின்பற்ற வேண்டிய தேவையை முன்வைப்பார்.

படி 4: இயேசுவின் உவமைகள் உணர்த்தும் பொருத்தமான உண்மைகளைப் பட்டியலிட்டு அவை இன்றைய சூழலிலும் அர்த்தமுள்ளவை என்பதை முன்வைப்பார்.

**துணை நூல்கள்**


01. தே. அல்போன்சு, கிறிஸ்தியல், இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும், தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி
02. தே. அல்போன்சு, கிறிஸ்தியல், உங்கள் தந்தை ஒருவரே, தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, 1999
03. குமார் ராஜா, இயேசுவைப் போல், இயேசுவின் ஆளுமையும், மாதிரியும், வைகளை பதிப்பகம், திண்டுக்கல், இந்தியா, 2011
04. பவுல் லியோன் வறுவேல், யார் இந்த இயேசு?, வைகறை பதிப்பகம், திண்டுக்கல், இந்தியா, 2006
05. ச. சிங்கராயன், அப்பா தந்தாய், நல்லாயன் குருத்துவக் கல்லூரி, கோவை, 1999
06. ஜெரி, அரசியல் இயேசு, வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், 1997
07. Albert Nolan, Jesus, Before Christanity, orbis Book, Maryknoll, New York,1992
08. Thomas P. Rausch, Who is Jesus?, An Introduction to Christology, Claretian publications, Philippines, 2005
09. Raymond E. Brown, An Introduction to New Testament Christolgy, Geoffrey chapman, Britain, 1994
10. Walter Kasper, Jesus the Christ, Burns & Oates, Pulist Press, Britiain, 1977

**தேர்ச்சி: 4.0** : கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படை கிறிஸ்துவே என்பதை ஏற்று, தம் வாழ்வை அமைத்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.2:** இயேசுக்கிறிஸ்துவில் பிரதிபலித்த விழுமியங்களை வாழ்வாக்கிக் கொள்வார்.

**பாடவேளை** : 10

## கற்றல் பேறுகள்:

- புதிய சமூகம் அமைப்பதற்கு காரணமாக இருந்த இயேசுவின் செயற்பாடுகள் பற்றிய கருத்துக்களைக் கோவைப்படுத்துவார்.
- இயேசு காண விரும்பிய புதிய சமூதாயம் அமைய, நாமும் ஏழை எழியவர்களை ஒடுக்கப்பட்டவர்களை அன்பு செய்ய வேண்டும் என்பதை ஏற்பார்.
- கோவைப்படுத்திய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்.
- இயேசு பாதங்களைக் கழுவிய நிகழ்வை முன்னுதாரணமாகக் கொண்டு தாழ்ச்சியோடு பணிசெய்ய முன்வருவார்.
- குழுச்செயல்பாடுகளின்போது ஒத்துழைப்பு நல்குவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி:

### 4.2.1 இயேசுவின் செயற்பாடுகள்

- இயேசு தமது திருமுழுக்கின் பின்னர் பாலைவனத்தில் சோதிக்கப்பட்டார் (லூக். 4: 1-13). சோதனையிலும் தம் நம்பிக்கையில் தளராமல் இறைசித்தப்படி வாழவும், செயல்படவும் உறுதிகொண்டார்.
- நாசரேத்தூரில் யூத செபக்கூடத்தில் இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து ஒரு பகுதியைப் (எசா. 61:1–2) படித்தபின் முதல்முறையாக மக்களுக்குப் போதித்தார் (லூக் 4: 16-22). இயேசுவின் இப்போதனை வழியாக தம் செயல்பாடுகள் எப்படி இறையாட்சிக்கு ஏற்றவையாக அமையப் போகின்றன என்பதை வெளிப்படுத்தினார்.
- யூதப்பண்பாடு, அடிப்படையில் ஒரு தூய்மைப் பண்பாடு (லேவி. 19:2). இயேசுவின் காலத்தில் தூய்மை என்பது வெறும் உடல் சார்ந்த, இனம் சார்ந்த, சட்டம் சார்ந்த குறுகிய பொருளோடு கருதப்பட்டது.
- பெண்களும், பாவிகளும், வரிதண்டுவோரும், நோயாளர்களும், குறிப்பாக தொழுநோயாளர்களும் உடல் தூய்மை இல்லாதவர்கள் எனக்கருதப்பட்டார்கள்.
- கலப்பினமாகிய சமாரியரும், புறவினத்தாரும் இனத்தூய்மை இல்லாதவர்கள் என எண்ணப்பட்டார்கள்.
- சட்டத்தைச் சரியாக கடைப்பிடிக்காத ஏழைகள் சட்டமுறையிலான தூய்மை இல்லாத பாவிகள் எனத் தாழ்வாக கருதப்பட்டு ஒதுக்கப்பட்டார்கள்.
- இம்மக்களுக்கு நிறைவாழ்வு வேண்டும் என்பது இயேசுவின் முதன்மை நோக்கமாகும். இன்னும், சமாரியர்கள், வரிதண்டுவோர், பாவிகள் என ஒதுக்கப்பட்டவர்களுடன் இயேசு நட்புறவுடன் பழகினார்.
- இயேசு இத்தகைய மக்களுடன் தம்மை ஒன்றுபடுத்தி, அவர்களுடன் ஒருவராக வாழ்ந்தார் (பிலி. 2:6-8; கலா. 4:4; யோவா. 1:14). இயேசுவின் இச்செயல்பாடுகள் பரிவிரக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பண்பாடாகும்.

#### 4.2.1.1 இயேசுவும் சமாரியரும்

- கி. பி. 722ல் அசிரீயர்கள் இஸ்ராயேலை ஆக்கிரமித்த பின்னர், அவர்களோடு கலந்த யூத இனத்தவரிலிருந்து தோன்றிய கலப்பு இனமே சமாரியர்கள்.
- இவர்களை யூத இனத்தவர்கள் இவர்களை இழிவானவர்களாக எண்ணி, அவர்களுடன் உறவுகள், தொடர்புகள் வைப்பதைத் தவிர்த்தார்கள்.
- இதனை ஒருவகை சாதியமாக அல்லது தீண்டாமையாகக் கொள்ளலாம். ஆனால் யூதர்கள் சமாரியரைத் தாழ்வாக கருதி, தரக்குறைவாக நடத்தியதை இறையாட்சி சமூகத்திற்கு எதிரான பழக்க வழக்கமாக இயேசு பார்த்தார்.
- இயேசு சமாரியருடன் எவ்வகைப் பாகுபாடும் காட்டவில்லை. அவர்களை சமமானவர்களாக கருதி அவர்களுடன் சுமுகமான உறவு கொண்டிருந்தார். கலியோவிலிருந்து எருசலேமுக்கு சுற்றுப்பாதையால் செல்லாமல், சமாரியா ஊடாகவே பயணம் செய்தார். இவ்வுண்மையை உணர்த்துவதற்கு, அவர்களைப்பற்றி உயர்வாகவே பேசினார் (நல்ல சமாரியர் உவமை லூக். 10:25–37; பத்துத் தொழு நோயாளர்கள் நலம் பெற்ற நிகழ்வு லூக். 17:11–19)).
- சமாரியரின் ஒரு ஊரில், மக்கள் அவரை ஏற்க மறுத்தபோது, சீடர் சிலர் அவர்களை சபிக்க நினைத்தார்கள். ஆனால் இயேசு அவர்களைக் கண்டித்து அவ்வூரைவிட்டு இன்னோர் ஊருக்குச் சென்றார் (லூக். 9:51-56). சமாரியப் பெண் ஒருவரிடம் அவரே உரையாடி, அவரை மனமாற்றித் தம் சாட்சி ஆக்குகிறார். அவ்வூர் மக்களின் அழைப்பை ஏற்று இருநாட்கள் அவர்களுடன் தங்குகிறார் (யோவா. 4: 5-30).

#### 4.2.1.2 இயேசுவும் வரிதண்டுவோரும்

- வரிதண்டுவோர் யூத சமூகத்தவர்ளே. உரோமை ஆட்சியாளருக்கு பொதுமக்களிடம் வரிதண்டி வாழ்ந்தார்கள். தம்மை ஆக்கிரமித்து ஆட்சிபுரிந்த உரோமையருக்காக வரிதண்டிய இவர்களை யூதமக்கள் அவமானத்துக்கு உரியவர்காகக் கருதினார்கள். அவர்கள் மீது வெறுப்பும் கோபமும் கொண்டிருந்தார்கள்.
- ஆனால் இயேசு இவர்களுடன் நட்புக்கொண்டிருந்தார். எரிக்கோவுக்கு செல்லும் வழியில் வரிதண்டுவோருக்கு தலைவரான சக்கேயுவை இயேசு சந்தித்தார். அவரோடு உரையாடி, அவரோடு விருந்துண்டார் (லூக். 19:1–10).
- மேலும் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்த லேவியை தம்மைப் பின்செல்லவருமாறு அழைத்தார். அவருடைய வீட்டில் பலருடன் விருந்துண்டார். இவர்களில் பலர் இயேசுவைப் பின்பு பின்பற்றியவர்கள். (மாற். 2:13–17).

#### 4.2.1.3 இயேசுவும் பாவிகளும்

- யூத சமுதாயத்தில் ஆயக்காரரும், விபச்சாரிகளும் பாவிகளாகக் கருதப்பட்டனர். யூதசமய சட்டத்துக்கமைய அவர்கள் தூய்மையற்றவர்கள். விபச்சாரிகள் மன்னிக்கப்படக் கூடாதவர்கள். கல்லால் எறியுண்டு கொல்லப்பட வேண்டியவர்கள்.
- ஒருமுறை விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை மறைநூல் அறிஞரும், பரிசேயரும் இயேசுவிடம் கொண்டுவந்து, அவளைக் கல்லால் எறிந்து கொல்வது பற்றி அவரிடம் கருத்துக் கேட்டார்கள். அவரோ அவளுக்கு தீர்ப்பிடவில்லை (யோவா. 8: 1–11).
- இயேசு ஆயக்காரர், விபச்சாரிகள் மீதும் பரிவிரக்கம் கொண்டிருந்தார். ''நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்'' என்பது இயேசுவின் உறுதியாகும். இவர்களை இயேசு காணாமல் போனவர்களாகவும், தொலைந்து போனவர்களாவும் கண்டார். இவர்களைக் கண்டடையவும், மீட்கவுமே வந்தேன் என உறுதியுடன் செயல்பட்டார் (லூக். 15: 1-7).

### 4.2.2 சீடத்துவம் பற்றிய படிப்பினைகள்

- இயேசுவின் காலத்தில் யூதசமயக் குருக்களிடம் கற்று அவர்களின் சீடர்களாக வாழும் வழக்கம் இருந்தது. அவர்கள் யூதசமய ஏடுகளைக் கற்று அறிந்திந்தார்கள். யூத சமயச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கும், யூத பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாக்கவும், யூதசட்ட ஒழுங்குகளுக்கு அமைய வாழவும் கற்றிருந்தார்கள். எடுத்துக்காட்டாக, ஒருமுறை இயேசுவைச் சந்திக்கவந்த செல்வந்த இளைஞனைப் போல பயிற்சி பெற்றிருந்தார்கள் (மாற். 10:17-21).
- இயேசு தம்மோடு தங்கியிருக்கவும், அனுப்பிவைக்கப்படவும் சிலரை அழைத்தார். ஆனால் அவர்கள் முக்கியமாக **இறையாட்சியின் தன்மை, பண்புகள், செயல்பாடுகளில் தம்மைப்பின்பற்றி, பங்கு கொள்வதற்கு அவர்களுக்கு அறிவுரை அளித்தார்.** எடுத்துக்காட்டாக பின்வருவனவற்றைக் காண்போம்: (மாற். 8:31-37; 9:33-37; 10:35-45).

#### 4.2.2.1 மாற். 8:31-37:-

- இயேசு தம் சீடர்களிடம் தமக்கு எப்படியான துன்பங்கள், பாடுகள், சாவு வரும் என்று முன்னுரைத்தார். இயேசு துன்பங்கள் அனுபவித்து, புறக்கணிக்கப்பட்டு, கொலைசெய்யப்படுவார் என்று கூறியதைப் பேதுரு எதிர்த்தார். ஏனென்றால் இயேசுவை 'மெசியா' என நம்பியிருந்தார். இயேசு அரசு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று அவரைச் சோதித்தார்.
- ஆனால் இயேசுவின் சிந்தனை பேதுருவின் சிந்தனைக்கு முரணாயிற்று. ஏனென்றால் பேதுரு "கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல், மனிதருக்கு ஏற்றவை பற்றியே" எண்ணினார். அவர்களிடம் "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்..." எனக்கற்பித்தார்.

#### 4.2.2.2 மாற். 9:33-37

- ஒருநாள் இயேசுவின் சீடர்கள் தங்களுக்குள் பெரியவர் யார் என்பதைப்பற்றி வழியில் ஒருவரோடு ஒருவர் வாதாடிக் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களுடன் அமர்ந்து, அவர்கள் நடுவே ஒரு சிறு பிள்ளையை நிறுத்தி, அவர்களுக்கு அறிவுரை கூறினார்.
- சமுதாயத்தில் சின்னஞ் சிறியவர்களாக எண்ணப்பட்டு உதறித் தள்ளப்பட்டவர்களுடன் அவர்கள் ஒருவராக மாறவேண்டும் எனக் கற்பித்தார். முதலிடம் பெற விரும்புகிறவர்கள் கடையவனாக இருக்க வேண்டும் என்கிறார். அதாவது வாழ்க்கையின் அடிமட்ட மக்களுடன் ஒன்றுபட்டு, அவர்களின் நிலையைத் துய்த்துணர்ந்தும், அவர்களின் துன்பத்தில் துயர் நீங்க, பணிபுரியும் மனத்துடன் வளர்வதே முக்கியம் என கற்பித்தார்.

#### 4.2.2.3 மாற். 10:35-45:

- இன்னொரு கட்டத்தில் இயேசுவின் சீடர்கள் சிலர் இயேசு அரியணையில் இருக்கும் போது, ஒருவர் அவரது வலப்புறமும், இன்னொருவர் அவரது இடப்புறமும் அமர்ந்து கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள்.
- சமுதாயத்திலிருக்கும் தலைவர்கள் போல அவர்களும் பதவி, பெருமை எனத்தேடக் கூடாது என்று அவர்களுக்கு இயேசு அறிவுரை கூறினார். பணி நோக்குடன் அவர்கள் வாழ வேண்டும் எனப்பணித்தார்.
- **அதீத ஆசைகள் பணி மனப்பாங்கைச் சாகடிக்கும். இறையாட்சிப் பணிக்குத் தேவையான உள்ளத்து உறுதிப்பாட்டைத் தளரச் செய்யும்.**

- இயேசு தனது வாழ்வில் உண்மையெனப் பற்றிக் கொண்டதை, தனக்குள் தெளிவடைந்த குறிக்கோளை, அதனால் அவருக்குள் வளர்ந்திருந்த மனநிலையை மற்றவரும் பெற்றுக் கொள்ள கற்பிக்கின்றார். ''மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்'' (மாற். 10: 45).

**4.2.3 பாதம் கழுவுதல்: (யோவா. 13: 1-16)**

- இயேசுவின் இறுதி இரவு உணவின் போது, இயேசு அவரது சீடர்களின் பாதங்களைக் கழுவினார். யூதர்களின் விருந்தின்போது ஓர் அடிமை விருந்தினர்களின் பாதங்களைக் கழுவது வழக்கமாகும். இயேசு ஓர் அடிமையின் வேலையைச் செய்து, அவர்களுக்கு இறையாட்சிப் பணிக்கு ஒரு முன்மாதிரிகை காட்டினார்.
- இறையாட்சிப் பணி இயேசுவைப் போல இறை அன்பை வெளிப்படுத்தும் செயல்பாடாக வேண்டும் (யோவா. 1:1) என்பதை பாதங்களைக் கழுவுதல் உணர்த்துகிறது. உள்ளத்தில் இறையன்பு இல்லையேல் ஒரு சீடன் தன்னை வெறுமையாக்க முடியாது.
- ''போதகரும் ஆண்டவருமான'' இயேசுவின் தலைமைத்துவம், **தாழ்மையான பணித் தலைமைத்துவம்** என்பதற்கு பாதங்கழுவுதல் அடையாளமாகும் (யோவா. 13: 13-17).
- பாதங்கழுவுவது இறையாட்சிப் பணிக்கு உள்ளத்தூய்மை தேவை என்பதை உணர்த்தும் மற்றுமொரு அடையாளமாகும். இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவுவதை நீராடலுக்கு ஒப்பிடுகின்றார் நற்செய்தியாளர் தூய யோவான் (யோவா.13:10). நீராடலால் தூய்மையாவது போல, இயேசு தம் சீடர்களுடன் பேசிய வார்த்தைகளால் அவர்கள் தூய்மை அடைய வேண்டும் (யோவா.15:3).
- அவர்களின் பாதங்கள் கழுவப்படுவதால் அவர்கள் தூய்மையடைந்து, மற்றவரையும் தூய்மையாக்க வேண்டும் என்றும் இயேசுவால் பணிக்கப்படுகின்றார்கள் (யோவா.15:13-14). இயேசு போல விண்ணக தந்தையின் பிள்ளைகளாகிட அவர்கள் தூய்மையடைய வேண்டும்.

**உத்தேச கற்பித்தல் செயற்பாடுகள்**

படி 1: நசரேத்தூர் இயேசுவே கிறஸ்தவ நாகரிகத்துக்கு அடிப்படை என்பதை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.

படி 2: யூத கலாச்சார்ததில் நசரேத்தூர் இயேசு யார் என்பதை அறிந்து, அவர் இன்றைய இலங்கைக் கலாச்சார சூழமைவில் யாராகலாம் என விளக்குவார்.

படி 3: கிறிஸ்தவ சீடத்துவம் தரும் படிப்பிகைளை வாழும் போது எழக்கூடிய சவால்களை வெளிப்படுத்துவார்.

படி 4: பாதம் கழுவும் இயேசு விட்டுச்சென்ற ஒரு முன்மாதிரிகை என்பதை ஏற்றுக்கொண்டு, அதனை வாழ்வில் கடைப்பிடிக்கும் வழிகளைக் கூறுவார்.

**துணை நூல்கள்**

01. தே. அல்போன்ஸ், ***கிறிஸ்தியல்,*** இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும், தூய பவுல் இறையியல் கல்லூரி, தருச்சிராப்பள்ளி

02. குமார் ராஜா, ***இயேசுவைப் போல்,*** இயேசுவின் ஆளுமையும், மாதிரியும், வைகளை பதிப்பகம், திண்டுக்கல், இந்தியா, 2011

03. பவுல் லியோன் வறுவேல், ***யார் இந்த இயேசு?***, வைகறை பதிப்பகம், திண்டுக்கல், இந்தியா, 2006

04. ................................................, ***யாரைத் தேடுகிறீர்கள்?*** இயேசுவும ˙நற்றசெய்தி ஆய்வும், வைகளை பதிப்பகம், திண்டுக்கல், இந்தியா, 2007

05. பிலிப்ஸ் இ. யேசுதாசன், *மனுவார்த்தையில் இறை வார்த்தை,* அமல உதயம் திருமலை, 2010

06. ................................................, ***புளிப்பு மா***, அமல உதயம், திருமலை, 2010

07. அ பீட்டர் அபீர், ஆ. அலோசியஸ் சேவியர், ***திருவிவியிய விளக்கம்:*** விவிலியம் ஓர் அறிமுகம், அருள் வாக்கு மக்றம், திருச்சி, 2005

08. ஜெரி, ***அரசியல் இயேசு,*** வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், 1997

09. Albert Nolan, Jesus, Before Christanity, orbis Book, Maryknoll, New York,1992

10. Thomes P. Rausch, Who is Jesus?, An Introduction to Christology, Claretian publications, Philippines, 2005

11. Raymond E. Brown, **An Introduction to New Testament Christolgy,** Geoffrey chapman, Britain, 1994

12. Walter Kasper, ***Jesus the Christ,*** Burns & Oates, Pulist Press, Britiain, 1977

**தேர்ச்சி: 4.0** : கிறிஸ்தவ நாகரிகத்தின் அடிப்படை கிறிஸ்துவே என்பதை ஏற்று, தம் வாழ்வை அமைத்துக்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.3:** இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு வழியாக இயேசு ஏற்படுத்திய சமய சமூக விழிப்புணர்வைத் தமதாக்கிக் கொள்வார்.

**பாட வேளை** : 24

**கற்றல் பேறுகள்:**

- பாஸ்கா மறைபொருள் பற்றிய தரவுகளைத் திரட்டுவார்.
- இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாகக் கிடைத்த விழிப்புணர்வை ஏற்பார்.
- இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றிய விடயங்களை ஒரு ஆக்கமாகச் சமர்ப்பிப்பார்.
- நற்செய்தியின் படிப்பினைகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவார்.
- குழுவினரின் பங்களிப்போடு செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

## விடய உள்ளடக்கம்

### 4.3.1 இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு

- இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு அவரது இறையாட்சிக்கான வாழ்வின், பணியின் சிகர நிகழ்வாகின்றன. நான்கு நற்செய்திகளிலும் இவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன (மத். 26-27; மாற். 14-15; லூக். 22-23; யோவா. 18-19).
- நான்கு நற்செய்திகளிலும் இயேசு கைது செய்யப்படல், தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்தப்படுதல், பிலாத்துவிடம் கொண்டு செல்லப்படுதல், சிலுவையில் அறையப்படுதல், உயிர்துறத்தல், உயிர்த்தல் என்ற ஒழுங்கில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு நிகழ்வு தரப்பட்டிருக்கின்றது. தொடக்ககால கிறிஸ்தவ பாரம்பரியத்தில் இந்நிகழ்வுகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதை இது காட்டுகிறது.
- தூய மத்தேயுவுக்கு இயேசுவின் பாடுகளும், மரணமும் அவரது மீட்பின் வெளிப்பாடாகும். தூய மாற்குவுக்கு அவை இயேசு இருளின் ஆதிக்கம் மீது கொண்ட வெற்றியின் அடையாளமாகும். தூய லூக்காவுக்கு சிலுவை மரணம் துன்புறுதலின் வெளிப்பாடாகும். தூய யோவானுக்கு சிலுவை மரணம் இயேசுவின் அன்பின் உச்சச் செயல்பாடும், இறைமாட்சியின் வெளிப்பாடுமாகும்.
- இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு அவரது இவ்வுலக வாழ்வைக் கடந்து தம் தந்தையாகிய இறைவனிடம் செல்லும் நிகழ்வாகும். இவை பாஸ்கா நிகழ்வுகளாகும். திருத்தூதர்களின் தொடக்கப் போதனைக்கு மையக் கருவாக இந்நிகழ்வுகள் அமைந்துள்ளன.
- ''இஸ்ரயேல் மக்களே,…கடவுள் நாசரேத்து இயேசுவின் வழியாக உங்கள் நடுவில் வல்ல செயல்களையும், அருஞ்செயல்களையும் அடையாளங்களையும் செய்து, அவரை இன்னாரென்று உறுதியாகக் காண்பித்தார்…நீங்கள் திருச்சட்டம் அறியாதார் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். ஆனால் கடவுள் அவரை உயிர்த்தெழச் செய்தார் (திப. 2: 22-24).
- இயேசுவுக்கு அவருடைய சாவு பலரது மீட்புக்கான கொடையாகும். ''பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுக்க வந்தார்'' (மத். 20: 28). இயேசுவுக்கு அவரது மரணம் இறைவன் தன் மீது கொண்ட அன்புக்காக அவர் செய்யும் கையளிப்பாகும் (யோவா. 10: 17-18). ''தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை'' (யோவா. 15:13) என்ற இயேசுவுக்கு மரணம் அவரது நட்புக்காக அவர் கொடுத்த விலையாகும்.

- இயேசு தாமே தமக்கு வரப்போகும் பாடுகள், மரணம், உயிர்ப்புப் பற்றி மூன்று முறைகள் வெளிப்படையாக தம் சீடருக்கு அறிவித்தார் (மாற். 8: 31; 9: 31; 10: 33). இறைவாக்கினர் களைப் போல தாமும் மரணத்துக்கு ஆயத்தமாயிருக்க வேண்டும் (மத். 23: 29-37; திப. 7: 52). இயேசு தம் பணியை ஆரம்பித்த தொடக்க காலத்திலேயே திருமுழுக்கு யோவான் கைது செய்யப்பட்டு, கொல்லப்பட்டார் (மாற். 6: 14-29).
- இன்னும், இயேசுவின் பணி வாழ்வின் ஆரம்பத்திலேயே அவருக்கு எதிர்ப்பும், புறக்கணிப்பும் ஏற்பட்டதாக தூய மாற்குவின் நற்செய்தி கூறுகிறது. பரிசேயர் ஏரோதியரோடு சேர்ந்து அவரை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தார்கள் (மாற். 2-3). இயேசு கோவிலைத் தூய்மையாக்கிய பின் தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞர்களும் அவரை ஒழித்துக்கட்ட வழிதேடினார்கள் (மாற். 11: 18-19). இவையும் இயேசுவின் பாடுகளின் ஆரம்பமாகும்.
- இயேசுவின் வாழ்வு, பணி, பாடுகள், மரணம் இவற்றிற்குப் பொருள்தருவது இயேசுவின் உயிர்ப்பாகும். சீடர்கள் உயிர்ப்பு அனுபவத்தின் ஒளியில் இயேசுவின் வாழ்வு, படிப்பினைகள், செயல்கள், பாடுகள், மரணத்தின் முழுமையைக் கண்டார்கள். இஸ்ரயேல் மக்கள் எதிர்பார்த்திருந்த (1சாமு. 2:10; திபா 2: 2), அருள்பொழிவு பெற்றவர், இறை மகனாகிய மெசியா இயேசுவே என நம்பினார்கள். இயேசுவை கிறிஸ்து ஆண்டவர் என அறிக்கையிட்டார்கள் (மாற். 15: 39; யோவா. 20: 30).

### 4.3.2 பாடுகள் பற்றிய முன்னறிவிப்பும் காரணமும் (மாற். 8:31-38)

- ‘‘கடவுளின் மகனாகிய இயேசுக் கிறிஸ்துவின் நற்செய்தியின் தொடக்கம்’’ (மாற். 1: 1) என ஆரம்பமாகும் மாற்கு நற்செய்தியில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றிய மூன்று முன்னறிவிப்புக்கள் தரப்பட்டுள்ளன. ஏன்?
- தொடக்க கிறிஸ்தவர்கள் இயேசுவை அதிகாரத்தோடு போதித்து, புதுமைகள் பலபுரிந்த ஒரு சாதனையாளராக எண்ணி, ஏற்று அவரை வழிபட்டார்கள். அவர் மாட்சியுடன், வானதூதர் புடைசூழ மீண்டும் வருவார் எனக் காத்திருந்தார்கள்.
- இக்காலகட்டத்தில், கி.பி. 64ல் உரோமைப் பேரரசில் நீரோ மன்னனினால் சமய கலாபனை ஆரம்பிக்கப்பட்டது. இக்கலாபனையின் போது அவர்களுக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்களில் அவர்கள் உறுதியுடன் இயேசுக் கிறிஸ்துவில் கொண்ட விசுவாசத்தில் வாழ்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டிய தேவை எழுந்தது.
- வியத்தகு செயல்கள் செய்து, அதிகாரத்துடன் போதித்த மெசியாவாகிய இயேசுக் கிறிஸ்து, மக்களால் புறக்கணிக்கப்பட்ட, பரிசேயர், மறைநூலறிஞர்கள், தலைமைக் குருக்களால் குற்றம் சுமத்தப்பட்டு, துன்பறுத்தப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு இறந்த துன்புறும் மெசியா என அறிவித்து, அவர்களுக்கு மாற்கு சமய விழிப்புணர்வு ஊட்டினார்.
- இயேசுவை துன்புறும் மெசியாவாக அறிவிப்பதற்காக, இயேசு தாம் செய்த புதுமைகளை பிறர் அறியச் செய்ய வேண்டாம் எனத் தடுத்தார் என்ற செய்தி நற்செய்தியாளரால் முன்வைக்கப்பட்டது.
- இறைதந்தையின் விருப்பை மட்டுமே நிறைவேற்றி வாழ்ந்து, போதித்து, புதுமைகள் செய்த இயேசு மெசியாவே என்பது பேதுருவின் அறிக்கையால் வெளிப்படுத்தப்படுகிறது. கலிலேயாவில் மக்களின் புறக்கணிப்பையும், பரிசேயரின் சதியையும் சந்தித்த இயேசுவின் பணி பேதுருவின் அறிக்கையோடு முடிவடைகிறது. இக்கட்டத்தில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு முன்னறிவிக்கப்படுகிறது (மாற். 1:14 – 8: 30).

- கலிலேயாவை விட்டுப் புறப்பட்ட இயேசு எருசலேமை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தார். வழிப்பயணத்தின்போது மீண்டும் சீடர்கள் அவரைப் புரிந்து கொள்ளாத கட்டத்தில், தமது பாடுகளை முன்னறிவிக்கின்றார் (மாற். 8: 31-10:52).
- இறுதியாக எருசலேமில் அவர் அறிவித்த அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு இடம் பெறுகின்றது. மறைநூலறிஞர்களினதும், தலைமைக் குருக்களினதும் சதியால் பொய்குற்றம் சுமத்தப்பட்டு பாடுகளையும் மரணத்தையும் ஏற்றார். ஆனால் மூன்று நாளில் உயிர்த்தெழுந்தார் (மாற். 11-16).
- இயேசு கலிலேயா தொடங்கி எருசலேம் வரை செய்யும் பயணம் அவரது பாடுகளின் பயணமாகும். இயேசு மக்களுடன் தம்மை ஒன்றித்துக் கொண்டவராக, இறையாட்சி வாழ்வுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்தவராக, அதற்காக தம் வாழ்வையும் தியாகம் செய்யும் உறுதிப்பாட்டுடன் இப்பயணத்தை செய்கிறார்.
- அதனால் மானிடமகன் (மனுமகன்) எனத் தமக்கென்று ஒரு பெயரைச் சூட்டினார். கலிலேயாவில் பேசப்பட்ட அரமேய மொழி வழக்கில் ''மானிட மகன்'' என்பது ஒருவர் தம்மைக் குறிப்பதற்கு ''அடியேன்'' என்று கூறுவது போலாகும். ஒருவர் ''நான் அறிக்கையிடுவேன்'' என்பதற்குப் பதிலாக ''மானிடமகன் அறிக்கையிடுவார்'' என்று கூறுகிறார்.

இயேசுவின் பாடுகள் பற்றிய முன்னறிவிப்புக்கள் (8: 31-33; 9: 30-32; 10: 32-34) மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

**(அ)** பாடுகளின் முன்னறிவிப்பு

**(ஆ)** சீடர்களின் புரிந்து கொள்ளாமை

**(இ)** இயேசுவின் விளக்கம்.

- இயேசுவின் காலத்தில் தீவிரவாதிகளாக எண்ணப்பட்ட பலர் உரோமைய ஆட்சியாளர்களால் சிலுவையில் தொங்க விடப்பட்டு இறந்தது போல, இறையாட்சிக்காக வாழ்ந்த இயேசுவும் சாவை எதிர்பார்த்திருக்கலாம்.
- இறைவாக்கினர்களைப் போல தாமும் மரணத்துக்கு ஆயத்தமாகியிருக்க வேண்டும். ஒரு இலட்சியத்துக்காக என்றில்லாமல், மக்களுக்காக துன்புறவும், இறக்கவும் தயாராக இருக்க வேண்டும் என்பது இயேசுவின் கருத்தாகும் (மாற். 10: 45; 14: 24).
- எருசலேம் ஆலய நிகழ்வுக்குப் பின் அவருக்கிருந்த எதிர்ப்பு உச்சக்கட்டத்தை அடைந்தது (மாற். 11: 15-19).
- அர்த்தமற்ற சமரசம் செய்வது இயேசுவுக்கு ஏற்புடையது அல்ல. இறையாட்சிக்கு சான்றுபகர வேண்டுமென்றால், தம்மை மக்கள் பரிந்துகொள்ள வேண்டுமென்றால் அதற்காக இறக்க வேண்டும் என்பது இயேசுவின் எண்ணமாயிருந்தது. **இயேசுவின் சாவு பற்றிய எண்ணம் 'அனைத்துக்கும் மேலாக இறையாட்சியை நாடவேண்டும்' (மத். 6:33) என்ற அவரது இலட்சிய மனநிலையை வெளிப்படுத்துகிறது.**

  **''என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் (மாற். 8: 34)'', ''நான் குடிக்கும் கிண்ணத்தில் உங்களால் குடிக்க முடியுமா?...'' (மாற். 10: 38…) போன்ற இயேசுவின் கூற்றுக்கள் தம்மைப் பின்பற்றும் சீடர்களும் இறையாட்சிக்காக துன்புறவும், மரணிக்கவும் தாயாராக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.**

- அதேபோன்று, தம் சமூகத்தவர் நடுவில் சீடர்கள் தலைமைப் பதவிகளையோ, முதலிடங்களையோ தேடக்கூடாது (மாற். 9: 33…). மாறாக, அவர்கள் தம் சமூகத்தில் சின்னஞ் சிறியவர்களுள் ஒருவராக வேண்டும்; அவர்களின் பணியாளராக வேண்டும்.
- ஏனென்றால் ''மனுமகன் பணிவிடை பெறுவதற்கு அல்ல, மாறாக. புணிவிடை புரியவும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்'' (மாற். 10: 44-45) என்பது இயேசுவின் விளக்கமும், உறுதியான படிப்பினையாகும்.

### 4.3.3 பாடுகள், மரணம் (யோவா. 18-19)

- நான்கு நற்செய்தியாளர்களுக்குள் இயேசுவின் பாடுகள், மரணம் பற்றிய யோவானின் இறையியல் கருத்துக்கள் மிக ஆழமானவையாகும். இயேசு நிலைவாழ்வை அளிப்பதற்காக இறைதந்தையால் அனுப்பப்பட்டவர். ''ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டும், அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்'' (யோவா. 10:10).
- இறுதிவரை இறைதந்தையால் அன்புசெய்யப்பட்டதால், தன்வாழ்வை இயேசு கையளித்தார் (யோவா. 10:17-18). ''தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை'' (யோவா. 15:13) என்ற இயேசு இறுதிவரை தம்மவரை அன்பு செய்து இறந்தார் (யோவா. 13: 1).
- இயேசுவின் வாழ்வு, பணி, போதனைகள், அருஞ்செயல்கள் யாவும் இறைதந்தையை வெளிப்படுத்தும் அடையாளங்களாகும். அவை இறை அன்பின் வெளிப்பாடுகளாகும். இவ்விறை வெளிப்பாட்டின் உச்சக் கட்டமே இயேசுவின் பாடுகளும் மரணமமாகும்.
- இயேசுவின் மரணம் இறைதந்தைக்கு கீழ்ப்படிந்து அன்பை முழுமையாக வெளிப்படுத்திய அன்பான மகனின் விருப்புச் செயலாகும். இயேசுவின் மரணம் இறைதந்தையால் மகிமைப் படுத்தப்படுவதற்கு அவர் தந்தையிடம் திரும்பிச் செல்லும் பயணமாகும்.

இயேசுவின் மரணம் பற்றிய யோவானின் சிறப்புக் கருத்துக்கள் நான்காகும். அவையாவன:

**(அ)** இயேசுவின் கொலைக்கு உரோமையர்கள் அல்ல, யூதர்களே பொறுப்பாளிகளாவர்.அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் யாவும் யூத மதம் சார்பானவையாகும்.

**(ஆ)** இயேசு தம் பாடுகளையும் மரணத்தையும் ஒரு துணிவுள்ள மனிதனாக ஏற்கிறார். இறுதி இராவுணவின் பின் அவர் யூதாசையும், தம்மைக் கைது செய்ய வந்தவர்களையும் சந்திக்க முன்சென்று, துணிவுடன் தம்மை அவர்களிடம் கையளிக்கின்றார். இறைதந்தையின் விருப்பை நிறைவேண்டும் என்பதே இயேசுவின் ஒரே நோக்கமாகும்.

**(இ)** இயேசுவின் சிலுவையடியில் அன்புச் சீடர் யோவானும், தாய் மரியாளும் நிற்கிறார்கள். இயேசு தலை சாய்த்து தன் ஆவியைக் கையளிக்கிறார்.

**(ஈ)** இயேசுவின் மரணம் இறை தந்தையை மாட்சிமைப்படுத்தும் வெளிப்பாடாகும்.

#### 4.3.3.1 இயேசுவைக் கைது செய்தல் (18: 1-11)

- இயேசுவைக் கைது செய்வதற்கு ''படைப்பிரிவினரையும், தலைக்குருக்களும் பரிசேயரும் அனுப்பிய காவலர்களைக் கூட்டிக்கொண்டு யூதாசு விளக்குகளோடும் பந்தங்களோடும் படைக்கலங்களோடும் அங்கே (கெதரோன் எனும் நீரோடையைக் கடந்து இருந்த ஒரு தோட்டம்) வந்தான்.''
- அவர்கள் இருளில் வந்தார்கள் என்பதைக் காட்டும் யோவான் ''ஒளியான அவர் உலகில் இருந்தார்…ஆனால் உலகு அவரை அறிந்து கொள்ளவில்லை. அவர் தமக்குரியவர்களிடம் வந்தார் (யோவா. 1: 9-11). அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை'' என்பதை அறிவிக்கிறார். யூதாஸ் உலகின் ஒளியாகிய இயேசுவைப் பிரிந்து, செயற்கை விளக்கொளியில் இருளின் செயலைச் செய்ய வருவதைக் காட்டுகிறார்.

- அவரைக் கைதுசெய்ய வந்தவர்களிடம், இயேசு ''நான்தான்'' என்றார். இது யாவே இறைவனின் வெளிப்படாக (விப 3: 6, 14; எசா. 44: 6), இயேசுவின் இறைதன்மையை வெளிப்படுத்துகிறது. அவரைக் கைது செய்ய வந்தவர்கள் பின்வாங்கி, தரையில் விழுந்தார்கள்.
- இயேசு பேதுருவிடம் ''வாளை உறையில் போடு. தந்தை எனக்கு அளித்த துன்பக் கிண்ணத்திலிருந்து நான் குடிக்காமல் இருப்பேனோ?'' என்பது இறைவனுடைய விருப்பத்தையே நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருந்துகொண்டு, அவ்வேளையில் இவ்வுலக அதிகாரத்துக்கு பணிவதைக் குறிக்கின்றது.

#### 4.3.3.2 தலைமைக் குருமுன் இயேசு (18: 12-14; 19-24)

- தலைமைக் குருவும் அவரது சங்கத்தினரும் இயேசு பற்றி சிந்திப்பதை யோவா. 11: 47-50ல் காண்கிறோம். இயேசு என்ற இம்மனிதர் குறித்து நாம் ஒன்றுமே செய்யாமல் இருந்தால், உரோமையர் நம்மைப் பழிவாங்கி விடமாட்டார்களா? இவர் இறந்து போவதன்றோ நமக்கு நன்மையாக முடியும்?
- இவ்வாறுதான் தலைமைக்குரு கயிபா மற்றும் தலைமைச் சங்க உறுப்பினர் சிந்தித்தனர். எனவே இயேசுவைக் கண்டு பிடித்து அவரை பிலாத்துவிடம் ஒப்படைப்பது என்று யூத அதிகாரிகள் முடிவு செய்தனர்.
- படைப்பிரிவினரும், தலைமைக்குருக்களும் பரிசேயரும் அனுப்பிய காவலர்களும் இயேசுவைக் கட்டி, தலைமைக் குருக்கள் குடுப்பத்தின் தலைவரும், முன்னைய தலைமைக்கு குருவுமான அன்னாவிடம் முதலில் கொண்டு போனார்கள்.
- தலைமைக் குரு இயேசுவின் சீடர்களைப் பற்றியும் அவருடைய போதனைகளைப் பற்றியும் அவரிடம் கேட்டார். இயேசு துணிவுடன் வினாக்களுக்கு நேரடியாகவும், வினாவுக்கு வினா எழுப்பியும் பதிலளித்தார். காவலரின் ஒருவர் ஆத்திரப்பட்டு அவர் கன்னத்தில் அறையும் அளவுக்கு இயேசுவின் துணிவான பதில்கள் காணப்பட்டன.
- இக்கட்டத்தில், உண்மைக்கு சான்று பகர துணிவற்ற சீடரின் நிலையை பேதுருவின் மறுதலிப்பு (18: 15-18; 25-27) மூலம் யோவான் காட்டுகிறார்.

#### 4.3.3.3 உரோமை ஆளுநர் பிலாத்து முன் இயேசு (18: 28-38)

- உரோமை ஆளுநர்கள் யாராவது மக்களால் இறைவாக்கினர் என்று கருதப்பட்டால் அவரைக் கவனமாக கண்காணித்தனர். குறிப்பாக, தங்களை விடுதலை வீரர்கள் என்றும், மெசியா என்றும் கூறிக்கொண்டவர்களை உரோமை ஆளுநர்கள் ஒழித்திட முயன்றார்கள். அவர்களில் பிலாத்து வளைந்து கொடுக்காதவர்; தன்னிச்சையாகச் செயல்பட்டவர்; கொடியவர்.
- பிலாத்துமுன் நடத்தப்பட்ட விசாரணை நிகழ்வை யோவான் நாடகப்பாணியிலே அமைத் துள்ளார். இதன் வழியாக இயேசுவின் அதிகாரத்தையும், குற்றமற்ற தன்மையையும், யூதத் தலைவர்களின் நேர்மையின்மையையும், கபடத்தனத்தையும், பிலாத்துவின் சுயநலமான அரசியல் கரிசனையையும் காட்டுகிறார்.
- பிலாத்து இயேசுவைப் பற்றி அறிந்திருந்தார். இயேசு தம்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எப்பதிலும் கூறாததைக் கண்டு ஆளுநன் பிலாத்து ''மிகவும் வியப்புற்றான்.'' இயேசுவிடம் அவரது அரசுரிமை பற்றி பிலாத்து வினவினார். இயேசு தாம் இவ்வுலகுக்கு வந்தது உண்மைக்கு சான்றுபகர்வதற்கு எனக் கூறுகிறார்.
- இயேசு குற்றமற்றவர் என அறிவித்தார். பிலாத்து உண்மை பற்றிக் கவலைப்படாதவர் என்பதை யோவான் தெளிவாகக் குறிப்பிடுகிறார் (!8: 37-38). பிலாத்து, யூதர்களிடமே அவர்கள் இயேசுவின்மேல் சுமத்தும் குற்றம் என்னவெனக் கேட்டு, அவர்களே இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்லுவதற்கு பொறுப்பானவர்கள் என்ற தன் விருப்பத்தை உறுதி செய்கிறார் (18: 38-19: …).

#### 4.3.3.4 இயேசுவின் மரணம்

**இயேசுவைச் சிலுவையில் அறைதல் (19: 17-27)**

இங்கு யோவான் மூன்று விடயங்களைக் குறிப்பிடுகின்றார். அவை

**(அ)** பிலாத்துவின் அறிக்கை

**(ஆ)** இயேசுவின் அங்கி பகிரப்படுதல்

**(இ)** சிலுவையின் அருகில் தாய் மரியாளும், சில பெண்களும், அன்புச் சீடரும் இருத்தல் ஆகிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுகிறார். இவற்றின் மூலம் சில சிறப்பு இறையியல் செய்திகளைத் தருகிறார்.

**(அ) பிலாத்துவின் அறிக்கை**

- இயேசு தாமே சிலுவையைச் சுமந்து கொண்டு துணிவுடன் மண்டை ஓடு என்னும் இடத்துக்குச் சென்றார். இயேசு அறையப்பட்ட சிலுவையில் " நசரேத்தூர் இயேசு யூதர்களின் அரசன்" என்று எழுதப்பட்ட அறிக்கையை தொங்கவிடும்படி பிலாத்து உத்தரவிட்டான். அவ்வறிக்கை எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மூன்று மொழிகளில் எழுதப்பட்டிருந்தது.
- தலைமைக் குருக்கள் அவ்வறிக்கை அவர்கள் இனத்துக்கு அவமானத்தை ஏற்படுத்தும் என உணர்ந்தார்கள். அதனால் அவ்வறிக்யை "யூதர்களின் அரசன் நான் என்று அவனே சொன்னதாக எழுதும்" என்று பிலாத்துவிடம் கேட்டுக் கொண்டார்கள்.
- ஆனால் பிலாத்து "நான் எழுதியது எழுதியதே" என்று கூறி, அவர்கள் வேண்டுகோளை நிராகரித்தார். பிலாத்துவின் பிடிவாதம் இதன் மூலம் வெளிப்படுகிறது. அவரது அறிக்கையின் மூலம் புறவினத்தார் இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள் என்பதை மறைமுகமாக யோவான் கூறவருகிறார் (19: 17-22).

**(ஆ) இயேசுவின் அங்கி பகிரப்படுதல்**

இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் அவருடைய மேலுடைகளை நான்கு பாகங்களாகப் பிரித்து எடுத்துக் கொண்டார்கள். இயேசுவின் அங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்தது. அது யூத குருக்கள் அணியும் ஆடையை ஒத்திருந்தது. இயேசுவை ஒரு அரசராக மட்டுமல்ல, ஒரு குருவாகவும் யோவான் காட்டுகிறார் (19: 23-25).

**(இ) சிலுவையின் அருகில் தாய் மரியாளும், சில பெண்களும், அன்புச் சீடரும் இருத்தல்**

சிலுவையில் அறையப்பட்ட இயேசு தனியே இருக்கவில்லை. இயேசுவின் சிலுவை அருகில் இயேசுவின் தாயும், சில பெண்களும், இயேசுவின் அன்புச் சீடரும் நின்றார்கள். இங்கே ஒரு சீடத்துவ குடும்பம் உருவாக்கப்படுவதை யோவான் அடையாளப்படுத்துகிறார் (19: 25-27).

#### 4.3.3.5 இயேசுவின் சாவும் அடக்கமும் (19: 28-42)

இங்கு மேலும் மூன்று விடயங்களை தூய யோவான் குறிப்பிடுகிறார். அவை

**(அ)** இயேசுவுக்கு குடிக்க புளித்த திராட்சை இரசம் கொடுத்தனர்.

**(ஆ)** இயேசுவின் விலாவைக் குத்துதல்

**(இ)** இயேசுவின் அடக்கச் சடங்கு.

**(அ) இயேசுவுக்கு குடிக்க புளித்த திராட்சை இரசம்** கொடுத்தனர்.

''அனைத்தும் நிறைவேறிவிட்டது'' என்பதை அறிந்த இயேசு, ''தாகமாய் இருக்கிறது'' என்றார். அப்போது அவர்கள் அவருக்கு புளித்த திராட்சை இரசத்தை கொடுத்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ''என் தாகத்துக்கு காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்'' என்ற திபா. 69:21 அடிகளில் காணப்படுவது போல இறைவனே எல்லாம் என வாழ்ந்து, இறை விருப்பு எனும் பாத்திரம் பருகி முடிந்தது, ''எல்லாம் நிறைவேறிற்று'' என்பது அடையாளப் படுத்தப்படுகிறது. இயேசு ''தலைசாய்த்து ஆவியை ஒப்படைத்தார்'' என்பதன் மூலம், அவர் சுய விருப்பத்தோடு தன் உயிரைக் கையளித்தார் என யோவான் குறிப்பிடுகிறார் (19: 28-30).

**(ஆ) இயேசுவின் விலாவைக் குத்துதல்**

இயேசுவின் விலாவை ஒரு படைவீரன் குத்தினான்; உடனே இரத்தமும், தண்ணீரும் வடிந்தன என்பதை யோவான் ஒரு முக்கிய விடயமாகக் குறிப்பிடுகிறார். இரத்தம் வாழ்வையும், தண்ணீர் தூய்மைப்படுத்தும் இறையருளையும், தூயஆவியில் வாழ்வையும் குறிக்கின்றன. இயேசு இவ்விரண்டு உருவகங்கள் (6: 53-54; 7: 37-39; 3: 5)) வழியாக தாம் அளிக்கும் நிறைவாழ்வின் தன்மைபற்றி போதித்துள்ளார். இந்நிகழ்வை நேரில் கண்ட இயேசுவின் அன்புச்சீடரே இதைக் கூறினார் என்கிறார். இதைக் கேட்போர் இயேசுவில் நம்பிக்கை கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தை வெளிப்படுத்துகின்றார். இன்னும் இயேசுவின் விலா குத்தப்பட்ட நிகழ்வின் மூலம் இரண்டு பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் (விப. 12:46; செக். 12:10) நிறைவேறியதாகக் கூறுகின்றார் (19:31-.35).

**(இ) இயேசுவின் அடக்கச் சடங்கு**

இயேசுவின் அடக்க சடங்கில் அரிமத்தியா ஊரைச்சேர்ந்த யோசேப்புடன் நிக்கதேமு உடைய பங்களிப்பையும் யோவான் குறிப்பிடுகிறார். அவர் வெள்ளைப்போளமும், சந்தனத் தூளும் கொண்டுவந்து யூத முறைப்படி இயேசுவின் உடலை அடக்கம் செய்தனர். வெள்ளைப்போளமும், சந்தனத் தூளும் இயேசுவுக்கு கொடுக்கப்பட வேண்டிய அரசருக்குரிய மரியாதை கொடுக்கப்பட்டது என்பதைக் குறிக்கின்றன. ''ஞானிகள் குழந்தை இயேசுவுக்கு பொன்னும் வெள்ளைப்போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள்'' (மத். 2: 11) என்பது நினைவில் கொள்ளப்படலாம்.

### 4.3.4 உயிர்ப்பு (யோவா. 20)

- உயிர்ப்பு என்பது மறுமைபற்றி யூதச் சமூகத்தில் நிலவிய முக்கிய ஒரு சமயக் கருத்தாகும். அன்றைய யூத சமூகத்தின் புரிதலில் உயிர்ப்பு என்பது இறப்புக்குப் பின்பும் உடலுடனும் உள்ளத்துடனும் முழு ஆளாக மனிதர் உயிர் வாழ்வதாக ஏற்கப்பட்டது.
- புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் இயேசுவின் உயிர்ப்பை யூத சமூக புரிதலில் வருணிக்கவில்லை. இயேசு உயிர்ப்பின் வழியாக மறுமையை அடைந்துவிட்டார்; அவர் நித்தியத்துக்கும் நிறைவுக்கும் ஆகிவிட்டார்; உயிர்ப்புக்குப் பின்னர் அவர் வாழ்வது முன்னைய வரலாற்று வாழ்வு அல்ல என அவை கூறுகின்றன.
- எடுத்துக்காட்டாக, எம்மாவுக்குச் செல்லும் வழியில் அவருடன் பல கல் தொலைவு நடந்த பின்பும், உரையாடிய பின்பும் இரண்டு சீடர்களும் அவரை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. இறுதியில் அப்பம் பிட்கையில்தான் அவரை இனம் கண்டு கொள்கின்றனர் (லூக்.24:13-32). ஏனைய சீடர்களும் அவரை ஓர் ஆவி என்றே நினைக்கின்றனர் (லூக். 24:37).

- மகதலா மரியா அவரைக் கண்டுகொள்ளாது தோட்டக்காரன் என நினைக்கின்றார் (யோவா. 20: 14-15). மீன்பிடிக்கச் சென்ற சீடர்களும் கரையில் நின்ற அவரை அறிந்து கொள்ளவில்லை (யோவா. 21: 4). மேலும் அவர் முன்பு போலன்றி திடீரெனத் தோன்றுகிறார், மறைகிறார், கதவுகள் மூடியிருக்கும்போதும் உள்ளே வருகிறார், வெளியே செல்கிறார்.
- **இன்னும் உயிர்த்த இயேசுவைக் 'கண்டவர்கள்' அவர்களுடைய சீடர்கள் மட்டுமே. அதாவது விசுவசித்தவர்கள் மட்டுமே இயேசுவின் உயிர்ப்பு பிரசன்னத்தை அனுபவித்தார்கள். உயிர்ப்புக்குப் பின்பு இயேசுவின் பிரசன்னம் எல்லைகளைக் கடந்த பிரசன்னமாகின்றது. அவரில் விசுவாசம் கொண்டவர்களுக்கு அவர் வாழ்கிறார்.**
- இறந்த இயேசு உயிர்த்துவிட்டார்; இன்றும் நம்முடன் வாழ்கிறார் என்பது கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படை நம்பிக்கையாகும். இதனால் தான் தூய பவுல் கூறுகிறார்: ''கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாகிவிடும்'' (1கொரி. 15:14).

#### 4.3.4.1 வெறுமையான கல்லறை (யோவா. 20: 1-10)

வாரத்தின் முதல் நாளன்று விடியல் காலையில் இயேசு அடக்கப்பட்ட கல்லறைக்கு மகதலாமரியா சென்றாள். வெறுமையான கல்லறையைக் கண்டு இயேசுவின் உடலைக் களவாடிவிட்டனர் என எண்ணி, சீமோன் பேதுருவுக்கும், அன்புச் சீடருக்கும் அறிவித்ததாக யோவான் கூறுகிறார். அவர்கள் கல்லறையில் இயேசுவின் உடலைச் சுற்றிய துணியையும், தலையை மூடியிருந்த துண்டையும் கண்டனர். இவர்களுள் யோவான் ''கண்டார்; நம்பினார்.'' இயேசுவின் உயிர்ப்பை நம்புவதற்கு அவர்கள் கண்டவை தூண்டுதலாக அமைந்தன. இயேசுவின் உடலை எவரும் திருடிச் செல்லவில்லை என்பதைக் காட்டவே இக்காட்சிகள் முன்வைக்கப்படுகின்றன.

#### 4.3.4.2 இயேசு மகதலா மரியாவுக்குத் தோன்றுதல் (யோவா. 20: 11-18)

- கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டிருந்த மகதலா மரியாவுக்கு இயேசு தோன்றினார். ஆனால் அவர் இயேசுவை அடையாளம் காணவில்லை. அவரைத் தோட்டக் காரன் என எண்ணிக் கொண்டு அவரோடு பேசினார்.
- அவர் அவளை 'மரியா' என்று அழைத்தபோது அவரை ''போதகரே'' என விழித்தாள். அவரைப் பற்றிக் கொள்ள முயன்றார். ஆனால் தம்மைப் பற்றிக் கொள்ளவேண்டாம் என்றும், தாம் இறை தந்தையிடம் செல்ல இருப்பதை தம் சகோதரருக்கு அறிவிக்கும்படியும் இயேசு அவரை கேட்டுக் கொண்டார். பெண்களுக்கு இயேசு அளித்த விடுதலை இதில் தெரிகிறது.
- இங்கே இரண்டு செய்திகள் தரப்படுகின்றன. இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இயேசு இறைதந்தையிடம் செல்லும் ஒரே நிகழ்வாகும். அடுத்து, இயேசுவின் உயிர்ப்பு பிரசன்னத்தைக் கண்டவர்கள் அதை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அவை வாழப்பட வேண்டும். மரியா இயேசு உயிர்த்துவிட்டார் என்ற செய்தியை முதல் முறையாக மற்றவர்களுக்கு அறிவிக்கின்றார்.
- உயிர்த்த இயேசுவில் அனைவரும் இறைதந்தையில் ஒன்றித்து அடையும் நிலைவாழ்வுக்கு அழைக்கப்படுகின்றனர். ''நான் தந்தையுள்ளும், நீங்கள் என்னுள்ளும், நான் உங்களுள்ளும் இருப்பதை நீங்கள் அந்நாளில் அறிந்து கொள்வீர்கள்'' (14: 20).

#### 4.3.4.3 இயேசு சீடர்களுக்குத் தோன்றுதல் (20: 19-23)

- யூதர்களுக்குப் பயந்து சீடர்கள் எருசலேமில் ஓரிடத்தில் கூடியிருந்தார்கள். அவர்கள் இன்னும் இயேசுவின் உயிர்ப்பை அறிந்திருக்கவில்லை அல்லது நம்பவில்லை. இயேசு கதவுகள் மூடியிருக்க அவர்கள் நடுவே தோன்றி, ''உங்களுக்கு அமைதி உரித்தாகுக'' என்று கூறி அவர்களை வாழ்த்தினார்.
- ''இறைவன் உமக்கு எல்லாவித நன்மைகளையும் அளிப்பாராக'' எனப் பொருள் பெறுகின்றது. இது யூதர்கள் ஒருவர் ஒருவரைச் சந்திக்கும்போது கூறும் 'சலோம் அல்லேகும்' என்ற வாழ்த்துச் செய்தியாகும். இயேசுவின் இச்செய்தி அச்சங் கொண்டிருந்த சீடர்களுக்கு தெம்பையும் நம்பிக்கையையும் அளித்தது. இயேசு அவர்களுக்கு அளித்த சமாதானம் உலகம் அளிக்கும் சமாதானம் போன்றதல்ல (14: 27). அமைதி இறைவனின் கொடையாகும்.
- இயேசு அவர்களுக்கு சமாதானம் உரித்தாகுக என்ற பிறகு ''அவர்கள் மீது ஊதி தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றார். படைப்பின் தொடக்கத்தில் இறைவன் மனிதரில் ஊதி தம் உயிர் மூச்சை அளித்தது (தொநூ. 2: 27) போல இயேசுவும் தம் மூச்சை அவர்கள் மீது ஊதி அவர்களைப் பலப்படுத்துகிறார்.

#### 4.3.4.4 இயேசு தோமாவுக்குத் தோன்றுதல் (20: 24-29)

- இயேசுவின் சீடர்களுள் ஒருவரான தோமா இயேசு சீடர்களுக்குத் தோன்றியபோது அவர்களுடன் இருக்கவில்லை. அவர் இயேசுவோடு எருசலேம் சென்று சாகவும் தயாராக இருந்தவர். அவர் எதையும் எளிதாக ஏற்றுக் கொள்ளாத இயல்பு கொண்டவர். மற்றச் சீடர்கள் அவரிடம் ''ஆண்டவரைக் கண்டோம்'' என்று சொன்னபோது, அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.
- சீடர்கள் கதவுகள் பூட்டப்பட்ட அறைக்குள் இருந்த வேளையில் அவர்கள் நடுவே இயேசு தோன்றினார். தோமா விரும்பியது போல தம்மைத் தொட்டுப்பார்க்க இயேசு அவரிடம் கேட்டுக்கொண்டார். ''ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்'' என்றார். உடனே தோமா ''நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!'' என்று சொல்லி அவர் மீது விசுவாத்தை அறிக்கை யிட்டார். இங்கே தோமா இயேசுவை கடவுள், ஆண்டவர் என அழைக்கிறார். அப்போது இயேசு தோமாவிடம் ''நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்'' என்றார்.

இந்நிகழ்வில் மூன்று விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவையாவன:

**(அ)** இயேசுவில் நம்பிக்கை கொள்ள அழைப்பு

**(ஆ)** தோமாவின் விசுவாச அறிக்கை

**(இ)** காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர்

யோவானின் கருத்தில் 'காண்பது' என்பது விசுவசித்தல் என்ற பொருளாகின்றது. மகதலா மரியா இயேசுவைக் கண்டதாகக் கூறியதை சீடர்கள் நம்பவில்லை. அவர்கள் உயிர்த்த இயேசு அவர்களுக்குத் தோன்றிய பின்பே நம்பினார்கள். முதல் சீடர்களுக்குப் பின் வந்தவர்கள் சீடர்கள் அறிவித்ததைக் கேட்டே நம்பினார்கள்.

இயேசுவின் உயிர்ப்பு பற்றி செய்தியை முதலில் எழுதியவர் தூய பவுல் (1கொரி. 15:3-7). இயேசுவின் உயிர்த்த தோற்றங்களைக் கண்டு விசுவாசத்தை அறிவித்த சீடர்களின் அனுபவமே இயேசுவின் உயிர்ப்புக்கான ஆதாரமாகும்.

உயிர்த்த இயேசு அச்சமும் ஐயமும் கொண்டிருந்த சீடர்களுக்குத் தோன்றி துணிவையும் நம்பிக்கையையும் அளித்தார். அவர்களுக்குப் புதுவாழ்வளித்தார். சிலுவை மரணத்தின் பின்பு சிதறுண்டிருந்த சீடர்களை நற்செய்தித் தூதுப் பணிக்கு தயார்படுத்தினார். “இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பட்டுள்ளன” (யோவா. 20:31) என்கிறார் தூய யோவான்.

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பால் சீடர்களும், அவரில் விசுவாசம் கொண்டவர்களும் இயேசுவின் படிப்பினைகளை வாழ வேண்டும் என்ற நோக்கம் கொண்டார்கள். அவர்கள் இயேசுவின் புதிய நெறியைப் பின்பற்றினார்கள் (திப. 9: 2). அவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்; துன்புறுத்தப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் யூத சமயப் பாரம்பரியத்தில் புதிய வாழ்க்கை முறையை வாழ்ந்தார்கள்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயல்பாடு**

**படி 1:** இயேசுவின் காலத்தில் துன்புறுத்தலும், கொலைகளும் நடந்த காரணிகளின் பின்னணியில் நடந்த காரணிகளில் இயேசுவின் கைது, பாடுகள், மரணம் வழியாகக் கிடைத்த விழிப்புணர்வை வெளிப்படுத்துவார்.

**படி 2:** இயேசுவின் பாடுகள், மரணம் இன்றைய சூழலிலும் ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்கு சவாலாகும் என்பதை ஏற்று, அதனை ஆதாரங்களுடன் விளக்குவார்.

**படி 3:** உயிர்ப்பு பற்றிய யூதர்களின் பொதுவான நம்பிக்கைக்கும், இயேசுவின் உயிர்ப்பு பற்றிய நற்செய்தியாளர்களின் நம்பிக்கைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கி, இயேசுவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டவர்கள் வாழ்வில் ஏற்பட்ட புதிய சமூக, சமய விழிப்புணர்வை ஏற்றுக்கொண்டு, இன்றைய சூழலில் கிறிஸ்தவ விசுவாசிக்கு தேவைப்படும் சமூக சமய விழிப்புணர்வு பற்றி வெளிப்படுத்துவார்.

**படி 4:** பாஸ்கா மறைபொருள் கிறஸ்தவ விசுவாச வாழ்வுக்கு கருவாக்கும் என்பதை ஒரு ஆக்கமாக முன்வைப்பார்.

**துணை நூல்கள்**


01. தே. அல்போன்ஸ், *கிறிஸ்தியல், இயேசு கிறிஸது நேற்றும் இன்றும்*, தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

02. குமார் ராஜா, *இயேசுவைப் போல, இயேசுவின் ஆளுமையும், மாதிரியும்*, வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல, 2011

03. பவுல் லியோன் வறுவேல், *யார் இந்த இயேசு?*, வைகறை வெளியீடு, திண்டுக்கல்,, 2006

04. …………………..........., *யாரைத் தேடுகிறீர்கள்?* இயேசுவும் நற்செய்தி ஆய்வும், வைகறை பதிப்பகம், தமிழ்நாடு, இந்தியா, 2007

05. Albert Nolan, Jesus, Before Christianity, Orbis Books, Maryknoll, New York, 1992

06. Oliver Larry Yarbrough, ed., passion: Contemporary Writers On The story of Calvery, Teological pulication of in India, Banglore, 2015

07. Thomas P. Rausch, Who is Jesus?, An Introduction to Christology, Claretian publications, Philippines, 2005

**தேர்ச்சி 5.0** : கிறிஸ்தவ மறையின் ஆரம்பத்தையும், நற்செய்தியைப் பரப்ப பவுல் ஆற்றிய பங்களிப்பையும் அறிந்து கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** தொடக்கக் கிறிஸ்தவர்களின் வாழ்வு முறையை அறிந்து அதன்படி வாழ முனைவார்

**பாடவேளை : 20**

**கற்றல்பேறுகள்:**

- கிறிஸ்தவ மறையின் தொடக்க வரலாறு பற்றிய தகவல்களை திரட்டுவார்
- தூய ஆவியின் வருகையோடு புதிய கிறிஸ்தவ வாழ்க்கை முறை ஆரம்பமாகியது என்பதை ஏற்றுக்கொள்வார்.
- திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பார்
- கிறிஸ்துவத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்பார்
- குழுச்செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்பார்

## விடய உள்ளடக்க வழிகாட்டி

## 5.1.1 தூய ஆவியின் வருகையும் திருச்சபையின் ஆரம்பமும்

### 5.1.1.1. தூய ஆவியின் வருகை (பெந்தகோஸ்தே விழா) (திப 2:1-41)

- யூதர்களின் விழாவாகிய பெந்தகோஸ்தே தினமே திருச்சபையின் ஆரம்ப நாளாகும்
- பெந்தகோஸ்தே விழாவிற்கு யூதர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து அதனை கொண்டாடி வந்தார்கள். (தி.ப 2:5)
- அன்றைய நாளில் சீடர்கள் அனைவரும் ஒரே இடத்தில் இயேசுவின் தாய் மரியாவுடன் 120 பேர் ஒன்று கூடி செபித்துக்கொண்டிருந்தார்கள்.
- இயேசுக்கிறிஸ்து வாக்களித்த துணையாளரை அனுப்புவார் என்ற அவரது வாக்குறுதி நிறைவேற காத்திருந்தனர்.
- பெந்தகோஸ்தே நாளில் தூய ஆவியின் வருகையுடன் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு செயலாற்றும் ஒரு சமூகமாக திருச்சபை பிறந்தது.
- பழைய ஏற்பாட்டில், சீனாய் மலையில், இறை மாட்சியை விபரிக்கப் பயன்படுத்திய சொற்களை **'கொடுங்காற்று வீசுவது போன்ற ஒரு இரைச்சல் . ….நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் …'** ஆசிரியர் இங்கு பயன்படுத்தி, தூய ஆவி இறைவன் என்பதையும், அவர் மேலிருந்து இறங்கி வருவதையும், அவருடைய பிரசன்னத்தையும், இறை நீதியையும் உணர்த்துகிறார். நெருப்பு இறுதிக் காலத்தின் தூய்மையின் அடையாளம். காற்று வீசுதல் ஆவியை, புதிய சக்தியை அளிப்பதைக் காட்டுகிறது.
- தூய ஆவி பிளவுபட்ட நா வடிவில் அங்கு கூடியிருந்த ஒவ்வொருவர் மேலும் வந்திறங்கியது வலியுறுத்தப்படுகின்றது. அதாவது தூய ஆவி எல்லோருக்கும், முழுத் திருச்சபைக்கும் அளிக்கப்படுகிறார்.
- இறைவாக்கினர் யோவேல் இறைவாக்கு "இறுதி நாளில் எல்லோர் மேலும் ஆவியைப் பொழிவேன்" (யோவே 2:28-32) நிறைவேறியது.
- தூய ஆவியின் வருகை சீனாய் மலையில் இறைவன் மோசேக்கு காட்சி கொடுத்ததை எமக்கு நினைவூட்டுகிறது. இது ஒரு புதிய யுகத்தின் ஆரம்பத்தை, புத்துயிர் அளிக்கப்படுவதை, புதிய இஸ்ரயேலர் இனம் உருவாகுவதை, திருச்சபையின் பிறப்பை குறிக்கின்றது.

- இயேசுவின் சீடர்கள் தூய ஆவியைப் பெற்றதற்கான வெளி அடையாளங்களாக தூய ஆவியின் செயற்பாடுகள் அருங்குறிகளாகத் தரப்படுகின்றன. படிப்பறிவில்லாத கலிலேயர் பிற மொழிகளில் பேசத் தொடங்கினர். இவ்வாறு பிற மொழிகளில் பேசுவதை மற்றவர்கள் தத்தம் சொந்த மொழியில் கேட்டனர்.
- இந் நிகழ்வு எமக்கு பாபேல் கோபுர நிகழ்ச்சியை (மொழிக் குழப்பம், மக்கள் சிதறுண்டு செல்லுதல்) நினைவுபடுத்துகிறது. ஆனால் இங்கு வெவ்வேறு மொழி பேசுகின்றவர்கள் ஒன்று சேருகின்றார்கள். சீடர்கள் பிற மொழிகளில் பேசுவது, அவர்கள் பணி அகிலமெங்கும் தேவை என்பதைக் காட்டுகிறது. தூய ஆவியின் வருகையால் பன்மைக்குள் ஒருமை காணப்படுகிறது.
- தூய ஆவியின் வருகையைத் தொடர்ந்து திருத்தூதர்களில் ஏற்பட்ட மாற்றங்கள் (பல மொழி பேசுதல், அறிவுத்தெளிவு பெறல், துணிவுடன் சான்று பகர்தல், சிறந்த பேச்சாளராக மாறுதல் வல்லசெயல்கள் செய்தல்) தூய ஆவியின் கொடைகளை அவர்கள் நிறைவாகப் பெற்றிருப்பதைக் காட்டுகிறது.
- புதிய ஏற்பாட்டில் இன்று கிறிஸ்தவர்கள் பெந்தக்கோஸ்து விழாவை தூய ஆவியின் வருகையின் விழாவாக, திருச்சபையின் பிறப்பு விழாவாக, திருச்சபை செயலூக்கம் பெற்றதை நினைவு கூரும் விழாவாக கொண்டாடுகின்றனர்.
- பெந்தக்கோஸ்து விழாவிலே கிறிஸ்துவின் பாஸ்கா அதன் உச்ச நிலையை அடைகிறது. இயேசு இறந்து, உயிர்த்தெழுந்து, இறைத் தந்தையின் வலப்பக்கம் உயர்த்தப்பட்டு, அப்போஸ்தலர் மீது தம் ஆவியை அனுப்பியதில் தம் மீட்புப் பணியை முற்றுப் பெறச் செய்தார்.

### 5.1.1.2 திருச்சபையின் ஆரம்பமும் பணியும்

- மோசேக்கு நெருப்பு வடிவில் இறைப்பிரசன்னம் உணர்த்தப்பட்டு பணி கொடுக்கப்பட்டது போல பெந்தகோஸ்தே நாளில் அதேவடிவில் இறைப்பிரசன்னமும் பணிக்கான அழைப்பும் திருத்தூதர்களுக்கு வழங்கப்படுகிறது.
- திருச்சபைக்கு தலைமைதாங்க அழைக்கப்பட்ட திருத்தூதர் பேதுரு தனது முதல் திருவுரையை மக்களுக்கு வழங்கி பணியை ஆரம்பிக்கிறார். அவருடைய உரையின் சாராம்சம்:
    - இயேசுவே ஆண்டவராகிய மெசியா
    - யூதர்கள் அவரை கழுமரத்தில் ஏற்றிக் கொன்றார்கள்
    - அவரோ மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்
    - அதற்கு நாங்கள் சாட்சிகள்
- அவரது திருவுரையைக் கேட்டு 3000 பேர் திருச்சபையில் சேர்ந்து கொண்டனர்.
- தூய ஆவியின் வல்லமையால் பேதுரு பிறவி முடவனைக் குணமாக்கிய சம்பவம் மக்களை திருத்தூதர்களின் படிப்பினைக்கு செவிசாய்க்கத் தூண்டியது.
- தூய ஆவியை பெற்றுக் கொண்ட திருத்தூதர்களின் விசுவாச வாழ்வும், நற்செய்தி அறிவிப்பும், செபமும் திருச்சபையை வளர்ச்சியுறச் செய்தது.
- கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைப்பதே தங்கள் வாழ்வின் ஆதாயம் என்பதை தங்கள் வாழ்வில் காட்டினார்கள். துன்பங்களையும் கசையடிகளையும் பொறுத்துக்கொண்டு திருச்சபை உலகெங்கும் பரப்பப்பட சாட்சிகளாய் விளங்கினார்கள்.
- ஆதித் திருச்சபை எருசலேமில் எங்கும் விரைவாகவும் துரிதமாகவும் பரவி, ஓரு வலிமையான, கவர்ச்சியான சமூகமாக விளங்கியது. இது அங்கு பெரும்பான்மையாக வாழ்ந்த யூதர்களுக்கு எரிச்சலையும், வெறுப்பையும், பகைமையையும் மூட்டி வளர்த்தது.

## 5.1.2 தொடக்கக் கிறிஸ்தவர்களின் குழும வாழ்வு

- ஆதித் திருச்சபையில் திருத்தூதர்களின் போதனையை ஏற்று, ஆண்டவரும் மெசியாவுமாகிய இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்கள், உடனடியாக திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் சேர்க்கப்பட்டனர்.
- பன்னிரு திருத்தூதர்களைக் கொண்ட இச் சிறிய குழுவின் அயரா முயற்சியினாலும், போதனையினாலும், அவர்கள் செய்த அருங்குறிகளாலும் இவ் வளர்ச்சி ஏற்பட்டதை நாம் அவதானிக்கின்றோம்.
- கிறிஸ்துவின்மேல் விசுவாசம் கொண்டு, அவர் பெயரால் திருமுழுக்குப் பெற்று, திருச்சபையின் அங்கத்தவர்களான எல்லோரும் ஒன்று கூடி ஒரே சமூகமாக வாழந்தார்கள் இவ் ஆதிக் கிறிஸ்தவ சமுதாயத்தில், அவர்களை ஏனைய மக்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டிய, சில சிறப்புப் பண்புகளை நாம் காண்கிறோம்.
- அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.

### 5.1.2.1 திருத்தூதரின் படிப்பினைகளுக்கு செவிமடுத்தல்

- ஆதிக் கிறிஸ்தவர்கள் பேதுருவின் மறையுரை வழியாக தாங்கள் பெற்றுக் கொண்ட முதல் விசுவாசத்தை, தொடர்ந்து திருத்தூதர்களின் போதனைகளை கேட்பதன் வழியாக, வளர்த்து உறுதிப்படுத்தினர்.
- நற்செய்திப் பணிக்கு தங்களை ஆயத்தப்படுத்த இறைவனை, கிறிஸ்துவை பற்றி அறிவதில் மிகவும் ஆர்வமாய் இருந்தனர்.
- மறையுண்மைகளை, வேத நூலை மென்மேலும் கற்றறிய ஆவலும் ஆர்வமும் உள்ளவர்களாகக் காணப்பட்டனர்
- திருத்தூதர்களின் வழியாக பல புதுமைகளும் அரும் செயல்களும் நடைபெற்றன இதனால் ஆதிக்கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை இறைவனில் ஆழப்படுத்தினர்.

### 5.1.2.2 நட்புடன் உறவாடுதல்

- கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்கள் தங்களுக்குள் ஒரு புது உறவு ஏற்பட்டுள்ளதை உணர்ந்தவர்களாய், அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிரும் உள்ளவர்களாய் இருந்தனர்.
- அவர்கள் எல்லோரும் திருத்தூதர்களின் தலைமையின் கீழ் பொதுவாழ்வில் பங்கெடுத்து, ஒவ்வொருவருடன் அந்நியோன்னியமாகப் பழகி, நட்புறவுடன் உறவாடி, பொறுப்புணர்வுடன் நடந்தனர்.
- உண்மைக் கிறிஸ்தவனுக்கு அடையாளமாக கிறிஸ்து கூறிய அன்பிலும், ஒற்றுமையிலும் ஒன்றித்து வாழ்ந்தனர்.
- தங்கள் உடமைகளையெல்லாம் பொதுப் பொருளாகப் பயன்படுத்தி, எவ்வித வேற்றுமையோ வேறுபாடோ இன்றி, ஒற்றுமையாக வாழ்ந்தனர்.
- இவர்களின் சமூக வாழ்க்கை, அன்பு நிறைந்த ஒற்றுமையான வாழ்க்கை ஏனையோரைக் கவர்ந்தது.
- அவர்களுக்குள்ளே எபிரேய மொழி பேசும் யூதர்களும், கிரேக்க மொழி பேசும் யூதர்களும் இருந்தாலும், திருமுழுக்கின் போது அவர்களை ஆட்கொண்ட தூய ஆவியே அவர்கள் அனைவரையும் நெருக்கிப் பிணைத்திருந்தார்.

### 5.1.2.3.அப்பம் பிடுதல், பகிர்ந்துவாழ்தல்

- ஆதிக் கிறிஸ்தவர்கள் மத்தியில் அன்பு விருந்து நடைபெற்றது. அது 'அகாப்பே' என்ற கிரேக்கச் சொல்லினால் அழைக்கப்பட்டது. இந்த அன்பு விருந்தோடு இணைந்து அப்பம் பிட்கும் வழிபாடு நடைபெற்றது.
- ஆதிக்கிறிஸ்தவர்கள் எருசலேம் ஆலயம், செபக் கூடங்களுக்கு சென்று அங்கு நடைபெறும் யூதப்பலிகளிலும் வழிபாடுகளிலும், செபங்களிலும் பங்கெடுத்தாலும் ஒவ்வொருநாளும் தாங்கள் தனியார் வீடுகளில் ஒன்றுகூடி கிறிஸ்தவர்களுக்கே உரித்தான நற்கருணை வழிபாட்டில் எளிய உள்ளத்தோடும் பேருவகையோடும் பங்குபற்றினர்.
- எல்லோரும் ஒன்றாக சேர்ந்து பந்தியில் விருந்துண்டு மகிழ்ந்தனர்
- 'அப்பம் பிடுதல்' என்பது நற்கருணையைக் குறிக்கும் சொற்றொடராகும்.
- உடமைகள் நிலபுலன்கள் உள்ளோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்து அளித்தனர்.
- பிறர் நல் வாழ்வில் அக்கறை கொண்டவர்களாய், அவர்கள் தேவைகளை நிறைவு செய்பவர்களாய் வாழ்ந்தனர்.
- அவர்கள் அனைவரும் இவ்வுலகப் பொருட்களிலே எவ்வித பற்றும் அற்றவராய் இருந்தார்கள்.
- தத்தம் உடமைகளை தமக்குச் சொந்தமானதாய்க் கருதாமல் பொதுப் பொருட்களாகக் கொண்டு வாழ்ந்தனர்.
- அப்படி செய்ய வேண்டும் என்ற கட்டளை எதுவும் இல்லாமலே தாமாக முன்வந்து, கிறிஸ்துவுக்காக, அவர் போதனையின்படி அனைத்தையும் துறந்தனர்.
- ஏதாவது தேவையில் இருப்பவர்களை அங்கு காண முடியவில்லை. ஏனெனில் அவர்களின் தேவைகள் உடனடியாக மற்றவர்களால் நிறைவு செய்யப்பட்டன.
- நிலபுலன்கள் உடையோர். அதை விற்று, பணத்தை கொணர்ந்து திருத்தூதர்களின் காலடியில் வைத்தனர். இது அவற்றை இறைவனுக்கு காணிக்கை ஆக்குவதைக் குறிக்கிறது.
- திருத்தூதர்கள் அவற்றை அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்து அளித்தனர். இதன் விளைவாக அவர்களுக்குள் எவ்வித வேற்றுமையோ வேறுபாடோ காணப்படவில்லை.
- இருப்பினும் அனனியா சபிரா இருவரின் மாறான எண்ணங்கொண்ட நடத்தையும் அதற்கு அவர்கள் பெற்ற தண்டனையும் அனைவருக்கும் ஒரு படிப்பினையாகவும் இருந்தது (திப 5: 1-11)

### 5.1.2.4 இறைவேண்டலில் நிலைத்திருந்தனர்

- ஆதிக் கிறிஸ்தவர்கள் எருசலேம் ஆலயம், செபக் கூடங்களுக்கு சென்று, அங்கு நடைபெறும் யூத பலிகளிலும், வழிபாடுகளிலும், செபங்களிலும் பங்கெடுத்தாலும், ஒவ்வொரு நாளும் தாங்கள் தனியார் வீடுகளில் ஒன்று கூடி, கிறிஸ்தவர்களுக்கே உரித்தான நற்கருணை வழிபாட்டில் எளிய உள்ளத்தோடும், பேருவகையோடும் பங்குபற்றினர்.
- ஓய்வு நாளையும் பிரமாணிக்கமாக அனுசரித்தனர்.
- தனித்தனியே மட்டுமல்ல, அவர்கள் எல்லோரும் ஒரே குடும்பமாக, ஒரே சமூகமாக ஒன்று கூடி, இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, தம் தேவைகளுக்காக அவர் உதவியை வேண்டினர்.
- மேலும் அவர்கள் இறைவன் தங்களோடு, தங்கள் மத்தியில் பிரசன்னமாக இருக்கிறார் என்ற உணர்வுடன், தேவ பயத்துடனும், பயபக்தியுடனும் வாழ்ந்தனர்.
- ஆகவே அவர்கள் ஏனைய மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். இறைவனுடைய அருளும் ஆசீரும் அவர்களுக்குத் தாராளமாகக் கிடைத்தன. நாளுக்கு நாள் பல புது அங்கத்தவர்கள் அவர்களின் சமூகத்தில் சேர்ந்தனர்.

- முதல் கிறிஸ்தவர்களின் அன்பு நிறைந்த, பகிர்ந்து வாழும் முன்மாதிரிகையான வாழ்க்கையின் நிமித்தம் மற்றவர்கள் அவர்கள்மேல் நல்லெண்ணம் கொண்டவர்களாய், அவர்களை பெரிதும் மதித்தனர்.
- பலர் அவர்களடைய வாழ்க்கையால் கவரப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, திருமுழுக்கப் பெற்று, திருச்சபையில் சேர்ந்தனர். திருச்சபையும் நாளுக்குநாள் வளர்ந்தது.

### 5.1.3 திருத்தொண்டர் நியமனம் (திப 6)

- கிறிஸ்தவர்களின் தொகை பெருகவே, அதை நிர்வகிக்க கிறிஸ்தவ சமூகம் அமைப்புப் பெறுவதை காண்கிறோம். கிறிஸ்தவர்களின் தொகை அதிகரிக்க, அவர்களின் பொது வாழ்வில் பிரச்சினைகள் தோன்றின.
- கிரேக்க மொழி பேசும் யூதக் கிறிஸ்தவர்கள் தம் கைம்பெண்கள் அன்றாடப் பந்தியில் சரியாகக் கவனிக்கப்படவில்லையென, எபிரேய மொழி பேசுகின்ற யூதர்களுக்கு எதிராக, திருத்தூதரிடம் முறைப்பாடு செய்தனர்.
- விசுவாசிகள் தம்மிலிருந்து நற்சான்று பெற்ற ஆவியானவரின் வல்லமையும் ஞானமும் கொண்ட எழுவரைத் தெரிவு செய்தனர். திருத்தூதர்கள் அவர்கள் மேல் கைகளை விரித்து, இறைவனை வேண்டி, அவர்களை அறப்பணிக்கென நியமனம் செய்தனர். அவர்களே திருச்சபையில் முதல் நியமனம் பெற்ற பணியாளர்கள் (திப 6: 1-6).
- இவ்வாறாக கிறிஸ்தவ சமூகம் இயேசுவின் கட்டளையை நிறைவேற்ற வளர்ச்சிப் பாதையில் பயணித்தது.

## உத்தேச கற்பித்தல் செயற்பாடு

1. கிறிஸ்தவ மறையின் ஆரம்பம் வளர்ச்சி பற்றி ஆராய்வார்.
2. புதிய கிறிஸ்தவ வாழ்க்கைப் பண்புகளை எடுத்து விளக்குவார்.
3. நற்செய்திபணி விரிவாக்கத்திற்கு திருத்தொண்டர்களின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடுவார்.

## உசாத்துணை நூல்கள்


- பிலிப்ஸ் இயேசுதாசன் அ.ம.தி, ***கடுகுமரம்,*** அமலஉதயம், திருமலை– 2010.
- பிலிப்ஸ் இயேசுதாசன் அ.ம.தி, ***பரிசுத்த ஏடுகளை கற்றல்,*** அமலவெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம் - 2002.
- டி.ஜெயராஜ்,சே.சு, ***அப்போஸ்தலர்பணி விளக்கவுரை,*** அருள்வாக்கு மன்றம், திருச்சிராப்பள்ளி, 1984.
- பெர்ணாட் ஆர். இயங்மன், ***நற்செய்தியைப் பரப்புதல்***, தமிழ்த்திருச்சபைகள் சமயக் கல்விக்குழு, மட்ராஸ் -1976.

**தேர்ச்சி 5.0** : கிறிஸ்தவ மறையின் ஆரம்பத்தையும் நற்செய்தியைப் பரப்ப பவுல் ஆற்றிய பங்களிப்பையும் அறிந்து கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.2 :** கிறிஸ்தவத்தை அனைவருக்கும் எடுத்துச் செல்ல பவுல் கையாண்ட வழி முறைகளை அறிந்து அதன்படி செயலாற்றுவார்.

**பாடவேளை : 40**

**கற்றல் பெறுபேறுகள் :**

- தூய பவுலின் மறைபரப்பு பணி பற்றிய தகவல்களை சேகரிப்பார்.
- தூய பவுல் புற இனத்தவரின் அப்போஸ்தலர் என ஏற்றுக் கொள்வார்.
- தூய பவுலின் படிப்பினைகளை பட்டியலிட்டுக் காட்டுவார்.
- தூய பவுல் மறைபரப்புக்கு கையாண்ட வழிமுறைகளைப் பின்பற்றுவார்.
- நற்செய்திப் பணியில் ஈடுபடுவோரோடு இணைந்து செயற்படுவார்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி :

### 5.2.1. தூய பவுல்

- ஆரம்பகால கிறிஸ்தவத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் தூய பவுல் ஆவார்.
- யூத இனத்தில் தோன்றிய கிறிஸ்துவின் நற்செய்தியைப் புறஇனத்தவருக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்றால் இரண்டுக்கும் பொதுவான ஒருவரால் அது நிறைவேற்றப்பட வேண்டும் என்ற இறைவனின் திட்டம் பவுலில் நிறைவேறுகிறது.
- ஆரம்பகால கிறிஸ்தவத்தின் வளர்ச்சியைப் பற்றி அறிய விரும்புகின்றவர்கள் அவர் வாழ்வையும், அவர் ஆற்றிய பணியையும் அறிந்திருத்தல் அவசியம்.

### தூய பவுலின் வாழ்க்கைப் பின்னணி

- தூய பவுல் சின்ன ஆசியாவிலுள்ள சிசிலியாவின் தலைநகராகிய தர்சு என்ற கிரேக்க நகரத்தில் பிறந்தவர். இந்த தர்சு நகரின் புவியியல் அமைப்பு, சிறப்பு வாய்ந்ததாய் அமைந்திருக்கின்றது.
- தர்சு ஒரு வர்த்தக நகரம் மட்டுமல்ல, அது கிரேக்க - உரோமை முறைக் கல்வியின் கலைக் கூடமாய் விளங்கியது. அந்நாளைய ஏதென்ஸ், அலெக்ஸ்சாந்திரியா ஆகிய நகரங்களை விட கல்வியில் பெரும் புகழ் பெற்றிருந்தது.
- கிரேக்க கலை, கலாசாரத்தின் மையமாக விளங்கிய இந்நகர் பல சிந்தனையாளர்களையும், தத்துவ வல்லுநர்களையும் உருவாக்கியது.
- கிரேக்க நகரில் உரோமைக் குடிமகனாகப் பிறந்த பவுல் யூத இனத்தைச் சார்ந்தவர். உரோமைக் குடியுரிமை அவருக்கு தந்தை வழியாகக் பெற்ற உரிமையாகும். அவரின் யூதபெயர் சவுல். அவருடைய உரோமைய கிரேக்கப் பெயர் பவுல்.
- இத்தகைய கிரேக்க சிந்தனைச் சூழலிலேயே பவுல் தன் சிறுபராயத்தைக் கழித்தவர். இவ்வாறு புறவினக் கிறிஸ்தவர்கள் மத்தியில், குறிப்பாக கிரேக்கர்கள் மத்தியில் நற்செய்தியை எடுத்துச் செல்ல மிகத் தகுதியுள்ளவர் அவரே.
- பவுல் சிறுவனாக இருந்த போது தர்சுவில் கிரேக்கத்தால் பாதிக்கப்பட்ட யூதத்துவத்தில் வீட்டிலிருந்து தம் பெற்றோர் வழியாக பயிற்சி பெற்றார்.

- அவர் இளைஞனாக இருந்த போது புகழ் பெற்ற யூத சட்டவல்லுநரான கமாலியேலின் கீழ் வேதநூலை நன்கு பயின்றவர். பாலஸ்தீன யூதத்துவத்தின் பாரம்பரியங்களை நன்கு கற்றவர். அவர் சட்டங்களைக் கற்றது மட்டுமல்ல, அவற்றை நுணுக்கமாகக் கடைப்பிடித்து ஒரு பரிசேயனாகவும் மாறி ஓர் சிறந்த ராபியாகவும் செயற்பட்டார்.
- யூதமறையின் மேல் உள்ள பற்றினாலும், யூத சட்டத்தின் மேல் கொண்டிருந்த ஆர்வத்தினாலும் கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்களையும் அழிக்கத் தீவிரமாக உழைத்தார்.

## 5.2.1.1. தூய பவுலின் அழைப்பும் மனமாற்றமும் (திப 9:1-19, 22:3-21, 26:12-18)

- தூய பவுல் கிறிஸ்தவர்களை அழிக்கும் நோக்குடன் தமஸ்கு நோக்கிப் பயணம் செல்லும் போது திடீரென உயிர்த்த இயேசு அவரைச் சந்திக்கின்றார்.
- தமஸ்கு பாதையில் பவுலுக்கும் உயிர்த்த இயேசுவிற்குமிடையே நடைபெற்ற இச்சந்திப்பு பவுலின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.
- இவ் அனுபவம் கிறிஸ்தவத்தின் பகைவனாகிய பவுலை திருத்தூதனாக மாற்றியது. கிறிஸ்தவத்தை அழிக்கப் புறப்பட்ட பவுலைக் கிறிஸ்தவத்தை எங்கும் போதித்துப் பரப்பும் திருத்தூதனாக மாற்றியது.
- உயிர்த்த கிறிஸ்துவின் இச்சந்திப்பு பவுலின் தனித் தன்மையை மாற்றி விடுகிறது. தான் ஒரு யூதன், பென்யமின் குலத்தவன், திருச்சட்டம் படித்தவன், பரிசேயன் என்ற உணர்வுகள் எல்லாம் பவுலிடமிருந்து காணாமல் போய் விடுகின்றன. இயேசு ஒருவரை மட்டும் சொந்தமாக்கிக் கொள்ள அனைத்தையும் குப்பையெனக் கருதி இயேசுவுக்காக அனைத்தையும் இழக்கின்றார்.
- எசாயா (எசா 49:1-6) எரேமியா (எரே 1:5) புறஇனத்தவரின் இறைவாக்கினர் போன்று, பவுல் புறவினத்தாரின் திருத்தூதன் எனப் பெயர் பெறுகின்றார். இவ்விரு இறைவாக்கினர்களைப் போல இறைவன் தன்னையும் தாயின் வயிற்றில் உருவாகும் போதே அழைத்தார் என உணர்ந்த பவுல் இவ்விருவர் போலவே தன்னையும் புறவினத்தவர்கள் இயேசுவின் நற்செய்தியைப் பெற முழுமையாக அர்ப்பணிக்கின்றார்.
- பவுலின் மனமாற்றத்தையும் திருமுழுக்கையும் தொடர்ந்து தமஸ்கு செபக்கூடங்களிலேயே இயேசு இறைமகன் என பறைசாற்றத் தொடங்கினார். ஆனால் அவரை எல்லோரும் சந்தேகக் கண்ணுடன் பார்த்தனர்.
- இவ்வேளை பர்ணபா பவுலை அந்தியோக்கியாவிற்கு அழைத்து வந்து கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கினார்.
- ஒருநாள் அந்தியோக்கிய சபையிலிருந்த இறைவாக்கினர்களும் போதகர்களும் ஆண்டவரை வழி படுகையில், தூயஆவி பர்ணபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்காக ஒதுக்கி வைக்கும் படி கேட்டுக் கொண்டதற்கிணங்க நோன்பிருந்து, அவ்விருவர் மீதும் கைகளை விரித்து செபித்து, புறவினத்தாருக்கு நற்செய்தியை அறிவிக்க அனுப்பி வைத்தனர். அவர்கள் தம் பணியை ஆரம்பித்தனர்.

## 5.2.2. தூய பவுல் மறைபரப்பிற்கு பயன்படுத்திய வழிமுறைகள்

1. **தூய பவுலடிகளாரின் மறையறிவுப்புப் பயணங்கள்**
2. **தூய பவுலடிகளாரின் கிறிஸ்தவப் படிப்பினைகள்**

### 5.2.2.1. மறையறிவிப்புப் பயணங்கள்

- பவுலின் மறைபரப்புப் பணி பற்றி தூய லூக்கா, திருத்தூதர் பணி நூலில் தரும் விபரிப்பை அடிப்படையாகக் கொண்டு அதை பவுலின் மூன்று மறைத்தூதுப் பயணங்களாக வகுப்பது வழக்கம்.

### 5.2.2.1.1 தூய பவுலின் முதல் மறைத்தூதுப்பயணம் (தி.ப. 13:4.- 14:28)

**இடம் பெற்ற காலம்:** கி.பி. 46-49 வரை ஏறக்குறைய 3 ஆண்டுகள்

**பயணத்தோழர் :** பர்ணபா, யோவான் மாற்கு

**நோக்கம் :** இதுவரை கிறிஸ்தவ நம்பிக்கையை அறியாத மக்களுக்கு அதனை நற்செய்தியாக அறிவித்தலாகும்.

**சென்ற இடங்கள்:**

- சீரியா அந்தியோக்கியா, சைப்பிரஸ் தீவு, பெருகை, பிசிதியா அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, தெருபை
- பவுலின் முதற்தூதுரைப் பயணம் குறுகியதொன்றாய் இருந்தாலும் பல புறவினத்தவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கையை ஏற்றுக்கொள்ள வழியாயிற்று.
- இதனால் யூதகலாசாரத்தில் தோன்றிய கிறிஸ்தவம் புதிய திருப்பத்தைப் பெற்றது.

### 5.2.2.1.2 எருசலேம் சங்கம் தி.ப. 15: 1-11

#### எருசலேம் சங்கம் கூட்டப்பட்டதற்கான பின்னணி

- பவுலின் மனமாற்றத்தின் பின்னர் புறவினத்தவர்கள் மத்தியில் அவர் பணியாற்றியதன் நிமித்தம் புறவினத்தவர்கள் பெருந்தொகையாக கிறிஸ்தவத்தில் இணைந்து கொண்டனர்.
- இதனால் யூதகலாசாரத்தில் வளர்ந்த கிறிஸ்தவர்களுக்கும் புறவினக் கிறிஸ்தவர்களுக்குமிடையே முரண்பாட்டை தோற்றுவித்தது.
- குறிப்பாக கிறிஸ்தவத்தைத் தழுவிய யூதர்களைப் போன்று விருத்தசேதனத்தையும் மோசேயின் சட்டங்களையும் மற்றும் சில உணவுப் பழக்கவழக்கங்களையும் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.
- இப்பின்னணியில் எருசலேமில் கூட்டப்பட்ட சங்கத்தில் சில முடிவுகள் கிறிஸ்தவம் யூதஎல்லைகளுக்கு வெளியே தோன்றிய கலாசாரத்தில் வளர்வதற்கு காரணமாயிற்று.
- திருத்தூதர்களின் இப் பொது ஒன்று கூடலில் திருத்தூதரான பேதுரு தமது யோப்பா அனுபவத்தையும் கொர்னேலியுவின் திருமுழுக்கு அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார். இவ் அனுபவப்பகிர்வு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இதில் சில முடிவுகள் முன் வைக்கப்பட்டன. அவையாவன

  1. சிலைகளுக்குப் படைத்ததைத் தவிர்க்க வேண்டும்
  2. மிருக இரத்தத்தைத் தவிர்க்க வேண்டும்

3. கழுத்து நெரிக்கப்பட்டு உயிர் இழக்கப்பட்டதன் இறைச்சியைத் தவிர்க்க வேண்டும்
4. பரத்தமையைத் தவிர்க்க வேண்டும்

- இத்தீர்மானத்தைக் கொண்டு செல்ல யூதாவும் சீலாவும் நியமிக்கப்பட்டனர்.
- இத்தீர்மானங்கள் கிறிஸ்தவ வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. விருத்தசேதனம் அல்ல நம்பிக்கை தான் எம்மைத் தூய்மையாக்குகின்றது. யூதசட்டங்கள் அல்ல. இயேசுவின் அருள் தான் எமக்கு மீட்பளிக்கின்றது. கிறிஸ்தவம் ஒரு தனிமதம். அது யூதமதத்தின் ஒரு கிளை அல்ல, என்ற அடையாளத்தைப் பெற்றது.
- ஒருவர் விருத்தசேதனம் செய்யாது, யூதசட்டங்களை கடைப்பிடிக்காது, யூதனாகாது கிறிஸ்தவனாகலாம். எவரும் தன் கலை, கலாசாரத்தை, பண்பாட்டை, மொழியை, இனத்தை, தனித்துவத்தை கைவிடாது திருச்சபையில் அங்கத்தவனாகலாம். திருச்சபை எந்த ஒரு இனத்திற்கும் மொழிக்கும் வரையறையானது அல்ல.

### 5.2.2.1.3 தூய பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணம் (திப 15:36-18:23)

**இடம் பெற்ற காலம்:** கி.பி. 50-52 வரை, ஏறக்குறைய மூன்று ஆண்டுகள்

**பயணத்தோழர்கள்:** சீலா, திமோத்தேயு, லூக்கா

**நோக்கம்:** எருசலேம் சங்கத் தீர்மானங்களை அறிவித்து, கிறிஸ்தவர்ககளை ஊக்குவித்து, உறுதிப்படுத்துதல் இப்பயணத்தின் நோக்கமாகும்.

**சென்ற இடங்களும் நிகழ்வுகளும்:**

- பவுலும் சீலாவும் முதலில் சீரியா, சிலிசியாவிலுள்ள கிறிஸ்தவ சமூகங்களை சந்தித்து சங்கத் தீர்மானங்களை எடுத்துக் கூறி உறுதிப்படுத்தினர்.
- லிஸ்திரா, துரோவா, பிலிப்பி, தெசலோனிக்கா, பெரெயா, எதென்ஸ், கொரிந்து, எபேசு.
- இப்பயணம் கீழைத்தேயத்தில் இருந்த கிறிஸ்தவம் மேலைத்தேயத்தில் பரவிச் செல்ல ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது. படிப்படியாக கிறிஸ்தவம் ஒரு தனித்துவம் பெற்ற கலாசாரத்தைக் கொண்டு வளர்ச்சியடைந்தது.

### 5.2.2.1.4 தூய பவுலின் மூன்றாம் மறைத்தூதுப்பயணம் (திப 18:23-21:20)

| | | |
|---|---|---|
| **இடம்பெற்ற காலம்** | : | கி.பி. 54- 58 வரை, ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் |
| **பயணத்தோழர்கள்** | : | திமோத்தேயு, தீத்து, லூக்கா |
| **நோக்கம்** | : | பவுலுக்கு ஏற்படப் போகும் துன்பத்தைப் பற்றி தூய ஆவி முன்னறிவித்தமையால் இறுதியாக கிறிஸ்தவ சமூகங்களை சந்தித்து கிறிஸ்தவர்களை ஊக்குவித்து உறுதிப்படுத்துவது. |

**சென்ற இடங்கள்**

- எபேசு, கொரிந்து, துரோவா, மிலேத்து, செசாரியா.

- தூய பவுல் மேற் குறித்த இடங்களுக்கு சென்று அவ்விடங்களில் கிறிஸ்தவ சமூகங்களை அமைத்ததுடன் அச்சமூகங்களில் காணப்பட்ட பிணக்குகளையும் ஐயங்களையும் தீர்த்ததுடன் சிறந்ததொரு விழுமியங்களைக் கொண்ட கிறிஸ்தவ கலாசாரத்தைத் தோற்றுவித்தார்.

### 5.2.2.2 மறையறிவிப்புக் கடிதங்களும் கிறிஸ்தவப் படிப்பினைகளும்

- பவுல் முதல் புறவினத்தவர்களின் திருத்தூதர் மட்டுமல்ல, அவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார்.
- அவர் எழுதிய திருமடல்களிலே அவருடைய சிறந்த கிறிஸ்தவ நம்பிக்கைச் சிந்தனைகளும், கருத்துக்களும் காணக் கிடக்கின்றன. அதன் வழியாக, பவுல் கிறிஸ்தவ நம்பிக்கையின் வாழ்வியலின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்திருக்கின்றார். அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த படிப்பினைகளுள் சில பின்வருவனவ்ாகும்.
    - கிறிஸ்தவ குடும்ப வாழ்வு
    - கிறிஸ்தவ ஒற்றுமை
    - கிறிஸ்தவ சகோதரத்துவம்
    - தூய ஆவியில் வாழ்வு

#### 5.2.2.2.1 கிறிஸ்தவ குடும்ப வாழ்வு (1கொரி 7:1-16, எபே 5:22-31, 6:1-4, கலா 3:28)

- தூய பவுலடிகளார் குடும்பவாழ்வு பற்றிய படிப்பினைகளை கொரிந்து, எபேசு, கலாத்தியா ஆகிய இடங்களில் வாழ்ந்த கிறிஸ்தவ சமூகங்களுக்கு முன்வைக்கின்றார்.
- அன்றைய காலக்கட்டத்தில் இச்சமூகங்களில் இருந்த குடும்ப வாழ்வில் நிலவிய பரத்தமை, விபசாரம், மணமுறிவு போன்ற கலாசார சீர்கேடுகளைக் கண்டித்து, குடும்பவாழ்வின் தூய்மையையும் பிரமாணிக்கத்தையும் இல்லற அன்பையும் கடமைகளையும் வலியுறுத்தி அதனை வாழ வேண்டுமென இத்திருமடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

**(1கொரி 7:1-16)**

- கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் பவுல் திருமணம் குடும்ப வாழ்வு பற்றிக் கூறுவதை நாம் சரியாக விளங்குவதற்கு கொரிந்திய மக்கள் வாழ்ந்த சூழலையும் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். அக்காலத்தில் வாணிப நகரமான கொரிந்து பரத்தமை, விபசாரம், சிற்றின்பக் கேளிக்கைகளுக்கு பெயர் போன இடமாக இருந்தது.
- மேலும் சில கொரிந்தியரின் கருத்துப்படி உடல் தீயது. ஆகவே அதை நாம் அடக்கி ஆள வேண்டும். முடியாவிடின் அதற்கு இயல்பாகவுள்ள சகல ஆசைகளையும் நாட்டங்களையும் உணர்வுகளையும் நாம் அடக்க வேண்டும். ஆகவே ஒருவன் முழுமையான கிறிஸ்தவனாக வாழ விரும்பினால் அவன் உடல் சம்பந்தமான விடயங்களை முழுமையாக விலக்கி திருமணம் செய்யாமலிருக்க வேண்டும்.
- கணவன் மனைவியை தன் உடல் இச்சைகளைத் திருப்தியாக்கும் கருவியாகவோ, மனைவி தன் உடல் இச்சைகளை திருப்தியாக்கும் கருவியாகவோ, கணிக்கவோ, பயன்படுத்தவோ கூடாது. கணவனின் உடல் மனைவிக்கே சொந்தம். மனைவியின் உடல் கணவனுக்கே சொந்தம்.
- திருமண உறவில் ஒருவர் மற்றவருடைய உரிமைகளை மதித்து நடக்க வேண்டும். ஒருவர் மற்றவருடைய உரிமையை மறுக்க முடியாது. திருமண உறவிலே கணவனும் மனைவியும், உடல் ரீதியிலும் சரி, ஆன்மீக ரீதியிலும் சரி, தம் ஆசைகளின் முழு நிறைவை, திருப்தியை காணவேண்டும்.
- இறைவேண்டலுக்காக கூட்டுச் சம்மதத்துடன் இருவரும் சில காலத்திற்கு பிரிந்து இருக்கலாம். ஆனால் உணர்ச்சிகளை அடக்க முடியாத போது, சோதனைக்கு ஆளாகாமல் இருவரும் விரைவில் மீண்டும் கூடிவாழ வேண்டும்.

- கணவனும் மனைவியும் பிரிந்து வாழக் கூடாதென கூறி அது ஆண்டவரின் கட்டளையென்கிறார். அப்படி பிரிந்து வாழ வேண்டி ஏற்பட்டாலும் மறுதிருமணம் செய்யக்கூடாது. ஆனால் விரைவில் இருவரும் ஒன்று சேர வேண்டும். ஒப்புரவாக வேண்டும்.

### (எபேசி 5:22-30, 6:1-4 )

- பவுல் இப்பகுதியில் கிறிஸ்தவக் குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே இருக்க வேண்டிய உறவு பற்றியும், பெற்றோர் - பிள்ளைகளுக்கும் இடையேயுள்ள உறவு பற்றியும் பேசுகின்றார்.
- தம்பதிகளுக்கிடையிலான உறவு அதி உன்னதமானது. புனிதமானது. பவுல் கணவனுக்கும் மனைவிக்குமிடையேயுள்ள உறவை கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்குமிடையேயுள்ள உறவிற்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார். இவ்வுறவிற்கு அடிப்படையாக அன்பு உள்ளது.
- பவுல் **கணவனது கடமைகள்** பற்றிக் குறிப்பிடுகையில் கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாயிருப்பது போல கணவனும் தன் மனைவிக்கு தலையாய் இருக்கிறார். இது அதிகாரம் செலுத்தும் தலைமைத்துவம் அல்ல, மாறாக அன்பு செய்யும் தலைமைத்துவம் ஆகும்.
- கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்வது போல கணவனும் தன் மனைவியை அன்பு செய்ய வேண்டும். இது ஒரு தியாக அன்பு, அது ஒரு போதும் சுயநலம் தேடும் அன்பாக இருத்தல் கூடாது. கிறிஸ்து திருச்சபை மேல் கொண்டிருந்த அன்பு திருச்சபையைத் தூய்மையாக்கி இறைவனுக்கு சொந்தமாக்கியது. கணவனின் அன்பும் மனைவியைத் தூய்மையாக்கும், அவரை நல்லவராக்கும் அன்பாக இருத்தல் வேண்டும்.
- **மனைவியின் கடமைகள்** பற்றிக் குறிப்பிடுகையில் திருச்சபை கிறிஸ்துவிற்குப் பணிந்திருப்பது போல் மனைவியரும் தங்கள் கணவருக்குப் பணிந்திருத்தல் வேண்டும். இப்பணிவும் பயத்தினால் அல்ல, மாறாக அது அன்பிலிருந்து உருவாகும் பணிவாக இருக்க வேண்டும்.
- **பெற்றோரின் கடமைகள்** பற்றிக் குறிப்பிடுகையில் பெற்றோர் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாது அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி, வளர்க்க வேண்டும்.
- **பிள்ளைகளின் கடமைகள்** பற்றிக் குறிப்பிடுகையில் பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும். தந்தையையும், தாயையும் மதித்து நடப்பதால் நலம் பெற்று, மண்ணுலகில் நீடுழி வாழ்வார்கள். இவ்விதம் பவுல் கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள் உறவு, கடமைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

### (கலா 3:28)

- பவுல் கிறிஸ்தவ குடும்பத்தில் எத்தகைய வேறுபாடுகளுக்கும் இடமில்லை எனக் கூறுகின்றார். கிறிஸ்தவ உறவில் பண்பாடு, மறை, சமுதாய நிலை, பால், முதலிய அடிப்படையில் நிலவும் எல்லா வேறுபாடுகளும் கிறிஸ்துவில் மறைகின்றன.
- கிறிஸ்தவர்கள் அனைவரும் சேர்ந்து உருவாக்கும் இறை குடும்பத்தில் பழைய வேறுபாடுகளுக்கு இடமேயில்லை. கிறிஸ்துவில் வாழும் அவர்களுக்குள் ஆண்-பெண் என்ற வித்தியாசம் இருக்கக் கூடாது. அவர்கள் இருவரும் இறைவன் சாயலில் படைக்கப்பட்டவர்கள். எனவே இருவரும் இறைவன் முன்னிலையில் சமமாக இருக்கிறார்கள். ஆணும் பெண்ணும் ஒருவர் ஒருவரை நிறைவு செய்வது போல கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் ஒருவரை ஒருவர் நிறைவு செய்கின்றனர்.

### 5.2.2.2.2 கிறிஸ்தவ ஒற்றுமை (1கொரி 12:12-31, எபே 2:11-18, 4:1-6)

- கிறிஸ்தவ சமூகங்களின் இயல்புப் பண்பு ஒற்றுமையாகும். ஆனால் அன்று குறிப்பாக கொரிந்திய சமூகத்தில் பேதுரு, பவுல், அப்பெல்லோ ஆகியோரின் தலைமைத்துவத்தை முதன்மைப்படுத்தி தமக்குள் பிளவுபட்டு வாழ்ந்தனர்.
- மேலும் கிறிஸ்தவ சமூகத்தவர்களிடம் காணப்பட்ட தனித்துவமான வரங்கள், ஆற்றல்களை பெரிதுபடுத்தி தமக்குள் போட்டி மனப்பான்மையோடு பிரிந்து வாழ்ந்த கொரிந்து சமூகத்தினருக்கு அறிவுரை அளித்து கிறிஸ்துவில் திருமுழுக்குப் பெற்றவர்கள் ஒற்றுமையோடு வாழவேண்டும் என்றும் ஆவியின் வரங்கள் தனிமனித பலத்தினை வெளிப்படுத்துவதற்கு அல்ல, மாறாக, பொது நன்மைக்காகவும், கிறிஸ்தவ சமூகத்தை கிறிஸ்துவின் உடலாகக் கட்டியெழுப்பவுமே பயன்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

#### (கொரி 12:12-31)

- நாம் எல்லோரும் ஒரு மனித உடலின் உறுப்புகளுக்குள்ளே காணப்படும் ஒற்றுமையை, அவை ஒன்றோடொன்று ஒத்துழைப்பதைப் பார்த்து வியந்திருக்கின்றோம். பவுல் கிறிஸ்தவ சமூகத்தை அத்தகைய ஒரு உடலாகக் காண்கின்றார். ''நீங்கள் கிறிஸ்துவின் உடலாக இருக்கிறீர்கள்'' (1கொரி 12:27) இக் கூற்றில் ஆழ்ந்த பல கருத்துக்கள் இருக்கின்றன. நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் உடலில் ஒரு பகுதியாக ஒரு உறுப்பாக இருக்கிறோம்.
- ''யூதரானாலும், கிரேக்கரானாலும், அடிமைகளானாலும், உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லோரும் ஒரே தூய ஆவியினால் ஒரே உடலாய் இருக்கும் படி திருமுழுக்குப் பெற்றோம்'' (1கொரி 12:13) இதிலிருந்து கிறிஸ்தவ சமூகம் முறையாகச் செயற்படுவதற்கு அதற்குள் இருக்க வேண்டியது ஒற்றுமையின் அவசியமாகும்.
- ஒரு உடலானது தேகசுகத்துடன் இருப்பதற்கு ஒவ்வொரு உறுப்பும் தத்தம் வேலையைச் செவ்வனே செய்ய வேண்டும். உறுப்புகளுக்குள்ளே எரிச்சலோ பொறாமையோ இல்லை. ஒரு உறுப்புடைய வேலையை இன்னொரு உறுப்பு அபகரிப்பதில்லை. இவ்வுருவகத்திலிருந்து பவுல் கிறிஸ்துவின் உடலாகிய கிறிஸ்தவ சமூகத்தில் இருக்க வேண்டிய ஒற்றுமையை வலியுறுத்துகின்றார்.
- எனவே வெவ்வேறு உறுப்புக்களாக இருக்கும் ஒவ்வொருவரும் தத்தமக்கு அருளப்பட்ட கொடைகளுக்கேற்ப பணி செய்து உடலாகிய கிறிஸ்தவ சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

#### (எபே 2:11-18)

- பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் எப்படி ஒருவரை ஒருவர் பகைத்து வெறுத்து இழிவுபடுத்தி பிளவுண்டு வாழ்ந்த இஸ்ரயேலரையும் புறவினத்தவர்களையும் கிறிஸ்து தம் சிலுவை மரணத்தின் வழியாய் அவர்களைப் பிரித்த சுவரைத் தகர்த்தெறிந்து அவர்களைத் தம்மோடு இணைத்து ஒன்றுபடுத்தினார்.
- அவர்களை ஒன்றுபடுத்த கிறிஸ்து கொடுத்த விலை தம் விலைமதிப்பில்லாத திரு இரத்தம்.
- எனவே அந்த உறவை ஒற்றுமையை நாம் அனைவரும் கட்டிக்காக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

#### (எபே 4:1-6)

- எல்லோருக்கும் ஒரே எதிர்நோக்கு, ஒரே உடல், ஒரே ஆவி, ஒரே ஆண்டவர், ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு, ஒரே கடவுள், ஒரே தந்தை. இந்த ஒருமைப்பாட்டிலே ஒவ்வொரு கிறிஸ்தவரும் வாழ அழைக்கப்படுகின்றார்.

### 5.2.2.2.3 கிறிஸ்தவ சகோதரத்துவம் (1கொரி 8:9-13, 13: 3-8, 2கொரி 8:9)

- கிறிஸ்தவ சகோதரத்துவம் அன்பில் மிளிர வேண்டியதொன்றாகும். இது தியாகம், மன்னிப்பு, எடுத்துக்காட்டான வாழ்க்கை முறை, விட்டுக்கொடுப்பு போன்ற பண்புகளால் கட்டியெழுப்பப்படல் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றார்.
- மேலும் கொரிந்து சமூகத்தில் காணப்பட்ட தன்னலம், ஏற்றத்தாழ்வு பாராட்டுதல், அடிமைநிலை போன்ற இழிநிலைகளை அகற்றி கிறிஸ்து இயேசுவின் வாழ்க்கை விழுமியங்களை கைக்கொண்டு வாழ வேண்டுமென வலியுறுத்துகின்றார்.

**(1கொரி. 8: 9-13)**

- பவுல் இவ் அதிகாரத்தில் **அன்பின் மேன்மையை** எடுத்துக் காட்டுகின்றார். அன்பு தான் எது நல்லது. எது தீயது எது பயனள்ளது, எது பயனற்றது என்பதை சுட்டிக் காட்டுகின்றது. அன்பின் அடிப்படையிலேயே இது தீர்மானிக்கப்படும்.
- அறிவு நல்லது. ஆனால் அது இறுமாப்புக்கு இட்டுச் செல்லக் கூடாது. மற்றவரின் நல்வாழ்வுக்கு இடைஞ்சலாக, தடையாக அமையக் கூடாது.
- ஒருவர் தமது அறிவைப் பயன்படுத்தி செயற்படுகின்ற செயற்பாடுகள் மற்றவர்களுக்கு இடைஞ்சலாகவோ, துன்மாதிரிகையாகவோ இருக்கக் கூடாது.
- எனவே அன்பு உறவை வளர்க்கிறது. ஒழுக்கவாழ்வு அடித்தளமாக இருக்கின்றது. எதுவும் அறிவின் அடிப்படையில் அல்ல. அன்பின் அடிப்படையிலே தீர்மானிக்கப்படும்.

**(1கொரி 13: 3-8)**

- பவுல் இப்பகுதியில் அன்பின் **உன்னத நிலை** பற்றி விளக்குகின்றார். இப்பகுதி கவிதை வடிவில் அர்த்தமுள்ளதாக, பொருள் செறிந்ததாக அமைந்துள்ளது. புதிய ஏற்பாட்டிலேயே அன்பைப் பற்றிக் கூறும் மிகவும் அழகான பகுதி இதுவெனக் கூறப்படுகின்றது.
- பவுல் தூயஆவியின் எல்லா அருட்கொடைகளை ஒருவன் கொண்டிருந்தாலும் அன்பு இல்லையேல் அவை அனைத்தும் அர்த்தமற்றவை, பயனற்றவை என்கிறார். பரவசப்பேச்ச, இறைவாக்குரைக்கும் ஆற்றல், ஞானம், அறிவு, நம்பிக்கை இவையெல்லாம் இருப்பினும் அன்பு இல்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாகும். அவை ஒன்றுமில்லாமைக்கு ஒப்பாகும்.
- அன்பில்லாமல் எதற்கும் மதிப்பில்லை, இவையெல்லாவற்றிற்கும் அர்த்தத்தை பொருளை, பெறுமதியைக் கொடுப்பது அன்பேயாகும். அதுவே கிறிஸ்தவ வாழ்விற்கு அடித்தளமாகும்.
- பவுல் அன்பின் சிறப்பியல்புகளாக பொறுமை, நன்மை செய்தல், பொறாமையின்மை, தற்புகழ்ச்சி கொள்ளாமை, இறுமாப்பு அடையாமை, இழிவானதைச் செய்யாமை, எரிச்சலுக்கு இடங்கொடாமை, தீங்கு நினையாமை, தீவினையில் மகிழ்வுறாமை, உண்மையில் மகிழ்தல், அனைத்தையும் நம்புதல், எதிர்நோக்கி இருத்தல், மன உறுதியாயிருத்தல் என்பவற்றைக் குறிப்பிடுகின்றார்.
- ஒருவரிடம் உண்மையான அன்பிருந்தால் இப்பண்புகளெல்லாம் காணப்படும்.
- தொடர்ந்து பவுல் அன்பின் அழியாத்தன்மையையும், மேன்மையையும் வலியுறுத்துகின்றார். ஏனைய அருட்கொடைகள் எல்லாம் ஒரு காலத்தில் அழிந்து போகும். பயனற்றுப் போகும். ஆனால் அன்பு என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.
- இறுதியாக பிரதான இறைசார் புண்ணியங்களான நம்பிக்கை, அன்பு, எதிர்நோக்கு என்ற மூன்றிலும் அன்பே தலை சிறந்தது எனக் குறிப்பிடுகின்றார்.

**(2கொரி. 8:1 -15)**

- பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இப்பகுதியில் கொரிந்திய சமூகத்தினரை அறப்பணிக்குத் தாராளமாகக் கொடுத்துதவும் படி கேட்கின்றார். இதற்கு இயேசு கிறிஸ்துவின் அன்பை அவரின் தாராள மனதை உதாரணமாகக் காட்டுகின்றார்.
- ''அவர் செல்வந்தராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வந்தர் ஆனீர்கள்'' என்று கூறுவதன் மூலம் இயேசு கிறிஸ்துவின் தியாகம் அவருடைய சிலுவை மரணத்தில் அல்ல, அவரின் மனித அவதாரத்தில் அல்ல, மாறாக விண்ணில் இருக்கும் போதே அதாவது அவர் தம் விண்ணக மகிமையைத் துறந்து இவ்வுலகிற்கு இறங்கி வரத் தீர்மானித்த போதே ஆரம்பமாகிவிட்டது.
- மற்றவர்களின் நலனில் தன்னிறைவு காண்பது தான் உண்மையான அன்பு, அத்தகைய தியாக அன்பு தனக்குள்ளவற்றைப் பகிர்ந்தளித்து வாழும் அன்பே கிறிஸ்தவர்களிடத்தில் இருக்க வேண்டும் என்பதை இப்பகுதியின் மூலம் பவுல் முன் வைக்கின்றார்.

## 5.2.2.2.4 தூய ஆவியில் வாழ்வு (1கொரி 12:4-16, 14:1-18)

- பவுல் இப்பகுதியில் தூய ஆவி நமக்கு அளிக்கும் விசேட அருட்கொடைகளைப் பற்றிப் பேசுகின்றார். அருட்கொடைகள் என்பது 'காரிஸ்மா' என்ற கிரேக்கச்சொல்லின் தமிழாக்கம். இதற்கு இறைவன் கருணையோடு வழங்கும் 'இலவசக்கொடைகள்' என்பது பொருள். இறைவன் நமக்கு அளிக்கும் கொடைகளுள் தலைசிறந்தது தூய ஆவியே. அத்தூய ஆவியானவர் நமது உள்ளங்களில் உறைகிறார். தாம் எமக்கு விரும்பி அளிக்கும் அருட்கொடைகள் வழியாகத் தம்மையே வெளிப்படுத்துகின்றார்.
- பவுல் இப்பகுதியில் தூய ஆவி அளிக்கும் விசேடகொடைகள் பற்றி விளக்குகின்றார். தொடக்ககாலத் திருச்சபையில் இக்கொடைகள் நிறைந்து காணப்பட்டன. அவற்றைப் பயன்படுத்துவதினால் சில பிரச்சனைகளும் எழுந்தன. ஆதலால் பவுல் இக்கொடைகளின் தன்மை, பண்பு, பயன் பற்றித் தெளிவாகப் பேசுகின்றார்.

**1கொரி. 12: 4- 16)**

- இப்பகுதியில் பரிசுத்த ஆவியின் கொடைகள் பற்றி தெளிவாகக் குறிப்பிடுவதற்கு ஏதுவான பின்னணியை நோக்கின் கொரிந்து நகரிலே வளர்ந்த கிறிஸ்தவ சமூகத்தில் தூய ஆவியின் கொடைகளில் ஒன்றாகிய பரவசப் பேச்சு நிறைந்து காணப்பட்டது. இதனால் வேண்டாத விளைவுகள் சில தோன்றின. இப்பரவசப் பேச்சு புறமறையினரின் வெறியாட்ட வழிபாட்டை ஒத்திருந்தததால் அது தவறான எண்ணங்களுக்கு வழி வகுத்தது. இச்சிக்கல்களுக்கு தீர்வு காணும் முகமாகப் பவுல் தூய ஆவியின் அருட்கொடைகள் பற்றித் தெளிவாகப் பேசுகின்றார்.
- பவுல் முதலில் தூய ஆவியே நாம் 'இயேசுவே ஆண்டவர்' என அறிக்கையிடுவதற்கு எமக்கு ஆற்றல் அளிப்பவர் எனக் கூறுகின்றார். அதாவது இயேசுவில் நம்பிக்கையை அளிப்பவர் அவரே. இதுவே தூயஆவி நமக்கு அளிக்கும் முதற்கொடை எனக் கூறி தூயஆவியின் ஒவ்வொரு கொடைகளையும் குறிப்பிடுகின்றார்.
- ஞானம் நிறைந்த சொல்வளம், அறிவு செறிந்த சொல்வளம், நம்பிக்கை, பிணிதீர்க்கும் அருட்கொடை, வல்ல செயல் செய்யும் ஆற்றல், இறைவாக்குரைக்கும் ஆற்றல், ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றல், பல்வகைப் பரவசப்பேச்சு, பரவசப் பேச்சைப் விளக்கும் திறன்.
- பவுல் இக்கொடைகளை இறைவன் பொதுநன்மைக்காகவே அளிக்கின்றார் எனக் குறிப்பிடப்படுகின்றார். தூய ஆவியானவரின் செயற்பாடுகள் ஒவ்வொருவரிலும் பொது நன்மைக்காகவே வெளிப்படுகின்றது. இக்கொடைகள் எல்லாம் எங்கள் சொந்த தனிப்பட்ட நன்மைகளுக்காக அல்ல. மாறாக கிறிஸ்தவ சமுதாயத்தின், பொது நன்மைக்காகவே அளிக்கப்படுகின்றது.

- ஒரே உடலின் நலனுக்காகப் பல்வேறு உறுப்புக்கள் செயற்படுவதுபோல பல்வேறு அருட்கொடைகள் ஒரே நோக்கில் கிறிஸ்துவின் மறையுடலாகிய கிறிஸ்தவ சபைகளின் பொதுநலனுக்காக ஒன்று சேர்ந்து செயற்படுகின்றன. ஆகவேதான் எல்லாருக்கும் எல்லாக்கொடைகளும் அருளப்படுவதில்லை. கிறிஸ்தவ சமுதாயத்தில் வெவ்வேறு பணியாற்றும் வெவ்வேறு நபருக்கு வெவ்வேறு கொடைகள் பகிர்ந்து அருளப்படுகின்றன. இவையெல்லாம் கடவுளிடமிருந்து வருவதால் கடவுளின் பணிக்காகவே பயன்படுத்தப் படவேண்டும்.

## (1கொரி. 14: 1- 18)

- பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமடலில் இன்னொரு இடத்திலும் தூய ஆவியின் கொடைகள் குறித்து விளக்கம் அளிக்கின்றார். இப்பகுதியில் பரவசப் பேச்சு வரத்தையும் இறைவாக்குரைக்கும் வரத்தையும் ஒப்பிட்டு பரவசப்பேச்சு வரத்தை விட இறைவாக்குரைக்கும் வரம் சிறந்தது என எடுத்துக் காட்டுகின்றார்.
- பரவசப்பேச்சுப் பேசுபவர்கள் மக்களிடம் அல்ல, மாறாக கடவுளிடமே பேசுகின்றனர் அவர்கள் பேசுவது எவருக்கும் விளங்குவதில்லை. ஆனால் இறைவாக்கு உரைப்பவர்களோ மக்களிடமே பேசின்றனர். அவர்கள் பேசுவது அவர்களுக்கு மாத்திரம் அல்ல மற்றவர்களுக்கும் வளர்ச்சியையும் ஊக்கத்தையும் அளிக்கின்றது.
- பரவசப் பேச்சுப் பேசுகின்றவர்கள் தம்மை மட்டுமே வளர்ச்சியுறச் செய்கின்றனர். ஆனால் இறைவாக்கு உரைப்பவர்களோ கிறிஸ்தவ சமூகத்தை வளர்ச்சி அடையச் செய்கின்றனர்.
- பரவசப் பேச்சுப் பேசுபவர் கிறிஸ்தவ சமூகங்களைக் கட்டியெழுப்பும் நோக்குடன் தாம் பேசுவதை விளக்கவேண்டும். இல்லையேல் பரவசப்பேச்சுப் பேசுபவர்களை விட இறைவாக் குரைப்பவர்களே மேலானவர்கள். இவர்கள் தம்மை மட்டுமன்றி பலரையும் வளர்ச்சியடையச் செய்கின்றனர்.
- நாம் பேசும் மொழியானது பொருள் தர வேண்டும். ஏனெனில் உலகிலுள்ள மொழிகளில் பொருள் தராத மொழிகள் ஒன்றுமில்லை. அவ்வாறே பரவசப் பேச்சுப் பேசும்போது அது பொருள் தராவிட்டால் அதனால் பயனில்லை எனக் கூறி இறைவாக்குரைக்கும் வரத்தால் திருச்சபைக்கு நன்மை ஏற்படுவதால் அதை ஆர்வமாக நாட வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றார்.
- இவ்வாறு தூய பவுலடிகளாரின் படிப்பினைகள் சிறந்த சமூக, கலாசார, ஆன்மீக விழுமியங்களை வளர்த்தெடுப்பதற்குத் துணைநிற்பதால் அவை கிறிஸ்தவ சமூகங்களிடையே கைக்கொள்ளப்பட வேண்டுமென்பது தூய பவுலடிகளாரின் எதிர்பார்ப்புமாகும். இவை அன்றும் இன்றும் கிறிஸ்தவநாகரிகத்திற்குத் துணை செய்வதாகவும் அமைந்துள்ளது.

### 5.2.2.3 புனித பவுலின் வாழ்க்கைச் சவால்களும் முன்மாதிரிகைகளும்

**சவால்களை வெற்றி கொள்ளல்**

- பவுலுடைய அழைப்பே அவருக்குச் சவாலாக மாறியது. புதிய நெறியைச் சார்ந்தவர்களை அடியோடு அழிக்கச் சென்றவர் அதை வளர்க்கும் கருவியாக மாற்றப்பட்டார்.
- 2கொரி 11:22-33 பவுல் தான் அனுபவித்த துன்பங்களையும் எதிர்கொண்ட சவால்களையும் பட்டியலிடுவதைக் காண முடியும்.
- பவுல் தனது வாழ்வு முழுவதையும் கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்திருந்தார்.
- இறைவனின் அழைப்பையும், நற்செய்திப் பணியையும் நன்றாக அறிந்து தன்னில் அதை அனுபவித்து வாழ்ந்தார்.

- கிறிஸ்துவுக்காக துன்புறல் தனக்குரிய பாக்கியமாகக் கருதி மரணத்தை தன் ஆதாயமாக உணர்ந்து கொண்டார்.
- எக்கணத்திலும் கிறிஸ்துவின் பிரசன்னத்தைத் தன்னில் கண்டார். தி.ப 18:9 'அஞ்சாதே போதித்துக்கொண்டே இரு, நிறுத்திவிடாதே நான் உன்னோடு இருக்கிறேன்.'
- என்ன துன்பம் நேர்ந்தாலும் பணி செய்து திருச்சபையை நிலைநாட்டுவதே தனது பணி என்பது அவரது கொள்கை.
- தூய ஆவியானவரின் கொடைகளும் இறைபராமரிப்பும் அவரின் பணிவாழ்வுக்கு வலுச்சேர்த்தன.
- உரோமைக் குடிமகன் என்ற உரிமை சட்டரீதியாக அதிகாரிகளை அணுக அவருக்கு வாய்ப்பளித்தது.

**5.2.2.4 தூய பவுலின் மறைசாட்சிய மரணம்**

- நீரோவின் காலத்தில் உரோமைக் கலாபனை ஆரம்பமானது. அக்கலாபனை மிகக் கொடுமையானது அதிகளவான கிறிஸ்தவர்கள் மடிந்தார்கள், பலர் அளவற்ற துன்பங்களை அனுபவித்தாகள்.
- விசுவாசிகளுக்கு ஆறுதலளிக்கவும், அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும் பேதுருவும் பவுலும் அங்கு சென்றார்கள்.
- அங்கே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டார்கள்.
- பேதுரு தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார்.
- பவுல் உரோமைக் குடிமகன் என்பதனால் அதற்கு ஏற்றாற்போல மரணதண்டனை விதிக்கப்பட்டார். தேவதாரு மரக்காடுகள் நிறைந்த சால்வியன் என்னும் இடத்தில் வாளால் தலை வெட்டப்பட்டு தனது எழுபதாவது வயதில் வேதசாட்சியாக மரித்தார்.

## உத்தேச கற்பித்தல் செயற்பாடுகள்:

01. தொடக்ககாலத் திருச்சபை பரவிய இடங்களை இனங்கண்டு அங்கு நிறுவப்பட்ட கிறிஸ்தவ சபைகளையும் அச்சபையின் தன்மைகளையும் முன்வைப்பார்.
02. மறைத்தூதுப்பயணங்களில் நற்செய்தியை அறிவிக்கக் கையாண்ட வழிமுறைகளை விபரிப்பார்.
03. தொடக்ககால கிறிஸ்தவர்களின் சிறப்பம்சங்களைத் தொகுத்துப் பட்டியற்படுத்துவார்.
04. தூய பவுலின் வாழ்க்கை, திருச்சபை நிறுவப்படல், பவுலின் முக்கிய படிப்பினைகள், ஒழுக்க விழுமியக் கோட்பாடுகள் பற்றிய விபரங்களைச் சேகரிப்பார்.
05. பவுலின் திருமடல்களில் காணப்படும் படிப்பினைகளை தமது வாழ்வில் கடைப்பிடிப்பதற்கான செயற்பாடுகளை முன் வைப்பார்.

## உசாத்துணை நூல்கள்:


01. பிலிப் இ. இயேசுதாசன், ***பரிசுத்த ஏடுகளைக் கற்றல்***, அமலி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம். 2002.
02. பிலிப் இ. இயேசுதாசன், ***கிறிஸ்தவ வாழ்வு***, அமலி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம். 2002.
03. அ. பீட்டர் அபீர் , ***திருத்தூதர் பவுல்***, தமிழ்நாடு, விவிலிய மறைக்கல்வி நடுநிலையம், திண்டிவனம்.
04. ***விவிலிய விருந்து***, புனித பவுல் விவிலிய நிலையம், கரையான் சாவடி, பூந்தமல்லி, சென்னை.